# தமிழ் இலக்கிய வரலாறு

கூறு - 1 : உயர்தனிச் செம்மொழி – முச்சங்கங்கள் -இலக்கண நூல்கள்

கூறு - 2 : எட்டுத்தொகை – பத்துப்பாட்டு - சங்க இலக்கியச் சிறப்புகள்

கூறு - 3 : சங்கம் மருவிய காலம் - பதினென் கீழ்க்கணக்கு நூல்கள்

கூறு - 4 : ஐம்பெருங்காப்பியங்கள் - ஐஞ்சிறு காப்பியங்கள் - முத்தொள்ளாயிரம் - பெருங்கதை – கம்பராமாயணம்

கூறு - 5 : சமயமும் தமிழும் - சமணம் - பௌத்தம் - சைவம் - வைணவம் - கிறித்தவம் - இஸ்லாமியம்

கூறு – 6 : நிகண்டுகள் - அகராதிகள் - இலக்கண நூல்கள் - சிற்றிலக்கியங்கள் - சித்தர் பாடல்கள்

கூறு – 7 : கவிதை – உரைநடை - மரபுக்கவிதை – புதுக்கவிதை 'ஹைஃ'கூ நாவல் - சிறுகதை – நாடகம் - ஏட்டில் எழுதாக் கவிதைகள்

கூறு – 8 : ஒப்பிலக்கியம் - திறனாய்வியல் - பெண்ணியம் - தலித்தியம் - மொழி பெயர்ப்பியல்

கூற – 9 : வாழ்க்கை வரலாறு – பயணக் கட்டுரை – கடித இலக்கியம்

கூறு – 10 : அறிவியல் தமிழ் - ஊடகவியல் - மக்கள் தகவல் தொடர்பியல் - திரைப்படம் - தொலைக்காட்சி – கணினி - அறிவியல் தமிழ்

## பாடம்-1

## இலக்கிய வரலாறு

**முன்னுரை**

**''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்**

**இனிதாவது எங்கும் காணோம்''**

**- பாரதி**

கடந்த காலத்தில் நடந்து முடிந்த உண்மை நிகழ்ச்சிகளை நிகழ்கால வருங்காலச் சமுதாயத்தினருக்கு எடுத்துரைப்பதே வரலாறு எனப்படும்˙ தனிமனித வரலாறு சமுதாய வரலாறு ஒரு நாட்டின் வரலாறு உலக வரலாறு மொழி வரலாறு என்று வரலாறு பலவாறாக எழுதப்படலாம். ஒரு குறிப்பிட்ட மொழியின் தொன்மையை ஆராய்ந்து அந்த மொழியில் தோன்றிய இலக்கண இலக்கியங்கள் பற்றிய காலக்கண்ணோட்டத்தை வரிசைப்படுத்திப் பார்ப்பதே இலக்கிய வரலாறாகும். அங்ஙனம் பார்ப்பதற்கு அம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் மிகப் பழமையானவைகளாகவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தனவாகவும் இருக்க வேண்டும்.

தமிழ் உலகில் தோன்றிய மொழிகளுள் பழமையான ஒன்று நீண்ட பாரம்பரியம் அதற்கு உண்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழில் இலக்கண இலக்கியங்கள் தோன்றின. அவை சரியாகப் பேணப்படாமல் பல இலக்கியங்கள் காலவெள்ளத்தில் அழிந்தன. நீருக்கும் நிலத்துக்கும் கரையானுக்கும் நெருப்புக்கும் இரையாகாமல் தப்பிய இலக்கியங்களே இன்று நம் கைகளில் தவழ்கின்றன. நீண்ட காலச் சூழ்நிலையில் தோன்றிய இவ்விலக்கியங்களின் வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பது தமிழர் கடன்.

தமிழ் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்து ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும் குறிப்பிட்ட துறை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இயற்கையோடு இணைந்து வாழ்வுகண்ட மக்கள் வாழ்வைப் பாடிய சங்க இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்கள் காப்பியங்கள் பக்தி இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் தமிழ் உரை நூல்கள் தனிப்பாடல்கள் தற்காலத்தில் புதுமைக் கவிதைகள் புதினம் சிறுகதை நாடகம் இசை இலக்கணம் அறிவியல் என்ற இலக்கியங்கள் காலத்திற்கேற்றவாறு தோன்றிய வண்ணமாகவே உள்ளன. முத்தமிழில் பன்னெடுங்காலமாகத் தோன்றிவரும் இலக்கியங்களின் வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்பதே இப்பாடப்பகுதியின் நோக்கமாகும்.

# 1.முச்சங்க வரலாறு

## சங்கத் தமிழ்

சங்கத்தமிழ் என்று தமிழ்மொழி சிறப்பித்துக் கூறப்படுகிறது. இதற்குக் காரணம் பாண்டிய மன்னர்களின் ஆதரவோடு தமிழ்ப் புலவர்கள் கூட்டமாகச் சேர்ந்து பண்டைக் காலத்தில் தமிழை வளர்த்ததேயாகும். இதனால் சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழ்நாடு என்ற வழக்காறும் ஏற்பட்டது. புலவர் பெருமக்கள் ஒன்று கூடிச் சங்கம் அமைத்து இலக்கிய இலக்கணங்கள் படைத்தமை உலகின் எம்மொழிக்கும் இல்லை என்பதால் இவ்வகையில் தமிழ் மொழி பெருமையும் உயர்வும் பெறுகிறது.

## முச்சங்கங்கள்

பாண்டிய மன்னர்களின் ஆதரவோடு அமைந்த தமிழ்ச் சங்கங்கள் மூன்று என்பர். முதல் சங்கம் கடல்கொண்ட தென் மதுரையிலும் இரண்டாவதாகிய இடைச்சங்கம் கடல்கோளால் அழிந்த கபாடபுரத்திலும் மூன்றாவது சங்கம் இன்றுள்ள மதுரையிலும் அமைந்திருந்தன என்பர். இம்முச்சங்கங்களிலும் தமிழ்ப்புலவர்கள் கூடித் தமிழை ஆய்ந்தனர் என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

## மூவகைக் கருத்துகள்

முத்தமிழை வளர்த்த மூன்று சங்கங்களையும் பற்றி மூன்று விதமான கருத்து வேறுபாடுகள் இன்று கூறப்படுகின்றன.

## முதல் கருத்து

அறிவியல் அடிப்படையில் எதனையும் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் இக்காலத்தில் வரலாற்று ஆதாரங்களினின்று மூன்று சங்கங்களையும் பற்றிச் சொல்லப்படும் புனை கதைகளை ஏற்றுக் கொள்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை என்றும் அவை கற்பனையின் அடிப்படையில் எழுந்த பொய்யே என்றும் கே.என்.சிவராசப்பிள்ளை பி.டி.சீனிவாச அய்யங்கார் பேராசிரியர் ஜேசுதாசன் போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

## இரண்டாவது கருத்து

கி.மு.3-ம் நூற்றாண்டிற்கு முன் தமிழ்மொழிக்கு வரிவடிவமே இல்லை என்றும் காலப்போக்கில் வடமொழி பிராகிருதம் இவற்றின் தொடர்பால் தமிழ் வரிவடிவம் பெற்றது என்றும் இதனால் கி.பி.1அல்லது2 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழ் வளர்ச்சியடைந்து இலக்கியங்கள் படைக்கப்படுவதற்கு ஏற்றமொழி ஆயிற்று என்றும் கூறி கி.பி.1 அல்லது முதல் நூற்றாண்டிற்குப்

பின்னரே ஒரு தமிழ்ச்சங்கம் தோன்றியிருக்கலாம் என்றும் கூறுவர் வரலாற்றறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் தமிழ்ப் பேரரசன் வையாபுரிப் பிள்ளை போன்றோர்.

**மூன்றாவது கருத்து**

மூன்று தமிழ்ச்சங்கங்களும் இருந்தன அவை தமிழ்மொழியை வளர்த்தன. இலக்கண இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்று பல அறிஞர்கள் கூறுகின்றனர். அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாய் உள்ளவை.

1. இறையனார் களவியல் உரையில் நக்கீரர் குறிப்பிட்டுள்ளவை
2. தொல்காப்பியத்திற்கு இயற்றிய உரையில் பேராசிரியர் கருத்துக்கள்
3. சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் கூற்று
4. .பழந்தமிழ் இலக்கிய அகச் சான்றுகள்
5. .பிற்கால இலக்கியச் சான்றுகள்
6. செப்பேடுகளில் காணப்படுபவை
7. கடல்கோள் பற்றிய ஆராய்ச்சி முடிவுகள்

இவ் ஆதாரங்கள் பற்றி சுருக்கமாகச் சில கருத்துக்களை இங்கே காணலாம்.

**1. இறையனார் களவியலுரை**

இறையனார் களவியல் நூலுக்கு உரை வகுத்த நக்கீரர் முதன் முதலாக மூன்று சங்கங்களையும் பற்றிய முழுமையான செய்திகளைத் தொகுத்தளிக்கிறார்.

**தலைச்சங்கம்**

**இடம்:** கடல்கொண்ட தென் மதுரை

**சங்கப் புலவர்கள்**

அகத்தியனார் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் குன்றெறிந்த முருகவேள் முரஞ்சியூர் முடிநாகராயர் நிதியின் கிழவன் முதலிய549பேர் உறுப்பினர்களாக இல்லாமல் சேர்ந்ததுமுதல் சங்கத்தில் பாடிய மொத்தப் புலவர்கள் 4449 பேர்.

**பாடப்பட்ட நூல்கள்:** பரிபாடல் முதுநாரை முதுகுருகு களரியாவிரை முதலியன சங்கம்

**நடைபெற்ற காலம்** : 4440 ஆண்டுகள்

**ஆதரித்த பாண்டியர்**: காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 பேர்

**கவியரங்க ஏறிய பாண்டியர்**: எழுவர்

**தலைச்சங்க இலக்கண நூல்:** அகத்தியம்

**இடைச்சங்கம்**

**இடம்:** கடல்கோளால் அழிந்த கபாடபுரம்

**சங்ப்புலவர்கள்**

அகத்தியர் தொல்காப்பியர் இருந்தையூர்க் கருங்கோழி மோசி வெள்ளூர்க் காப்பியனார் சிறுபாண்டரங்கனார் திரையன் மாறன் துவரைக் கோமான் கீரந்தையார் முதலிய 59 பேர் உறுப்பினர்களான இவர்களோடு சேர்ந்து இரண்டாவது சங்கத்தில் பாடிய மொத்தப் புலவர்கள் 3700 பேர்.

**பாடப்பட்ட நூல்கள்**: கலி குருகு வெண்டாளி வியாழமாலை அகவல் முதலியன

**சங்கம் நடைபெற்ற காலம்**: 3700 ஆண்டுகள்

**ஆதரித்த பாண்டியர்**: வெண்தேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59 பேர்

**கவியரங்கு ஏறிய பாண்டியர்**: ஐவர்

**இடைச்சங்க இலக்கண நூல்கள்**: அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் பூதபுராணம் இசை நுணுக்கம் ஆகியவை

**கடைச்சங்கம்**

**இடம்:** வடமதுரை

**சங்கப்புலவர்**: சிறு மேதாவியார் சேந்தம் புதனார் அறிவுடையரானார் பெருங்குன்றூர்க் கிழார் இளந்திருமாறன் மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் மதுரை மருதனிளநாகனார் கணக்காயனார் மகன் நக்கீரனார் முதலிய 49 பேர் உறுப்பினர்களான இவர்களோடு சேர்ந்துக் கடைச்சங்கத்தில் பாடிய மொத்தப் புலவர்கள் 449.

**பாடப்பட்ட நூல்கள்**

அகநானூறு குறுந்தொகை நற்றிணை புறநானூறு ஐங்குநுறூறு பதிற்றுப் பத்து கலித்தொகை பரிபாடல் கூத்து வரி சிற்றிசை பேரிசை முதலியன

சங்கம் நடைபெற்ற காலம்: 1850 ஆண்டுகள்

**ஆதரித்த பாண்டியர்**: முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி ஈறாக 49 பேர்.

**கவியரங்கம் ஏறிய பாண்டியர்**: மூவர்

**கடைச்சங்க இலக்கண நூல்**: அகத்தியம் தொல்காப்பியம்

**2. பேராசிரியர் உரை**

தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் 95வது நூற்பாவுக்கு உரை எழுதும் பேராசிரியர் அகத்தியம் தொல்காப்பியர் பற்றி விரிவாகக் குறிப்பிடுவதோடு மூன்று சங்கங்கள் இருந்தமையும் பற்றி எழுதுகிறார்.

**3. அடியார்க்கு நல்லார் உரை**

சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய அடியார்க்கு நல்லார் சிலம்பின்பாயிரத்திற்கும் வேனிற்காதைக்கும் உரை எழுதுகின்ற பொழுது கபாடபுரம் தென்மதுரை இருந்தமை பற்றிக் குறிப்பிடுகிறார்.

**4. இலக்கியச் சான்றுகள்**

சங்கங்கள் இருந்தமை பொய்யல்ல உண்மையே என்று பழந்தமிழ் இலக்கியங்கள் சான்றுரைக்கின்றன. அவற்றில் சில

**“நிலத்தரு திருவின் பாண்டியன் அவையத்து**

**……………………………………………**

**தொல்காப்பியர் எனத் தன்பெயர் தோற்றி” தொல் ∴ பனம்பாரனார் பாயிரம்**

**“தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே**

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**

**மாங்குடி மருதன் தலைவனாக**

உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்

புலவர் பாடாது வரைகஎன் நிலவரை''-புறம்:72

''தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ்ந்நனை மறுகின் மதுரை''-சிறுபாண்66-76

''தொல்லாணை நல்லாசிரியர்

புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்

நிலந்தரு திருவின் நெடியோன்''-ம.காஞ்சி 761-63

''முதுமொழி நீராப் புலன்நா உழவர்

புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூரா''கலி:68

**5. பிற்கால இலக்கியச் சான்றுகளில் சில**

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி

நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன்''-திருநாவுக்கரசர் தேவாரம்

''சங்கத் தமிழ் மாலை''....ஆண்டாள் திருப்பாவை30

''தலைச்சங்கப் புலவனார் தம்முன்''....சேக்கிழார் பெரியபுராணம்

''சங்கத் தமிழ் மூன்றும் தா...ஔவையார்

''ஈண்டு நலந்தருதல் வேண்டிப் பாண்டியன்

பாடு தமிழ் வளர்த்த கூடல்''...ஆசி.மாலை.புறத்திரட்டு

**6. செப்பேடுகள்**

கி.பி. 10-ம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் சின்னமனூர்ச் செப்பேடு தரும் செய்தி

''மதுராபுரிச் சங்கம் வைத்தும்

மாபாரதம் தமிழ்ப்படுத்தும்''

## 7. கடல்கோள்கள் பற்றிய ஆய்வு முடிவுகள்

உலகின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட கடல்கோள்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர் ஸ்காட் எலியாட்டும் இலங்கை வரலாற்றை எழுதிய அறிஞர் டெனன்டும் தமிழக கடல்கோள் பற்றி ஆராய்ந்த அறிஞர் சிதம்பரனாரும் இந்தியாவின் தென்பகுதி ஒரு காலத்தில் மாபெரும் நிலப்பரப்பாக இருந்தது என்றும் ஆராய்ந்து முடிவு செய்துள்ளனர். கடல்கோள்கள் நிகழ்ந்தமை பற்றிய குறிப்புகளை நம் பண்டைப் பனுவல்களான கலித்தொகை சிலப்பதிகாரம் மணிமேகலை போன்றவையும் தருகின்றன.

**மு.வ.கருத்து**

அறிஞரும் பேராசிரியருமாகத் திகழ்ந்த டாக்டர் மு. வரதராசன் சங்கம் பற்றி தாம் கண்டறிந்த உண்மைகளைக் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

மூன்றாம் தமிழ்ச் சங்கத்து நூல்களே எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் என்று கருதி அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடும் வழக்கம் ஏற்பட்டது. மதுரையில் புலவர்கள் கூடித் தமிழை ஆராய்ந்து வந்தவர்கள் என்பதற்கும் பாண்டிய மன்னர்கள் அவர்களுக்கு ஊக்கமூட்டி ஆதரவு நல்கி வந்தவர்கள் என்பதற்கும் பழைய பாட்டுகளில் சான்றுகள் உள்ளன. "…………….." மூன்று சங்கங்கள் இருந்தன அவை இன்னார் இன்னார் தலைமையில் இத்தனை ஆண்டுகள் இருந்தன என்றெல்லாம் பிற்கால அறிஞர் கூறும் கருத்துக்களுக்குப் போதுமான சான்றுகள் இல்லை. எவ்வாறாயினும் புலவர்கள் அவ்வப்போது கூடி ஆராய்ந்தார்கள் என்பதும் அவர்களில் சிலருடைய முயற்சியாலேயே சங்க இலக்கியம் எனப்படும் தொகை நூல்கள் அமைந்தன என்பதும் மறுக்க முடியாதவை.

சங்கம் இருந்ததில்லை

இனிச் சங்கம் இருந்ததில்லை எனக் கூறும் சில கூறும் மறுப்புகளும் அவற்றிற்கான விடைகளும்.

1. மூன்று சங்கங்கள் இருந்தமை பற்றிய முழுமையான செய்திகளை அறிவிப்பது இறையனாரின் களவியல் உரையே. நக்கீரனின் உரை ஒன்பது தலைமுறைகளாகச் சொல்லப்பட்டுக் கி.பி.10-ம் நூற்றாண்டில் தான் அது நூல் வடிவம் பெற்றதாகக் கருதப்படுகிறது. வாய்வழியாகச் சொல்லப்பட்டு நூல் வடிவம் பெற்ற ஒன்றை வரலாற்றுச் சான்றாக கொள்ள இயலாது. மேலும் மூன்று சங்கத்திலும் இருந்ததாகக் கருதப்படும் புலவர்கள் சங்கம் நடைபெற்ற ஆண்டுகள் ஒன்பது என்ற எண்ணிலேயே எல்லாம் முடிவது

போன்ற திட்டமிட்டுக் கூறப்படும் செய்திகள் கற்பனையே இவற்றை வைத்துச் சங்கம் இருந்தது எனக்கொள்ள இயலாது.

இக்கூற்றுக்குப் பல அறிஞர்கள் ஒருமித்த விடையைக் கூறியுள்ளனர். இறையனார் களவியல் உரையில் பொய் கலந்திருக்கலாம். ஆனால் அவை முழுவதும் பொய் என ஏற்க இயலாது. சில உண்மைகள் அவற்றில் புதைந்து கிடப்பதை மறுக்க இயலாது என்று கூறுகின்றனர்.

2. சங்கம் என்ற சொல் தமிழ்ச் சொல் இல்லை. அது வடமொழிச் சொல் பண்டைய இலக்கியங்களில் இச்சொல் இடம் பெறவும் இல்லை. இல்லாத ஒரு சொல்லால் சங்கம் அமைக்கப்பட்டிருக்க முடியுமா? மேலும் தொல்காப்பியர் சகர எழுத்து மொழிக்கு முதலில் வராது என்றும் குறிப்பிட்டுள்ள காலத்தில் எப்படிச் சங்கம் அமைந்திருக்க இயலும்.

சங்கம் என்ற சொல் புத்த சமயம் தமிழகத்தில் பரவியபோது வந்ததென்றாலும் தமிழர்கள் பலர் கூடியிருந்த கூட்டத்தைக் குறிக்கப் பல சொற்களைக் கொண்டிருந்தனர். சான்றாக அவை புணர் , சுட்டு, தொகை, கழகம், குழு போன்ற இலக்கியத்தில் பயின்று வந்துள்ள சொற்களைக் கூறலாம். இச்சொற்களில் ஒன்றால் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட்டிருக்கலாம். சங்கம் என்ற சொல் தமிழகத்தில் நிலைத்துச் செல்வாக்குப் பெற்றபின் அச்சொல்லால் புலவர் கூடிய அவை அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பர் அறிஞர்.

**தொல்காப்பியம் மொழிமரபில்.**

**''சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே**

ஆ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே''…….. என்று நூற்பா வருவதைக் கொண்டு சகரம் மொழிக்கு முதலில் வராது எனக் கூறுகின்றனர். உண்மையில் நூற்பாவை ஏடு பெயர்த்து எழுதுவோர் தவறுதலாக அவை ஔ எனும் ஒன்றலங் கடையே என்று எழுதுவதற்குப் பதிலாகத் தவறிழைத்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. காரணம் சங்க இலக்கியங்கள் பலவற்றில் சரக்கிளவி மொழிக்கு முதலில் வருகின்றது. சான்றாகச் சங்கு, சகழ்ப்பு, சவட்டு, சந்து ஆகிய சொற்கள் வந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

**"தந்த கள்வன் சமழ்ப்பு முகம் காண்மின்"-பரிபாடல்20**

**"மன்பதை சவட்டும் கூற்றம் என்ப"-பதிற்றுப்பத்து84**

**"சந்து நீவிய புன்முடிந்து இடுமின்"-மலைபடுகடாம்393**

3. கி.மு.3ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதைக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டில் தமிழ் வடிவம் இல்லாமல் வடமொழிச் சார்போடு பிராமி எழுத்துக்களே காணப்படுகின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு தமிழுக்கு வரிவடிவமே சரியாகத் தோன்றாத காலத்தில் எப்படிச் சங்கம் இருந்திருக்க முடியும் என்று வாதிடுவர் சில.

தமிழ்மொழி வரலாற்றினை ஆராய்ந்த மொழியறிஞர்கள் தமிழுக்கு நீண்ட வரலாறு உண்டு என்ற கருத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். தமிழ் தென்னிந்திய மனித வரலாற்றோடு இணைந்து வளர்ந்த மொழி என்று கண்டறிந்துள்ளனர். சித்திர எழுத்துக்களாக கோல் எழுத்துக்களாக வட்டெழுத்துக்களாகப் பல்வேறு கால கட்டங்களில் தனக்கெனத் தனி வரிவடிவம் பெற்று வளர்ந்த மொழி தமிழ் என்பது மறக்க முடியாத உண்மை உலகின் பழைய மொழிகளான சீனம் கிரேக்கம் இவற்றோடு தமிழையும் ஆராய்ந்து பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தமிழ் இலக்கிய மொழியாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். எனவே தமிழ்ச் சங்கங்கள் மிகப் பழைய காலத்திலேயே தோன்றியிருக்க வாய்ப்புண்டு என்பதை நம்பலாம்.

**“புனல் சூழ்ந்து வடிந்து போன**

**நிலத்திலே “புதிய நாளை”**

**மனிதப் பைங்கூழ் முளைத்தே**

**வகுத்தது! மனித வாழ்வை**

**இனிய நற்றமிழே நீதான்**

**எழுப்பினை !.......................”**என்ற

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வரிகளில் மிகை இருந்தாலும் தமிழ்ப் பழமையான மொழி சங்கம் வைத்துப் புலவர்கள் வளர்த்த மொழி முச்சங்கத்திலும் முத்தமிழ் இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிஞர்கள் கண்ட ஆய்வால் தெளிவாகின்றது.

**தொல்காப்பியம்**

தமிழ் நூல் மலர்களுள் அழகிய மணம் நிரம்பிய நூல் மலர் தொல்காப்பியம் ஆகும். காலத்தால் பழமையான இந்நூல் இலக்கணம் பற்றியதாகும். இந்நூலின் சுவை பயக்கும் நடையாலும் கருத்தாலும் இதனை இலக்கியம் படிப்பது போன்றும் கற்கலாம். இந்நூல் தமிழில் எழுத்து சொல் பொருள் பற்றி விரிவாக இலக்கணம் கூறுகிறது. பொருளில் கவிதை யாப்புப் பற்றியும் அணி பற்றியும் உள்ளடக்கிக் கூறுகிறது.

கடைச் சங்கப் புலவர்கள் இலக்கியம் படைப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது. தொல்காப்பியம் எனவே இதனை 'இடைச்சங்க காலத்திலே தோன்றி அற்புத நூல்' என அறிஞர் மொழிவர். ''தோன்றிய நாளினின்று இந்நாள் வரையும் இனி வருங்காலத்தும் எழிலுடனும் ஏற்றமுடனும் திகழும் ஒப்பற்ற செந்தமிழ்ச் செல்வக்கடலாகவும் விளங்குவது தொல்காப்பிய பெருநூல்'' என்று இதன் சிறப்புக் குறித்துப் பாராட்டியுள்ளனர்.

இச்சீரிய இலக்கணநூலை இயற்றியவர் தொல்காப்பியர் தொல்காப்பியனாரைக் குறித்துப் புனை கவிதைகள் பல வழங்குகின்றன. இந்நூலுக்குத் தொல்காப்பியரின் ஒரு சாலை மாணவரான பனம்பாரனார் பாயிரம் இயற்றியுள்ளார். அப்பாயிரத்தின் மூலம் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனாரின் சிறப்பினையும் நூலின் அமைதியினையும் நன்கறியலாம். நிலத்தரு திருவின் பாண்டிய மன்னனின் அவையில் தமிழ்ச் சான்றோராகிய அதங்கோட்டாசிரியரின் முன்பாகத் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பதையும் பாயிரத்தின் மூலமாகவே அறிய முடிகிறது.

**தொல்காப்பியம் நூல் அமைப்பு**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் பொருளதிகாரம் என்ற முப்பகுப்பினை கொண்டது. ஒவ்வொரு பகுப்பும் ஒன்பது இயல்களை உட்கொண்டுத் திகழ்கிறது. இயல்கள் முறைப்படவும் சிறப்புடனும் அமைக்கப்பட்டுள்ள திறம் குறித்துப் பாராட்டுவர்.

எழுத்ததிகாரத்தில் நூன்மரபு மொழிமரபு பிறப்பியல் புணரியல் தொகைமரபு உருபியல் உயிர்மயங்கியல் புள்ளி மயங்கியல் குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஒன்பது இயல்கள் உள்ளன.

சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம் வேற்றுமையியல் வேற்றுமை மயங்கியல் விளிமரபு பெயரியல் வினையியல் இடையியல் உரியியல் எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்கள் உள்ளன.

பொருளதிகாரத்தில் அகத்திணை இயல் புறத்திணை இயல் களவியல் கற்பியல் பொருளியல் மெய்ப்பாட்டியல் உவமையியல் செய்யுளியல் மரபியல் ஆகிய ஒன்பது இயல்கள் உள்ளன.

எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்களும் சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்களும் பொருளதிகாரத்தில் 664 நூற்பாக்களும் 1610 நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் அடங்கியுள்ளன.

**தொல்காப்பியத்தின் தனிச் சிறப்புகள்:**

தொல்காப்பியத்தின் முதல் நூற்பா மிகப் பழங்காலத்தே தமிழ் எழுத்துகள் வகைப்பட்டிருந்தன என்ற பெருமையை உலகிற்குக் கட்டியங் கூறுவதாய் அமைந்துள்ளது.

**எழுத்தெனப் படுப**

**அகரம் முதல்**

**னகரம் இறுவாய் முப்ப.்.து என்ப**

**சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே**

தமிழில் எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன அவற்றின் மாத்திரை அளவு சார்பெழுத்துகளின் தன்மை போன்றவற்றை விரிவாகப் பேசுகிறது எழுத்ததிகாரம்.

சொல்லதிகாரத்தின் முதல் நூற்பா உயர்திணை அ.்.றிணை இவற்றைக் கூறி அவ்விரண்டின் அடிப்படையில் சொற்கள் பிறத்தலை விளக்குகின்றது.

**உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே:**

**அ.்.றிணை என்மனார் அவரல பிறவே:**

**ஆயிறு திணையின் இசைக்குமன சொல்லே.**

தொல்காப்பியர் பொருளதிகாரம் மரபியலில் உலக உயிர்களின் பகுப்பினையும் சிறப்பு மரபினையும் பற்றித் தெளிவாகக் கூறியுள்ளனர்.

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**

**மூன்றிற வதுவே அவற்றோடு மூக்கே**

**நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே**

**ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே**

**ஆறறி வதுவே அவற்றோடு மனனே**

**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**

ஆறறிவு உயிர் உடம்பினாலும் வாயினாலும் மூக்கினாலும் கண்ணினாலும் செவியினாலும் மனத்தினாலும் அறியும் மனிதன் என்று அழகாகக் கூறி ஆறுவகை உயிர்களையும் வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் தமிழகத்தின் நில அமைப்பைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அவ்வந் நிலங்களுக்குரிய சிறப்புகளை முதல் கரு

உரி என முப்பொருளாக்கித் தம் பின் வரும் புலவர்க்கு இலக்கியம் படைப்பதை எளிமையாக்கி கொடுத்தார். தமிழகத்தில் நிலவிய காலங்களைக் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின் பனிக்காலம் இளவேனிற்காலம் முதுவேனிற்காலம் என்ற முறையில் கணக்கிட்டுக் காட்டினார்.

தமிழர் கண்ட அகவாழ்வையும் புறவாழ்வையும் இனிதே இலக்கண வரம்புக்குட்படுத்தி விளக்கியுள்ளார். தொல்காப்பியர் மனித வாழ்வின் ஒப்பற்ற இரு கண்களான காதலையும் வீரத்தையும் தொல்காப்பியர் நெறிப்படுத்தியுள்ளார். காதலில் களவுமணம் கற்புமணம் என்ற இருபிரிவினைக் காட்டித் தமிழர் தம் நாகரிகத்தினையும் பண்பாட்டினையும் உலகுக்கு உணர்த்தியுள்ளார் தொல்காப்பியர்.

அகவாழ்வைக் கைக்கிளை குறிஞ்சி, முல்லை, மருதம் , நெய்தல் , பாலை பெருந்திணை என்ற ஏழுதிணைகளாகக் குறிப்பிட்டது போலவே புறவாழ்வையும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழு திணைகளாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தின் பழங்கால மக்களின் வாழ்க்கை முறை தொழில் பண்பாடு நாகரிகம் ஆட்சிச் சிறப்பு, போர்முறை, சமயநிலை, கல்வி, கலைகள் பற்றி அறிவதற்குத் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் உதவுகின்றது. மேலும் எண் வகைச் சுவைகள் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவதும் பொருளதிகாரத்தில் வருகிறது. நகை(சிரிப்பு) , அழுகை(அவலம்) , இளிவரல்(இழிவு) , மருட்கை(வியப்பு) , அச்சம் , பெருமிதம்(வீரம்) , வெகுளி(கோபம்) , உவகை என்ற எட்டுவகை மெய்ப்பாட்டு உணர்வுகளையும் தொல்காப்பியர் விளக்கிக் கூறியுள்ளமை போற்றுதலுக்குரியது.

தமிழர் செய்த தவத்தின் காரணமாகக் காலவெள்ளத்தில் அழிந்து போகாமல் இன்று கிடைக்கின்ற மிகப் பழமையான நூலாகிய தொல்காப்பியம் மூலம் நன்னூல் , புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப்பொருள் இலக்கண நூல்களும் தொல்காப்பியத்தை மையமாகக் கொண்டு எண்ணற்ற இலக்கிய ஏடுகளும் மலர்ந்துள்ளன.

## பாடம் - 2

### சங்க இலக்கியங்கள்

சங்கம் வைத்து மொழிவளர்த்த தமிழ்நாட்டில் கி.மு.100 வரை நடைபெற்றதாகக் கருதப்படும் கடைச்சங்கத்தில் தோன்றிய இலக்கியங்களே இன்று கிடைக்கின்றன. அவையே சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியப் பாடல்கள் அகம், புறம் என்ற இருபகுப்புகளில் அடங்குகின்றன. அகத்தில் காலத்தையும் புறத்தில் வீரம், கல்வி, வாணிகம் போன்ற இல்வாழ்வுக்கு அப்பாற்பட்டு நடக்கின்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் பாடி வைத்தனர். அகப்பாடல் மிகுதி புறப்பாடல் குறைவு வீட்டு வாழ்வு செம்மையாக அமையின் நாட்டு வாழ்வே தானே சிறக்கும் என்று பழந்தமிழ்ப் புலவர் நம்பியதால் அகப்பாடல்கள் மிகுதியாக எழுந்தன. சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இரு இலக்கியப் பிரிவுகளுள் ஒளிர்கின்றன.

### 1. எட்டுத்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டு இலக்கியங்களின் தொகுப்புத்தான் எட்டுத் தொகை ஆகும். இந்நூல்களில் அகமும் புறமுமாக 2371 உதிரிப் பாடல்கள் அடங்கியுள்ளன. எட்டுத் தொகை இலக்கியங்களை நினைவு கொள்வதற்கு எழுந்துள்ள வெண்பா:

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**

**இத்ததிறத்த எட்டுத் தொகை”**

என்பதாகும். எட்டுத்தொகையில் ஐந்து அக இலக்கியங்களும் ஒன்று அகப்புற இலக்கியம் இரண்டுபுற இலக்கியங்களும் உள்ளன.

### அக இலக்கியங்கள்

### 1. ஐங்குறுநூறு

இந்நூல் ஐந்திணை ஒழுக்கங்களையும் விளக்குகிது. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்கள் வீதம் ஐந்நூறு பாடல்கள் உள்ளன. பாடல்களைப் பத்துப் பத்தாகப் பிரித்துத் தகுந்த தலைப்பிட்டு நூல் தொகுக்கப்பட்டுள்ளன. 3அடி முதல் 6அடி வரை அளவுடைய குறைந்த

அடிகளைக் கொண்ட பாடல்களாக விளங்குவதாகும். ஐந்து திணை என்று ஒழுக்கங்களையும் மிகவும் சுருக்கிக் காட்டுவதாலும் இதற்கு ஐங்குறுநூறு பெயர் அமைந்துள்ளது.

ஐங்குறுநூற்றில் முதலில் நிற்பது மருதத்திணை அதனைப் பாடியவர் ஓரம்போகியார். நெய்தல் திணையைப் பாடியவர் அம்மூவனார். குறிஞ்சித்திணையைப் பாடியவர் கபிலர். பாலைத் திணையைப் பாடியவர் ஓதலாந்தையார். முல்லைத் திணையைப் பாடியவர் பேயனார். ஐந்து புலவர்கள் ஐங்குறுநூற்றுப் பாடல்களைப் பாடியவர்கள் ஆவர். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் இந்நூலைத் தொகுத்தவராவார். இந்நூல் பாடல்களைத் தொகுத்திட உதவிய சேரமன்னன் யானைகட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையாவான்.

செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவள் தலைவி. தலைவனை மணந்த பிறகு வறுமை நிலைக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்கிறாள். மான் உண்ட எச்சில் நீர்கூட மோலானது; தாய் வீட்டுத் தேன் கலந்த பாலும்கூட அவ்வளவு இனிமையானதன்று என்கின்றாள். இக்காட்சியை,

**அன்னாய் வாழிவேண் டன்னைநம் படைப்பை**

**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**

**உவலைக் கூவற் கீழ**

**மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே**

என்னும் பகுதி சித்திரிக்கின்றது.

**2. குறுந்தொகை.**

நல்ல என்ற அடைமொழி சிறப்பிக்கும் குறுந்தொகை 400 பாடல்களைக் கொண்டது. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டது. 205 புலவர்கள் குறுந்தொகைப் பாடல்களைப் பாடியுள்ளனர். தொகுப்பித்தவன் பூரிக்கோ ஆவான்.

குறுந்தொகை பாடிய புலவர்களில் அணிலாடு முன்றிலார் குப்பைக் கோழியார் செம்புலப் பெயனீரார் வெண்ணிலவினார் விட்ட குதிரையார் கயமனார் போன்ற புலவர்கள் தாங்கள் பாடிய வரிகளால் பெயர் பெற்றவர்கள்.

ஊழ்வலியால் தலைவனும் தலைமகளும் ஆகிய இருவரும் கண்டு தம்முள் காதல் கொண்டனர். காதல் தொடர்ந்து வளர்ந்தது நாட்கள் பல செல்லத் தலைவன் கண்டு தலைவியைத் தேற்றும் தலைவன் கூறும் கருத்தோவியம்

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (குறு 40)**

என் தாயும் நின் தாயும் எம்முறையில் உறவினர்? என் தந்தையும் நின் தந்தையும் எவ்வகையில் உறவினர்? யானும் நீயும் எவ்வழியில் அறிந்தோம்? செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரானது அம்மண்ணுடன் கலந்து செந்நிறமாகிச் செல்வது போல் நம் அன்புடைய நெஞ்சகக் காதல் ஒரு நாளும் பிரியாதன்றோ எனத் தலைவன் கூறித் தலைவியைத் தேற்றுகிறான். இப்பாடலை இயற்றிய புலவர் பெயர் அறியப்பட இயலாததால் அவர் பாடல் வரிகளைக் கொண்டே செம்புலப் யெநீரார் என்று பெயர் அமைத்து மகிழ்ந்தனர்.

குறுந்தொகைப் பாடல்களில் அமைந்துள்ள அழகிய உவமைகள் வாயிலாக வரலாற்றுச் செய்திகளையும் விலங்கு பறவைகளின் இனிய வாழ்வின் மூலம் மக்களின் பண்பாட்டு சிறப்பினை அறிவதும் குறுந்தொகைப் பாடல்களின் சிறப்பாகும்.

**3. நற்றிணை**

நல்தொகை எனப் பெயர் பெறும் நற்றிணையில் 400 பாடல்கள் உள்ளன. 175 புலவர்கள் பாடியுள்ளனர். கடவுள் வாழ்த்து பாடல் பாரதம் பாடிய பெருந்தேவனரால் பாடப்பட்டுள்ளது. நற்றிணைப் பாடல்கள் 9 அடிச் சிற்றெல்லையும் 12 அடிப்பேரெல்லையும் கொண்டது. அக உணர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுவதில் தலையாய நூல் நற்றிணை என்று பாராட்டுவர்.

பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் நற்றிணைக்குத் தெளிவானதோர் உரை எழுதியுள்ளார். தமிழ் மக்களின் பண்பாடு நாடு நகரங்கள் ஆகியவற்றின் வரலாறு இயற்கை உவமைகள் வரலாற்று மாந்தர்கள் போன்றவற்றை நற்றிணை மூலம் அறிகிறோம்.

**நின்ற சொல்லர்: நீடுதோன்று இனியர்:**

**என்றும் என்தோள் பிரிபறி யலரே:**

**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**

**சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்**

**புரைய மன்ற புரையோர் கேண்மை (நற்.1)**

நற்றிணையில் வரும் இப்பாடலைப் பாடிய கபிலர், காதலன் காதலியர் வாழ்வியலைக் கூறுமிடத்து, மறந்தும் கூட நெறி கெட்டுத் தலைவன் வாழக்கூடாது என்ற கருத்தை உளவியல் அடிப்படையில் படைத்துக் காட்டியுள்ளதைக் காணலாம்.

**4. அகநானூறு**

இது அகம் பற்றி விரிவாகப் பாடுகின்ற நூல் 400 பாடல்களைக் கொண்டது அகம் அகப்பாட்டு அகநானூறு நெடுந்தொகை என்று பல பெயர்களால் வழங்கப்படும். இந்நூல் 13 அடி முதல் 31 அடிவரையுள்ள பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் உருத்திரசன்மர். தொகுப்பித்த பாண்டிய மன்னர் உக்கிரப்பெருவழுதி ஆவான். அகநூல்களின் அகநானூறு தொகுக்கப்பட்டுள்ள முறையும் பாடல்கள் பகுத்து வைக்கப்பட்டுள்ள முறையும் சிறப்புடையன.

முதல் 120 பாடல்கள் களிற்றுயானை என்ற பிரிவிலும் 121 முதல் 300 வரையிலுள்ள 180 பாடல்களில் மணிமிடை பவளம் என்ற பிரிவிலும் இறுதியாகவுள்ள 301 முதல் 400 வரையிலான 100 பாடல்கள் நித்திலக்கோவை என்ற பிரிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலில் ஒற்றை எண்கள் உடைய பாடல்கள் பாலைத்திணையிலும் 2 8 எண்கள் உடைய பாடல்கள் குறிஞ்சித்திணையிலும் 4 எண்கள் உடையவை மருதத்திணையிலும் 10 எண்கள் உடையவை நெய்தல் திணையிலுமாக எளிதாகப் பாடல்களைக் கண்டுணரும் வண்ணம் வகைப்படுத்தப்பட்டுள்ள சிறப்பைக் காணமுடியும்.

தமிழக வரலாற்றினைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவும் ஒரு கருவூலமாக அகநானூறு விளங்குகிறது. முதல் கரு உரிப்பொருள்கள் மிக விளக்கமாக அகநானூற்றில் பேசப்படுகின்றன. ஐந்நில மக்களின் வாழ்க்கை மக்களின் பண்பாடு அரசியல் முறை நாடு நகரங்கள் இயற்கைக் காட்சிகள் போன்ற பல்வேறு சிறப்புகளைக் காட்17யவ ண்ணம் அகநானூறு விளங்குகிறது.

தலைவன் தலைவியரை இயற்கை எழில் கொழிக்கும் இடங்களில் அறிமுகப்படுத்தி, இயற்கையைப் பின்புலமாகக் காட்டும் சூழல் கற்போர் மனத்தில் இன்றும் உயிரூட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். சான்றாக அகநானூற்றில் கபிலர் காட்டும் ஒரு காட்சி:

**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக**

**இன்பம் இமிழிசை கேட்டுக் களிசிறந்து**

**மந்தி நல்லவை மருள்வன நோக்கக்**

**கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்**

**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்**

**5. கலித்தொகை**

சங்க இலக்கியத்தில் சற்றே காலத்தால் பின் தோன்றிய கலித்தொகை 150 கலிப்பாக்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது இந்நூல் பாடிய புலவர்கள் ஐவர். புாலைக் கலியைப் பெருங்கடுங்கோவும் குறிஞ்சிக் கலியைக் கபிலரும் மருதக் கலியை மருதனிளநாகனாரும் முல்லைக் கலியைச் சோழன் நல்லுரத்திரனும் நெய்தற் கலியை நல்லந்துவனாரும் பாடியுள்ளனா். கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவா் நல்லந்துவனாரே.

கலித்தொகைப் பாக்கள் நாடகப் போக்கில் அமைந்தவை தலைவன் தலைவி முதலானோா் ஒருவரோடோருவா் உரையாடும் பான்மையில் பல பாக்கள் அமைந்துள்ளன. இசையோடும் சொற்சுவை பொருட்சுவையோடும் இவ்விலக்கியப் பாடல்கள் அமைந்துள்ளமையால் இதனை கற்றறிந்தோா் ஏத்தும் கலி என்று போற்றியுள்ளனா்.

**எட்டுத்தொகையில் அகப்புற இலக்கியம்**

**1. பரிபாடல்**

பரிபாடல் என்பது இசைப்பா. இப்பாவினால் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளமையினால் பரிபாடல் என்ற பெயா் வந்தது. பாட்டுகளுக்கு இசை வகுத்துள்ளனா். தொல்காப்பிய உரை மூலமாகவும் இறையனாா் களவியல் உரை மூலமாகவும் எழுபது பாடல்கள் பரிபாடலில் இருந்தன எனத் தெரிகிறது. இன்று 22 பாடல்களே கிடைக்கின்றன. பாடல்கள் 25 அடிமுதல் 400 அடிவரையுள்ள அளவுடையன. இருபத்திரெண்டு பாடல்களில் திருமாலுக்கு 6 முரகனுக்கு 8 வையைக்கு 8 எனப்பாடல்கள் அமைந்துள்ளன. இப்பாடல்களை நல்லந்துவனாா் முதலிய 13 புலவா்கள் பாடியுள்ளனா். பரிமேலழகா் பரிபாடலுக்கு சிறந்த உரை இயற்றியுள்ளாா்.

இறைவன் எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் நிறைந்து உள்ளான். கண்ணால் கண்டுணர இயலாநிலை படைத்த இறைவனை மனத்தால் உணா்ந்து அறியலாம் என்று கடுவன் இளவெயினனாா் என்ற புலவா் பெருந்தொகை கூறுகிறாா்.

**தீயினுள் தெறல் நீ ! பூவினுள் நாற்றம் நீ !**

**கல்லினுள் மணியும் நீ ! சொல்லினுள் வாய்மை நீ !**

**அறத்தினுள் அன்பு நீ ! மறத்தினுள் மைந்து நீ !**

**வேதத்து மறை நீ ! பூதத்து முதலும் நீ !**

**வெஞ்சுடா் ஒளியும் நீ ! திங்களும் அளியும் நீ!**

**அனைத்து நீ ! அனைத்தின் உட்பொருளும் நீ !**

பரிபாடல் புறத்தையும் அகத்தையும் பற்றிப் பேசுகிறது. வையைப் பற்றிய அதன் அகப்பாடல்கள் இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை. எனவே பரிபாடலை அகப்புற இலக்கியம் என்றும் அழைப்பர். மதுரை மாநகரின் அமைப்பு முறையினைப் பரிபாடலில் கண்டு மகிழ முடியும்.

9-ம் பத்து பெருங்குன்றூர்க்கிழார் - இளஞ்சேரலிரும்பொறை நேரநாட்டை ஆண்ட மன்னர்கள் தாயமுறை உறவு கொண்ட இருகிளையினர் என அறியப்படுகின்றனர். ஒருவர் உதியன் சேரலாதன் மரபினர் அவர்கள் வஞ்சியைத் தலைநகராக்க தொண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். மற்றொருவர் இரும்பொறை மரபினர். அவர்கள் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியைத் தலைநகராக் கொண்டு ஆண்டனர். பதிற்றுப் பத்து காட்டும் சேரமன்னர் வரலாறு முதல் ஒன்று இரண்டாம் நூர் ற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர்.

**புற இலக்கியங்கள்**

1. **புறநானூறு**

தமிழர்களின் வீரவழிபாட்டுக்குரிய நூல் வீரத்திற்கு இலக்கணம் கூறும் பனுவல் புறம்-பாட்டு புறம்பு நானூறு ஆகிய பெயர்களாலும் புறநானூறு அழைக்கப்படுகிறது. இந்நூலில் வரும் 400 பாடல்களையும் 160 புலவர்கள் பாடியுள்ளனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலுக்கு கடவுள் வாழ்த்து பாடியுள்ளார். இப்புறப்பாடல்களைத் தொகுத்தவரோ தொகுப்பித்தவரோ யாரென அறியக் கூடவில்லை. புறப்பாடல்களுள் பதினான்கு மன்னரும் கவிபாடிப் பாடல்களை யாத்துள்ளனர் என்ற சிறப்பை அறிய முடிகிறது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னர் கல்வியின் சிறப்பைக் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளான்.

**“ உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”**

சோதிடக் கலை வல்லுநரான கணியன் பூங்குன்றனார் உலக வாழ்வியல் அமைதியும் இன்பமும் தோன்றிட வாழும் வாழ்க்கை முறையைத் தமிழர்க்கு கற்பிக்கிறார்.

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர்தரவ ாரா**

**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**

**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**

**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே".**

கணியன் பூங்குன்றனாரைத் தழுவி நரிவெரூஉத் தலையாரும் யாருக்கும் தீமை செய்யாமல் வாழ்ந்தோம் என்றால் அதுவே நமக்கு இன்பம் தரும் நன்மையாகவும் அமையும் எனப் பாடுகிறார்.

**2. பதிற்றுப்பத்து**

சேரமன்னர்கள் வரலாற்றைக் கூறும் வரலாற்றுக் கருவூலம் பதிற்றுப்பத்து. பத்துப் பத்தாக அமைந்த பத்துக்கள் பத்து என நூறுபாக்களைக் கொண்டது. முதல் பத்தும், கடைப்பத்தும் அழிந்துவிட்டமையால், இரண்டாவது பத்துமுதல், ஒன்பதாவது பத்து வரையிலுள்ள 80 பாடல்களே கிடைக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு பத்துக்கும் பதிகம் அமைந்துள்ளதைக் கொண்டு, அப்பத்தைப் பாடிய புலவர், பாடப்பட்ட சேரமன்னன், அவன் புலவர்க்கு அளித்த பரிசில் போன்ற செய்திகளை அறியமுடிகிறது.

**2ஆம் பத்து – குமட்டூர்க்கண்ணனார் - இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**

**3ஆம் பத்து – பாலைக்கௌதமனார் - பல்யானை செல்கெழு குட்டுவன்**

**4ஆம் பத்து – காப்பியாற்றுக் காப்பியனார் - களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்**

**5ஆம் பத்து – பரணர் - கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்**

**6ஆம் பத்து – காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்**

**7ஆம் பத்து – கபிலர் - செல்வக்கடுங்கோவாழியாதன்**

**8ஆம் பத்து – அரிசில் கிழார் - தகடூர் எறிந்த பெருஞ்சேரல்**

**9ஆம் பத்து - பெருங்குன்றூர் கிழார் - இளஞ்சேரலிரும் பொறை**

ஐந்தாம் பத்தின் தலைவனாகிய கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் ஏற்றமிகு தன்மையில் பாடியுள்ளளார். இம்மன்னனே கண்ணகிக்கு இமயக்கல் கொணர்ந்து வஞ்சியில் சிலை அமைத்து வழிப்பட்டவன் என்பர். மேலைநாட்டவரான யவனரும், பிற வணிகர்களும் அரபிக்கடல் வழிக்கப்பல் செலுத்தி வணிகத்தின் பொருட்டுத் தமிழகம் நோக்கி வரும்பொழுது, கடல் தீவுகளில் மறைந்திருந்து அவர்களைத் தாக்கி வழிப்பறி செய்த கடற்கொள்ளைக்காரர்களைச் செங்குட்டுவன் தன் கடற்படையால் வென்று அடக்கியமையால், இம்மன்னன் 'கடல் பிறக்கோட்டிய என்ற சிறப்புப் பெயர் பெற்றான் என்பர்.

**கேடுநரல் பௌவங் கலங்க, வேலிட்டு**

**உடைதிரை பரப்பில், படுகடல் ஓட்டிய**

**வெல்புகழ்க் குட்டுவன் கண்டோர்**

சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் தாயமுறை உறவு கொண்ட இருகிளையினர் என அறியப்படுகின்றனர். ஒருவர் உதியன் சேரலாதன் மரபினர்.அவர்கள் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். மற்றொருவர் இரும்பொறை மரபினர். அவர்கள் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். பதிற்றுப்பத்து காட்டும் சேரமன்னர் வரலாறு ஒன்றாம், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர்.

**பத்துப்பாட்டு**

சங்கப் பாடல்களில் நீண்ட நெடும் பாடல்களாக அமைந்த பத்துப்பாடல்களின் தொகுப்புத்தான் பத்துப்பாட்டு இலக்கியமாகும். செம்மாந்து செல்லும் நடையும் பழந்தமிழரின் பண்பு, விருந்தோம்பல் சிறப்பு, அரசர் தம் வீரம் போன்ற பல சிறப்புகளை உள்ளடக்கி விளங்குவது பத்துப்பாட்டாகும். பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் ஐந்தும் மதுரைக்காஞ்சியும் புறப்பொருள் நூல்களாகும் ஏனைய அகப்பொருள் பற்றின. இந்நூல்கள் நினைவு கூர்வதற்கு இயற்றப்பட்டுள்ள வெண்பா.

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**

**பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய**

**கோல நெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**

**பாலை கடாத்தொடும் பத்து.**

**1. புற இலக்கியங்கள்**

**ஆற்றுப்படை நூல்கள்**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஐந்து நூல்களும் ஆற்றுப்படை இலக்கியங்களாகும். ஆற்றுப்படையின் இலக்கணம் தொல்காப்பியத்தில் கூறப்படுகிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடை காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்.**

வள்ளலிடமோ மன்னனிடமோ பரிசு பெற்ற ஒருவன் பரிசு பெறாத வேறொருவனைச் செல்லும் வழியையும் பெற்ற பரிசிலையும் ஆற்றுப்படுத்தி அனுப்புவதே ஆற்றுப்படை இலக்கணமாகும். திருமுருகாற்றுப்படையில் முருகனிடம் அருள்பெற்ற ஒருவன் அச்செல்வத்தைப் பெறாத வேறொருவனை முருகனிடம் ஆற்றுப்படுத்தி அனுப்புவதாக அமைந்துள்ளது.

**1. திருமுருகாற்றுப்படை**

பத்துப்பாட்டுத் தொகுப்புக்குக் கடவுள் வாழ்த்துப் போல் முதலாவதாக அமைந்துள்ளள இந்நூலை இயற்றியவர் நக்கீரர் நூலில் 317 அடிகள் உள்ளன. ‘‘வீடு பெறுவதற்கு விரும்பிய ஒரு இரவலனை வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தியது என முருகாற்றுப்படைக்கு விளக்கம் அளித்துள்ளார். இது புலவராற்றுப்படை என்றும் பெயர்பெறும்.

இந்நூலில் திருப்பரங்குன்றம் , திருச்சீரலைவாய்(திருச்செந்தூர்) , திருவாவினன்குடி(பழனி) , திருவேரகம்(சுவாமிமலை) , குன்றுதோறாடல்(திருத்தணி) ,பழமுதிர்ச்சோலை(மதுரை) ஆகிய முருகனுடைய படைவீடுகள் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது. இது 11-ம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**திரு வீற்றிருந்த தீதுநீர் நியமத்து,**

**மாடம் மலி மறுகின் கூடற்குடவயின்**

**இருஞ்சேற்று அகல்வயல் விரிந்து வாய்அவிழ்ந்த**

**முள்தாள் தாமரைத் துஞ்சி, வைகறைக்**

**கள்கமழ் நெய்தல் ஊதி, எல்படக்**

**கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்**

**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**

**குன்று அமர்ந்து உறைதலும் உரியன்.**

இப்பாடல், திருப்பரங்குன்றத்தின் சிறப்பினை செவ்வனே எடுத்துரைக்கின்றது.

**2. பொருநராற்றுப்படை**

முடத்தாமக் கண்ணியார் இந்நூலின் ஆசிரியர் 248 அடிகள் நூலில் உள்ளன. சோழநாடு பொங்கிவரும் காவிரியின் சிறப்பையும் பாடினி பற்றிய வருணைனையும் இந்நூலுள் படித்து மகிழலாம். கரிகாலன் தாய் வயிற்றிலிருக்கும்போதே அவன் தந்தை போர்க்களத்தே மாண்டதையும் கரிகாலன் இளவயதிலேயே அரசுக்கட்டில் ஏறியதையும் வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் தன் பகைவர்களை வென்று காவிரிகாலன் வெற்றிவாகை சூடிய வரலாற்றுச் செய்தியையும் பொருநராற்றுப்படையில் அறிகிறோம்.

பொன்னிவளவனாகிய கரிகாலனை நாடிவந்த பொருநர்களாகிய பாணர்களின் வறுமை நிலை கண்டு அவர்களை அன்போடு வரவேற்று இனிய பார்வையில் அன்பு காட்டிச் சிறந்த முறையில் விருந்தோம்பும்சிறப்பை விரிவாக இந்நூலில் காணலாம். ஈறும் பேனும் நிறைந்து அழுக்கேறி வியர்வையால் நனைந்து விளங்கும் கந்தலாடையை மாற்றிப் புத்தாடை வழங்கும் வளவனின் சிறப்பை முடத்தாமக்கண்ணியார் பாடுகிறார்.

**"பாசி வேரின் மாசொடு குறைந்த**

**துன்னா சிதா அர் நீக்கித் தூய**

**கொட்டைக் கரைய பட்டுடை"**

நல்கினான் என அறிய முடிகிறது.

**அறல்போல் கூந்தல், பிறைபோல் திருநுதல்**

**கொலைவில் புருவத்து, கொழுங்கடை மழைக்கண்**

**இலவுஇதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்,**

**பலஉறு முத்தின் பழிதீர் வெண்பல்,**

இப்பாடலில் பாடினியின் கேசாதிபாத வர்ணனை இடம்பெற்றிருப்பதை உய்த்துணர முடிகின்றது.

**3. சிறுபாணாற்றுப்படை**

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் ஓய்மாநாட்டு நல்லியக்கோடனைத் தலைவனாகக் கொண்டு பாடிய நூல். 269 அடிகளைக் கொண்ட இந்நூலில் சிறிய யாழைக் கையிலே உடைய பாணர்கள் வருகின்றனர். சிறிய யாழ்ப்பாணன் ஒருவன் நல்லியக் கோடனிடம் மற்றொரு யாழ்ப்பாணனை ஆற்றுப்படுத்துவதாக நூல் அமைந்துள்ளது.

கொற்கைத் துறைமுகம் முத்துக்குப் பெயர் போனது. அங்கு வாழும் உமணர்கள் உப்பு வாணிகம் மேற்கொள்கின்றனர். அவர்களின் இயற்கை வாழ்வினையும் உப்பு விற்கச் செல்லும் பாங்கினையும் அழகிய கவிதை ஓவியமாக்கியுள்ளனர்.

இந்நூலில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் செல்வச் செழிப்பும், ஆட்சிச் சிறப்பும் குறிக்கப்படுகின்றது. கடையெழு வள்ளல்கள் என சங்க இலக்கியங்கள் பிறவற்றில் பேசப்பெறும் ஏழு குறுநில மன்னர்களின் படைச்சிறப்பும், கொடைச்சிறப்பும் சுட்டப்படுகின்றன.

**"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்**
**தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்**
**கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாலவும்**
**நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்**
**பைந்தலை அவரை பவழம் கோப்பவும்**
**கருநனைக் காயா கானமயில் அவிழவும்**
**கொழுங்கொடி முசுண்டை கொட்டங்கொள்ளவும்**
**செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்"**

**4. பெரும்பாணாற்றுப்படை**

தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங் கண்ணனார் இந்நூலைப் படைத்துள்ளார். 500 அடிகளைக் கொண்டது. இந்நூல் பெரிய யாழைத் தாங்கிய பெரும்பாணனை ஆற்றுப்படுத்தியதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

தொண்டைமான் இளந்திரையன் அரசன் மட்டுமல்லன் சிறந்த நல்லிசை புலவனுமாவான் அவன் ஆட்சிச் சிறப்பைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பித்துக் கூறியுள்ளார். 'பழுமரம் தேரும்' பறவை போல மலைமலி புலவர்களும் மக்களும் அவன் நாட்டை நோக்கி அச்சமின்றிச் செல்லலாம். இவர் இயற்கைக் காட்சிகளில் ஈடுபாடுமிக்கவர். பட்டினப்பாலை என்ற நூலைப் பாடியவரும் இவரே. இந்நூலில் காவல் சிறப்பு, காஞ்சியின் பெருமை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஐவகை நிலங்களின் வருணனை போன்றவை பேசப்படுகின்றன. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். தொண்டைமான் நாட்டில் ஆறலைக் கள்வர்களும், தீய விலங்குகளும் இல்லை. இடியும் துன்புறுத்தாது. நாய் கொண்டு வேட்டையாடுதல், மேலும் பசுக்களைப் பாதுகாத்து பால், தயிர், விற்று நெல்லும், புல்லும் பண்டமாற்றாகப் பெறுதல் ஆகிய செய்திகளை இந்நூலால் அறிகிறோம்.

**“நாள்மோர் மாறும் நல்மா மேனி**

**சிறுகுழை துயல்வரும் காதின் பணைத்தோள்**

**குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்**

**அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி**

**நெய்விலைக் கட்டில் பசும்பொன் கொள்ளாள்**

**எருமை நல்லான் கருநாகு பெறூஉம்”**

**மலைபடுகடாம்** அல்லது **கூத்தர் ஆற்றுப்படை**

இந்நூலில் நன்னனின் ஊரை அடைவதற்குரிய வழிகளும், இடையில் தங்கும் இடங்களும், அவ்வவ்நாட்டில் விளைகின்ற உணவுப் பொருள்களும் மலைகளின் நன்மையும், நன்னனின் கொடைச் சிறப்பும், அவன் சுற்றத்தார் ஒழுக்கமும் நன்கு விளக்கப்படுகின்றன.

**கழை வளர் நவிரத்து மீமிசை ஞெரேரென**

**மழை கரந்தன்ன ஈகை நல்கி**

**தலைநாள் விடுக்கும் பரிசில் மலை நீர்**

**வென்று எழு கொடியின் தோன்றும்**

**குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே!**

இப்பாடல் நன்னனின் கொடைச் சிறப்பை திறம்பட விளக்குகின்றது.

**5. கூத்தர் ஆற்றுப்படை**

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் இந்நூலை இயற்றியவர் ஆவார். 583 அடிகளைக் கொண்ட இந்நூலில் பாட்டுடைத் தலைவன் நவிரமலைப் பகுதியை ஆண்ட நன்னன் சேய் நன்னனாவான். இந்நூல் தலைப்பு இலக்கியச் சிறப்புப் பெற்றதாகும். மலை படு கடாம் என்ற மூன்று சொற்கள் இணைந்து நிற்பது மலைக்கு யானையை உவமித்து அதனிடம் பிறந்த ஓசையினைச் சிறப்பித்து எழுந்ததாகும். மலைபடு கடாம் மாதிரத்து இயம்ப என்ற பாடல் வரி இவ்உவமைச் சிறப்பை விளக்கி நிற்றலைக் காணலாம்.

**கழை வளர் நவிரத்து மீமிசை ஞெரேரென**

**மழை கரந்தன்ன ஈகை நல்கி**

**தலைநாள் விடுக்கும் பரிசில் மலை நீர்**

**வென்று எழு கொடியின் தோன்றும்**

**குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே!**

இப்பாடல் நன்னனின் கொடைச் சிறப்பை திறம்பட விளக்குகின்றது.

**புற இலக்கியம்**

**6. மதுரைக்காஞ்சி**

ஆற்றுப்படை நூல்களோடு மதுரைக்காஞ்சியும் பத்துப்பாட்டில் புற இலக்கியமாகத் திகழ்கிறது. பத்துப்பாட்டிலேயே மிக நீண்ட 782 அடிகளைக் கொண்ட இந்நூலினை இயற்றியவர் மாங்குடி மருதனார் ஆவார். இவர் பாட்டுடைத் தலைவன் பாணடியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாவான்.

மதுரைக் காஞ்சியில் மதுரை மாநகர வருணனை அழகுறப் பொலிகின்றது.

**"பொற்பு விளங்கு புகழ் அவை நிற்புகழ்ந்து ஏத்த**

**இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்தி**

**மணங்கமழ் தேறல் மடுப்ப, நாளும்**

**மகிழ்ந்தினிது உறைமதி பெரும**

**வரைந்து நீ பெற்ற நல்லூழியையெ!"**

**அக இலக்கியங்கள்**

**1. முல்லைப்பாட்டு**

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் இயற்றிய அக இலக்கியம் முல்லைப்பாட்டு 103 அடிகளைக் கொண்டது. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளால் இயன்ற நூல் இது. வினைமேற்சென்ற தலைவன் திரும்பும் வரை கற்பு நெறியினின்றும் வழுவாது இல்லில்தலைவி ஆற்றியிருப்பது முல்லை எனப்படும். இந்நூலும் நாட்டுக் கடமையாற்றச் சென்ற தலைவன் திரும்பும் வரைத் தலைவி ஆற்றியிருத்தலைக் கூறுதலால் முல்லைப்பாட்டு எனவாயிற்று.

கார்ப்பருவத் தொடக்கத்தில் மீண்டும் வருவேன் என்று தலைவியைத் தேற்றி தலைவன் பிரிவதும் வினைமேற் சென்ற தலைவன் தன் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதும் தலைவன் பிரிவால் தலைவி தனிமைத் துயரில் வாடுவதும் ஆகிய செய்திகளை உள்ளடக்கியுள்ளது முல்லைப்பாட்டு.

முதல்நாள் போர் முடிந்த இரவில் பாசறையில் தலைவன் தங்கியுள்ளான். படுத்திருக்கும் தலைவன் தூங்காமல் ஒருகை பள்ளி ஒற்றியும் ஒருகை முடியொடு கடகம் சேர்த்தும் நெடிது நினைத்து மறுநாள் ஆற்ற வேண்டிய போர்முறைகளை எண்ணிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். முதல்நாள் போரில் களிறுகளை வெட்டி வீழ்த்தி வீரமரணம் அடைந்த வீரர்களை எண்ணிப் பார்த்தான் பகை அம்புதைத்துப் புலம்பும் குதிரைகள் அவன் நினைவில் வந்தன. இரவுப் பொழுதில் நாழிகை வட்டில் காட்டும் நேரத்தை அறிந்து கூறுவோர். அவிந்து போகும் விளக்கைக் கொளுத்தும் பெண்கள் சட்டையும் தலைப்பாகையும் அணிந்த மெய்க்காப்பாளர் தலைவன் கூடாரத்தைச் சுற்றி வருதல் போன்ற போர்களச் செய்திகளை முறைப்படக் கூறிப்படிப்போருக்குக் கடமையின் முக்கியத்துவத்தைக் காட்டி விளக்கியுள்ள இலக்கியமே முல்லைப்பாட்டாகும்.

**இன்துயில் வதியுநள் காணாள், துயர் உழந்து**

**நெஞ்சு ஆற்றுப்படுத்த நிறைதடி புலம்பாடு**

**நீடுநினைந்து தேற்றியும், ஓடுவளை திருத்தியும்**

**மையல் கொண்டும், ஒய்யேன உயிர்த்தும்**

**ஏஉறுமஞ்ஞையின் நடுங்கி, இழை நெகிழ்ந்து………**

தலைவனது பிரிவால் தலைவியுற்ற துயரம் இப்பாடல் வரிகளில் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணலாம்.

**2. குறிஞ்சிப்பாட்டு**

பத்துப்பாட்டில் எட்டாவது இலக்கியமாக முத்துப்பாட்டாக விளங்குவது குறிஞ்சிப்பாட்டாகும். 262 அடிகளைக் கொண்ட இந்நூலைக் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடும் கபிலர் இயற்றியுள்ளார். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையை உணர்த்தும் பொருட்டு இக்களவொழுக்கம் பற்றிய நூலை கபிலர் பாடினார் என்பர்.

தோழி செவிலிக்கு அறத்தோடு நிற்கும் துறையில் அமைந்தது குறிஞ்சிப்பாட்டாகும் மலையில் தினைப்புனம் காக்கும் தலைவி தோழி வேட்டைக்கு வரும் தலைவன் இயற்கை கூட்டுவிக்க ஒன்றுபடும் காதல் உள்ளங்கள் மலையில் அருவி 99 வகை மலர்களைத்

தலைவியும் தோழியும் பறித்து மாலை கட்டுதல் தலைவன் தலைவியோடு மாலை வரை காத்திருந்து ஊர் எல்லை வரை வந்து அனுப்புதல் இரவுக்குறி தலைவி தலைவனை எண்ணி ஏங்குதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறியுள்ள இன்பத் தமிழ் இலக்கியமாகும் இது.

முத்து மணி பொன் முதலியவற்றால் உருவாக்கப்பட்ட செய்கலன் உடைந்து விடுமாயின் அதனைப் பழைய மாதிரியே சரி செய்துவிடலாம். ஆனால் ஒழுக்கத்தோடு இணைந்த கற்பு நீங்குமானால் அதனை மீண்டும் செப்பம் செய்வது மாமுனிவர்க்கும் கூட எளிய செயல் அன்று என்பதைத் தோழி செவிலிக்குக் கூறுவாளாய்க் குறிஞ்சிப்பாட்டில் வருகின்ற வரிகள் படித்துப் போற்றத் தக்கவைகளாகும்.

**முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை**

**நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்**

**சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்**

**மாசு அறக் கழிஇ வயங்குபுகழ் நிறுத்தல்**

**ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை**

**எளிய என்னார் தொன்மருங்கு அறிஞர்.**

**3. பட்டினப்பாலை**

சோழப் பெருவேந்தன் கரிகாலன் மீது கடியலூர் உருத்திரங்கண்ணனார். பாடியது இது 301 அடிகளை உடையது. ‘முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும் வாருரிங் கூந்தல் வயங்கிழை ஒழிய வாரேன் வாழிய நெஞ்சே’ என்று தலைவன் தன் நெஞ்சை நோக்கிச் செலவு அழுங்கிக் கூறும் கூற்றாக அமைந்ததால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

கரிகால் வளவனுடைய புகழ் அவன் வளநாடு காவிரியின் சிறப்பு அரசனது ஆட்சி போன்றவற்றை விரிவாக விளக்கிக் கூறுகிறது. பட்டினப்பாலை சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம் என்ற இரு பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்ததையும் அங்கு குறித்தும் பட்டினப்பாலை பேசுகிறது மக்கள் வாழ்க்கை துறைமுகத்தில் சுங்கம் பெற்று ஏற்றுமதி இறக்குமதி செய்த தன்மை குறித்தும் பட்டினப்பாலை பேசுகிறது

## அகப்புற இலக்கியம்

### 1. நெடுநல் வாடை

நெடு நல் வாடை என்ற மூன்று சொற்களால் தலைப்பிலேயே இலக்கியச் சுவையை அளித்துக் கொண்டிருக்கும் நூல் பாசறையில் தங்கியிருந்து கடமையாற்றும் தலைவனுக்கு நீண்ட நல்ல வாடையாகவும் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்குத் துன்பவாடையாகவும் அமைந்துள்ளது வாடைக் காலம். அதுவே நூல் தலைப்பும் ஆயிற்று. முரண் இதில் அமைகிறது.

இந்நூலை இயற்றியவர் நக்கீரர் 188 அடிகளைக் கொண்டுள்ள இந்நூல் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றியதென்றும் இந்நூலில் வருகின்ற ‘வேம்பு’ என்ற சொல் நெடுஞ்செழியனையே குறித்து வருதலால் இது புற இலக்கியமே என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உட்படப் பலர் கூறுவர். ஆயின் ‘வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்’ என்பதில் வேம்பு அரசனைக் குறிக்காமல் ஈட்டியில் சுற்றப்பட்டிருந்தது என்று கொண்டு இது அக இலக்கியமே என்று டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் போன்ற அறிஞர் பலரும் ஆராய்ந்துள்ளனர்.

மழைக்காலத்தில் குளிரால் கோவலர்கள் ஆநிரைகள் பறவைகள் படும் துன்பம் அரண்மனை அமைப்பு கோப்பெருந்தேவியின் துயர் அவள் துயரைத் தீர்க்கச் செவிலியர் முயலும் முயற்சிகள் நகரச் செய்திகள் பாசறையில் மன்னன் நிலை போன்றவற்றை விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கிறது நெடுநல்வாடை.

## சங்க இலக்கியச்சிறப்புகள்

### 1. அகம்,புறம் திணைப் பாகுபாடுகள்:

சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்று பிரிக்கப்பட்டுள்ளன எனக் கண்டோம். அகம் என்பது காதல்: அதாவது இல்வாழ்க்கையின் தன்மை குறித்துப் பேசும். குறிப்பாக வீரம் புறத்தில் சிறப்பிக்கப்படும்.

அகம் ஐந்திணைகளின் காதல் ஒழுக்கத்தைத் தனித்தனியே வரையறுத்துக் கூறுகிறது. அதனை ஐந்திணை என்றழைப்பர். திணை என்பது ஒழுக்கத்தைக்குறிக்கும். எனவே, அக இலக்கியங்களில் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை என்ற ஐந்து நிலங்களின் பெயர்களே, ஐந்திணைகளாகவும் அழைக்கப்படுகின்றன.

புற இலக்கியங்களில் குறிப்பாக புறநானூற்றில் வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை முதலிய பன்னிரு

புறத்திணைகள் பேசப்படுகின்றன. உழிஞைத்திணை பற்றிய செய்தி இல்லை. பதிற்றுப்பத்து சேரமன்னர்களின் வீரவரலாற்றைப் பற்றிக் கூறுகின்ற நூலாகும்.

காதலைப் பற்றி விரிவாகப் பேசுகின்ற சங்க இலக்கியங்கள் வீரத்திற்கும் சிறப்பானதோர் இடத்தை நல்குகின்றன. காதலும், வீரமும், சங்கத்தமிழரின் இரு கண்கள் எனக் கொள்ளலாம். பழந்தமிழகத்தில் தோன்றிடும் காளை ஒருவனின் கடமை குறித்து பொன்முடியார் என்ற புலவர் கூறுகிறார்:

**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிச்**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே**

ஒவ்வொரு அகப்பாட்டிற்கும் முதல், கரு, உரிப்பொருட்கள் உள்ளன. நிலமும், பொழுதும் ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதல்பொருள் என்றும், அந்த அந்த நிலத்துக்குரிய தெய்வம், மக்கள், விலங்கு, பறவை போன்றவை கருப்பொருள் என்றும், ஒவ்வொரு நிலத்திற்குமுரிய சிறப்பு ஒழுக்கம் உரிப்பொருள் என்றும் அழைக்கப்படும்.

**2. உள்ளது கூறல்,சுருங்கக் கூறல்**:

சங்ககால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவே சங்க இலக்கியங்கள். மக்களின் அன்புகனிந்த வாழ்க்கையில் நிகழ்ந்த காதல், இல்வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, அரசர், புலவர் தொடர்பு, போர் மேற்கொள்ளல் போன்ற அத்தனை நிகழ்ச்சிகளையும் உயர்வு நவிற்சியின்றி இயல்பாகவே கூறுகின்றன. உண்மைகளைக் கூறுமிடத்து, சுருங்ககூறி விளங்க வைக்கும் தன்மை சங்க இலக்கியத்தின் மற்றொரு சிறப்பாகும்.

**3. ஒருவர்கூற்று:**

சங்க இலக்கியத்தில் அக இலக்கியங்கள் ஒருவர் கூற்றாக அமைவதாகவே புலவர் யாத்துள்ளனர். தலைவியோ, தலைவனோ,தோழியோ, பாங்கனோ, செவிலியோ கூறுவதாகவே படைக்கப்பட்டுள்ளன. எனவே ஒரு நாடகக் காட்சி அமைவது போல சிறுகதை சொல்லப்படுவதுபோல உணர்ச்சிப் படைப்புகளாக அகப்பாடல்கள் விளங்குகின்றன.

**4. உவகை இன்பம்:**

சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவியின் வாழ்வியல் கூறுகளைப் படம்பிடித்துக் காட்டும் கவிஞர்கள், உவமைகள் வாயிலாகப் புலப்படுத்துகின்றனர். இலக்கிய இன்பத்தையும் அவை அள்ளித் தருகின்றன. குப்பைக் கோழித் தனிப்போர் போல அணில் ஆடு மூன்றில் போல போன்ற நடைமுறை உண்மைகளே உவமைகளாக வருகின்றன. அகப்பாடல்களில் வரும் இயற்கை வருணனைகளில் சில கருத்துக்கள் மறைமுகமாகச் செறித்து வைக்கப்பட்டுள்ள நயத்தைக் காண முடியும். அவற்றை உள்ளுறை உவமைகள் அல்லது இறைச்சி என்றழைப்பர்.

**5. .உவமையால் பெயர்பெற்ற புலவர்கள்**

சங்க இலக்கியத்தின் மற்றொரு சிறப்பு, புலவர்களில் சிலர் தாங்கள் படைத்த இலக்கிய உவமை வாயிலாகவே பெயர் பெற்றவர்களாக விளங்குவது. அக இலக்கியம் பாடிய முந்நூற்று எழுபத்தெட்டுக் கவிஞர்களில் சிலரின் பெயர்கள், அவர்கள் படைத்த பாடல்களின் அடியில் காணப்படவில்லை. பின்னர் இப்பாடல்களைத் தொகுத்தவர்கள், பெயர்விடப்பட்ட கவிஞர்களின் இலக்கிய மணம் பரப்பும் உவமைத் தொடரைக் கொண்டே பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அணிலாடு முன்றிலார், செம்புலப் பெயனீரார், விட்ட குதிரையார், குப்பைக் கோழியார், மலையனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், விழிக்கண் பேதையார், தேய்ப்புரிப் பழங்கயிற்றியனார், தும்பிசேர் கீரனார் போன்ற அருந்தொடரால் பெயர்பெற்ற புலவர்களைக் கூறலாம்.

**6. உளவியல் கோட்பாடுகள்:**

சங்க இலக்கியப் புலவர்கள் உளவியலை நன்கறிந்தவர்கள். அகப்பாடல்களைப் பாடும் பொழுதும், புறப்பாடல்களை வடிக்கின்ற பொழுதும் மனித மனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**நின்ற சொல்லர்: நீடுதோன்று இனியர்:**

**என்றும் என்தோள் பிரிபறி யலரே:**

**தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**

**சாந்தில் தொடுத்த தீந்தேன் போலப்**

**புரைய மன்ற புரையோர் கேண்மை (நற்.1)**

நற்றிணையில் வரும் இப்பாடலைப் பாடிய கபிலர், காதலன் காதலியர் வாழ்வியலைக் கூறுமிடத்து, மறந்தும் கூட நெறி கெட்டுத் தலைவன் வாழக்கூடாது என்ற கருத்தை உளவியல் அடிப்படையில் படைத்துக் காட்டியுள்ளதைக் காணலாம்.

புலவர்கள் அரசர்கள் உள்ளம் அறிந்து, தாம் சொல்ல வருகின்ற கருத்துக்களை இனிப்புக் கலந்து கொடுக்கும் மருந்து போல நயம்படக்கூறி அவர்களின் உள்ளத்தைத் தம்பக்கம் திருப்புவர். உளவியலை நன்கறிந்த புலவர்கள் பலரைப் புற இலக்கியத்திலும் சந்திக்கிறோம். மதுரைக்காஞ்சி இலக்கியத்தையே இதற்குச் சிறந்த சான்றாகக் கூறலாம்.

**7. உயர்ந்த கொள்கைகள்:**

சங்க இலக்கியத்தில் குறிப்பாக புறநானூற்றில் உயர்ந்த கொள்கைகள் பாடல்களிடையே கூறப்படுகின்றன.

**“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

**புகழ் எனின் உயிரும் கொடுக்குவர், பழி எனின்**

**உலகுடன் பெறினும் கொள்ளலர்**

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**

**அல்லது செய்தல் ஓம்புமீன்**

**வழிபடுவோரை வல்லறி தீயே! பிறர்**

**பழிகூறுவோர் மொழிதேறலையே!**

**வாழ்தல் வேண்டிப் பொய்க்கூறேன் மெய்கூறுவல்**

**“யாதும் ஊரே யாவரும் கேளீர்”**

**8. இல்வாழ்க்கை மாண்பு:**

பழந்தமிழர்தம் இல்வாழ்க்கை அன்பு நிறைந்த வாழ்க்கையாக விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. குடும்பத் தலைவன் தவறு செய்தாலும், வீட்டுத் தலைவி கற்புநெறி குன்றாத ஒளிவிளக்காக விளங்கினாள். தவறு செய்துவரும் தலைவனை, அன்புநிறைந்த சொற்கள் மூலமாக அறிவுரை வழங்கி அவனைத் திருத்தினாள் என்பதைப் புலவர்கள் காட்டுகின்றனர். **குறுந்தொகை** காட்டும் ஒரு இல்லறத்தலைவி தன் கணவனைத் திருத்தும் அன்புமொழிகளைக் கீழ்க்காண்க:

**அணிற்பல் அன்னகொங்குமுதிர் முண்டகத்து**

**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!**

**இம்மை மாறி மறுமை ஆயினும்**

**நீ ஆகியர் என் கணவனை!**

**யான் ஆகியர்நின் நெஞ்சுநேர் பவளே!**

**9. இயற்கையோடியைந்த வாழ்வு:**

சங்க இலக்கியங்கள் பழந்தமிழர் இயற்கையோடியைந்து வாழ்வுகண்ட முறையைச்சுவைபட எடுத்தியம்புகின்றன. குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை என்று இயற்கையின் அடிப்படையில்

மக்கள் வாழ்ந்த நிலங்களைப் பெயரிட்டு அழைத்த புலவர்கள், நில இயல்புகளுக்கு ஏற்ற வண்ணம் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையையும் இயற்கையோடியைந்த வண்ணமே கவிதையாக்கிக் காட்டினர். தலைவன் தலைவியரை இயற்கை எழில் கொழிக்கும் இடங்களில் அறிமுகப்படுத்தி, இயற்கையைப் பின்புலமாகக் காட்டும் சூழல் கற்போர் மனத்தில் இன்றும் உயிரூட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். சான்றாக அகநானூற்றில் கபிலர் காட்டும் ஒரு காட்சி:

**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக**

**இன்பம் இமிழிசை கேட்டுக் களிசிறந்து**

**மந்தி நல்லவை மருள்வன நோக்கக்**

**கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்**

**நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்**

**10. புலவர்கள் - அரசர்கள் உறவு:**

சங்க இலக்கியம் படைத்த கவிஞர்கள் பலதரப்பட்ட பணிகளைச் செய்து வந்த கலைஞர்கள் ஆவர். ஆண், பெண், குயவர், மருத்துவர், தச்சர், ஆசிரியர், அரசர் என்று கற்றறிந்த பலரும் புலமைபெற்றுக் கவிதை இயற்றினர்.

அரசர்க்கும் புலவர்களுக்குமிடையே நெருங்கிய நட்பு இருந்தது. பாரி-கபிலர், அதியமான்-அவ்வையார், பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன், குமணன்-பெருஞ்சித்தரனார் போன்றோருடைய நட்புறவு பாராட்டிப் போற்றுகின்ற வண்ணம் இருந்தது. கரிகாலன் போன்ற மன்னர்களின் கொடை மாண்பையும், பாரி, காரி, ஓரி, ஆய், அதியமான், பேகன், நள்ளி ஆகிய கடையெழு வள்ளல்களின் கொடை வளமும் புலவர்களால் பலபடப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன.

**11. மான உணர்வு:**

வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்த தமிழர் மானத்திற்கும் முக்கியத்துவம் அளித்ததைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அரசனாகத் தோன்றியோர்க்கு மானத்தினும் மிக்க உறுதிப்பொருளில்லை என்பதற்குச் சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற மன்னன் பாடிய பாட்டே சிறந்த சான்றாகும்.

தாய்நாட்டைக் காத்திட வேண்டும்: உயிர்வெல்லக்கட்டி அன்று: பகைவனிடமிருந்து நாட்டைக்காப்பாற்றும் மானமே பெரியது என்பதைத் தமிழ் மறக்குலப் பெண்ணொருத்தியின் வீரச்செயலைக்காட்டிப் புறப்பாடல் படைக்கிறார் ஒக்கூர் மாசாத்தியார்.

**இன்றும் பொருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி**

**வேல்கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇப்**

**பாறுமயிர்க்குடுமி எண்ணெய் நீவி,**

**ஒருமகன் அல்லது இல்லோள்,**

**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே!**

**12. கல்வி கலைமகள்:**

பழந்தமிழர் கல்வியையும், கலைகளையும் போற்றியதைச் சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இசைக் கலையை வளர்த்த பாணர்களையும், நாட்டியக் கலையை வளர்த்த பாடினியரையும் ஆற்றுப்படை இலக்கியங்கள் படம்பிடித்துக்காட்டுகின்றன. தமிழர்கள் கையாண்ட பல்வேறு இசைக் கருவிகளைப் பற்றியும் மலைபடுகடாம் கூறுகிறது, கலை உள்ளம் கொண்ட காவலர்கள் கலைகள் வளரக்கலைஞர்களை ஆதரித்து மகிழ்ந்ததையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னன் கல்வியின் மாண்பைக் குறித்துப் பாடியுள்ளதைப் புறநானூற்றில் காணலாம்.

**உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,**

**பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!**

**பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்று உள்ளும்,**

**சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்:**

**வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்,**

**கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,**

**மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே**

**13. வரலாற்றுச் செய்திகள்:**

அக்காலத் தமிழக வரலாறு குறித்து நேரடியாக எழுதி வைக்கும் பழக்கம் தமிழர்களிடையே இல்லை. புலவர்கள் தாம் படைக்கும் பாடல்களில் இலைமறை காயாக, உவமைகள் வாயிலாகவும், அரசர்களின் கொடைமாண்பு, வீரம் இவைகளைப் புகழ்ந்து பாடுவதன் வாயிலாகவும் வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிப் பாடிவைத்தனர். பரணர் தாம் பாடும் பாடல்களில் எல்லாம் வரலாற்றுச் செய்திகளைப் பாடிவைக்கும் புலமையைப் பெற்றிருந்தார். சான்றாக, பரணர் பாடிய அகநானூற்றுப் பாடலில் கீழ்க்கண்ட வரலாற்று நிகழ்ச்சி தெரிய வருகிறது.

**ஆதி மந்தி பேதுற்ற இனைய**

**சிறைபறைந்து உரைஇ செங்குணக்கு ஒழுகும்**

**அந்தணர் காவிரி போல**

**கொண்டுகை வலித்தல் சூழ்ந்திசின் யானே**

**14. பா அமைப்பும், நூல் பெயர்களும்:**

சங்க இலக்கியப் பாடல்கள் யாவும் எளிமையாகவும், இனிமையாகவும், இயல்பு நவிற்சியோடும் படைக்கப்பட்டவை. கடினமான பாமுறைகளைக் கையாளாமல், எளிமையான ஆசிரியப்பா யாப்பிலேயே பாடப்பட்டுள்ளன.

நூல் பெயர்கள், அமைந்துள்ள முறையும் இலக்கியத்தரம் வாய்ந்தனவாக உள்ளன. அகநாநூறு அகத்தைப் பற்றி விரிவாகப் பேசுகின்ற நூல் எனவும், புறநானூறு புறத்தைப் பற்றிப் பேசுகின்ற நூல் எனவும் குறிஞ்சிப்பாட்டு குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த நூல் எனவும் காணலாம்.

போர்க்களத்தில் இருந்த தலைவனுக்கு வாடைக் காற்று நல்லனவாகவும், அரண்மனையில் தங்கியிருந்த கோப்பெருந்தேவிக்கு வாடைக்காற்று துன்பந்தருவதாகவும் இருந்ததை உணர்ந்து ‘நெடுநல்வாடை’ என்ற நூலுக்குத் தலைப்பு வழங்கப்பட்டதை அறிந்து மகிழலாம். மலையில் பட்டு எதிரொலிக்கின்ற மதம் பிடித்த யானையின் பிளிறல் ஒலிக்குச் சிறப்புக் கொடுக்க வேண்டி ‘மலைபடுகடா அம்மாதிரத்து இயம்ப’ என்ற பாடல் வரியே, கூத்தர் ஆற்றுப்படையின் பாடல் தலைப்பு ஆயிற்று. இவ்வாறு ஒவ்வொரு இலக்கியத்தின் தலைப்பும் அமைந்து, இலக்கியச் சுவைபயந்து நிற்பதைச் சங்க இலக்கியங்களில் காணமுடியும்.

**15. வாழ்வு காட்டும் கண்ணாடி:**

இலக்கியம் மக்களின் வாழ்வைக் காட்டும் கண்ணாடி என்று கொண்டோமென்றால், பழந்தமிழர் வாழ்ந்த பொற்கால வாழ்வைச் சங்க இலக்கியங்கள் இன்று நம்மிடையே காட்டிய வண்ணம் விளங்குகின்றன

## பாடம் - 3

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

## அற நூல்கள்

### 1. நாலடியார்

**நூல் அமைப்பு**

400 வெண்பாக்களை உடையதாகும் இந்நூல். இது சமண முனிவர்களால் பாடப்பெற்றது. பாண்டியன் கட்டளைப்படி எண்ணாயிரம் சமண முனிவர்கள் பாட அப்பாடல்கள் அனனத்தையும் வைகையாற்றிலே விட அவற்றில் 400 பாடல்களே நீரை எதிர்த்துக் கரை ஏறின என்ற கதையொன்றும் இந்நூலைப் பற்றி கூறுவதுண்டு. இது பதிதுமூன்று அதிகாரங்களைக் கொண்ட அறத்துப் பாலினையும் இருபத்தாறு அதிகாரங்களைக் கொண்ட பொருட்பாலினையும் காமநுதலியல் என்ற மூன்று அதிகாரங்கள் கொண்ட காமத்துப்பாலினையும் கொண்டு திகழ்கிறது.

**நூல் சிறப்பு:**

சொல் நயம் பொருள் நயம் கொண்டிலங்குவது. திருக்குறளுக்கு அடுத்தப் படியாக பெருமையுற்று இலங்குவது. ‘‘நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’’ ‘‘பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்’’ என்ற மொழிகள் அதனன வலியுறுத்தும். மேன்மக்களது இயல்பு பற்றியும் கல்வியின் சிறப்புப் பற்றியும் இந்நூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறுகிறது. நட்பின் தன்மையைத் திறம்பட விளக்குகிறது.

**பாடல் சிறப்பு:**

செல்வத்தின் மீது ஆசை கொண்டவன் அதைப் பிறருக்கும் கொடுக்க மாட்டான்: தானும் அனுபவிக்க மாட்டான். அப்படியானால் அச் செல்வத்தின் மீது உரிமை கொண்டாட அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது. இதை நாலடிப் பாடல் ஒன்று,

**எனது எனது என்றிருக்கும் ஏழை பொருளை**

**எனது எனது என்றிருப்பான் யானும் தனது ஆயின்**

**தானும் அதனை வழங்கான் பயன் துவ்வான்**

**யானும் அதனை அது**

எனக் குறிப்பிடுகிறது.

## 2. நான்மணிக்கடிகை:

**நூல் அமைப்பு:**

விளம்பி என்னும் ஊரில் பிறந்த நாகனார் என்னும் வைணவர் இந்நூலின் ஆசிரியராவார். இந்நூல் 104 வெண்பாக்களையுடையது. மணி போன்ற உறுதி பொருள்கள் நான்கினை ஒவ்வொரு பாவிலும் கொண்டு திகழ்கிறது.

**நூல் சிறப்பு:**

கோபம் கொண்டவன் நன்மை தீமையை அறிய முடியாதவன் ஆகிவிடுகிறான். உண்மை அவன் முன்னே தோன்றாது. அவன் குருடனாகி விடுவான். எனவே கோபத்தை அறவே கைவிட வேண்டும் என்று இந்நூல் கூறுகிறது. இன்னொரு பாடல் அறம் புகழ் ஆகிய இரண்டையும் குறித்துப் பேசுகிறது. உலகில் நிலைபெற்ற வாழ்வைப்பெற அழியாத புகழை ஈட்ட வேண்டும். அறம் ஒருவனுக்கு மறுபிறவியிலும் துணையாக வரும்.

**பாடல் சிறப்பு:**

கல்வி குறித்து ஒரு பாடல் பேசுகிறது. அத்துடன் மேலும் சில கருத்துக்களை அதனுடன் இணைத்துக் கொள்கிறது. கற்றதைச் சிந்தித்து ஒழுகுதலே கல்விக்குச் சிறப்பு. அவனே கல்வி கற்றவன் எனப்படுகிறான். ஒரு வீட்டிற்குச் சிறப்பு கொடுப்பவள் பெண். ஒரு ஆண்மகன் இருப்பது அவளுக்கு சிறப்பு. இது போலவே கல்வியும் என்று பல்வேறு செய்திகளை இணைத்துப் பாடலை உருவாக்கியுள்ளார் விளம்பி நாகனார். பாடல் கீழ்வருமாறு:

**மனைக்கு விளக்கம் மடவார், மடவார்**

**தனக்கு தகைசால் புதல்வர் - மனக்கினிய**

**காதல் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும்**

**ஓதில் புகழ்சால் உணர்வு**

## 3. இன்னா நாற்பது

**நூல் அமைப்பு:**

இது கடவுள் வாழ்த்து உட்பட 41 வெண்பாக்களையடையது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் இன்னது துன்பம் பயக்கும் என்று கூறுதலால் இன்னா நாற்பது எனும் பெயர் கொண்டது. 162 இன்னா கருத்துக்களை ஆசிரியர் இந்நூலில் திரட்டிக் கொடுத்துள்ளார்.

அன்றைய காலகட்ட ஒழுக்க முறைகள் பழக்க வழக்கங்கள் பற்றிய செய்திகளை இந்நூலின் வழி அறிய முடிகிறது. பொதுவாக கள் ஊன் இரண்டுமே வெறுக்கத் தகுந்தது. அடைக்கலப் பொருட்களைத் தனதாக்கும் செயல் வெறுக்கத்தக்கது. வறுமையுடையவன் வள்ளல் குணத்தை விரும்புதல் கூடாது. கோழியும் நாயும் அந்தணர் வூட்டில் வளர்த்தல் கூடாது. மன்னனுக்கு யானைப்படை முக்கியம். மன்னர் உலாவரும் யானைக்கு மணி கட்டியிருத்தல் வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் இந்நூலில் வருகின்றன.

### 4. இனியவை நாற்பது

#### நூலின் அமைப்பு:

இந்நூலின் ஆசிரியர் பூதம் சேந்தனார். இது 40 வெண்பாக்களைக் கொண்டது. இதன் ஒவ்வொரு வெண்பாவிலும் 3 அல்லது 4 கருத்துக்கள் வருகின்றன. மக்கள் செய்ய வேண்டிய இனிய செயல்கள் இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன. இந்நூலில் 127 இனிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

#### நூலின் சிறப்ப:

பிரம்மனை வழிபடும் முறை இந்நூலில் உள்ளது. மானம் அழிந்த பின் வாழும் வாழ்வை இந்நூலாசிரியர் வெறுக்கிறார். குளங்கள் வெட்டுதல் சோலை உண்டாக்குதல் பசுவும் பொன்னையும் அந்தணருக்குக் கொடுத்தல் ஆகியன இனியவை என இந்நூல் கூறுகின்றது.

#### பாடல் சிறப்பு:

சங்க காலத்தில் நடைமுறையில் இல்லாத பழக்க வழக்கங்களை இந்நூல் கூறுகிறது. பெண்ணை மதித்தத் தமிழ் மரபிற்கு நேர் எதிரான கருத்து இந்நூலில் வருகிறது. பெண் நஞ்சு போன்றவள்: அவளை வெறுக்க வேண்டும் என்று இந்நூல் கூறுகிறது.

**கடமென் பணைத்தோள் தனியிலாரை**

**விடமென்றுணர்தல் இனிது**

என்பது இந்நூலின் பாடல்வரிகள்.

### 5. திரிகடுகம்

இது கடவுள் வாழ்த்து உட்பட 101 வெண்பாக்களையுடைய ஒரு நீதி நூல். சுக்கு மிளகு திப்பிலி ஆகியன மக்களின் உடல்நோயைத் தீர்ப்பது போல் இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மக்களுக்கு நலம் பயக்கும் மும்மூன்று உறுதிப் பொருட்களைக் கூறுகின்றது.

இந்நீதிகள் மக்கள் அகவிருள் அகற்றி அறிவொளி வீசத் துணைபுரிவன. இதனாசிரியா் நல்லாதனாா். திருமாலைப் பாடியிருப்பதால் இவா் வைணவா் எனக் கருத இடமுண்டு. திருக்குறளில் ஆழ்ந்த பயிற்சி கொண்டு அதன் தொடா்களையும் கருத்தினையும் தம் நூலில் ஆண்டுள்ளாா். இல்வாழ்க்கை சிறப்பினை 35 இடங்களில் கூறுகின்றாா்.

**நூல் சிறப்பு:**

குடிகளைக் கொடுமைப்படுத்திப் பொருள் சோ்க்கும் மன்னனும் பொய்யே பேசும் மக்களும் கணவனது சொல்லை மீறி தான் விரும்பிய இடம் செல்லும் மனைவியும் இவ்வுலகில் இருப்பதே மழை பொய்யாமைக்குக் காரணமாகும் என ஆசிரியா் இங்குக் கூறுவதை நாம் எண்ணுதல் வேண்டும்.

**பாடல் சிறப்பு:**

செல்வம் உடைக்கும் படையாக இந்நூலாசிரியா் குறிப்பிடும்போது

**தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்**

**கொன்னே வெகுளி பெருக்கலும் முன்னிய**

**பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்**

**செல்வம் உடைக்கும் படை**

என்கிறாா்.

### 6. ஏலாதி

**நூலின் அமைப்பு:**

இந்நூலை இயற்றியவா் கணிமேதாவியா். இவா் சமண சமயத்தினா். வுடமொழியில் நன்கு பயிற்சிப் பெற்றவா். இந்நூல் 80 வெண்பாக்களைப் பெற்றுள்ளது. இந்நூலும் மருத்துவ பெயா் பெற்றே விளங்குகிறது. ஏலம் இலவங்கம் சிறு நாவற்பூ சுக்கு மிளகு திப்பிலி ஆகிய ஆறுவகை மருந்துகளால் ஆனதை ‘‘ஏலாதி’’ என்பா். இவ்வுலகில் எது எளிது? எது அரிது? ஏன இந்நூல் விளக்குவது நுட்பமாக அமைந்துள்ளது.

**நூல் சிறப்பு:**

காலன் என்பவன் இரக்கமில்லாதவன். அவன் உயிரைக் கவா்ந்து செல்லாது விடான். ஆகையால் ‘‘வீட்டு நெறியை விரைந்து தேடுக’’ என ஆசிரியா் அறிவுறுத்துவது நாம் சிந்திக்கக்கூடிய ஒன்றாகும்.

**பாடல் சிறப்பு:**

பசித்தவனுக்கு உணவு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தவனே படித்தவன் என்ற பெருமதிப்புக்கு உரியவனாவான். அவனுக்கு வானுலகில் சிறந்த பேறு காத்திருக்கும் என்பன போன்ற கருத்துக்கள் இந்நூலில் வருகின்றன. ஏலாதியில் உள்ள கல்வி குறித்த பாடல் கீழ்வருமாறு

**கற்றாரை கற்றது உணரார் என மதியார்**

**உற்றாரை அன்னணம் ஓராமல் - அற்றார் கட்கு**

**உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தார்**

**பண்டிதராய் வாழ்வார் பயின்று.**

## 7. முதுமொழிக் காஞ்சி

**நூலின் அமைப்பு:**

மதுரைக் கூடலூா் கிழாா் என்பவா் இந்நூலாசிரியா் ஆவாா். இந்நூல் சிறுசிறு அடிகளை உடைய நூலாக விளங்குகிறது. இந்நூல் பத்துப் பத்துப் பாக்கள் கொண்ட பத்து அதிகாரங்களைக் கொண்டு அமைந்துள்ளது.

**நூலின் சிறப்பு:**

இளமையில் கல்லாமை பெருங்குற்றமாகும். வளம் இல்லாத ஒருவன் வண்மையைக் கையாள நினைப்பது குற்றமாகும். சுற்றத்தாா் இல்லையெனில் சினங் கொள்வது குற்றமே என ஆசிரியா் குறிப்பிடுவது நம் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

**பாடல் சிறப்பு:**

இந்நூல் கருத்துக்களை எளிமையாக விளக்கவல்லது சான்றாக

**தரமாணானது வாழ்க்கையன்று: உண்டி வெய் யோா்க்கு**

**உறுபிணி எளிது: நகையின் பெரியதோர் நல்குரவில்லை**

**துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது: சிற்றில் பிறந்தமை**

**பெருமிதத்தான் அறிப: பேரில் பிறந்தமை ஈரத்தாலறிய**

**என்ற பாடலடிகளைக் கூறலாம்.**

### 8. திருக்குறள்:

**நூலின் அமைப்பு:**

உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற நீதி நூல் திருக்குறளாகும். இதைப் போற்றாத அறிஞரோ புலவரோ இல்லை. இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். நூலின் உட்பிரிவாக 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 பாக்களாக 133 அதிகாரத்திற்கும் 1330 பாக்களைக் கொண்டுத் திகழ்கிறது.

முதலில் 38 அதிகாரங்கள் அமைந்த அறத்துப்பாலை இல்லறவியலென்றும் துறவறவியலென்றும் ஊழியலென்றும் வள்ளுவர் பாகுபாடு செய்துள்ளார். அரசியல் அமைச்சியல் அரணியல் கூழியல் படையியல் நட்பியல் குடியியல் என ஏழு பகுதிகளாகப் பிரித்து 70 அதிகாரங்களில் பொருட்பாலில் தம் கருத்துக்களைக் கூறுகிறார் வள்ளுவர். குடைப்பிரிவாக விளங்கும் 25 அதிகாரங்களைக் கொண்ட காமத்துப்பால் களவியல் கற்பியல் என இரு பிரிவாக அமைத்துக் காதல் வாழ்வை மிகுந்த சுவையோடு கூறிச் செல்லுந்திறன் நுட்பம் வாய்ந்ததாகும்.

**நூல் சிறப்பு:**

இந்நூல் ஏறத்தாழ 33 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதே இதன் சிறப்பைத் தெரிவிக்கும். பன்னாட்டு அறிஞர்களும் இந்நூலை வெகுவாகப் பாராட்டியுள்ளனர். இப்படிப்பட்ட நூலைப் பெற்றது நம் அரும்பெரும் பேறேயாகும். எனவேதான் மகாகவி பாரதியாரும் “வள்ளுவன் தன்னை உலகினக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்று கூறினார். நாடுகடந்து மொழி கடந்து இனம் கடந்து உலகிற்கே வள்ளுவன் ஓங்கி நின்று குரல் கொடுத்திருக்கின்றான். இதற்கு இணையான நீதிநூல் உலகிலேயே வேறு எந்த மொழியிலும் இல்லை என்றே கூறலாம். இது நம் தமிழ்மொழிக்கு வாய்ந்த ஈடுஇணையற்ற செல்வக் களஞ்சியம் எனக் கூறலாம்.

**பாடல் சிறப்பு:**

காதல் நோயை அரும்பு, போது, மலர் என வருணிக்கும் இடத்தில் இவரை உயர்ந்த கவிஞராகக் காணமுடிகிறது. காலையில் காதலரைப் பிரிந்த துன்பம் மெல்ல அரும்புகிறதாம். பகலெல்லாம் அது வளர ஆரம்பித்து மாலை வந்ததும் துன்பம் முற்றி மலராகின்றதாம். இதைக்

**காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி**

**மாலை மலரும் இந்நோய்**

என்கிறார்.

வள்ளுவனுக்குப் புலனடக்கத்தில் நம்பிக்கை இருந்தது. புலனடக்கம் உடையவர்களே அரிய செயல்களைச் செய்ய முடியும். அவர்களே பெரியோர்கள் ஆவர். அவ்வடக்கம் இல்லாதவர்கள் தன் ஆற்றல்களை இழப்பார்கள்: மகத்தான செயல்களைச் செய்யவும் மாட்டார்கள் என்கிறார். இதை,

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**

**செயற்கரிய செய்கலாதார்**

என்கிறார்.

வள்ளுவனுக்குத் துறவில் நம்பிக்கை உண்டு. ஆனால் போலித் துறவிகளை அறவே பிடிக்காது. ஒருவன் நல்ல துறவியின் வேடத்தைப் புனைந்து கொண்டு தகாத செயல்களைச் செய்வது வேடன் புதரில் மறைந்து நின்று பறவைகளை வேட்டையாடுவது மாதிரி என்பது வள்ளுவன் கருத்து.

தனி மனிதன் பட்டினி கிடப்பது வள்ளுவனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது. ஒருவன் இரந்து உயிர்வாழ வேண்டிய நிலை இருந்தால் அதற்காகப் பரந்து கெடுக இந்த உலகைப் படைத்தவன் என்கிறான்.

**9. ஆசாரக்கோவை**

**நூலின் அமைப்பு:**

ஆசாரக்கோவையின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இந்நூலில் 100 வெண்பாக்கள் உள்ளன. மக்கள் அன்றாட வாழ்க்கையில் கொள்ள வேண்டிய நியமங்களை இந்நூல்

விளக்குகிறது.உள்ளும் புறமும் தூய்மையாக இருப்பதுதான் ஆசாரம். இந்த இருவகை ஆசாரத்தையே ஆசாரக்கோவை குறிப்பிடுகிறது.

**நூல் சிறப்பு:**

நன்றாக குளித்த பிறகு சாப்பிட வேண்டும். உண்ணும் பாத்திரத்தை சுற்றி நீர் தெளித்துக் கொள்ள வேண்டும். உண்ணும் போது கோபமோ வெறுப்போ இருக்கக் கூடாது. கிழக்கு நோக்கி அமர்ந்து உண்ண வேண்டும். நின்று கொண்டோ படுத்துக்கொண்டோ உண்ணக் கூடாது. உண்ண ஆரம்பிக்கும்போது முதலில் இனிப்பான பண்டங்களையும் இறுதியில் வேறு சுவையான பண்டங்களையும் உண்ண வேண்டும் என்றப் பாடல் கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்று இந்நூலுக்கச் சிறப்பு சேர்க்கின்றது.

**பாடல் சிறப்பு:**

**நீராடிக் கால் கழுவி வாய்பூசி மண்டலம் செய்**

**துண்டாரே உண்டா ரெனப்படுவர் அல்லாதார்**

**உண்டார்போல் வாய்பூசிச் செல்வரது வெறுத்துக்**

**கொண்டார் அரக்கர் குறித்து**

என்பது ஆசாரக்கோவை பாடல் இது போன்ற நடைமுறை வழக்காறுகள் குறித்த செய்திகள் இந்நூலில் வருகின்றன.

**10. பழமொழி**

**நூலின் அமைப்பு:**

கடவுள் வாழ்த்து உட்பட 40 வெண்பாக்களுடைய ஒரு நீதி நூல். ஒவ்வொரு வெண்பா இறுதியிலும் ஒரு பழமொழி அமைந்துள்ளமையால் பழமொழி எனும் பெயர் கொண்டது. இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார் என்பர். நாலடியார் திருக்குறள் போன்ற அறநூல்களின் அடிகளையும் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளார்.

**நூல் சிறப்பு:**

மூவேந்தருள் சிலரையும் கடையெழு வள்ளல்கள் சிலரையும் பற்றியச் செய்திகளும் சில புராணக் கதைகளும் இதனுட் காணப்படுவதால் பழந்தமிழரின் பண்பாட்டை அறிதற்கும் வரலாற்று ஆராய்ச்சிக்கும் உறுதுணை புரியுமென்பர். இதில் வரும் ஒவ்வொரு பழமொழியும் நாடோடிப்

பழமொழியன்று. எல்லாம் இலக்கிய பழமொழிகளே. கரிகாற்சோழன் வரலாறும் அறங்கூறும் முறையும் குலக்கல்வியமையும் முறையும் இந்நூல் வழியே அறியமுடிகிறது.

**பாடல் சிறப்பு:**

நுணலும் தன் வாயால் கெடும் என்பது இன்று வழக்காற்றில் உள்ள பழமொழி. தன் குரலை வெளிப்படுத்தி பாம்பிடம் மாட்டிக் கொள்ளும் தவளையைக் குறித்தது இப்பழமொழி. இது போல பேதை ஒருவன் தன் வாய்ச் சொல்லால் தனக்குத் தீங்கைத் தேடிக் கொள்ளுவானாம்.

பாடல் இதோ

**பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைகள்**

**சொல்லாலே தன்னைத் துயர் படுக்கும் - நல்லாய்**

**மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்**

**நுணலும் தன் வாயால் கெடும்.**

**11. சிறுபஞ்சமூலம்**

**நூலின் அமைப்பு:**

குாரியாசான் இந்நூலாசிரியராவார். இவர் ஓர் சைனர். கண்டங்கத்திரி சிறுவழுதுணை சிறுமல்லி பெருமல்லி நெருஞ்சி ஆகிய ஐந்தன் வேர்கள் மக்கள் உடல் நோயைப் போக்கி நலம் புரியும் சிறந்த மருந்துகளாகும். அவைபோல மக்கள் உள்ளப் பிணியைப் போக்கி உலக வாழ்க்கைக்குப் பயன்படும் ஐந்தைந்து உறுதிப் பொருள்களைக் கூறுவது ‘‘சிறுபஞ்சமூலம்’’ ஆகும்.

**நூலின் சிறப்பு:**

தோற்கன்றைக் காட்டிப் பசுக்களைக் கறக்கும் கொடிய பழக்கத்தை இவ்வாசிரியர் கடிவதிலிருந்து இப்பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது என்பது புலனாகிறது. குறள் நான்மணிக்கடிகை நூற்களின் கருத்துக்களும் சொற்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.

## அகம்பற்றிய நூற்கள்

1. **ஐந்திணை ஐம்பது**
2. **ஐந்திணை எழுபது**
3. **திணை மொழி ஐம்பது**
4. **திணை மாலை நூற்றைம்பது**
5. **கைந்நிலை**
6. **கார் நாற்பது**

ஆகிய ஆறு நூற்களும் பதினெண்கீழ்கணக்கு நூற்களில் அக நூற்கள் ஆகும்.

### 1. ஐந்திணை ஐம்பது

இந்நூல் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற வைப்பு முறையில் திணைக்குப் பத்து பாக்களாக ஐந்திணைகட்கும் ஐம்பது பாக்களைக் கொண்டது. பாடியவர் புலவர் மாறன் பொறையனார். தினைப்புனத்துப் புறப்பொழிலில் தலைவி தலைவனோடு மகிழ்ந்திருந்தாள். கண்கள் சிவந்தன. அவ்வேளை செவிலி வந்து கண் சிவந்த காரணங் கேட்க சொல்லாற்றல் மிக்க தோழி குறிக்கிட்டு என்று நயம்படக் கூறினாள். இது போன்ற பல பாக்களைக் கொண்ட சுவை மிக்க நூல் இது.

### 2. ஐந்திணை எழுபது

ஒவ்வொரு திணைக்கும் பதினான்கு பாக்களாக ஐந்து திணைகட்கும் எழுபது பாக்களைக் கொண்ட அகப்பொருள் நூல். இப்போது கிடைத்துள்ள பாடல்கள் 66 மட்டுமே. இதன் ஆசிரியர் மூவாதியர். ‘‘பூ நாறு பலவுக் கனி தின்று வந்த மந்தி நீர் வேட்கை கொண்டு மர நிழலில் உறங்கும் காட்டுப் பசுவின் கனத்த மடியினை வருட அது கன்றென எண்ணிப் பாலைச் சுரக்க குடித்து நீர் வேட்கை தணிய பெற்றதாம்’’ என்பது பண்பட்ட மொழி. வேறுபட்ட இயல்புள்ள விலங்குகளின் அன்பினைக் காட்டுகின்றார் புலவர்.

### 3. திணை மொழி ஐம்பது

இந்நூல் குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்னும் வைப்பு முறையில் அமைந்த ஐந்திணைப் பகுதிகளை உடையது. திணையொன்றுக்குப் பத்து பாடலாக 50 பாடல்களைக் கொண்டது. ஆசிரியர் கண்ணன் சேந்தனார் ஆவார்.

பரத்தைவயின் பிரிந்த தலைவனைக் கண்டு தலைவி ஊடல் கொணடாள் ˙ ஊடலைத் தீர்க்க விழைந்த தலைவன் தோழியிடம் கனிமொழிகள் பல பேசி பணிந்து நின்றான். அப்பொழுது தோழி "உனை நொந்து என்ன பயன்? என் தலைவிக்கு அன்பும் எழிலும் இன்பமும் நீயே தந்தாய் அவற்றை நீயே பறித்துக் கொண்டாய் கொடுத்தவன் எடுக்காது பிறகு யார்தான் எடுப்பர்?" என்று கூறி வாயில் நேர்ந்தாள்என்பது அத்தோழியின் பொருள் பொதிந்த மொழி.

**4. திணை மாலை நூற்றைம்பது**

குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதம் என்ற வரிசையில் அகத்திணை ஒழுங்கினை நூற்றைம்பது பாக்களால் கூறுகின்றது. இதனை இயற்றியவர் கணிமேதாவியார். உடன்போக்குச் சென்ற மகளைத் தேடிச் சென்ற செவிலியின் ஆற்றாமை கண்டு வருந்திய வழிபோக்கர் செவிலியைப் பார்த்து "தாமரை போன்ற முகமும் ஆம்பல் போன்ற வாயும் நீலோற்பம் போன்ற கண்களும் காந்தள் போன்ற விரல்களையும் உடைய உன் மகளைக் கண்டு அவளது உறுப்புகளை எல்லாம் மயக்கத்தால் அவ்வம் மலர்களாகக் கண்டு வண்டுகள் புடை நெருங்கிக் கூட்டங் கூட்டமாகச் சென்றதாலே வண்டுப் பந்தரின் நிழலில் வருத்தமிலாது சென்றாள் நீ வருந்தற்க என்று ஆறுதல் கூறினர்.

**5. கைந்நிலை**

ஐந்திணைக்குரிய அகவொழுக்கத்திற்கு இலக்கியமாய் அமைந்தது இது. திணைக்கு பனிரெண்டு பாடல்களாக அறுபது வெண்பாக்களையுடைய நூல். எனவே ஐந்திணை அறுபது எனவும் வழங்கப்பெறும் இதன் ஆசிரியர் புல்லங்காடனார்.

தலைவன் தன் சொல் நயத்தால் என்னை ஏமாற்றினார் என்றவன் கொண்ட பொய்க் கோபம் அவள் அன்பின் உயர்வைக் காட்டுகிறது.

**6. கார் நாற்பது**

இந்நூல் நாற்பது வெண்பாக்களை உடையது. கார்காலத்தின் சிறப்புகள் இந்நூலில் விதந்து கூறப்பட்டிருப்பதால் இந்நூல் கார்நாற்பது என்னும் பெயர் பெற்றது. கார்காலம் முல்லை திணைக்குரிய பெரும் பொழுதாகும். எனவே முல்லைத் திணைக்குரிய அகவொழுக்கமே இந்நூலில் யாண்டும் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் கண்ணன்கூத்தனார் என்ற புலவர் ஆவார். இந்நூல் கி.பி.4-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பர். தலைவனைப் பிரிந்தத் தலைவி ஆற்றியிருத்தல் நிகழ்ச்சி இந்நூலில் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் சிறப்பினை என்ற வெண்பாவால் நன்கு அறிந்து கொள்ளலாம்.

## புறம் பற்றிய நூல்

### 1. களவழி நாற்பது

போர்க்களத்தே நடந்த நிகழ்ச்சிகளை நாற்பது பாக்களில் கூறுகிறது. இது இடம் பற்றி வந்த நூலாகும். சோழன் கோச்செங்கணானோடு கழுமலம் எனுமிடத்தில் போரிட்டு தோற்ற சேரன் கணைக்காலிரும்பொறை சிறையில் அடைக்கப்பட்டான். காவலனிடம்நீர் கேட்க அவனைப் பொருட்படுத்தாது காலம் தாழ்த்திக் கொடுக்க அதனை உண்ணாது உயிர் விட்டான். அந்த மான வீரனுக்கு விடுதலை பெற்றுத் தர பொய்கையார் இதனைப் பாடினாராம். சோழனின் வெற்றியைப் பலபட புகழ்ந்து பாராட்டுகின்றார் பொய்கையார். போர்க்களத்தில் குருதி படிந்திருக்கும் தோற்றம் நிலமடைந்த செவ்வாடை போர்த்தியது போலிருந்ததென்றும் மாற்றார் குருதியுண்டு புரண்டு திரிந்த கருங்காகம் செங்காகம் ஆயிற்றென்றுங் கூறுகின்றார். எங்கும் பிணக்குவியல் மடிந்து விழும் மக்கள் வட்டமிடும் கழுகு இவை போன்ற அச்சமிகு காட்சிகளைக் காண்கிறோம். இதனுள்ளும் கார்த்திகை பற்றிய குறிப்பு வருகின்றது.என்றும் சோழனின் யானைப்படை உயர்வு கூறுமிடத்து அழகிய காட்சியினையும் கலந்து கூறுகின்றார்.

## பாடம் - 4

### ஐம்பெருங்காப்பியங்கள்:

சிலப்பதிகாரம் மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் 'ஐம்பெருங்காப்பியங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் சிலப்பதிகாரம்,மணிமேகலை இரண்டும் சங்கம்மருவிய கால இலக்கியங்கள். பின்னர் வரும் மூன்றும் சோழர்காலத்தைச் சார்ந்தவை. அவற்றில் குண்டலகேசியும்,வளையாபதியும் காலவெள்ளத்தில் அழிந்த தமிழ்ச் செல்வங்கள் ஆகும்.

### 1. சிலப்பதிகாரம்

தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். நெஞ்சை அள்ளும் சுவையுடைய இக்காப்பியம், சிலம்பு என்ற காலணி காவியத்தில் முக்கியமானதோர் இடத்தைப் பெறுவதால் 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் பெற்றது. இக்காப்பியத்தைப்படைத்த இளங்கோவடிகள் சமணசமயம் தழுவியவர். கி.பி.2-ம் நூற்றாண்டைச் சார்ந்த இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்று வரலாற்றில் அறியப்படுகிறார்.

'மங்கல வாழ்த்துப் பாடல்'தொடங்கி 'வரந்தரு காதை' ஈறாக முப்பது காதைகளைக்கொண்டு இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம்,வஞ்சிக்காண்டம் என்ற முப்பிரிவுகளின் காப்பியத்தை வளர்க்கிறது.

**'அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்று ஆவதூஉம்**

**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**

**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்**

ஆகிய முப்பெரும் கொள்கைகளின் அடிப்படையில் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுட்களோடு இலக்கியம் படைத்ததாகப் பாயிரத்தில் கூறுகிறார்.

**காப்பியச் சுருக்கம்:**

பூம்புகாரில் மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும் மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. இனிமையான இல்லறத்தைச் சில ஆண்டுகள் காண்கின்றனர். ஒரு திருப்புமையம்! ஆடல்,பாடல்,அழகு என்ற மூன்றிலும் குறைவுபடாத மாதவி என்ற பெண்ணணங்கு கோவலன் வாழ்வில் குறுக்கிடுகிறாள். கோவலன் இசை, நடனம் ஆகியவற்றில் கலையின்பம் துய்க்கும் வண்டு. மாதவியோ கலைத்தேன் வழங்கும் மலர். எனவே சுவையும் கலையும் இணைந்தன. காலம் வளர்கிறது. விதியின் விளையாடல் காரணமாக காதலர் பிரிகின்றனர். கற்புக்கடம்பூண்ட தெய்வமாகிய மனைவி கண்ணகியை அடைந்த கோவலன்,

அவள் காற்சிலம்புகளையே மூலதனமாகக் கொண்டு இழந்த செல்வத்தை மீண்டும் திரட்ட மதுரைமாநகர் செல்கிறான். கண்ணகியும் உடன்செல்கிறாள். ஊழ்வினை தொடர்கிறது! மதுரையில் கள்வன் எனக் களங்கம் கற்பிக்கப்பட்டுக் கோவலன் கொல்லப்படுகிறான். கதிரவனையும் தன் கற்புத்திறத்தால் பேசவைத்த கண்ணகியால், மதுரை மாநகர் தீப்பிடித்து எரிந்து அழிகிறது. சேரநாடு நோக்கிச் சென்ற கண்ணகி, அம்மண்ணைச் சார்ந்த மலையில், ஒரு வேங்கை மரத்தினடியில் நிற்கிறாள்: தேவர்களோடு தேரில் வந்த கோவலன், கண்ணகியைக் கைப்பிடித்து ஏகுகிறான். மலைவாழ் குறவர்கள் இக்காட்சியைக் கண்டு, சேரமன்னன் செங்குட்டுவனுக்கு அறிவிக்கின்றனர். அரசனும், இமயம் சென்று, அதன் நெற்றி பிளந்து, கல் எடுத்து கங்கையில் நீராட்டிக் கனகவிசயர் தலைமேல் கொண்டுவந்து வஞ்சிமாநகரில் கண்ணகிக்கு சிலை எடுத்தான். கோவில் திறப்புவிழா காண்கிறது. கண்ணகியும் தெய்வ வடிவில் தோன்றி அருள் உரைக்கின்றாள். காப்பியம் இளங்கோவடிகளின் அறிவுரைகளோடு முற்றுப் பெறுகிறது.

**காப்பியச் சிறப்புக்கள்:**

இளங்கோவடிகள் தம் காப்பியத்தை இயற்கையை வாழ்த்திப் போற்றுவதன் மூலம் துவக்குகிறார்.

**திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!**

**ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!**

**மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!**

புதுமைப் பொலிவோடு ஆரம்பிக்கும் காப்பியத்தில் பெண்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். காப்பிய நாயகியான கண்ணகியையே முதன் முதலில் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

**போதிலார் திருவினாள், புகழ் உடை வடிவு என்றும்,**

**தீதுஇலா வடமீனின் திறம், இவள் திறம் என்றும்,**

**மாதரார் தொழுதுஏத்த, வயங்கியப் பெருங்குணத்துக்**

**காதலாள்: பெயர் மன்னும் கண்ணகி என்பாள்.**

முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகியைத் திருமணம் முடித்த ஞான்று, புகழ்ந்து கூறுவதாக வரும் பகுதி நம் நெஞ்சத்தை அள்ளுவதாக அமைந்துள்ளது. நீலமயில் போலும் சாயலையும், அன்னத்தின் மென்நடையையும், பசுங்கிளியின் குரலையும் கொண்ட கண்ணகியைக் காப்பியத் தலைவன் கோவலன் பாராட்டுகின்றான்.

மாதவி சேற்றில் பிறந்தாலும், அவள் செந்தாமரை தான் என்பதை அவள் கூறும், ‘அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்! நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால்! என்ற காப்பிய வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

முத்தமிழும் இதில் இழைந்து வருவதால் ‘முத்தமிழ்க் காப்பியம்’ என்ற பெயரையும், நாடகப் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளதால் ‘நாடகக் காப்பியம்’ என்ற பெயரையும் பெறுகிறது. இசை இலக்கணமும், நாடகமேடை அமைப்பு முறைகளும் பற்றிக் காப்பியத்தில் செய்திகள் வருகின்றன. பூம்புகார், மதுரை, வஞ்சிமாநகர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், அக்காலச் சமுதாய அமைப்பு, மகளிர் அணிகலன்கள், பல்வேறு இசைக் கருவிகள், கல்வி வணிகம் பற்றிய குறிப்புகளையும், சமண சமயக் கருத்துக்கள், தமிழக ஆட்சிமுறை பற்றிய செய்திகளையும் சிலப்பதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே தமிழர்க்குக் கிடைத்த அரிய கருவூலமாக இச்சிலம்புச் செல்வத்தைக் கருதலாம்.

**2. மணிமேகலை:**

பௌத்த சமயக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகிறது. இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவரும் இளங்கோவடிகள் காலத்ததைச் சேர்ந்தவரே.

மணிமேகலையில் ‘விழாவறை காதை’ முதல் ‘பவத்திறம்’ அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் உள்ளன. ஆனால், சிலப்பதிகாரத்திலுள்ளது போல் முப்பிரிவுகள் இல்லை. மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச் சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டன என்பர்.

**காப்பியச் சுருக்கம்:**

பூம்புகாரில் வருடந்தோறும் கொண்டாடப்படுகின்ற இந்திரவிழா அந்த ஆண்டும் வருகிறது. இந்திரவிழாவில் கலந்து கொண்டு ஆடல்பாடல் நிகழ்த்திட மாதவியையும், மணிமேகலையையும் அழைப்பதற்காகத் தோழி வயந்தமாலை வந்தாள். தன்கணவன் கோவலனுக்கும், கண்ணகிக்கும் மதுரையில் நிகழ்ந்த துயரத்தால், தாங்கள் வரஇயலாது என்று வயந்தமாலையிடம் கூறிவிடுகிறாள் மாதவி.

கோவலனின் துயரவரலாற்றை வயந்தமாலையிடம் மாதவி கூறக்கேட்ட மணிமேகலை உள்ளம் உடைந்து கண்ணீர் வடிக்கிறாள். தன் மகளுக்கும் தனக்கு நேர்ந்த கதி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப்போலவே பௌத்த துறவியாக்கி இருந்தாள் மாதவி. ஆகவே, மாலையில் புத்தனுக்குச் சூடுவதற்காக மணிமேகலை தொடுத்துக் கொண்டிருந்த மாலையில் அவளின் கண்ணீர்த் துளிகள் பட்டுவிட மாலையின் புனிதம் கெட்டுவிட்டதை உணர்ந்த மாதவி, மணிமேகலையைப் புதிய மலர்கள் பறித்து வந்து மாலை தொடுக்கும்படி

வேண்டுகிறாள். பூம்புகாரில் இருந்த உவவனம் அடைகின்றனர் மணிமேகலையும் அவள் தோழி சுதமதியும்.

உவவனத்தின் இயற்கைக் காட்சிகளில் மனம் பறிகொடுத்த மணிமேகலை, தன்னைத் தேடிவரும் சோழ இளவரசன், உதயகுமாரனின் தேர்ஒலி கேட்டு அஞ்சி, அங்கிருந்த பளிக்கறையினுள் புகுந்து கொள்கிறாள். மணிமேலையை உவவனத்தில் காணாது அவன் மீண்டும் செல்லும்போது வழியில் அவளைக் கைப்பற்ற எண்ணி உதயகுமரன் அகல்கிறான்.

இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு சென்று, மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது. மணிபல்லவத்தீவில் தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன்பழம் பிறப்புபற்றி அறிகிறாள் மணிமேகலை. வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுதுசுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறாள்.

பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத் தொண்டு ஆற்றுகிறாள். காய சண்டிகையின் கடும்பசி நீங்குகிறது. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிறது. மணிமேகலை மீது காதல் கொண்டலையும் உதயகுமரன், ஒரு நாள் இரவில் அவளைக் கைப்பற்ற ‘உலக அறவி’ செல்கிறான். காயசண்டிகையின் வடிவத்திலிருந்த மணிமேகலையைத் தன் மனைவிதான் எனத்தவறாகக் கருதிய காயசண்டிகையின் கணவன், மணிமேகலையை நோக்கிச் செல்லும் உதயகுமரனைக் கொன்றுவிடுகிறான். அரசியின் நேரடிப் பார்வையில் சிறைவைக்கப்பட்ட மணிமேகலை தன் தெய்வீகச் செயல்களால் விடுதலை அடைகிறாள்.

முற்பிறவியில் அமுதசுரபியைக் கைக்கொண்டிருந்த ஆபுத்திரனை வடநாடு சென்று காண்கிறாள் மணிமேகலை. சாவக நாட்டிலிருந்து வஞ்சிமாநகர் வந்து கண்ணகி கோட்டத்தில், கண்ணகியை வணங்குவதோடு, பல்வேறு மதத் தருக்கநூல்களையும் கற்றுத் தேர்கிறாள். காஞ்சி மாநகர் அடைந்து, பவத்திறம் அறுகெனப்பாவை நோற்றாள் என்பதோடு முற்றுகிறது மணிமேகலைக் காப்பியம்.

**காப்பியச் சிறப்புகள்:**

மணிமேகலையில் இயற்கைக் காட்சிகளும், இயற்கை வருணனைகளும், அழகிய உவமைகளும், விறுவிறுப்புத்தரும் நிகழ்ச்சிகளுமாக அமைந்துள்ளன. மணிமேகலையும், சுதமதியும் சென்றடைந்த உவவனத்தின் சோலையில் உள்ள பொய்கையில் பளிங்குபோல் தெளிந்த நீர் உள்ளது. வண்ணமலர்கள் பல பூத்துக் குலுங்க, அவற்றிடையே தாமரைப் பூக்கள் பெரிதாக மலர்ந்து பொய்கைக்கு அழகு சேர்க்கின்றன. பெரிய தாமரை மலரொன்றில் அரச அன்னமொன்று வீற்றிருக்கிறது. பொய்கைக் கரையில் மயில் ஒன்றின் நாட்டியம், கம்புட் சேவலொன்று உரத்துக்குரல் எழுப்புகிறது. பூங்கொம்பில் அமர்ந்த வண்ணம் குயிலொன்று பாடுகிறது. பொய்கைக் காட்சி நடனம் நடைபெறும் அரசவைபோல் உள்ளதாகச் சாத்தனாரின்

மனத்திரையில் தோற்றுவிக்கிறது. அக்காட்சியைக் காப்பியத்தில் கண்டு மகிழ்கிறோம். பசிப்பிணியின் கொடுமையை மணிமேகலைக்குத் தீவதிலகை எடுத்துரைக்கிறாள்.

**குடிபிறப்பு அழிக்கும், விழுப்பம் கொல்லும்:**

**பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்:**

**நாணணி களையும்: மாணெழில் சிதைக்கும்:**

**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்:**

**பசிப்பிணி என்னும் பாவி**

எனவே, வறுமையில் உழலும் மக்களுக்கு உணவு வழங்குவார் சிறப்பை

**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்**

**உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

என்று மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

**பிற செய்திகள்**:

மணிபல்லவம், இரத்தின தீபம், உஞ்ஞை, கலிங்கம், கொற்கை, சண்பை, சாவகநாடு, நாகநாடு, பூம்புகார், மகதநாடு போன்ற இடங்கள், நகரங்கள் பற்றிய செய்திகளையும், காதல் கடமைப் போராட்டங்கள், எண்வகைக் கலைகள், பரத்தை, மது, சிறை ஒழிப்புப் பற்றிய சீர்திருத்தங்கள், பழம் பிறப்புக் கொள்கைகள், புத்தசமயக் கோட்பாடுகள், அக்காலச்சமுதாயம், பழக்க வழக்கங்கள் போன்ற செய்திகளையும், பல கிளைக் கதைகளையும் மணிமேகலை மூலம் அறிகிறோம். பூம்புகார் அழிந்த வரலாறு மணிமேகலையில் கூறப்படுவது அதன் சிறப்பாகும்.

**3. சீவக சிந்தாமணி:**

தமிழில் விருத்தாப்பாவால் தோன்றிய முதல் தமிழ்க்காப்பியம். சுமணசமயக் காப்பியமாகத் திகழும் இதனைக் கி.பி.7-ம் நூற்றாண்டில் திருத்தக்கதேவர் என்ற இளம் சமணத்துறவி படைத்தார். வடமொழியில் ‘கத்திய சிந்தாமணியின்’ தழுவலே இந்நூல் என்பாரும் உளர்.

‘திருத்தக்கதேவர் தமிழ்க் கவிஞர்களுக்குள்ளே தலை சிறந்தவர் என்று வீரமாமுனிவரும், சீவக சிந்தாமணி செந்தமிழ் காப்பியங்களில் சிறந்தது மட்டுமன்று, உலக மகா காவியங்களில் ஒன்றாகும், என்று டாக்டர் ஜி.யு.போப்பும் பாராட்டுகின்றார்.

சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல், முத்தி இலம்பகம் வரை பதின்மூன்று இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது. காவிய இலக்கணம் முற்றிலும் பெற்றுத்

திகழும் இந்நூல் வாழ்விலக்கணம் முழுவதையும் வரையறுத்துச் செல்கிறது. அறம்,பொருள்,இன்பம்,வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களையும் விரிவாகப்பேசும் சீவகசிந்தாமணியைப் பதிப்பித்துக் கொடுத்தவர் டாக்டர் உ.வே. சாமிநாதர் ஆவார். இந்நூலுக்கு ஏற்ற உரை வழங்கியவர் நச்சினார்க்கினியர்.

**காப்பியச் சுருக்கம்:**

ஏமாங்கத நாட்டின் தலைநகர் இராசமாபுரம். இந்நாட்டை ஆண்ட மன்னன் சச்சந்தன். தன் இளவயது மனைவி விசயையோடு அரண்மனை அந்தப்புரத்திலே தங்கியிருக்க, நாட்டைக் கவனித்து வந்த அமைச்சன் கட்டியங்காரன் ஏற்ற நேரத்தில் அரசனைக் கொன்று ஆட்சியைப் பிடித்துக் கொண்டான். மயில்பொறி ஒன்றின் மூலம் அரசனின் வேண்டுகோளை ஏற்றுத் தப்பிய விசயை, இராசமாபுரத்தின் இடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுக்கிறாள். சீவகன் தும்ம ‘சிந்தாமணியே கிடத்தியால்’ என்று விசயைக்கு உதவிபுரிந்த அவள்தோழி வடிவில் வந்த தெய்வம் கூறுவதால், இக்காப்பியம் சீவக சிந்தாமணி எனப்பெயர் பெற்றது. கந்துக்கடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கிறான். அச்சணந்தி என்ற ஆசிரியர் சீவகனுக்குப் பல்வேறு கலைகளையும் கற்பிக்கிறார். தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் சீவகன் தன் ஆற்றலாலும் கருணை உள்ளத்தாலும், தன்மாமன் உதவியாலும், இறைவன் நல்லாசியாலும் பல்வேறு வீரச் செயல்களைப் புரிந்து, கட்டியங்காரனைப் போரில் வீழ்த்தி நாட்டாட்சியை மீண்டும் பெறுகிறான்.

காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசாரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களை மணக்கும் சீவகன், அவர்கள் மூலம் எட்டு ஆண்பிள்ளைகளைப் பெறுகிறான். முடிவில் முத்தி பெற்றிட மூத்த மகனுக்குப் பட்டம் சூட்டித் தன் தேவியரோடு துறவறம் மேற்கொள்கிறான்.

**காப்பியச் செய்திகள்:**

காப்பியங்களில் நாட்டுவளம், நகரவளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் சீவகசிந்தாமணி. இயற்கைக் காட்சிகள், அவை பற்றிய வருணனை, போர்முறைகள், காதல், தமிழர் பழக்க வழக்கங்கள், உவமை நயங்கள், உரையாடல்கள், அரசியல்சூழ்ச்சிகள், உயர்ந்த கருத்துகள், சமணக்கொள்கை விளக்கங்கள் பற்றிவிரிவாகப் பேசுகிறது சிந்தாமணிக் காப்பியம்.

நாமகள் இலம்பகத்தில் வரும் நாட்டுச் சிறப்பில், திருத்தக்கதேவர் ஏமாங்கத நாட்டின் சிறப்பைக் கீழ்க்கண்டவாறு பாடுகிறார். சோழநாட்டின் வளமையைக் கற்பனையில் கண்டு கவி இயற்றுகிறார். திருத்தக்கதேவர் தெங்கின் பழம் கமுகின் நெற்றியில் விழ, தேனடை உடைவதையும் பலாக்கனி, மாங்கனி,வாழைப்பழங்கள் ஆகியவை சிதறுவதையும் கண்முன்னால் காட்டும் பாடல்:

**காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின்நெற்றிப்**

**பூமாண்ட தீந்தேன் தொடைகீறி, வருக்கை போழ்ந்து**

**தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும்**

**ஏமாங்கதம் என்று இசையால் திசைபோயது உண்டே!**

ஏமாங்கத நாட்டின் செழிப்பை இதைவிடவும் திறமையாகக் காட்ட இயலுமோ!

**4. குண்டலகேசி:**

அழிந்துபோன தமிழ்ச் செல்வங்களுள் ஒன்று குண்டலகேசி. பௌத்த சமய நூல். நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் பத்தொன்பது செய்யுட்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன. இவை கொண்டும், வேறு சில குறிப்புக்கள் மூலமும் குண்டலகேசியின் கதையமைப்பை அறியமுடிகிறது.

இராசகிருகம் என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசனுக்கு அமைச்சன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பத்திரை என்று ஒரு மகள். திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டனை பெற்ற ஒருவனை விரும்புகிறாள். மகளின் விருப்பத்தை அறிந்து தந்தை அரசனிடம் கூறிக் கள்வனுக்கு விடுதலை பெற்று, மகளுக்கு மணம் முடித்து வைக்கிறான். கள்வன் நல்லவனாக மாறுகிறான். இல்லறம் நல்லறமாகித் தொடரும் திருநாள் ஒன்றில் பத்திரை நாவடக்கமின்றிக் கணவனை 'நீ கள்வன் தானே' என்று அவன் பழமையைச் சுட்டிக் கூறிவிட்டாள்.

பத்தரையின் சொல்லை மனத்திலே பதித்த அவன் 'மலையிலே உள்ள தெய்வத்தை வழிபட்டு வருவோம்' என்று மனைவியிடம் கூற அவளும் புறப்பட்டாள். மலையின் உச்சியை அடைந்ததும், 'அன்று நாவடக்கமின்றி, என்னைக் கள்வன் என்றாய் அல்லவா! இன்று உன்னைக் கொல்லப் போகிறேன்' என்று கூற, பத்திரை உண்மையை உணர்ந்து திடுக்கிட்டாள். 'கணவனே கண்கண்ட தெய்வம்: உங்களை ஒருமுறை சுற்றி வணங்கியபின், என்னைக் கொன்றுபோடுங்கள்: உங்கள் கையால் என் உயிர் போவது நான் செய்த பேறு' என்று கணவனிடம் விண்ணப்பம் கேட்க அவனும் இசைந்தான்: 'தற்கொல்லியை முற்கொல்க' என்பதை உணர்ந்து அவனைச் சுற்றி வருகையில் பின்புறமிருந்து மலையின் ஆழத்திற்குத் தள்ளி அவனைக் கொன்றாள்.

வாழ்க்கையில் வெறுப்புற்ற பத்திரை ஒரு சமணப் பள்ளியை அடைந்து துறவறம் ஏற்றாள். அவள் கூந்தல் களையப்பட்டது. ஆனால் அம்முடி மீண்டும் மீண்டும் சுருண்டு சுருண்டு வளர்ந்ததால் அவள் 'குண்டலகேசி' எனப்பட்டாள். சமண சமயக் கருத்துக்களை நன்கு கற்ற அவளை, புத்தரின் மாணாக்கர்களில் ஒருவரான சாரிபுத்தர் வென்றார். சாரிபுத்தார்கேட்ட கேள்விகளுக்குப் பத்திரையால் பதில் சொல்லமுடியாமல் தோல்வியுற்றதோடு, புத்தசமயத்திலும் புகுந்தாள்.

புறத்திரட்டில் காணப்படும் குண்டலகேசிப்பாடல்களில் ஒன்று, நம் சிந்தையைக் கவரும் தன்மை படைத்தது. மனிதனுக்கு நாவடக்கம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பாவில் அடங்கியுள்ள பொருள் எடுத்தியம்புகிறது.

**பாளையாம் தன்மை செத்தும், பாலனாம் தன்மை செத்தும்,**

**காளையாம் தன்மை செத்தும், காமுறு இளமை செத்தும்,**

**மீளும் இவ் இயல்பும், பின்னே மேல்வரும் மூப்பும் ஆகி,**

**நாளும் நாம் சாகின்றேமால், நாமக்குநா மாழாததென்னே!**

**5. வளையாபதி:**

சிறந்த சமணநூல் படைப்பான வளையாபதி இன்று கிடைக்கவில்லை. ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. புறத்திரட்டுத் தொகை நூலில் வளையாபதிப் பாடல்களாக அறுபத்தாறு செய்யுட்கள் காணப்படுகின்றன. பல்வேறு உரையாசிரியர்கள் இந்நூல் பாடல்களை மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளனர். சமண சமயக் கருத்துக்களை இன்று கிடைக்கின்ற பாடல்கள் அழகாக எடுத்துரைக்கின்றன.

விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன. மக்கட்பேறு பற்றிப் பாடப்பட்டுள்ள வளையாபதிப் பாடல் ஒன்று

**பொறையிலா அறிவு: போகப் புணர்விலா இளமை: மேவத்**

**துறையிலா வனச வாவி: துகிலிலாக் கோலத்தூய்மை:**

**நுறையிலா மாலை: கல்வி நலமிலாப் புலமை: நன்னீர்ச்**

**சிறையிலா நகரம் போலும், சேயிலாச் செல்வம் அன்றே!**

**ஐஞ்சிறு காப்பியங்கள்:**

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களில் குறைவுபெற்றோ, பெருங்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டோ வருவது சிறுகாப்பியங்களாகும்.

உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பவையே ஐஞ்சிறு காப்பியங்களாகும். இவற்றில் நாககுமார காவியம் இன்று கிடைக்கவில்லை. இவ்வைந்தும் சமண சமயம் பற்றி எழுந்த இலக்கியங்களாகும்.

**1. சூளாமணி:**

பெருங்காப்பியத்திற்கு இணையாகப் போற்றப்படுகின்ற சூளாமணியை இயற்றியவர் தோலாமொழித் தேவர். பன்னிரெண்டு காண்டங்களும், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுட்களையும் சூளாமணி பெற்றுள்ளது. திவிட்டன்,விசயன் ஆகிய இருமன்னர்களைப் பற்றிய வரலாற்றைக் கலையழகுடன் படைத்துக் காட்டுகிறது சூளாமணி.

**2. நீலகேசி:**

குண்டலகேசிக்கு மறுப்புநூலாக இயற்றப்பட்ட இச் சமண நூலின் ஆசிரியர் அறியப்பட இயலவில்லை. இதனை ‘நீலகேசித் திரட்டு’ என்றும் அழைப்பர். பத்துச் சருக்கங்களையும், 895 செய்யுட்களையும் நீலகேசி பெற்றுள்ளது. சாங்கியத் தத்துவங்கள் நீலகேசியில் பேசப்படுகின்றன.

பாஞ்சால நாட்டில் ஒரு நகரின் இடுகாடு: அங்கே நடக்கும் உயிர்க்கொலையை, முனிச்சந்திரர் என்ற சமண முனிவர் தம் தவ வலிமையால் தடுத்தார். அவர் தவத்தைக் கலைக்கப்பழையனூர் நீலிப்பேய் அரசிபோல் வேடமிட்டு வந்து முயற்சிக்கிறது. ஆனால் தோல்வியடைகிறது. முயற்சியில் தோற்ற அவள், அவருக்கு மனைவியாகிப் பின்பு சமண சமயத்தின் உயிர்க் கொள்கையாகிய கொல்லாமையைப் பாரெங்கும் பரப்புவததோடு, பல சமயத் தலைவர்களையும் வாதில் வென்று சமண சமயத்தில் சேர்த்து சமணத் தலைவியாகிறாள் என்பதே கதையாகும்.

**3. யசோதர காவியம்:**

சுமண சமய நூலான யசோதர காவியம், இசை காமத்தை மிகுவிக்கிறது. உயிர்க்கொலை தீது: கருமத்தின் பயன் விளையும் என்ற கருத்துக்களைக் கொண்டு இயற்றப்பட்ட காவியமாகும்.

இதன் ஆசிரியர் அறியப்படவில்லை. வெண்ணாவலுடையார் இதன் ஆசிரியர் என்று சிலர் கூறுகின்றனர். ஐந்து சருக்கங்களையும் 320 செய்யுட்களையும் யசோதர காவியம் பெற்றுள்ளது.

உதய நாட்டு மன்னன் மாரிதத்தன். அவனிடம் உயிர்ப்பலி கூடாது என்பதை வலியுறுத்தும் பொருட்டு, ‘யசோதரன்’ என்பான் பல பிறப்புப் பிறந்து கொள்கை விளக்கம் செய்கிறான். யசோதரனின் பல பிறப்புப் பற்றிப் பேசுவதே யசோதர காவியமாகும்.

**4. உதயண குமார காவியம்:**

உதயணன் கதையைச் சுருக்கமாகக் கூறும் காவியம் உதயண குமார காவியம். ஆயினும் இது காப்பியமான பெருங்கதையினின்றும் வேறுபட்டதாகும். காலமும் மிகப் பிற்பட்டது என்பர்.

ஆறு காண்டங்களையும், 367 செய்யுட்களையும் கொண்ட உதயண குமார காவியத்தின் ஆசிரியர் அறியப்படவில்லை.

.

**முத்தொள்ளாயிரம்:**

முத்தொள்ளாயிரம் கற்பனையும், கவின் சுவையும் கொண்ட இலக்கியம் மறைந்து போன தமிழ் ஏடுகளில் இந்நூலும் நூற்றொன்பது பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றில் கடவுள் வாழ்த்தாக ஒன்றும், சேரமன்னனைப் பற்றி 22, சோழனைப் பற்றி 29, பாண்டியனைப் பற்றி 56, சிதைந்து காணப்படும் பாட்டு ஒன்றும் ஆக 109 பாக்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன. முத்தொள்ளாயிரம் 3*900 அல்லது 3*300=900 என்ற பாடல்களின் எண்ணிக்கையால் பெயர் பெற்றிருக்கலாம் என்பர்.

முத்தொள்ளாயிரப் பாடல்கள் முழுமையும் நாடகப் போக்காக உள்ளன. மூவேந்தர்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் மையமாகக் கொண்டு பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. அகப்பாடல்கள் அத்தனையும் பெண்பாற் கைக்கிளையாகவும், புறப்பாடல்கள், மூவேந்தர்களுடைய நாடு, நகரம்,வீரம்,கொடை,பிறந்த நாள் விழா, நிறைப்பொருள் கொள்ளல், யானைமறம், குதிரை மறம், போர்க்களச் செய்திகள் போன்றவற்றைத் தெரிவிப்பனவாக உள்ளன. இயற்கை இன்பம், காதல் உணர்வுகள், வீரச் செறிவு, நாட்டின் வளம், செழிப்பு போன்றவற்றை பாடல்களில் காண்கின்ற பொழுது இலக்கிய இன்பம் நுகர முடிகிறது.

சேர நாடு நீர்வளம், நிலவளம் கொண்டது. சுற்றிலும் மலைகளும் வனங்களும் உள்ளன. சேர மன்னனிடம் பரிசு பெறச் செல்லுகின்றனர் கவிஞர். அவர் போகும் வழியில் காண்கின்ற இயற்கையழகு அவர் சிந்தையைக் கவர்கிறது. தண்ணீர் நிறைந்த குளத்தில், ஆம்பல் செடிகள் நிறைந்துள்ளன. பசுமையான செடிகளில் செந்நிற மலர் மொட்டுக்கள்: நிலவொளியெங்கும் பரவுகிறது: முத்தான ஒளியில், ஆம்பல் செடிகளுக்கிடையே தம் குஞ்சுகளோடு நீந்தி விளையாடிக்கொண்டிருந்த அன்னப்பறவைகள் நீர் வெளியில் ஏற்பட்ட இத்திடீர் மாற்றம் கண்டு தடுமாறின. நீர்ப்பரப்பெங்கும் தீ பரவி வருகின்றதோ என்று அவை தவறாகக் கருதி அஞ்சின. அஞ்சிய அன்னங்கள் தம் குஞ்சுகளுக்கு இதனால் ஏதும் தீங்கு நடந்து விடக்கூடாதே என்று கருதி, தம் கைச் சிறகுகளால் அவற்றை அணைத்துக் காப்பாற்ற முயல்கின்றன! இயற்கையாக பறவைகள் விளையாடி மகிழும் காட்சியைக் கற்பனைக் கவின் சேர்த்து சேர மன்னனிடம் பாடிக் காட்டுகின்றார் கவிஞர். அரசனையும், குடிமக்களையும் இணைத்து உள்ளுறைக் குறிப்போடு அவர் பாடிய கவிதை இதோ!

**அள்ளல் பழனத்து**

**அரக்கு ஆம்பல் வாய் அவிழ,**

**வெள்ளம் தீப்பட்டது**

**என ஒரீஇப் - புள்ளினம் தம்**

**கைச்சிறகால் பார்ப்பு ஒடுக்கும்**

**கவ்வை உடைத்தாரோ**

**நச்சிலை வேல் கோக்கோதை நாடு!**

மலரினும் மெல்லியது காதல். இள மங்கையரின் உள்ளத்தில் மொட்டாகத் தோன்றும் காதல், மலராக மலரும் என்றால் அவர்கள் கண்ணும், தோளும், முகமும், செயலும் காட்டுகின்ற உணர்வுகளோ பரவசம். சேர மன்னன் வீதியில் உலா வருகின்றான்: அவன் புதுமலர்களால் தொடுத்த மாலையணிந்து, அழகிய கோலங்கொண்டு, குதிரைகள் பூட்டப்பெற்ற தேரில் வருகின்றான். அவன் வருகின்ற காட்சியைக் காண, அவன் மேல் காதல் உள்ளம் கொண்ட பெண்கள், கதவைத் திறந்து பார்க்க முயல்கிறார்கள்: ஆனால் அன்னையரோ மன்னனைப் பார்க்கா வண்ணம் கதவை அடைத்து விடுகின்றனர். அன்னையர் அகன்றதும் ஆரணங்கினர், மீண்டும் கதவைத் திறக்கின்றனர். தாயார் குமுறி வந்து கதவை அடைக்கின்றனர். இவ்வாறு கதவு திறக்கப்படுவதும் அடைக்கபடுவதுமாக இருப்பதால் வாயிற்கதவுகளின் குமிழ்கள் தேய்ந்துவிடுகின்றன! இனிக்கும் இப்பாடலின் இனிமையைக் கவிதையில் கண்டு மகிழுங்கள்

**தாயர் அடைப்ப**

**மகளிர் திறந்திடத்**

**தேயத் திரிந்த**

**குடுமியளவே! ஆய்மலர்**

**வண்டு உலா அங் கண்ணி**

**வயமான் தேர்க் கோதையைக்**

**கண்டு உலா அம் வீதிக் கதவு!**

கற்பனையும் கருத்து மணமும் போட்டியிடும் முத்தொள்ளாயிரத்தின் மற்றொரு சிறப்பு அந்நூலில் பயின்று வரும் உவமைகளாகும். செல்வச் சிறப்புகளோடு வாழ்ந்த பண்பாளர் ஒருவர் கால ஒட்டத்தில் விதியின் சதியால் வறுமை அடைந்தார். வாழ்நாளை எப்படியாவது கழிக்க வேண்டும் என்று கருதிய அவ்வன்பர் பெருஞ்செல்வர்களை நாடிச்சென்று உதவி கேட்க முயல்கிறார். செல்வர்களின் வாயிலை அடைந்த அவர் தயங்கி நிற்கிறார். காரணம் நாணம் முன்செல்ல ஒட்டாமல் அவரைத் தடுக்கிறது. ஆனால் வறுமையோ பின்செல்லத் தடுக்கிறது. ஒரு முடிவுக்கும் வர முடியாமல் அவர் தவிப்பதைப் போல சேர மன்னன் வீதி உலா வரும்பொழுது அவனைக் காண முதலில் கதவைத் திறக்கச் சென்றவள், நாணம் தடுக்கவே வீட்டினுள் சென்று மறைகிறாள். நெஞ்சப் போராட்டம் தொடர்கிறது! உணர்ச்சிகளோடு போராடும் அவள் உள்ள நிலையை கவிஞர் கவிதையில் உவமையோடு இணைத்து மணக்கச் செய்கிறார்.

**ஆய்மணிப் பைம்பூண்**

**அலங்கு தார்க் கோதையைக்**

**காணிய சென்று**

**கதவடைந்தேன் - நாணிப்**

**பெருஞ்செல்வர் இல்லத்து**

**நல்கூர்ந்தார் போல**

**வருஞ்செல்லும் பேரும் என் நெஞ்சு!**

பாடல்தோறும் தேனலைகள்: கருத்தும், கற்பனையும் கலந்து பூத்த மலர்கள்: இயற்கையும், எழிலும் நிறைந்த பசுஞ்சோலை! கையில் எடுத்தால் கவிதை இன்பத்தை அள்ளித்தரும், இம் முத்தொள்ளாயிரப்பாடல்கள் முழுமையும் கிடைக்காதது போல், சுவை மலிந்த இப்பாடல்களைப் பாடிய கவிஞர் யார் என்றும் அறிய முடியவில்லை.

## பெருங்கதை

தமிழில் தோன்றிய பழங்காப்பியங்களில் ஒன்று பெருங்கதை இதனை இயற்றியவர் கொங்குவேளிர். இயற்பெயர் தெரியவில்லை. கொங்குநாட்டைச் சார்ந்த விசயமங்கலத்தில் வாழ்ந்தவர். வேளிர் பரம்பரையைச் சார்ந்தவராதலால், இவரும் ஒரு சிற்றரசராக இருந்திருக்கலாம் என அறிய முடிகிறது. தமிழ்ப்புலவர்களை ஆதரித்த செம்மல் கொங்குவேளிர். இவர் வாழ்ந்த காலம் பற்றி அறிய முடியவில்லை. கி.பி.7-ம் நூற்றாண்டைச் சார்ந்தவராக இருக்கலாம் என கா.சுப்பிரமணியம் கூறுகிறார். பெருங்கதை சங்க காலத்தை ஒட்டிய பழந்தமிழ்க் காவியம் என்றும், அதன் தோற்றத்தை அறிவதற்குச் சரியான சான்றுகள் இல்லை என்றும் உ.வே.சாமிநாதர் குறிப்பிடுகிறார்.

பெருங்கதையை அகவற் பாவலான முதல் சமணக் காப்பியம் என்று குறிப்பிடுவர். இந்நூலின் மூலநூல் பைசாச மொழியில் ‘குணாட்டியர்’ எழுதிய ‘கோசாம்பி’ நகர மன்னன் உதயணன் கதை என்று சிலரும், கி.பி.6-ம் நூற்றாண்டில் கங்கை நாட்டை ஆண்ட துர்விநீதன் என்ற மன்னன் வடமொழியில் ‘பிருகத் கதா’ என்று ஆக்கிய நூலின் தமிழாக்கமே இந்நூல் என்று சிலரும் குறிப்பிடுவர். எனவே பெருங்கதை ஒரு வழிநூலே என்று கொள்ளப்படும்.

எட்டு வகையான மெய்ப்பாட்டு உணர்வுகளும்,சுவைகளும் தோன்றிடும் வண்ணம் பெருங்கதை படைக்கப்பட்டுள்ளது. நூலில் ஊடலும், கூடலும் மிக அதிகமாகப் பயின்று வந்துள்ளன. குறிஞ்சி,முல்லை,மருதம்,பாலை ஆகிய திணைகள் பாடப்பட்டுள்ளன.

பெருங்கதையின் முதலும் முடிவுமாகச் சில பகுதிகள் இன்று கிடைக்கவில்லை. காப்பியத்தின் இடைப் பகுதிகளிலும், பாடல் வரிகளிலும் சிதைவுகள் காணப்படுகின்றன. சீவக

சிந்தாமணி என்ற சமணக் காப்பியம் தோன்றுவதற்கு வழி காட்டியாக இந்நூல் திகழ்ந்துள்ளது. பெருங்கதையில் ஊழின்வலி, நீத்தார் பெருமை, அரசாட்சி செய்யும் முறை, நண்பர் கடமை போன்ற சமண சமயக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலினைப் பதிப்பித்த அறிஞர் உ.வே. சாமிநாதர் இந்நூலுக்கு விளக்கமான திட்ப நுட்பங்கள் செறிந்துள்ள இந்நூலினைப் பற்றி "அந் நாளைய நாகரிக வாழ்வின் சிறப்பெல்லாம், வகையெலாம் இந்நூலில் விளங்குவது போல், வேறு எந்த தமிழ் நூலிலும் விளங்குவதில்லை" என்று அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் வத்தவ காண்டத்தில்,

**அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்**

**பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை**

என்று பெண்ணின் அணிகலன் பொறுமையே என்பதை வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

பெருங்கதை காப்பியச் சுருக்கம்:

கொங்கு வேளிர் இயற்றிய பெருங்கதை ஐந்து காண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. **உஞ்சைக் காண்டம்**
2. **இலாவணக் காண்டம்**
3. **மகத காண்டம்**
4. **வத்தவ காண்டம்**
5. **நரவாண காண்டம்**

காப்பியத் தலைவன் உதயணன் சூரியன் உதயமாகும் போது பிறந்தவரானதால் அப்பெயர் பெற்றான். காப்பியம் முழுவதிலும் உதயணன் சிறந்த வீரராகவும், கலைஞனாகவும் உலா வருகிறான். உதயணனுடைய வரலாற்றை 'உதயணகுமார காவியம்' என்ற சிறுகாப்பியம் மூலமாகவே தெளிவாக அறிய முடிகிறது.

வத்தவ நாட்டு மன்னன் சதானிகன். அவன் மனைவி மிகாவதி. ஊதயணனைப் பெறுவதற்கு ஓரிரு நாட்கள் இருக்கும் பொழுது அரண்மனை நிலா முற்றத்தில் பஞ்சணையில் தூங்கிக் கொண்டிருந்த மிகாவதியை அண்ட பேரண்டப் பறவை ஒன்று, தூக்கிக் கொண்டு சென்று காட்டில் விட்டுவிடுகிறது. அடர்ந்த உதயசூரியனின் ஒளிக்கரங்கள் உதவிட குழந்தை பிறக்கிறது. காட்டில் தவமியற்றி வந்த மிகாவதியின் தந்தை சேடக மன்னன் மகளையும், பேரனையும் கண்டு பேரானந்தம் கொண்டு மகிழ்கிறான். பாட்டனாரின் அரவணைப்பில் உதயணன்

வளர்கிறான். இயற்கைச் சூழலில் கானப்புட்களுடனும், கரிக்கணங்களுடனும் வாழ்ந்த உதயணன் சிறந்த கலைஞனாக உருவாகிறான். கீதப்புரந்தரன் என்ற தெய்வ மனிதன் கொடுத்த கோடவதி யாழைப் பெற்று இசைக்கலைஞனாய்த் திகழ்கிறான். ஒருநாள் மலைச்சாரல் அருகே தெய்வயானை ஒன்று நடமாடுவதைக் கண்டான். அதனோடு பழகினான்: இருவரும் உயிர் நட்பு கொண்டனர். அவன் வாழ்ந்த தவப்பள்ளியிலேயே யானையும் தங்கிட, இருவரும் இணைந்து வளர்ந்தனர். தெய்வயானை ஒருநாள் அவன் கனவில் தோன்றி, தன்னை மறந்து உணவு உண்டாலும், தன்மேல் ஏறுவதற்குப் பிறருக்கு இடங்கொடுத்தாலும் அவனை விட்டுப்பிரிந்து போய்விடுவதாகக் கூறியது. ஊழ் பெரியதன்றோ! இந்நிலையில் மிகாவதியின் சகோதரன் குழந்தை இல்லாதவன் காட்டில் தன் மருமகனைக் கண்டு மகிழ்ந்து தன் நாட்டிற்கு அழைத்துச் சென்று அரகரிமை நல்குகிறான். ஊதயணன் தந்தை உண்மையறிந்து, பின்னர் தன் நாட்டிற்கும் அவனை மன்னனாக்குகிறான்: ஒருநாள் தன் யானையை மறந்து, முதலில் உதயணன் உணவு உண்டதால் யானை அவனை விட்டு பிரிந்தது, யானையைத் தேடி தன் வீரர்களோடு உதயணன் புறப்படுகிறான்.

### 1. உஞ்ஞைக் காண்டம்:

அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன், அவன் மகள் வாசவதத்தை அவந்தி நாடடைந்த உதயணன் மன்னனின் பட்டத்து யானையான நளகிரி மதவெறி பிடித்து அலையவே அதனை அடக்குகிறான். அதனால் மன்னன் மகிழ்ந்து, ‘குஞ்சாஞ்சேரி என்ற மாளிகையை அவனுக்கு அளித்து அங்கு தங்க வைக்கிறான். வாசவதத்தைக்கு யாழ் பயிற்றுவிக்கும் ஆசிரியனாக மாறுகிறான் உதயணன். யாழ் இசை அவர்கள் இருவரையும் இணைக்கிறது. காதல் மலர்கிறது, கலைக் கடலில் கட்டுண்டனர் இருவரும்! அவந்தி நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தால் உதயணன் வாசவதத்தையோடு யானை மேல் ஏறித் தப்புகிறான். மருதம்,முல்லை,குறிஞ்சி,பாலை வழியாக நீண்ட பயணமாக அமைகிறது இடைவெளியில் பல்வேறு ஆபத்துகள், அத்தனையிலும் தன் விரர்களோடு சேர்ந்து பகைவர்களை வெற்றி காண்கிறான் உதயணன். நீண்ட விரைந்த பயணத்தால் ‘கோடவதி’ என்ற தெய்வ யாழ் உதயணனிடமிருந்து நழுவி, காட்டில் மூங்கில் புதரொன்றில் சிக்கிக் கொள்கிறது. அவன் பிடி யானையும் நோயுற்று இறந்து விடுகிறது: உதயணன் வாசவதத்தையோடு சயந்தி நகரம் அடைந்தான்.

### 2. இலாவாண காண்டம்:

உதயணனையும், வாசவதத்தையையும் சயந்தி நகர மக்கள் வரவேற்றனர். மங்கல நீராட்டு எடுத்து, மணம்முடித்துப் பாராட்டினர். இன்ப வாழ்வில் தன் நாட்டை மறந்து திளைக்கலாயினனான் உதயணன். அவனைத் தேடி வந்த நண்பனும் அமைச்சனுமான யூகி உண்மையை உணர்கிறான். உதயணுக்கு அரசுரிமையைப் பற்றிப் பாடம் புகட்டிட ஒரு திட்டம் வகுக்கிறான். உதயணனிடமிருந்து வாசவதத்தையைப் பிரித்து அவள் இறந்துவிட்டதாக உதயணனை நம்ப வைக்கிறான். சோகத்தில் மூழ்கிய உதயணன், பயணமாகி மகத நாடடைகிறான்.

**3. மகத காண்டம்:**

மகத நாட்டின் தலைநகர் இராசகிரி. மகதநாட்டில் காகதுண்டன் என்னும் முனிவர் வாழ்ந்து வந்தார். தன் இன்பத்துணைவி வாசவதத்தை தன்னை விட்டு திடீரென்று மறைந்துவிட்டதையும், அவளை மீண்டும் பெற்றிட அம்முனிவரை நாடினால் ஒருவேளை பலன் கிட்டலாம் என் நண்பர்கள் கூற, அங்கு வந்தான் உதயணன். முனிவர் கூற்றுப்படி உதயணன் நோன்பு நோற்கலானான். ஆனால் வாசவதத்தை கிடைப்பதற்குப் பதிலாக, மகதமன்னனின் தங்கை பதுமையின் காதல் அவனுக்கு கிடைத்தது. இயற்கைப் புணர்ச்சியால் பதுமாவதியோடு கூடி மகிழ்ந்த உதயணன் அவளை மணந்தான். விதி துரத்திட அவளைப் பிரிந்து செல்லலானான் உதயணன்.

**4. வத்தவ காண்டம்:**

ஊதயணன் வத்தவ நாட்டு மன்னனாக இருந்து, ஆண்ட சிறப்புக் கூறுவது இப்பகுதி. ஊதயணன் தன் பகைவனாகிய ஆருளி மன்னன் பாஞ்சலராயனை, மகத மன்னன் தருசகன் துணையோடு வென்று, வத்தவ நாட்டு மன்னனாகிறான். தனக்கு வெற்றிகிட்டிட உதவிய மகதநாட்டு மன்னனுடைய அமைச்சர், வீரர்கள் போன்ற பலருக்கு பரிசளித்துச் சிறப்பு செய்கிறான். நாடு வளம் கொழிக்கிறது: மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். தன் மனைவி பதுமாவதியை அழைத்து வந்து இன்ப வாழ்வு மேற்கொள்கிறான். தான் பயண மேற்பட்ட காலையில் நட்புகொண்ட மானனீகையையும், விரிசிகையையும் காதல் மணம் செய்கிறான். அமைதியான ஆட்சிகண்ட உதயணன் தன் தெய்வ நண்பன் பிடியானை பத்திராபதியை நினைந்து, அது விழுந்து இறந்த இடத்தில் கோயில் கட்டி பத்திராபதிக்குச் சிலை செய்வித்து, அதனை வணங்கி தெய்வமாக்குகிறான். அவன் பயணத்தின் போது, யானையிடமிருந்து இடறி விழுந்த கோடவதி என்ற தெய்வ யாழையும் திரும்பப் பெறுகிறான். அரசுரிமையை நன்குணர்ந்து கொண்ட உதயணனுக்கு அவன் மனமாற்றம் அறிந்து கொண்ட யூகி வாவதத்தையை உருமண்ணுவா என்ற அமைச்சன் மூலம் கொண்டு சேர்க்கிறான். உதயணன் மகழ்கிறான்: இன்ப நிலையில் வாழ்வு செல்கிறது.

**5. நரவாண காண்டம்:**

வாசவதத்தைக்கு நரவாணன் என்ற மகன் பிறக்கிறான். அவன் வளர்ந்து தந்தையைப் போல் புகழ் பெறுகிறான். ‘மதனமங்கை’ என்ற பெண்ணை மணக்கிறான். வித்தியாதரன் ஒருவன் நரவாணனைக் கைப்பற்றிச் செல்கிறான். உதயணன் அவனை மீட்டாலும், நரவாணன் வித்தியாதர நாட்டு மன்னனாக முடிசூட்டப்படுகிறான். எனவே வத்தவநாட்டில் உதயணனுக்கு பிறகு பதுமாவதியின் மகன் பட்டம் ஏற்கிறான். நல்வாழ்வு கண்ட உதயணன், பின்னர் தன் தேவியரோடு தவவாழ்வு மேற்கொள்கிறான். இதுவே காப்பியச் சுருக்கமாகும்.

### 4. கம்பராமாயணம்:

தமிழ் இலக்கிய வானில் ஒளி வீசித் திகழும் பெருங் கவிஞர் கம்பர். கி.பி.12-ம் நூற்றாண்டில் சோழ மண்டலம் தெரெழுந்தூரில் தோன்றியவர். இவர் காலத்து மன்னனாகச் சோழன் குலோத்துங்கன் விளங்கினான். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்தவராவார்.

கம்பர் ஏர் எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். ஆனால் அவருக்கு அழியாப் புகழைத்தந்த இலக்கியம் கம்ப இராமயணமேயாகும். வட மொழியில் வால்மீகி எழுதிய இராமயணத்தைமத் தழுவி, தமிழில் படைக்கப்பட்ட வழி நூலே இராமகாதையாகும். எனினும் மூலநூல் போன்றே தோன்றும் வண்ணம், கம்பர் தம் திறமையால் இராமகாதையை மாபெரும் காவியமாகச் செய்துள்ளார்.

### காப்பிய அமைப்பு:

கம்பராமாயணம் 10,500 பாடல்களையும், பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களையும் பெற்றுள்ளது. தசரத மன்னனுக்கு இராமன்,பரதன்,இலக்குவன்,சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பதும் பால காண்டத்தில் கூறப்படுகிறது. கைகேயி கேட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது அயோத்தியா காண்டத்திலும், சூர்ப்பணகையின் சூதால் இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது ஆரணிய காண்டத்திலும், சீதையைத் தேடிச் செல்லும் இராமன் இலக்குமணன் இருவரும் வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது கிட்கிந்தா காண்டத்திலும், இராமனைப் பிரிந்த சீதை புலம்புவதும் அனுமனின் ஆற்றல் விளக்கப்படுவதும் சுந்தர காண்டத்திலும் இராவணனை அழித்து சீதையை மீட்பது யுத்த காண்டத்திலும் விளக்கப்படுகின்றன.

### இலக்கியச்சுவை:

கற்பனைக்குக் கம்பனை விஞ்சமுடியாது என்பர். காவியத்தில் நாட்டுப்படலம், நகரப்படலம் என்று அறிமுகப்படுத்தும் பால காண்டத்தில் கம்பனின் கற்பனையைக் கண்டு மகிழலாம். கற்போருக்கு மிகுதியும் சுவை பயக்கும் வண்ணம் இயற்கையையும், கதைப் போக்கையும் இணைத்து உயிர்த்தத்துவமான காட்சியொன்றை மருதநிலப் பின்னனி ஒன்றில் கம்பர் படைத்தளிக்கிறார். பொய்கையில் உள்ள தாமரை விளக்குகளாகவும், மேகங்கள் முழவோசையாகவும் அமைய மயில்கள் நடனம் ஆடுகின்றன. குவளை இக்காட்சியைக் கண்விழித்துப் பார்க்கிறது. நீரலைகள் திரைச்சீலைகளாகின்றன: வண்டுகள் மகரயாழாக இசை மழை பொழிகின்றன. மருதம் அரசனைப் போல செம்மாந்து உள்ளது எனக் கற்பனை புரிகிறார் கம்பர்.

**தண்டலை மயில்கள் ஆடத்**

**தாமரை விளக்கந் தாங்கக்**

**கொண்டல்கள் முழவின் ஏங்கக்**

**குவளைகண் விழித்து நோக்கத்**

**தென் திரை எழினி காட்டத்**

**தேம்பிழி மகர யாழின்**

**வண்டுகள் இனிது பாட**

**மருதம் வீற்றிருக்கும் மாதோ!**

கற்பனையோடு சேர்ந்து உணர்ச்சியும், இசையும் போட்டிபோட காப்பியச் செய்யுட்கள் பலவற்றை இயற்றியுள்ளார் கம்பர். சான்றாகப் பஞ்சவடியில் தங்கியிருக்கும் இராமனின் பேரழகில் மோகங்கொண்ட சூர்ப்பணகை, தன்னை மின்னல் பிழம்பாக்கி, மயக்கும் மோகன உருவத்தில் இராமனை நோக்கி வருவதைக் காட்டலாம். இலக்கியச் சுவையோடும், நயத்தோடும் பாடலைக் காணுங்கள்:

**பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்**

**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடியாள் ஆகி**

**அஞ்சொலின மஞ்ஞையென அன்னமென மின்னும்**

**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.**

ஒரு நாடு எப்படி இருந்தால் அந்த நாடு அமைதியாகத் திகழமுடியும் என்பதைக் கம்பர் கற்பனை செய்கிறார். வறுமை, பகைமை, பொய்மை,அறியாமை இல்லாத நாடாக அயோத்தியைத் தலைநகராகக் கொண்ட கோசலநாடு விளங்குகிறது என்று கம்பர் கூறுகிறார்.

**வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்**

**திண்மை இல்லை நேர்செறுநர் இன்மையால்**

**உண்மை இல்லை பொய் உரை இலாமையால்**

**ஒண்மை இல்லை பல் கேள்வி ஓங்கலால்.**

கம்பநாடன் கவிதை போல கற்றோர்க்கு இதயம் கனியாதே என்பதற்கு எடுத்துக்காட்டாக, கம்பர் கோதாவரி ஆற்றினை வருணனை செய்வதில் காண முடியும். இதில் கம்பர் கவிதையின்

இலக்கணத்தையும் உட்செறித்து வைத்துள்ளதைக் காணும் போது நம் உள்ளம் இறும்பூ தெய்துகிறது.

**புவியினுக்கு அணியாய் ஆன்ற**

**பொருள்தந்து, புலத்திற்று ஆகி**

**அவியகத் துறைகள் தாங்கி**

**ஐந்தினை நெறி அளாவிச்**

**சவியுறத் தெளிந்து தண் என்று**

**ஒழுக்கமும் தழுவி சான்றோர்**

**கவி எனக் கிடந்த கோதாவரி**

**தனை வீரர் கண்டார்.**

ஊலகமகாக் காவியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் சிறப்பு கம்பராமணத்திற்கு உண்டு. இது தழுவல் இலக்கிய மென்றாலும், வால்மீகி இராமயண்தினின்றும் பல இடங்களில் மாற்றம் பெற்று படைக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக சீதையும், இராமனும் திருமணத்திற்கு முன்னரே, ஒருவரை ஒருவர் நேரில் கண்டு காதல் கொள்வதாக அமைத்துப் பாடுகிறார். இம்முறை தமிழ்ப்பண்பாட்டோடு இணைந்ததாகும்.

**எண்ணறும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்**

**கண்ணொடு கண்ணினை கல்வி ஒன்றையொன்று**

**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**

**அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.**

தமிழின் கற்பு மாண்பைச் சிறப்பிக்க வந்த கம்பர், இராவணன் சீதையைப் பற்றித் தூக்கிச் செல்லாமல், நிலத்தை அகழ்ந்து தூக்கிச் செல்வதாகவே கம்பர் காட்டுகிறார். இதைப் போன்று பல சிறப்புகளைப் பெற்றுள்ள கம்பராமாயணம் இறைவனோடு இரண்டறக் கலக்கும் சரணாகதித் தத்துவத்தைக் கடவுள் வாழ்த்தோடு தொடங்கி குகன், சடாயு, வாலி, அனுமன், இராவணன் ஆகிய பல நிலைகளில் விளக்கி உலகுக்கு அளிக்கிறது. கவிதை நயம் மின்னிட பொருளுக்கு ஏற்றம் தந்து கவிப்புலமை போட்டியிட படைக்கப்பட்டுள்ள சிறந்த காப்பியம் தான் கம்பராமாயணமாகும்.

## சைவ சமயம்

சங்கம் மருவிய காலத்தில் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடந்தது. அக்காலத்தில் பௌத்த சமண சமயங்களின் செல்வாக்கே மிகுந்திருந்தது. எனவே தமிழகச் சைவ, வைணவ சமயங்கள் செல்வாக்கு இழந்த நிலையிலிருந்தன. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் களப்பிரர் செல்வாக்குக் குறையவே தெற்கே பாண்டியன் நின்ற சீர் நெடுமாறன் களப்பிரர்களை வென்றான். பல்லவர் தொண்டைமண்டலம் வரை வென்றனர். காஞ்சி தலைநகரமாயிற்று. பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சைவ, வைணவசமயங்கள் புத்துயிர் பெறலாயின. பல்லவர் ஆட்சிக் காலத்தைச் சமய காலம் என்பர்.சைவ சமய நாயன்மார் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் இக்காலத்தே தோன்றிப் பக்திப் பாடல்களைப் பாடினர். மன்னனைப் பாடும் மரபு மாறி இறைவனைப் பாடும் புது இலக்கிய மரபு தலைக்காட்டியது. சமயத்தமிழ் இலக்கியங்கள் தழைக்கத் தொடங்கின.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற மதம் சைவமாகும். வழிபாட்டு நூல்களாகக் கருதப்படும் பன்னிரு திருமுறைகளும், கந்தபுராணம், திருவிளையாடல்புராணம் முதலியனவும் சைவசமய இலக்கியங்களாகும்.

## பன்னிரு திருமுறைகள்

பன்னிரு திருமுறைகளைச் சைவசமயத்தில் 'தோத்திர நூல்கள்' என்று கூறுவர். சோழப் பெருவேந்தன் இராசராசன் வேண்டுகோளுக்கிணங்கத் திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகளாவர். பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகப் பின்னர்ச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**திருமுறை 1,2,3: திருஞான சம்பந்தர் தோவாரம்**

**4,5,6: திருநாவுக்கரசர் தோவாரம்**

**7: சுந்தரமுர்த்தி சுவாமிகள் தோவாரம்**

**8: மாணிக்கவாசகர் - திருவாசகம், திருக்கோவையார்.**

**9: திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதுபேர் நூல்கள் - (1.திருமாளிகைத் தேவர், 2.சேந்தனார், 3.சேதிராயர், 4.கண்டராதித்தர், 5.பூந்துருத்தி நம்பி, 6.காடவநம்பி, 7.திருவாலி அமுதனார், 8.புருடோத்தம நம்பி, 9.கருவூர்த்தேவர் வேணாட்டடிகள்)**

**10. திருமூலர் - திருமந்திரம்**

**11. திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் நூல்கள் (1.திருவாலவாயுடையார், 2.காரைக்கால் அம்மையார், 3.ஐயடிகள் காடவர்கோன், 4.சேரமான் பெருமாள் நாயனார், 5.நக்கீரர், 6.கபிலர், 7.பரணர், 8.கல்லாடர், 9.இளம்பெருமானடிகள், 10.அதிரவடிகள், 11.பட்டினத்துப் பிள்ளையார், 12.நம்பியாண்டார் நம்பி)**

**12: சேக்கிழார் - பெரியபுராணம்**

**தேவாரப் பாடல்களின் சிறப்பு:**

தேவனாகிய இறைவனுக்குச்சூட்டும் பாமாலை என்றும், இறைவனுக்குச் சூட்டும் அன்புப் புகழ்மாலை என்றும் தேவாரம் என்பதற்குப் பொருள் கொள்வர். பக்திமணம் கமழும் தேவாரப் பாடல்கள், ஒவ்வொரு சிவதலத்தினையும் நேரிலே கண்டு பாடியதால், திருக்கோயில்களின் அமைப்பு, வரலாற்றுச் சிறப்பு, அவ்வவ் இடங்களின் இயற்கை வனப்பு ஆகியவற்றைக் கொண்டு திகழ்கின்றன. ஒவ்வொரு தேவாரப் பதிகத்திற்கும் பண் அமைக்கப்பட்டுள்ளது இவற்றின் சிறப்பாகும்.

**1. சம்பந்தர் தேவாரம் :**

முதல் மூன்று தேவாரப் பதிகங்களின் வாயிலாகத் திருஞானசம்பந்தரின் இறை ஈடுபாட்டையும், பக்திப்பெருக்கையும் காணமுடிகிறது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் சீர்காழியில் தோன்றியவர். மதுரைக் கூன்பாண்டியனை, சமணத்திலிருந்து மீட்டுச் சைவத்திற்கு மாற்றிய பெருமை ஞானசம்பந்தருக்கு உண்டு. ஞானசம்பந்தரின் பாடல்களில் இயற்கைக் காட்சிகளின் வனப்பைக் கண்டுமகிழ முடியும். ஒன்று முதல் மூன்று திருமுறைகளான தேவாரத்திலும் 4146 பாடல்கள் காணக்கிடக்கின்றன.

உலக மக்கள் தேடும் செல்வங்கள் நிலையாதன, அவை அழியக் கூடியவை. ஆனால் சிற்றம்பல நாதனாகிய சிவபெருமானின் திருவடிச்செல்வத்தைப் பெற்றுக் கொள்வோமென்றால், அதுவே அழியாத, தலைசிறந்த செல்வமாகும் என்று ஞானசம்பந்தர் கூறுகிறார்:

**செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்**
**செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற**
**செல்வம் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய**
**செல்வன் கழலேந்துஞ் செல்வம் செல்வமே**

மேலும்,

**தென்னாடுடைய சிவனே போற்றி:**
**எந் நாட்டார்க்கும் இறவைா போற்றி:**

என்று முழுமுதற் கடவுளின் பெருமையை எடுத்துரைக்கிறார்.

**2. நாவுக்கரசர் தேவாரம்:**

4,5,6 திருமுறைகளின் அடங்கிய தேவாரப் பாடல்களைப பாடியவர் திருநாவுகரசர். சோழநாட்டில் திருவாமூரில் பிறந்த திருநாவுக்கரசர், தமது எண்பதொரு வயதுவரை சைவப்பயிர் தழைக்க உழைத்தவர். திருஞானசம்பந்தர் நாவுக்கரசரை 'அப்பர்' என்ற அழைத்து மகிழ்ந்தவர். நாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் 3064 உள்ளன.

'தலையே நீ வணங்காய்' என்று தேவாரம். இசைக்கும் நாவுக்கரசர் இறைவனின் பாதகமலங்கள் எப்படிப்பட்டவை என்பதை அனுபத்திலிருந்து உயர்ந்து கொடுக்கிறார்.

**மாசில் வீணையும், மாலை மதியமும்**
**வீசு தென்றல், வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே-**

'நெஞ்சே நீ நினையாய்' என்று பாடும் நாவுக்கரசர் இறைவனோடு மிக நெருங்கி விடுகிறார்.இறைவன்தலைவன் என்றால், அவர் தலைவி தலைவனின் தாளை வணங்கிடத் தலைப்படுகிறாள் தலைவி.

**3. சுந்தரர் தேவாரம்:**

சோழமண்டலம் திருநாவலூரில் பிறந்தவர் சுந்தரர். அவருடைய பாடல்கள் மொத்தம் 1026. அவை ஏழாம் திருமுறையில் உள்ளன. குறைந்த ஆண்டுகளே வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் பரவையார், சங்கிலியார் என்ற இருவரை மணந்து வாழ்ந்தார். இறைப்பணியை முழுமூச்சாகக் கொண்டு சைவத் தென்றல் தவழ்ந்திட உழைத்தார்.

இறைவனைப் 'பித்தர்' என்று அழைத்தவர் சுந்தரர். ஆனால் அந்தச் சொல்லில்தான் எத்தனை பக்தி இன்பம் கொட்டுகின்ற இலக்கிய இன்பத்தைக் காணமுடிகிறது! இறைவனே கேட்டு மகிழ்ந்த பாடலல்லவா அது:

**பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!**
**எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை!**
**வைத்தாய் பெண்ணெய்த் தென்பால்** வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்

**4. மாணிக்கவாசகர் - திருவாசகம்**

மாணிக்கவாசகர் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருவாதவூரில் பிறந்தவர். இயற்பெயர் திருவாதவூரர். அவருடைய அறிவு, ஆற்றல், உயர்பண்பு, ஒழுக்கம், கல்வி,கேள்வி ஆகிய சிறப்புக்களைக் கேள்வியுற்ற பாண்டியமன்னன் அரிமர்த்தன பாண்டியன் அவரைத் தன் அமைச்சராக்கினான். தென்னவன் பிரமராயன் என்றப் பட்டத்தைப் பெற்ற மாணிக்கவாசகர், மன்னன் பொருட்டுச் சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வாங்கச் சென்ற பொழுது, திருப்பெருந்துறையில் ஞானாசிரியர் ஒருவர் மூலமாக இறைஞானம் பெற்றார். இறைவன் இவர் பொருட்டு நரியைப் பரியாக்கியதும் திருவிளையாடல் புராணத்தில் கூறப்படுகின்றன.

திருவாசகம் ஐம்பத்தொரு திருப்பதிகங்களுடன்,656 பாடல்களையும் கொண்டு திகழ்கிறது.

**நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!**

**இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!**

என்று திருப்பெருந்துறையில் அருளிய சிவபுராணம் திருவாசகத்தில் முகப்பு ஓவியமாய் அமைந்துள்ளது. வானாகி, மண்ணாகி, வளியாகி,ஒளியாகி, ஊனாகி,உயிராகி, உண்மையுமாய்,இன்மையுமாய், கோனாகி, உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் நீக்கமற்ற நிறைந்து நிற்கும் இறைவனை

**‘ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு,ஆயிரம்**

**திருநாமம் பாடிநாம் தெள்ளேனம் கொட்டாமோ’**

என்று பாடிப் போற்றுகிறார்.

அழுது, உருகி, அடிஅடைந்த அன்பராகிய மாணிக்கவாசகர் இயற்றிய ‘திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்’ என்பது பழமொழி. அதற்குக் காரணம் இறைவனோடு ஒன்றிக் கலந்த தமது பேரானந்த அனுபவத் துளிகளையே திருவாகத்தில் தேக்கித் தருகிறார் மாணிக்கவாசகர்.

**திருமூலரின் திருமந்திரம்:**

பதினென் சித்தர்களில் தலைமை இடத்தைப் பெறும் திருமூலர் இயற்றியதே திருமந்திரம். திருமுறையில் இது பத்தாவது இடத்தைப் பெறுகிறது. தந்திரம் என்று கூறப்படுகின்ற ஒன்பது பிரிவுகளையும்,3047 பாடல்களையும் திருமந்திரம் பெற்றுள்ளது.

‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்ற ஒருமைப்பாட்டு மந்திரத்தை முதன் முதலில் தமிழகத்தில் முழக்கிய பெருமைக்குரியவர் திருமூலர். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் தத்துவ உண்மைகளைத் திருமந்திரம் மூலம் எடுத்துரைக்கிறார்.

**திருமூலரின் தத்துவக் கோட்பாடுகள்**

திருமூலரின் தத்துவக் கோட்பாடுகளில் உயர்ந்த இடத்தைப் பெறுவது அவருடைய காயசித்தி உபாயமே. உடம்புக்கும், உயிருக்கும், உத்தமனாகிய இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைத் திருமூலர் எடுத்துரைக்கிறார்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்:**

**திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்:**

**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**

**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.**

தன் அனுபத்தையும் அடுத்த பாடலில் எடுத்துரைக்கறார் திருமூலர்.

**உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்:**

**உடம்பின் உள்ளே உறுபொருள் கண்டேன்:**

**உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று**

**உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.**

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று தாம் அறிவு பெற்றது உண்மையான மெய்ப்பொருளை அறிவதற்கும், தாம் அறிந்ததை உலகினர்க்கு உணர்த்தவுமே என்றுகருதினார் திருமூலர். உலகில் இறைவனை அடைய மெய்ஞ்ஞானநெறி மக்களிடமும், உயிர்களிடமும் அன்பு காட்டவே என்பதை அறிந்து, இறைவன் அன்புமயமாயிருக்கிறான் என்று அறிவித்தார் திருமூலர்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர்:**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்:**
**அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.**

அன்பு மயமாய் இலக்கும் இறைவன் எப்படிப்பட்டவன்? அவரே விடையும் அளிக்கிறார்:

**தீயினும் வெய்யன் புனலிலும் தண்ணியன்:**
**ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை**
**சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்**
**தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.**

அன்புமயமாய் அருள் உருவாய் இருக்கும் இறைவனை எப்படி அடைவது? எப்படிக் காண்பது? ஏளிய வழியினைக் காட்டுகிறார் திருமூலர்.

**யாவருக்கும் இறவைர்க்கு ஒரு பச்சிலை:**
**யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுரை:**
**யாவருக்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி:**
**யாவருக்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!**

உண்ண உணவில்லாமல், உடுக்க உடையில்லாமல், வசிக்க வீடில்லாமல் அலைகின்ற ஏழைகளின் சிரிப்பில் இறைவன் காட்சி தருகிறான் என்பதைத் திருமூலர் சுட்டிக் காட்டுகிறார்.

அரிதாகக் கிடைத்த மானிடப் பிறவியில் தன் உயிர் யாரொடு ஒன்ற வேண்டுமோ, அதற்கான வழிமுறைகளை அறிந்து வாழ்வியலைத் தொடர்க என்று திருமந்திரம் கற்பிக்கிறது.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப்புலன் ஐந்தும் கானா மணிவிளக்கே.**

## வைணவ சமயம்

சைவ சமயத்திற்குச் சிவபெருமான் முழுமுதல் தெய்வமாக விளங்குவது போல் வைணவ சமயத்திற்குத் திருமால் முழுமுதல் கடவுனாகப் போற்றப்படுகின்றார். வைணவ சமயக்

கொள்கைகளையும் பக்தி உணர்வையும் பரப்பும் பணியை முதன்மையாகக் கொண்ட ஆழ்வார்கள், ஆலயங்கள் பலவற்றிற்குச் சென்று பாடல்கள் பாடி இறைவனை வழிபட்டனர். இவ்வாறு பாடிய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். இவர்கள் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலாயிரம், பெரியதிருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பகுப்புகளை உடையதாக அமைந்துள்ளது.

**முதலாழ்வார்கள் மூவர்**

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதலாழ்வார்களாகக் கருதப்படுகின்றனர்.

**1. பொய்கையாழ்வார்**

பொய்கையில் இருந்து பிறந்தமையால் பொய்கையாழ்வார் எனப் பெயர் பெற்றார். காஞ்சிபுரத்தில் ஐப்பசித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் பாஞ்சசந்நியம் எனும் சங்கின் அம்சமாகப் பிறந்தார் என்பர். இவர் முதல் திருவந்தாதியைப் பாடியவர்.

திருக்கோவலூரில் ஓர் வீட்டின் இடைக்கழியில் மழைக்காலத்தே முதலாழ்வார்கள் மூவரும் கூடுகின்றனர். ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம் எனக்கூறி மூவரும் நின்றபோது நான்காவதாக ஒருவர் அவர்களிடையே நெருங்கி நிற்கிறார். அவ்வாறு வந்து நின்றவர் திருமால் என்பதை உணர்ந்து ஒவ்வொருவரும் ஓர் வெண்பா இயற்றுகின்றனர்.

பொய்கையார் அப்போது பாடிய

**“வையம் தகளியா வார்கடலே நெய்யாக**

**வெய்ய கதிரோன் விளக்காகச்”**

என்ற வெண்பா எப்பொழுதும் இன்பத்தைத் தருவதாகும்.

**2. பூதத்தாழ்வார்**

திருமாலைப் பூதம் எனப்பல இடங்களில் பாடியிருப்பதால் பூதத்தாழ்வார் எனப் பெயர் பெற்றார். திருகடல்மல்லை எனப்படும் மாமல்லபுரத்தில் ஐப்பசி அவிட்டநட்சத்திரத்தில் கௌமேதகி என்னும் கதாயுதத்தின் அம்சமாகத் தோன்றியவர். இரண்டாம் திருவந்தாதி பாடியவர்.

திருக்கோவலூரில் மூன்றாழ்வார்களும் சந்தித்த போது ‘வையகம் தகளியா’ என்னும் பாடலைப் பொய்கையாழ்வார் பாடினார். அச்சூழலில் பூதத்தாழ்வார் பாடிய,

**“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**

**இன்புருகு சிந்தை இடுதிரியா”**

ஏன்ற பாடல் இசை நயமும் இறை உணர்வும் மிகுந்தது ஆகும்.

**3. பேயாழ்வார்**

திருமாலின்மீது கொண்ட பக்தியால் அழுது, சிரித்து, ஆடிப்பாடிப் பேய் பிடித்தவர் போல விளங்கியதால் இப்பெயர் பெற்றார்.மயிலாப்பூரில் ஐப்பசி சதய நட்சத்திரத்தில் நாந்தகம் எனும் வாளின் அம்சமாகப் பிறந்தவர். மூன்றாம் திருவந்தாதி பாடியவர்.

திருமாலின் கோலத்தைக் கண்டு களித்த பேயாழ்வார் அதனை

**“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்**

**அருக்கன் அணிநிறமும் கண்டேன்”**

என்று பைந்தமிழில் பாடி மகிழ்வதைக் காணலாம்.

**4. திருமழிசையாழ்வார்**

திருமழிசை எனும் ஊரில் பிறந்தவர். தை மக நட்சத்திரத்தில் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவர். நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் ஆகிய நூல்களைப் பாடியவர். சந்தப்பா பாடுவதில் சிறந்தவர். இவருடைய பாடல்களில் தத்துவக் கருத்துகள் மிகுதி.

திருமழிசையாழ்வாரை முதலாழ்வார்களைப் போலச் சமய நல்லிணக்கம் உடையவர் எனச் சொல்ல இயலாது. இவர் சமய வாதம் செய்து பிற சமயத்தினரை வென்றவர். தம்முடைய பாடல்களில் பிற சமயத்தினரைக் கண்டிப்பதை

**“அறியார் சமணர் அயர்த்தார் பௌத்தர்**

**சிறியார் சிவப் பட்டார்கள்”**

காஞ்சிப் பல்லவன் இவருடைய சீடர் கணிகண்ணனை இகழ்ந்தபோது இவர் திருமாலையும் அழைத்துக் கொண்டு போன செய்தியை

**“கணிகண்ணன் போகின்றான் காமரு பூங் கச்சி**

**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா”**

என்ற பாடலால் அறியலாம். பின்னர் பல்லவன் தனது செயலுக்கு வருந்தி காஞ்சிக்கு மீண்டும் வர வேண்டும் என்றழைக்க ஆழ்வாருடனும் சீடனுடனும் திருமால் காஞ்சிக்குத் திரும்பியதால் “சொன்ன வண்ணம் செய்த பெருமாள்” என அழைக்கப்பட்டார்.

**5. பெரியாழ்வார்**

திருவில்லிப்புத்தூரில் பிறந்தவர். ஆனித் திங்கள் சுவாதி நட்சத்திரத்தில் கருடன் அம்சமாகத் தோன்றியவர். பட்டர்பிரான், விஷ்ணுசித்தன் எனும் சிறப்புப் பெயர்களை உடையவர். ஆண்டாளை வளர்த்தவர். திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருவாய்மொழி ஆகிய நூல்களைப் பாடியவர்.கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து இவர் பாடிய பாடல்கள் பிள்ளைத் தமிழ் எனும் தனியொரு இலக்கியம் உருவாகக் காரணமாக அமைந்தது. மதுரை மன்னன் வல்லபதேவனிடம் வைணவத்தின் சிறப்பை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றவர்.

கண்ணன் செய்யும் குறும்புச் செயல்களைச் சொல்லிமகிழ்வதை,

**“கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்**

**எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்”**

என்ற பாடலின் மூலம் படித்து இன்புறலாம்.

**6. ஆண்டாள்**

பெரியாழ்வார் நந்தவனத்தில் ஆடித்திங்கள் பூச நட்சத்திரத்தில் தோன்றியவள். கோதை என்பது இயற்பெயர். ஆண்டவனையே ஆண்டாள் என்றமையால் ஆண்டாள் எனும் பெயர் பெற்றாள். சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்பது ஆண்டாளின் செயல் கருத்தமைந்த சிறப்புப்பெயர். அரங்கனைக் காதலனாக்கி இவர் பாடிய பாடல்கள் மிகச் சிறப்பானவை. பக்தியிலும் காதல் உணர்வை வெளிப்படுத்திய புரட்சி நோக்குடையவள். திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன இவருடைய நூல்கள்.

**“வாரண மாயிரம் சூழ வலம் செய்து**

**நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்**

**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**

**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி நான்”**

என்ற பாடல் ஆண்டாளின் பக்திக்காதலை வெளிப்படுத்துகிறது.

**7. நம்மாழ்வார்**

ஆழ்வார்களில் தலைமை சான்றவர், சைவ சமயத்தில் மாணிக்கவாசகருக்கு இணையாக, வைணவ சமயத்தில் இவரைப் போற்றுவதுண்டு. திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரியில் பிறந்தவர். அரங்கப் பெருமானால் **'நம் சடகோபன்'** என்றழைக்கப்பட்டமையாலும். எல்லோருக்கும் உரியவராக இருப்பதாலும் நம்மாழ்வார் என்ற பெயர் பெற்றார். சடகோபன், பராங்குசன், தமிழ்மாறன் முதலிய வேறுபெயர்களும் இவருக்கு உண்டு.

இவர் பாடிய திருவாய் மொழி 'திராவிட வேதம்' என்ற சிறப்பினைப் பெற்றது. இவருடைய நான்கு நூல்களும் வைணசமயத்தார்க்குரிய மறைகளாகப் போற்றப்படுகின்றன.

எல்லாப் பொருள்களையும் இறைவனாகக் காணும் ஆழ்ந்த உள்ளம் உடையவராக நம்மாழ்வார் விளங்குகிறார். 'உண்ணும் சோறும், பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமானே என்று எங்கும் எதிலும் கண்ணனைக் காணுகின்றார்.

**8. குலசேகர ஆழ்வார்**

திருவஞ்சைக் களத்தில் மாசித் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் மணி அம்சமாகப் பிறந்தவர். அரசாட்சியைத் துறந்து வைணவத் தொண்டரானவர். வடமொழிப் பயிற்சி மிகுந்தவர். இராமாவதாரத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். வேங்கடத்தில் படியாய்க் கிடந்து மகிழ விரும்பியவர். திருவரங்கத்தில் மூன்றாம் மதிலைக் கட்டியவர். தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்தமாலையும் இவரால் இயற்றப் பெற்றன.

இறைவன் பக்தர்களைப் பலமுறை துன்பத்தில் வாடச் செய்கின்றான். என்றாலும் அடியவர்கள் அவனையே நினைத்து அவன் அருளைநாடுவதை நோயாளி, மருத்துவனோடு இயைபு படுத்தி உவமை கூறும்.

**"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**
**மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ**
**ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே"**

என்ற பாடல் சிறப்பானது.

**9. தொண்டரடிப்பொடி ஆழ்வார்**

சோழநாட்டில் திருமண்டங்குடி எனும் ஊரில் மார்கழித் திங்கள் கேட்டை நட்சத்திரத்தில் வனமாலை அம்சமாய்த் தோன்றியவர். ‘விப்ர நாராயணர்’ என்பது இவரது இயற்பெயர். திருவரங்கத் திருமாலுக்கு அணிவித்து வழிபட பூந்தோட்டம் அமைத்துத் தொண்டாற்றியவர். திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்பன இவர் பாடியவை.

**“பச்சைமா மாலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**

**அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்**

**இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்**

**அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே”**

என்ற பாடல் அனைவரும் அறிந்ததே. இவருடைய பாடல்களில் துன்பத்தால் அழுது புலம்பும் நிலை மிகுதி.

**10. திருப்பாணாழ்வார்**

உறையூரில் கார்த்திகைத் திங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் நெற்கழனியில் தோன்றியவர். பாணர் குலத்தவரால் வளர்க்கப்பட்டமையால் இப்பெயர் பெற்றார். குலத்தைக் காரணம் காட்டி அரங்கனை வழிபடக்கூடாது என்ற தடைகளையெல்லாம் தகர்த்தவர். அரங்கன்மேல் பெண் ஒருத்தி காதல் கொண்ட தன்மையில் அமைந்த அமலானாதிபிரான் எனும் திருமொழி சொல்நயம் மிக்கது என்பதை

**“ஆலமா மரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்**

**ஞாலம் ஏழும் உண்டான் அரங்கத்து அரவின் அணையான்”**

என்ற பாடலால் அறியலாம்.

**11. திருமங்கை ஆழ்வார்**

சோழநாட்டில் திருக்குறையலூரில் நள வருடம் கார்த்திகைத் திங்களில் வில்லின் அம்சமாய்த் தோன்றியவர். கள்ளர் மரபில் தோன்றியவர். நீலி எனும் படைத்தலைவனின் மகனாகக் கருதப்படுவதால் ‘நீலன்’ என்றும், சோழ மன்னனின் தானைத் தலைவனாகத் திகழ்ந்து பகைவரை வென்றதால் ‘பரகாலன்’ என்றும், திருமங்கை நாட்டில் மன்னனாக விளங்கியதால் ‘திருமங்கை மன்னன்’ என்றும் அழைக்கப்படுபவர். பெரிய திருமொழி திருக்குறுந்தாண்டகம்,

திருநெடுந்தாண்டகம், திருஎழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன இவர் இயற்றிய நூல்கள்.

### 12. மதுரகவியாழ்வார்

இவர் நம்மாழ்வாரின் சீடர் திருக்குருகூரையடுத்த திருக்கோளூரில் ஈசுவர ஆண்டு சித்திரை நட்சத்திரத்தில் கருடாழ்வார் அம்சமாகத் தோன்றியவர். செவிக்கு இன்பம் தரக்கூடிய பாடல்களைப் பாடியதால் இப்பெயர் பொற்றார். இறைவன் திருமாலைப் பாடாது அவருடைய அடியவரான நம்மாழ்வாரைப் பாடியவர்.

**“கண்ணி நுன் சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்**

**பண்ணிய பெருமாயன் என்னப்பன் இல்**

**நண்ணித் தென் குருகூர் நம் யென்றக்கால்**

**அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே”**

என்று தொடங்கும் பதினொரு பாடல்கள் கொண்ட இனிமையான பிரபந்தம் இவரால் பாடப் பெற்றது.

## பாடம் -5

## சமணர் வளர்த்த தமிழ்

மௌரியப் பேரரசர் காலந்தொட்டு தமிழகத்தில் சமணச் செல்வாக்கு மிகுந்தது. அது கி.மு.3-ம் நூற்றாண்டில் தமிழகத்தில் புகுந்தது காஞ்சிபுரமும் மதுரையும் அச்சமயத்தின் வாழ்விடமாகத் திகழ்ந்தன. சங்கப் புலவர்களுள் உலோச்சனாரும் நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனாரும் சமண சார்புடையவர்களாக விளங்கினர். அச்சமயத்தின் தலைசிறந்த கொள்ளைகளான கொல்லாமை துறவு துன்பம் பொறுத்தல் என்பன தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. எனவே அச்சமயம் தமிழகத்தில் வேருன்றியது மேலும் அச்சமயத்தினர் தமிழ்நாட்டில் நிலைத்திருக்கும் பொருட்டுத் தமிழ் மொழி பலவகையான இலக்கிய செல்வங்களைப் பெற்றது அவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

### சமணர்களின் தமிழ்ச் சங்கம்:

சங்க காலத்தே சமணர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் அறிவதற்கு இயலவில்லை. ஆனால் சங்கம் மருவிய காலத்தே தோன்றிய நூல்களில் பல சமணர்களால் இயற்றப்பட்டன என்று தெரிகிறது. இச்சமணர்கள் பல பள்ளிகளை நிறுவிக் கல்விப் பணி செய்தனர். இவர்கள் உடல் நோய் உள்ளநோய் இரண்டையும் போக்கி வந்தனர். இக்காரணத்தாலேயே இவர்களால் இயற்றப்பெற்ற நூல்கள் ஏலாதி சிறுபஞ்சமூலம் என மருத்துவப் பெயர்களைப் பெற்று வழங்கலாயின. இவர்கள் மதுரை மாநகரில் ‘‘வச்சிரந்தி சங்கம்’’ என்ற சங்கம் ஒன்றை நிறுவித் தமிழ்த் தொண்டு செய்து வந்தார்கள். தேவார காலத்துக்கு முன்னர் இவர்களின் செல்வாக்கே தமிழ்நாட்லல் மிகுந்தது. மதுரைக்கு அருகில் உள்ள ஆன்ன மலை இவர்களது முக்கியமான இடமாக அமைந்தது. பல்லவ மன்னன் முதலிற் சமணனாக இருந்தான். ஆதலின் சமண சமயம் அரசியல் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இவ்வாறு அரசியல் செல்வாக்கின் துணைக்கொண்டு விளங்கிய சமணர்களின் செல்வாக்கு ஆழ்வார்கள் நாயன்மார்களின் தோற்றத்திற்குப் பின் குறையலாயிற்று.

### இலக்கண நூல்கள்:

சமணர்கள் இலக்கணம் காப்பியம் அறநூல்கள் என பலவகையான நூல்களைப் படைத்துள்ளனர். தமிழில் உள்ள நூல்களில் மிக பழமையானது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூலை இயற்றியவர் தொல்காப்பியர். இவரை இந்நூலுக்குப் பாயிரம் எழுதிய பனம்பரனார் ‘‘பல்புகழ் நிறுத்த படிமையோன்’’ எனக் குறிப்பிடுகின்றார். படிமை என்பது சமண சமய ஒழுக்கத்தைக் குறிக்கம் ஆதலால் தொல்காப்பியர் சமணராதல் வேண்டும் என்பர். திரு.வையாபுரி பிள்ளையவர்கள் மேலும் இலக்கணத் துறையில் சமணர் அளவு வேறு

எச்சமயத்தினரும் தொண்டாற்றவில்லை என்று துணிந்து கூறுவார். மேற்கூறிய தொல்காப்பியமேயன்றி யாப்பருங்கலக்காரிகை நேமிநாதம் நன்னூல் நம்பியகப்பொருள் வெண்பா பட்டியல் முதலான இலக்கண நூல்கள் சமணர்கள் படைத்தனவே என்பது குறிப்பிடத்தகுந்தது.

**பெருங்காப்பியங்கள்:**

காப்பியங்களுள் காலத்தால் முன்தோன்றியதும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாக மதிக்கப்படுவதுமான சிலப்பதிகாரத்தை நாம் நன்கு அறிவோம். இதனை இயற்றிய இளங்கோவடிகள் சமணரே என்பர். அடிகள் தம் காப்பியத்துக்கு பல சமயங்களையும் பல சமயக் கடவுளரையும் பற்றி நடுவு நிலைமையோடு போற்றி கூறியிருப்பினும் கவுந்தியடிகள் என்னும் சமணத் துறவியைப் படைத்து அவர் வாயிலாகச் சமண கருத்துக்களை உலகுக்கு எடுத்துக் கூறுகின்றார்.

அடுத்து ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியும் சமண காப்பியமே ஆகும். இந்நூலை இயற்றிய திருத்தக்கதேவர் சமண சமயத்தைச் சேர்ந்த புலவர் ஆவார். பிற்காலத்தே விருத்தப்பாக்களால் இயன்ற காப்பியங்களுக்கெல்லாம் வழிகோலிய பெருமை சமணக் காப்பியமாகிய இதற்கே உரியதாகும்.

‘‘வளையாபதி’’ என்னும் நூலும் சமணக் காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் 66 மட்டுமே. இந்நூல் ‘‘துக்கம் துடைக்கும் துகளறு காட்சியார் நிக்கந்த வேடத்து இருடிகணங்களை’’ என்ற தொடர் காணப்படுகின்றது. எனவே இது சமண இலக்கியமாகும்.

**சிறுகாப்பியங்கள்:**

ஐஞ்சிறு காப்பியங்களாகிய சூளாமணி யசோதர காவியம் உதயணகுமார காவியம் நீலகேசி நாககுமார காவியம் ஆகியன சமண சமயக் காப்பியங்களேயாகும். சூளாமணி என்னும் நூல் தோலா மொழித் தேவரால் இயற்றப்பட்டதாகும். இந்நூலின் கதை இந்துசமயக் கதைகளோடு ஒத்திருப்பதே இது யாவராலும் போற்றப்படுவதற்குக் காரணம் ஆகும். இந்நூலைப்பற்றிய குறிப்பு சிரவண பெல்கோலாக் கல்வெட்டில் காணப்படுகின்றது. இதன் காலம் 10-ம் நூற்றாண்டாகும். யசோதர காவியம் மிக எளிய நடையில் 330 விருத்தப்பாக்களால் கூறுவது நீலகேசி பௌத்த சமயக் காப்பியமாகிய குண்டலகேசிக்கு எதிராக எழுந்த நூல் ஆகும். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இச்சிறுகாப்பியங்களேயன்றிப் பெருங்கதை என்னும் நூலும் சமண நூலாகும். இதனை இயற்றியவர் கொங்குவேள் என்பர்.

**நீதி நூல்கள்:**

இனி சமணர் தம் நூல்களுள் நாலடியார் பழமொழி அறநெறிச்சாரம் சிறுபஞ்சமூலம் ஏலாதி என்பன குறிப்பிடத்தகுந்தவை. இவற்றுள் நாலடியார் திருக்குறளோடு ஒத்த பெருமையுடையது. ‘‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’’ ‘‘பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில்’’ என்னும் பழமொழிகள் இந்நாலடியார் பெருமையை விளக்குவனவாகும்.

**புராண நூல்கள்:**

அறநூல்களேயன்றி மேருமந்திரபுராணம் ஸ்ரீபுராணம் மகாபுராணம் சாந்தி புராணம் போன்ற புராண நூல்களும் சமணர்களால் இயற்றப்பட்டன. மேரு மந்தரன் என்ற இருவர் வரலாற்றைக் கூறுவது மேரு மந்திர புராணம் இதன் ஆசிரியர் வாமனாசாரியர்.

**நிகண்டு நூல்கள்:**

இக்காலத்தே சொற்களுக்கு பொருள் காண்பதற்கு உதவியாக அமைவது அகராதியாகும். இவ்வகராதி தோன்றுவதற்கு முன்னர் சொற்களுக்கு பொருள் அறியுமாறு நிகண்டு என்னும் ஒருவகை நூல்கள் பயன்பட்டு வந்தன. திவாகர நிகண்டு பிங்கல நிகண்டு சூடாமணி நிகண்டு என்னும் நூல்களை இயற்றிய அனைவரும் சமணரேயாவர்.

**சிற்றிலக்கியங்கள்:**

இலக்கியம் இலக்கணம் ஆகிய இரு துறைகளிலும் இணையற்றத் தொண்டாற்றிய சமணர்கள் சிற்றிலக்கியப் படைப்பிலும் சிறந்த பணி செய்தனர். அவர்களது பணியின் மூலமாக விருத்தம் அந்தாதி கலம்பகம் பிள்ளைத் தமிழ் போன்ற சில வகை நூல்கள் வெளியாயின. நரிவிருத்தம் திருநூற்றந்தாதி திருக்கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்கள் சமண முனிவர்களால் இயற்றப்பட்டன.

**உரைநடை:**

ஸ்ரீபுராணம் சத்ய சிந்தாமணி முதலியன சமணர்கள் இயற்றிய உரைநடை நூல்களாகும். இவையே தமிழும் வடமொழியும் கலந்து எழுதும் மணிப்பிரவாளத்துக்குத் தமிழ் நிலத்தில் வித்திட்டன. இலக்கண நூல்களுக்கு உரை கண்ட இளம்பூரணர் குணசாகரர் ஆகியோரையும் இங்கு குறிப்பிட வேண்டும். இவர்கள் சமண சமயத்தைச் சார்ந்த உரையாசிரியர்கள் ஆவர்.

**முடிவுரை:**

சமணர்கள் இன்பத்தை வெறுத்தனர் இசையும் நாடகமும் மக்கள் வாழ்கைக்கு ஊறு விளைவிப்பன என்ற எண்ணம் கொண்டனர். இதனால் தமிழில் இருந்த இசை நாடக நூல்கள் பல மறைந்தன என்பது வரலாற்று ஆசிரியர் முடிவு. ஆயினும் சமணர் தமிழ்மொழிக்கு ஆற்றியத் தொண்டு தமிழிலக்கிய வரலாற்றில் என்றும் எவரும் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது. இதுவரை கூறிய செய்திகளை நோக்கும்போது சமணர்கள் பல்துறையிலும் செய்தப் பணி என்றும் மாறாது மணம் கமழ்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

## புத்த சமயம் வளர்த்த தமிழ்

**தமிழ் இலக்கிய வளர்ச்சியும்**

**முன்னுரை:**

தமிழ் நாட்டின் தொன்மைச் சமயங்களான சைவமும் வைணவமும் பக்தி இயக்க காலத்தில் மறுமலர்ச்சி பெறுவதற்கு முன்னர் பௌத்த சமண சமயங்கள் இங்கு நல்ல செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தன. பௌத்த சமயம் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் வடநாட்டை ஆண்ட பெருவேந்தரான அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில் தமிழ் நாட்டில் பரவியது என்பர். இங்கு வந்து குடியேறிய பௌத்தர்கள் தங்கள் கொள்கைகளை உயிரிரக்கம் சாதி வேறுபாடின்மை அறநெறி நிற்றல் முதலியன தமிழ் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. எனவே தமிழர் பலர் பௌத்தராக மாறினர். ஏனைய சமயத்தாரைப் போலவே பௌத்தர்களும் தமது கொள்கையை மக்களிடையே பரப்பும் பொருட்டு தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளிள் ஈடுபட்டனர். அவைகளைக் கற்று தெளிந்து சிறந்த படைப்புகளைத் தமிழுக்குத் தந்தனர். இவ்வண்ணம் உருவான பௌத்தரின் கலை இலக்கியச் செல்வம் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

**பௌத்தம் தழுவிய தமிழகத்துச் சான்றோர்:**

பௌத்தர்கள் தமிழ்நாடெங்கும் பல விகாரங்களையும் பள்ளிகளையும் ஏற்படுத்தித் தம் சமயத் தொண்டினைச் செய்து வந்தார்கள். பூதமங்கலம் போதிமங்கை பொன்பற்றி காவிரி பூம்பட்டினம் நாகப்பட்டினம் முதலிய இடங்களில் பௌத்தர்கள் பெருமளவில் குடியேறி வாழ்ந்து வந்தனர். சங்கப் புலவர்களுள் ஒருவராகிய இளம் போதியார் என்பவர் பௌத்த சமயத்தினர் ஆவர். அறவண அடிகள் மணிமேகலை சீத்தலை சாத்தனார் சங்கமித்திரர் புத்தமித்திரர் போன்றோர் பௌத்த தமிழ்ச் சான்றோர் ஆவர். நாலந்தா பல்கலைக்கழகத்தில் தலைவராக விளங்கிய தின்நாகர் தருமபாலர் சீனம் சென்ற போதி தருமர் வச்சிரபோதி ஆகியோர் காஞ்சியில்

வாழ்ந்த தமிழ்ப்புத்தர்களே. பௌத்தர்கள் இயற்றிய தமிழ் நூல்கள் அழிந்தன போக எஞ்சியிருப்பன சிலவே. அவற்றுள்ளும் சிறப்பு மிக்கது மணிமேகலை என்னும் காப்பியமே ஆகும்.

**பௌத்த சமயக் காப்பியங்கள்:**

ஐம்பெருங்காப்பியங்களுள் மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமய காப்பியங்கள் ஆகும். இவ்விரண்டினுள் மணிமேகலை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலை சாத்தனார் ஆவார். தாம் இயற்றிய நூலுக்கு "மணிமேகலைத் துறவு" என்று ஆசிரியர் பெயரிட்டுள்ளார். சாத்தனார் புத்த சமய கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்நூலை இயற்றினார். புத்த சமயப் பிரிவுகளாகிய மஹாயன புத்த சமயம் தென்னாட்டிலிருந்த நிலையை விளக்கவே இந்நூல் எழுந்தது என்பர். மேலும் மணிமேகலை துறவொழுக்கத்தை மேற்கொண்டு பல இடங்களுக்கும் சென்று சமய வாதிகள் பலரையும் வென்ற செய்தி கூறுமிடத்திலும் புத்த சமய கருத்துக்களை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். பௌத்த சமய கருத்துக்களேயன்றி மக்கள் பின்பற்றத் தக்க பொதுவான அறங்களைக் குறித்தும் இந்நூல் பேசுகின்றது. அறம் இது என்பதை குண்டலகேசியும் பௌத்த காவியமே ஆகும். இது தருக்கச் சமண வைதிகச் சமயங்களை கண்டிக்கிறது. இந்நூல் விருத்தங்களாலும் கலிப்பாக்களாலும் இயன்றது. இந்நூலாசிரியர் நாதகுத்தனார் என்பவர். இக்காப்பியத் தலைவி சுருண்ட மயிருடையவள் ஆதலால் "குண்டலகேசி" எனப்பட்டாள் இவள் இராஜகிருக நகரத்தை ஆண்ட அரசனது அமைச்சன் மகள். கொலைக்குற்றவாளியான காளன் என்பானை காதலித்து மணந்து கொண்டவள். அவன் அவளை மலையுச்சியிலிருந்து தள்ள முயன்றபோது தந்திரமாக அவள் மலைமீதிலிருந்த அவனைத் தள்ளி இறக்கச் செய்தாள். பின்னர் வாழ்வில் வெறுப்புற்று சமணம் சார்ந்து பல ஊர்களுக்கும் சென்று சமய வாதம் செய்யலானாள். இறுதியில் புத்தரிடம் வாதத்தில் தோல்வியடைந்தாள். அதனால் புத்தரிடம் உபதேசம் பெற்றுப் பௌத்த சமயம் சார்ந்தாள். இதுவே குண்டலகேசியின் வரலாறு. இந்நூல் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. சில செய்யுட்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவையனைத்தும் சீரிய செந்தமிழ் நடையில் இயன்றவை. ஒரு பாடல் வாழ்க்கையின் தன்மையை அழகுற எடுத்துக் காட்டுகிறது.

**விம்பசாரக்கதை:**

இந்நூலும் இப்பொழுது கிடைக்கவில்லை. விம்பிசாரன் புத்தர் காலத்தில் வாழ்ந்த மகத நாட்டு அரசன் புத்தருடைய சீடன் இவனது வரலாற்றைக் கூறுவதே இக்காவியம். நீலகேசி உரையாசிரியர் விம்பிசாரக் கதையிலிருந்து நான்கு அடிகளை மேற்கோள் காட்டி "இது விம்பிசாரக்கதை என்னும் காவியம் பௌத்தருடைய நூல். அதன் கண் கொள்க" என்றும் குறித்துள்ளார்.

**சித்தாந்தத்தொகை திருப்பதிகம்:**

சித்தாந்தத்தொகை திருப்பதிகம் என்னும் பெயர்களில் இரண்டு பௌத்த சமய நூல்கள் இருந்தன என்று அறிகிறோம். இந்நூல்கள் கிடைக்கவில்லை. இவற்றுள் முதலாவதாகிய சித்தாந்தத்தொகை பௌத்த சமயக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறும் நூலாகும் சிவஞான சித்தியாருக்குத் தத்துவப் பிரகாசர் உரையில் இவ்விரு நூல்களைப் பற்றிய குறிப்பு மட்டும் காணப்படுகிறது.

**இலக்கணம்:**

''வீர சோழியம்'' என்னும் இலக்கண நூலும் பௌத்தர்களின் தொண்டால் கிடைத்ததே ஆகும். இந்நூலை புத்தமித்திரனார் என்பவர் எழுதினார். இவரது பெயரே இவர் புத்த சமயத்தினர் என்பதை விளக்குகின்றது. இந்நூல் எழுத்து முதலான ஐந்திலக்கணங் கூறுவதாகும். இந்நூலுக்கு உரை எழுதிய பெருந்தேவனாரும் பௌத்த சமயத்தவரே. இந்நூலை வீர சோழியக் காரிகை எனவும் வழங்குவர். ஆசிரியர் புத்தமித்திரர் தாம் எழுதிய நூலுக்குத் தம்மை ஆதரித்த ''வீர சோழன்'' என்னும் மன்னனின் பெயரையே அமைத்துள்ளார். இ∴து அவரின் நன்றியுணர்வைப் புலப்படுத்துவதாகும். இந்நூலின் காலம் 11-ம் நூற்றாண்டு என்பர்.

**முடிவுரை:**

இவ்வாறு தமிழுக்குத் தொண்டு செய்த பௌத்த சமயம் தமிழ் நாட்டில் வேரூன்றவில்லை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றியதற்குப் பின்னர் புற சமயங்களான சமணமும் பௌத்தமும் நலியத் தொடங்கின. இவற்றுள் சமண சமயம் ஏதோ சில இடங்களிலாவது நிலைத்து நிற்க பௌத்தமே முற்றிலும் அழிந்துவிட்டது. ஆயினும் பௌத்த சமயக் காப்பியமாகிய மணிமேகலை இன்னும் ஒளிவீசித் திகழ்கின்றது. அன்றியும் தமிழ் மக்களிடத்தும் தமிழக சமயங்களிலும் பௌத்த சமயத்தின் தாக்கத்தை இன்றும் காணலாம்.

## சைவம் வளர்த்த தமிழ்

**முன்னுரை:**

சமணமும் பௌத்தமும் சரிந்து சைவ சமயம் தழைத்து வளர்வதற்குத் தொண்டு புரிந்த தூயவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆவர். மூவர் இயற்றிய தேவாரங்கள் அனைத்தும் கி.பி. 10-ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சோழப் பேரரசன் இராசராசனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பி என்னும் சைவப் பெரியார் ஏழு திருமுறைகளாகவும் மேலும் சில நூல்களை நான்கு திருமுறைகளாகவும் வகுத்து பதினொரு திருமுறைகளை

வெளியிட்டார். பின்னர் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தைச் சேர்த்து பன்னிரு திருமுறை என வழங்கலாயினார்.

**சம்பந்தர் தேவாரம் (123 திருமுறைகள்):**

இவர் சீர்காழிப் பகுதியில் சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் மகவாய்த் தோன்றி மூன்று வயதிலேயே இறைஞானம் எய்தி ‘‘தோடுடைய செவியன்’’ என்ற பாடலைப் பாடினார். பாண்டிய மன்னன் மனைவி மங்கையர்க் கரசியாரின் வேண்டுதலால் மதுரை மாநகர் சென்று அனல் புனல் வாதங்களில் சமணரை வென்று அந்த கூன் பாண்டியனைச் சைவனாக்கினார்.

இவர் 16 000 பதிகங்கள் பாடியதாக நம்பியாண்டார் நம்பி கூறுகிறார். ஆனால் நமக்கு 8 840 பாடல்களே கிடைத்துள்ளன. சிற்றம்பலத்தில் உள்ள செல்வனின் கழல் ஏத்தும் செல்வமே உண்மைச் செல்வம் என்கிறார். பக்தி மலர் கொண்டு அத்தன் பாதத்தில் தூவினால் முக்தி எளிதாகும் என அறிவுறுத்துகின்றார்.

இவர் பாடிய பாக்களில் மட்டும் 23 பண்கள் பயின்று வருவதால் ‘‘நாளும் இன்னிசையால் தமிழ்ப்பரப்பும் ஞான சம்பந்தன்’’ என சுந்தரரால் போற்றப் பெறுகின்றனர். இறைவனை தலைவனாகவும் தம்மை தலைவியாகவும் பாவித்து உள்ளம் உருக்கும் வகையில் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார். இவர்தம் பக்தி பாடல்களில் இளமை மெருகையும் இசை இனிமையையும் இயற்கை இன்ப எழிலையும் வளமார நுகரலாம்.

**அப்பர் தேவாரம் (456 திருமுறைகள்):**

இப்பெரியார் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார் என்பாருக்கும் மாதினியார் என்பாருக்கும் புதல்வராய்த் தோன்றினார். இளமையில் சமண சமயத்தைச் சார்ந்து பின்னர் தம் தமக்கையாரின் அருள் திறத்தால் மீண்டும் சைவரானார். பற்பல இன்னல்களுக்கு ஈடுகொடுத்துச் சமணனாயிருந்த மகேந்திர வர்ம பல்லவனைச் சைவனாக்கிய பெருமை இப்பெரியாருக்கே உண்டு. எண்பத்தோர் ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து இறைப்பணி புரிந்த பெருந்தகையாவார். ‘‘அப்பர்’’ என்று சம்பந்தரால் அழைக்கப்பெற்றார். அவரை வாசீகர் என்றும் நாவுக்கரசர் என்றும் அழைப்பர். 49000 பாடல்களை அப்பர் பாடியதாகச் சுந்தரர் சொல்கிறார். ஆனால் 3 110 பாடல்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. இவர் பாடல்கள் பண்சுமந்த பாடல்கள் அனுபவ முதிர்ச்சி மிகுந்த பாடல்களுமாகும். சுமண முனிவர்கள் தூண்டுதலினால் மகேந்திரவர்மன் மதம்மாறிய திருநாவுக்கரசரைத் தண்டிப்பதற்காக சுண்ணாம்பு உள்ள அறையில் இட்டபோது அந்த காளவாய்க் கொடுமையிலும் இறைவனின் இனிமையையே காண்கின்றார் நாவுக்கரசர்.

**சுந்தரர் தேவாரம் (7-ம் திருமுறை)**

இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் சடையனாருக்கும் - இசை ஞானியாருக்கும் அழகு மகவாக அவதரித்தார். இவர் அழகில்மயங்கிய நரசிம்ம வர்மன் என்ற அரசன் இவரைச் செல்லமாக வளர்த்து வந்தான். இளமையில் மணம்புரிந்த காலத்து இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்றார் அந்நிலையில் ‘‘பித்தா பிறைசூடி’’ என்ற பதிகத்தைப் பாடியருளினார். பின்னர் சேரமான் பெருமாளோடு கயிலை சென்று முக்தி பெற்றார்.

**மாணிக்கவாசகர்(8-ம் திருமுறை)**

தேன் ஊறும் வாசகங்கள் ஐநூறும் திருக்கோவை நாநூறும் அமுதூற மாந்தருளிய இந்நாயகன் திருவாதவூரில் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து அரிமர்த்தன பாண்டியனால் அமைச்சராக்கப்பட்டார். அரசனிட்ட ஆணையின்படி குதிரை வாங்கச் சென்றவர் நாம் கொண்டு வந்த செல்வத்தையெல்லாம் ஆலயப்பணிக்கும் அடியார்களுக்குமே செலவிட்டு விட்டார். அதனால் சிறையில் அடைபட்டு பற்பல சித்திரவதைக்கெல்லாம் ஆளாகி இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றார்.

**ஓன்பதின்மர் பாடியவை (9-ம் திருமுறை):**

திருமாளிகைத் தேவர் சேந்தனார் சேதிராயர் கண்டராதித்தர் பூந்துருத்தி காட நம்பி கருவூர்த் தேவர் வேணாட்டடிகள் திருவாலி அமுதனார் புருடோத்தம நம்பி ஆகிய ஒன்பது பேர் பாடிய பக்திப் பாடல்களைத் ‘‘திருவிசைப்பா’’ ‘‘திருபல்லாண்டு’’ என வழங்குவர். திருமாளிகைத் தேவர் இறைவனைக் கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாக கரையிலாக் கருணை மா கடலாக மற்றவர் அறியா மாணிக்க மலையாக மனமணி விளக்காகக் காண்கிறார்.

**திருமூலர் திருமந்திரம் (10-ம் திருமுறை):**

கூடுவிட்டு கூடுபாயும் திறத்தினர் என இவருடைய ஆன்மீக ஆற்றலைக் கதையாகக் கூறுவர். இவர் எழுதிய நூல் ‘‘திருமந்திரம்’’ ஆகும். இது காலத்தால் முந்திய நூலாகும்.3000 செய்யுட்களையுடையது. செய்யுட்களின் கருத்துச் செறிவைக் கண்ட அறிஞர்கள் இத்தகைய சிந்தனையாளர் ஏறக்குறைய 3000 ஆண்டுகளாவது வாழ்ந்திருப்பர் என்று கூறுவர். சைவ சமயக் கருத்துக்களை முதன்முதலாக விளக்க எழுந்த முழுமுதல் நூல் திருமந்திரம் ஆகும். பாக்கள் பெரும்பாலும் உருவகங்களாகவே அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக மனிதன் இச்சையாகத் திரியும் ஐம்புலங்களையும் அடக்கினால் அவன் எத்தகைய ஆற்றலையும் அடைய முடியும் என்பதை அவர் தனது பாடல் வாயிலாக புலப்படுத்துகின்றார்.

**பதினொருவரின் பாடல்கள் (பதினோராம் திருமுறை):**

புழுவாக பிறக்கினும் புண்ணியா! நின்னடி வழுவாதிருக்க வேண்டும் என வரம் வேண்டிய காரைக்காலம்மையாரின் திருப்பதிகங்கள் திருவந்தாதி ஐயடிகள் காடவர் கோனின் ஷேத்திரத் திருவெண்பா சுந்தரரின் நண்பரான சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய பொன்வண்ணத்தந்தாதி திருக்காயிலாய ஞான உலா முதலிய நூல்கள் சங்கப் பாமுறையைப் பின்பற்றிக் கருத்துக்களை அகப்பொருள் நயம்பட எடுத்துரைப்பனவாகும். உலா நூல்களில் சிறந்தது சேரமான் எழுதிய ''ஞான உலா'' ஆகும். மேலும் இதுவே தமிழில் எழுந்த முதல் உலா நூல் ஆகும். சங்கப் புலவர்களின் பெயரை மேற்கொண்டு நக்கீரர் கபிலர் பரணர் கல்லாடர் ஆகியோர் பலர் பக்தி இலக்கியங்களைப் பாடியுள்ளனர். இளம் பெருமானடிகள் அதிரா அடிகள் ஆக்கியுள்ள மும்முணிக்கோவை நூல்களும் இத்திருமுறையில் அடங்கியுள்ளன. பட்டினத்துப் பிள்ளையார் நூல்களும் திருமுறை வகுத்தருளிய நம்பியாண்டார் நம்பி நூல்களும் இப்பதினோராம் திருமுறையில் அமைந்துள்ளன. இது காரைக்காலம்மையார் பாடல் ஆகும்.

**சேக்கிழார் பெரியபுராணம் (பனிரெண்டாம் திருமுறை):**

சேக்கிழார் என்னும் சைவப் பெரியாரால் 12-ம் நூற்றாண்டில் பெரியபுராணம் இயற்றப்பட்டது. அறுபத்து மூன்று சைவ அடியார்களின் வரலாறுகளை 4252 பாடல்களில் கற்பனைத் திறத்துடனும் வரலாற்றுச் சிறப்புடனும் காவிய நயத்துடனும் கூறுகிறது. இந்நூல் ஏனைய மதங்களின் செல்வாக்கை பரவ விடாது தடுத்ததோடு சைவமத நம்பிக்கையை நாட்டில் நீரூற்றி வளர்த்த நூலாகும். இந்நூல் தேவாரப் பாடல்களில் பொதிந்திருக்கும் சைவக் கருத்துக்களையெல்லாம் கல்லாரும் கற்றுணரும்படி மிக எளிமையாக எடுத்துக்கூறுகிறது. அதனால்தான் இந்த நூலைச் சைவ திருமுறைகளில் ஒன்றான ''பனிரெண்டாம் திருமுறை'' யாகச் சேர்த்திருக்கின்றனர்.

இடைக்காலத் தமிழக மக்களின் வாழ்க்கை முறையையும் பழக்கவழக்கங்களையும் தொழில் முறைகளையும் பொழுது போக்குகளையும் நமக்கு அறிவிக்கின்ற ஒரு வரலாற்றுக் காப்பியமாகவும் இந்நூல் விளங்குகின்றது. பொதுவாக பலதரப்பட்ட சுவைகளும் சிறப்பாக பக்திச் சுவையும் நன்கு விளங்குகின்றன. சேக்கிழாரின் உள்ளத்தூய்மையும் பக்திப் பெருமையுமே ஒருநூலாக வடிவெடுத்தாற்போலத் திகழ்கிறது இப்பெரியபுராணம்.

**முடிவுரை:**

இக்கட்டுரை வாயிலாக பன்னிரு திருமுறைகளின் சிறப்பியல்புகளைக் கண்டோம். அவை சைவ சமய வளர்ச்சிக்கு இன்றும் உறுதுணையாய் உள்ளது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அதோடு தமிழ் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் விளங்குகின்றன.

## வைணவம் வளர்த்த தமிழ்

சைவ சமயம் தழைத்தோங்க அறுபத்துமூன்று நாயன்மார்கள் எவ்வாறு பாடுபட்டார்களோ அவ்வாறே பன்னிரு ஆழ்வார்களும் வைணவம் தழைக்க மிகவும் பாடுபட்டவர்கள். இப்பன்னிருவர்களும் ''ஆழ்வார்கள்'' எனப் பெயர் பெறுவார்கள்.

இதற்குப்பின் எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வைணவ வழிபாடு பன்னிரு ஆழ்வார்களின் பெரு முயற்சியால் அவர்களது பக்திப்பாக்களால் மிகப்பெரும் வளர்ச்சி பெற்றது என்பதில் ஐயமில்லை. இவ்வாழ்வார்கள் 108 வைணவத் தலங்களைப் பாடியுள்ளனர். இவர்கள் பாடிய பாடல்களைத் தொகுத்து ''நாலாயிரத்திவ்விய பிரபந்தம்'' எனப்பெயரிட்டு வெளியிட்டுள்ளனர். இப்பணியை தமிழ் உலகத்திற்குச் செய்தருளியவர் நாதமுனிகள் என்னும் பெரியோராவர்.

இந்நாலாயிரத் திவ்விய பிரபந்தப் பாடல்கள் அனைத்தும் எளிமையும் இனிமையும் நிரம்பிக் கற்போர் நெஞ்சை கனியவைத்து பக்தி வெள்ளத்தில் பரவசப்படுத்துவதுமாகும். இனி பன்னிரு ஆழ்வார்களைப் பற்றி வரிசையாகக் காண்போம்.

**பொய்கையார்:**

இவர் காஞ்சியில் பிறந்தவராவர். இவர் காஞ்சியில் உள்ள பொய்கை ஒன்றின் தாமரை மலரில் தோன்றியதாகவும் ஆகவே இவர் பொய்கை ஆழ்வார் எனப் பெயர் பெற்றதாகவும் கூறுவர். முதல் ''திருவந்தாதி'' என்னும் பக்திப் பாடலை இவர் பாடியுள்ளார்.

**பூதத்தாழ்வார்:**

இவர் மாமல்லன் என்னும் பல்லவ அரசனால் உருவாக்கப்பட்ட மாமல்லபுரம் என்னும் ஊரில் தோன்றியவர். இவர் திருமாலிடம் இடையறாத பக்தி கொண்டவர். இறைவனிடமே சிந்தை செலுத்திய இவர் இவ்வுலக வாழ்வையே வெறுக்கலானார். தனக்கு எவ்வித இன்பப் பேறுகள் வாய்க்கினும் அவற்றை விரும்பாது திருமால் திருவடியே சரணாக அடைந்தவர். இரண்டாம் திருவந்தாதி என்ற நூல் இவர் பாடிய பக்திப் பாடலாகும்.இவரது பாடல்களிலிருந்து இவருக்குள்ள தமிழ்ப் பற்றையும் தெய்வப் பற்றையும் அறியலாம்.

**பேயாழ்வார்:**

இவர் மயிலாப்பூரைச் சார்ந்தவராவார். பக்திப் பரவசத்தால் இவர் ஆடிப்பாடியதோடு பேய் பிடித்தது போல் இறைவனைத் தொழுது மகிழ்ந்ததால் இவர் இப்பெயர் பெற்றார் எனக் கூறுவர். மூன்றாந் திருவந்தாதியே இவர் பாடிய பக்தி பாசுரமாகும்.

**திருப்பாணாழ்வார்:**

இவர் உறையூரில் பிறந்தவரும் கீழ்க் குலத்தைச் சார்ந்தவரும் ஆவார். இதனால் இவர் ஆலயத்திற்கு வெளியிலே காவிரிக் கரையில் நின்று அரங்க நாதனைப் பாடலானார். இவரது பக்தியையும் உள்ளம் நெகிழ்ந்து உணர்ச்சியில் தோய்ந்து இவர் பாடுவதையும் மக்கள் கருதாது இவரை இழி குலத்தவர் என்ற நோக்கில் கல்லால் எறியத் தொடங்கினர். இதனை அறிந்த அரங்கநாதர் தம் நெற்றியிலிருந்து குருதி வழியும்படி செய்து கொண்டதோடு ஒரு தொண்டரின் கனவிலே தோன்றி அவரைத் தோளிற் சுமந்து வரும்படியும் ஆணையிட்டார்.

அதன்படியே அத்தொண்டரும் இவரைத் தோளிற் சுமந்து வந்தார். அவ்வாறு திருவரங்கப் பெருமான் ஆலயத்திற்குள் வந்த திருப்பாணாழ்வார் திருவரங்க நாதரின் திருவழகைக் கண்டு இவர் மேல் மையல் கொண்டு தன் உள்ளத்தை அவர்பால் பறிகொடுத்தார்.

அவ்வுணர்ச்சித் தோய்வில் ‘‘அமலனாதிபிரான்’’ என்ற பதிகம் ஒன்றைப் பாடினார். மங்கை ஒருத்தி திருவரங்கநாதனின் மேல் காதல் கொண்டதாக அமைந்த நூலாகும் இது.

**திருமழிசை ஆழ்வார்:**

தொண்டை நாட்டிலுள்ள திருமழிசை என்னும் ஊரினர். சைவத்திற்குத் திருமூலர் போன்று வைணவத்திற்குத் திருமழிசை ஆழ்வாராவார். திருச்சந்த விருத்தமும் நான்முகன் திருவந்தாதியும் இவர் இயற்றிய நூல்களாகும்.

‘‘உன்னையன்றி நானில்லை என்னையன்றி நீ இல்லை’’ என நாராயணரை எண்ணி என் தொழிலெல்லாம் உன்னைத் தொழுவது பொழுதெல்லாம் உன்னைப் புகழ்வதே எனக் கூறுகின்றார். ‘‘வாழ்த்துக வாய் காண்க கண் கேட்க செவி தாழ்த்துக தலை என இறைஞ்சுகின்றார்.

**நம்மாழ்வார்:**

இவர் பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரியைச் சார்ந்த திருக்குருகூரில் தோன்றியவர். மதுரகவியாழ்வார் இவரிடம் அன்புகொண்டு இவரது பாசுரங்களைப் பரப்புவதிலேயே தம் வாழ்நாட்களைக் கழித்து வந்தார். திருவாசிரியம் திருவாய்மொழி திருவிருத்தம் பெரிய திருவந்தாதி என்ற நான்கு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவரைச் சடகோபர் என்றும் கூறுவர்.

**மதுர கவியாழ்வார்:**

இவர் நம்மாழ்வாரின் சீடராவார். இவர் நம்மாழ்வாரைப் பற்றி ‘‘கண்ணிநுண் சிறுதாம்பு’’ எனப் பாடி பெயர் பெற்றார். இவர் திருமாலைப் பற்றிக்கூடப் பாடாது நம்மாழ்வாரையே தாம் கண்ட கடவுளாகப் பாடுகின்றார். நம்மாழ்வாரிடம் இவருக்குள்ள பற்றையும் பக்தி ஈடுபாட்டையும் இவர் பாடியுள்ள ‘‘கண்ணிநுண்சிறுதாம்பு’’ என்று தொடங்கும் பாசுரங்கள் மூலம் அறியலாம்இவரது குருபக்தியை காட்டுவதாக இருக்கிறது.

**பெரியாழ்வார்:**

இவர் பாண்டி நாட்டிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்தவராவார். இவரை விஷ்ணு சித்தன் என்றும் பட்டர்பிரான் என்றும் அழைப்பர். ‘‘திருமொழி’’ ‘‘திருப்பல்லாண்டு’’ என்ற இரு நூல்களை இவர் இயற்றியுள்ளார். கண்ணனுடைய குழந்தைப் பருவத்தை இவர் பிள்ளைத் தமிழ் நூலாகப் பாடியிருப்பது மிகச் சிறப்பானதாகும். இவருடைய இந்நூலே பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்குத் தொடக்கம் எனலாம்.

**ஆண்டாள்:**

ஆண்டாள் பெரியாழ்வார் வளர்த்த திருமகள் ஆவார். இவர்தாம் தொடுத்த மலர் மாலையைத் தாம் சூடி அழகு பார்த்த பின்னரே இறைவனுக்குச் சூட்டுவார். இவ்வாறு இவர் சூட்டிய மலர் மாலையை இறைவன் அன்போடு ஏற்றுக் கொண்டான். எனவே இவரைச் சூடிக்கொடுத்த நாச்சியார் என சிறப்பு பெயரால் அழைப்பர்.

இறைவனைக் காதலனாகவும் தம்மை காதலியாகவும் அவர் உருவகம் செய்து நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) திருப்பாவை (30 பாசுரங்கள்) என்ற இரு நூல்களை இவர் இயற்றியுள்ளார். இவ்விரு நூல்களும் பக்திச் சுவை கலந்த காதலுணர்ச்சியைப் பெருக்கும் நூல்களாகும்.

**திருமங்கையாழ்வார்:**

இவர் கள்ளர் குலத்தைச் சார்ந்தவரென்பர். இத்துடன் இவர் நாகப்பட்டினத்திலுள்ள ஒரு கோவிலின் புத்த விக்கிரகத்தை உடைத்து ஸ்ரீரங்கம் கோயிலின் மூன்றாம் சுற்று மதிலைக் கட்டியதாக இவரைப்பற்றிக் கதை ஒன்று கூறுவர்.

பெரிய திருமடல் திருக்குறுந்தாண்டகம் திருநெடுந் தாண்டகம் திருவெழு கூத்திருக்கை பெரிய திருமொழி சிறிய திருமடல் என்ற ஆறு பக்திப் பாடல்களை இவர் இயற்றியுள்ளார்.

**தொண்டரடிப் பொடியாழ்வார்:**

இவருக்கு விப்ரநாராயணர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவர் தேவதேவி என்னும் விலைமாதின் வலையில் சிக்கி தம் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கழித்தார். பின்னர் இறைவனை எண்ணி இதயம் உருகி ‘‘திருமாலை’’ ‘‘திருப்பள்ளியெழுச்சி’’ என்னம் நூல்களைப் பாடினார்.

**குலசேகராழ்வார்:**

இவர் சேர நாட்டைச் சார்ந்தவர். இவர் தமக்குரிய சிம்மாசனத்தைத் துறந்து வைணவத் தொண்டரானவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவராவார்.

தமிழ் மொழியில் பெருமாள் திருமொழி என்ற நூலையும் வடமொழியில் முகந்தமாலை என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். உலக மக்கள் துயரமும் துன்பமும் இல்லாத நல்வாழ்வை வேண்டி இவர் இறைவனைப் பாடிப் பரவுகின்றார்.

**முடிவுரை:**

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் ஆழ்வார்களைப் பற்றியும் அவர்கள் இயற்றிய நூற்கள் பற்றியும் இக்கட்டுரை வாயிலாக சிறப்புற அறிய முடிகிறது. இந்நூற்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பெருந்தொண்டு புரிவதையும் அறிந்து அனைவரும் உவகை கொள்ளலாம்.

**ஐரோப்பியர் காலம்:**

துமிழக வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போர், சங்ககால மன்னராட்சிக்குப்பின், தமிழகம் பல அந்நியர் ஆட்சியின் கீழ் வந்த நிலையைக் காண முடியும். இதனால் தமிழக அரசியல் வானில் அமைதியும், புயலும், சூறாவளியும் மாறி மாறிச் சுழன்று வந்தன. நாட்டினுடைய அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப இலக்கிய வரலாறும் மாறுதல் அடைந்தது. கி.பி.1565-ல் தஞ்சை, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு நாயக்க மன்னர்களின் பிரதிநிதிகள் தமிழகத்தை ஆண்டு வந்தனர். ஆனால் 17-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் முகமதிய மன்னர்கள் உள்நாட்டுக் குழப்பங்களை உருவாக்கித் தமிழகத்தின் சிலபகுதிகளைப் பிடித்துக் கொண்டு ஆளத்துவங்கினர். நாயக்கர்களின் ஆட்சியும் நலியத் துவங்கியது. இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்கும் இடைவிடாமல் மோதல்கள் நடந்து வந்தன. இதனால் தமிழகம் மீண்டும் அமைதி இழந்தது.

இச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வாணிகத்திற்காகத் தமிழகம் வந்த ஐரோப்பியர்களான டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் தமிழத்தை

ஆண்டு வந்த மன்னர்களோடு போர் ஒப்பந்தம் செய்து கொண்டு, தமிழ்நாட்டின் பல இடங்களைப் பிடித்துக் கொண்டு ஆளத் துவங்கினர். ஆரம்பத்தில் வரி வசூலிக்க உரிமை பெற்ற அவர்கள் பின்னர்த் தமிழக மண்ணையே சொந்தம் கொண்டாட ஆரம்பித்தார்கள்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவின் பெரும் பகுதியை பிடித்துக் கொள்ள, பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளைப் பிடித்துக் கொண்டு ஆண்டனர். கி.பி.1752-ல் இராபர்ட் கிளைவ் ஆர்க்காட்டு நவாப்பிடமிருந்து நாட்டைக் கைப்பற்றி, ஆங்கில அரசுக்கு வித்திட்டார். அவ்வரசு இளஞ்செடியாகி, மரமாகிப் பின்னர்ப் பூத்துக் காய்க்கத் துவங்கியது. அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்து விடுதலை வேட்கை முகிழ்க்கவே 1947 வரையிலான கால இலக்கிய வரலாறே ஐரோப்பியர் காலம் அல்லது சமயக் கலப்புக் காலம் அல்லது உரைநடை வளர்ச்சிக் காலம் என அழைக்கப்படலாயிற்று.

**தமிழ் மொழிக்கு ஏற்பட்ட நன்மைகள்:**

ஆங்கிலேயர்கள் தமிழகத்தின் ஆட்சியைக் கைப்பற்றி ஆளத் துவங்கியபின், நற்றமிழ் நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவானது. தமிழ்மொழி தனது வளர்ச்சிப் போக்கிலும் பல்வேறு மாற்றங்களுடன் வளர்ந்து செழிக்க ஆரம்பித்தது. கிறித்தவ சமயத்தைத் தமிழகத்தில் பரப்ப வந்த சமயப் பணியாளர்கள் தமிழ் கற்றனர். தமிழ் இலக்கியங்களை உலகிற்கு அறிமுகப்படுத்தினர். தமிழ் எழுத்துக்களின் பல்வேறு சீர்திருத்தங்களை உண்டாக்கினர். இலக்கண ஏடுகளை உருவாக்கினர். பல்வேறு மொழிகளோடு ஒத்துப்பார்க்கும் பேரேடுகளைத் தயாரித்தனர்: கலைச் சொற்கள் பிறந்தன. உரைநடை தமிழில் தோன்றி மின்னல் வேகத்தில் செழித்து வளர்ந்தது. உலக மொழி ஆங்கிலத்தின் தொடர்பால் எண்ணற்ற தமிழ் ஏடுகள் புதிய சிந்தனைகளுடன் பிறந்தன. அச்சுக்கலை புகுத்தப்பட்டதால், அருமை மொழியாம் தமிழ் உலக அரங்கினுள் நுழைந்து பெருமை பெற்றது. மடாலயங்களில் மங்கிக் கிடந்து ஒளிபரப்பிய தமிழ் உலக மொழிகளுள் ஒன்றாக, வளர்ச்சியடைந்த தருவாக மாறி, இலக்கியவானில் நந்தா நிலவாக ஒளிவீச ஆரம்பித்தது.

ஆங்கிலேயர் வருகையால் சமூகத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. தமிழர் பண்பாட்டிலும், கலாச்சாரத்திலும் ஆங்கில நாகரிகச் சாயல் படிந்தன. உணவு, அன்றாட வாழ்க்கை முறைகளிலும் மேலை நாட்டு முறைகள் புகுந்தன. கல்வி அனைவருக்கும் என்ற நிலை உருவாயிற்று. அடிமைகளாக வாழ்ந்த பெண்கள் புத்துலகம் காணத் துவங்கினர். புதுமைப் பெண்களைக் கல்வி என்னும் கழனி உருவாக்கியது. பல்வேறு சமயங்கள், சமத்துவம், சகோதரத்துவம், பல்வேறு நாட்டவர்கள் இணைந்து வாழ்ந்ததால் ஏற்பட்ட கூட்டுக் கலப்பு புதிய பொருளாதாரம், உலக வாணிகம் இவையாவும் தமிழ் இலக்கிய உலகையும் பாதித்ததால் புத்திலக்கியங்கள் முகிழ்க்கத் துவங்கின.

## கிறித்தவர் தமிழுக்குச் செய்த தொண்டு

தமிழ்மொழி வளர்ச்சியிலும், இலக்கிய வளர்ச்சியிலும் கிறித்தவ சமயத்தாரும் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். தமிழ் இலக்கியப் பணி செய்தவர்களில் மேனாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குச் சமயத் தொண்டாற்ற வந்த பெருமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழகக் கிறித்தவச் சான்றோர்களும் இலக்கியப் பணி ஆற்றியுள்ளனர்.

### அ. மேலை நாட்டுக் கிறித்தவர்:

ஐரோப்பியாவிலிருந்து தமிழகம் வந்த சமயப் பெரியார்கள் செந்தமிழை முறையாகக் கற்றனர். தமிழின் இனிமையிலும், இலக்கிய இன்பத்திலும் தம்மை மறந்து திளைத்தனர். அதனால் அவர்களால் தமிழ் பல்வேறு வளர்ச்சிகளைக் காணலயிற்று. தமிழில் நூல்கள் அச்சேரின: அகராதிகள் தோன்றனின. துமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பெற்றதோடு உரைநடை வளர்ச்சியில் புதிய திருப்பம் கண்டது. இதழ்கள் தோன்றின. சிறுகதைகள், நெடுங்கதைகள் பல்கிப்பெருகின. அறிவியல் தமிழ் புதிய கட்டுரைகளைக் காணலாயிற்று. திராவிட மொழிகளில் காணப்பட்ட ஒற்றுமையை அவர்களே முதலில் கண்டு உலகுக்கு அறிவித்தனர். தமிழ் இலக்கியம் செல்வங்கள் பல மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. அவர்களின் தமிழ்ப்பணி கி.பி.16-ம் நூற்றாண்டு முதல் தொடங்கலாயிற்று.

தமிழ்ப் பணி புரிந்த மேனாட்டுக் கிறித்தவர்களில் வீரமாமுனிவர், போப்பையர், கால்டுவெல்,தத்துவப்போதகர், எல்லிஸ்,சீகன்பாகு,இரேனியாஸ் ஐயர், சேவியர், பிரிட்டோ போன்ற அறிஞர்கள் புகழ்பெற்றவர்கள்.

### வீரமாமுனிவர்:

கி.பி.17-ம் நூற்றாண்டில் கிறித்தவ சமயப் பணி புரிவதற்காக இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்தார். இயற்பெயர் ‘ காண்ஸ்டாண்டினஸ் பெஸ்கி’ என்பது. மதுரையில் சுப்ரதீபக் கவியாரிடம் தமிழ் கற்றார். திருக்குறள், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களைத் தெளிவுறக் கற்றார். இவரின் தமிழ்ப் புலமையைக் கண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தார், ‘வீரமாமுனிவர்’ செந்தமிழ் தேசிகர்’ ஆகிய பட்டங்களை வழங்கினர். வீரமாமுனிவர் தம் தாய்மொழியோடு ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம், தமிழ், தெலுங்கு, வடமொழி போன்ற பல மொழிகளை அறிந்தவர்.

வீரமாமுனிவர் காவியங்கள், சிற்றிலக்கியங்கள், உரை நடை நூல்கள், அகராதி போன்றவற்றை இயற்றியுள்ளார். அவருடைய படைப்பில் தேம்பாவணிக் காப்பியமே அவருக்கு அழியாத புகழைக் கொடுத்தது. அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கலமாலை, கித்தேரி அம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், சதுரகராதி, செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், தொன்னூல் விளக்கம், வேத ஒழுக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்த குருவின் கதை ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

**தேம்பாவணிச் சிறப்பு:**

இயேசுநாதரின் தந்தை சூசையப்பரின் வரலாற்றைக் காவியமாகப் படைக்கப்பட்டதே தேம்பாவணியாகும். சூசையப்பரை ‘வளன்’ என்ற தமிழ்ச் சொல்லால் குறித்துள்ளார். 36 படலங்களும், 3165 பாடல்களும் கொண்டது தேம்பாவணிக் காப்பியம். “தேம்பாவணி தமிழன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழ்கிறது” என்று சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளையவர்கள் பாராட்டியுள்ளார். இறைவனின் இயல்பைத் தெளிவுள எடுத்துரைக்கிறார் தேம்பாவணிக் காப்பியத்தில் வீரமாமுனிவர்.

**அறக்கடல் நீயே: அருட்கடல் நீயே:**

**அருங் கருணாகரன் நீயே:**

**திறக்கடல் நீயே: திருக்கடல் நீயே:**

**திருந்துளம் ஒளிபட ஞான**

**நிறக்கடல் நீயே: நகர்கடந்து உலகில்**

**நிலையும் நீ: உயிரும் நீ: நிலைதான்**

**பெறக்கடல் நீயே: தாயும் நீ எனக்குப்**

**பிதாவும் நீ: அனைத்தும் நீ அன்றோ:**

**போப்பையர்:**

இங்கிலாந்து நாட்டிலிருந்து கி.பி.19-ம் நூற்றாண்டில் சமயப் பணிபுரிய பத்தொன்பது வயதே நிறைந்த இளந்தொண்டர் போப்பையர் வந்தார். மகாவித்துவான் இராமானுசக் கவிராயரிடம் தமிழ் கற்றார். புல மொழிகளைக் கற்றறிந்த செம்மலாகிய போப்பையர் தமிழகத்தின் தென்பகுதியாகிய சாயர்புரத்தில் தங்கித் தம் பணியைத் தொடங்கினார். தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த மக்களின் மொழிகள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

போப்பையரின் பணிகளில் தலைசிறந்தது மொழி பெயர்ப்பு பணியாகும். திருக்குறள், திருவாசகம், நாலடியார், புறநானூற்றில் பல பாடல்கள் போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ‘திருக்குறளின் கருத்துக்கள் ஏசுநாதரின் இதய ஒலி’ என்று போற்றிப் பரவினார். தமிழ் ஆங்கில அகராதி, துளு இலக்கணம், தோடர் மக்களின் மொழி இலக்கணம் ஆகியவற்றையும் போப்பையர் இயற்றியுள்ளார். இங்கிலாந்து சென்ற போப்பையர் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலிருந்து மொழித் தொண்டுகள் ஆற்றினார். தாம் இறக்கும் போது தம்

கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்ட பேரன்பு அவர் தமிழ்மீது கொண்ட ஆழமான காதலைக் காட்டுகிறது.

**கால்டுவெல்:**

அயர்லாந்திலே பிறந்து, ஸ்காட்லாந்திலே கல்வி கற்று இங்கிலாந்தில் சமய சங்கம் சேர்ந்து, தமிழகத்தில் இறைப்பணியாற்ற வந்தவர் கால்டுவெல். திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியில் இவரது தொண்டு ஆரம்பத்தில் தொடங்கியது.

கால்டுவெல் பணியில் தலையானது அவர் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' இயற்றியதேயாகும். இலத்தீன், கிரேக்கம், செர்மன், பிரெஞ்சு முதலிய மேல்நாட்டு மொழிகளையும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு, வடமொழி முதலிய இந்திய மொழிகளையும் அறிந்த பன்மொழிச் செல்வாக்கால் தான் அவர், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆராய்ச்சி நூலை இயற்ற முடிந்தது. இந்நூலினைத்தவிர திருநெல்வேலி சரித்திரம், தாமரைத் தடாகம் ஞானஸ்நானம், நற்கருணைத் தியானமலை, நற்கருணை முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். கால்டுவெல்லின் தொண்டினை மதித்து அவருக்கு 'இலக்கியவேந்தர்' 'வேதவிற்பன்னர்' ஆகிய பட்டங்களைச் சென்னை பல்கலைக் கழகம் அளித்து பெருமைப்படுத்தியது.

**இராபர்ட் டீ நொபிலி:**

கி.பி. 1606-ல் தமிழகம் வந்த இத்தாலி நாட்டுக்காரர். தமிழையும், வடமொழியையும் முறையாகக் கற்றதோடு தன் பழக்க வழக்கங்களையும் தமிழ்ப்படுத்திக் கொண்டார். மேலாடை அணிதல், மார்பில் புனித நூல் போடுதல், சைவ உணவையே ஏற்றல் போன்ற கொள்கைகளுக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். அவர் இயற்றிய நூல்களில் ஆத்ம நிர்ணயம், ஞானோபதேச காண்டம் இரண்டும் முக்கியமான நூல்களாகும். தமிழ் உரைநடைகளுக்குத் தொண்டாற்றிய இவரைத் 'தத்துவ போதகர்' என வழங்குவர்.

**சீகன் பால்க்:**

கி. பி. 1709-ல் தமிழகம் வந்த செருமானிய நாட்டுக்காரர். தரங்கம் பாடியில் தங்கியிருந்து வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்த அச்சுப் பொறியால் குறைந்த விலையில் தமிழ்ப் புத்தகங்களைப் பதிப்பித்து வெளியிட்டார். தமிழில் முதலில் அச்சுக் கலையைப் புகுத்தியவர் இவரே. தமிழ் இலத்தீன் அகராதி நூலொன்றும், தமிழ் இலத்தீன் இலக்கண நூலொன்றும் இயற்றினார். முதன் முதலாக விவிலியம் முழுவதையும் மொழி பெயர்த்து வெளியிட்டவர் இவரே என்ற பெருமைக்குரியவராகத் திகழ்கிறார்.

**இரேனியஸ் ஐயர்:**

கி. பி. 1814-ல் தமிழகம் வந்த செருமானிய நாட்டுக்காரர். தென் தமிழகம் பாளையங்கோட்டையில் 18 ஆண்டுகள் தங்கியிருந்து, தமிழை ஆழ்ந்து கற்று, மொழித் தொண்டாற்றிய நல்லறிஞராவார். இவர் வாழ்வின் முக்கியப் பணியாகப் புதிய ஏற்பாடு தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதைக் கூறுவர். பாளையங்கோட்டையில் பெண்கள் கல்வி நிறுவனங்கள் தோன்றுவதற்கு ஆரம்பத்தில் உழைத்தவர் இவரே எனலாம்.

**ஆ.தமிழகக் கிறிஸ்தவப் பெருமக்களின் இலக்கியப் பணி:**

தமிழகக் கிறித்தவ இலக்கியச் சான்றோர்களில் வேதநாயம் பிள்ளை, வேதநாயக சாஸ்திரியார், ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப்பிள்ளை, தஞ்சை ஆபிரகாம்பண்டிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றனர்.

**வேதநாயகம் பிள்ளை:**

தஞ்சை தரணி குளத்தூரிலே பிறந்து, சீர்காழி மாயூரம் ஆகிய ஊர்களில் நீதிபதியாகப் பணியாற்றினார். நீதிபதியாகத் திகழ்ந்தாலும், தமிழ்த் தொண்டையும் தம் தலையாய பணியாகக் கொண்டு ஒழுகினார். திருவாடுதுறை ஆதீனம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் முறையாகத் தமிழ் கற்றார். தமிழ்ப் புலமையோடு இசைப் புலமையும் பெற்றிருந்தார். ஏழைகளிடம் அன்பும், இரக்கமும் கொண்டிருந்த வேதநாயகர் தூயநெறியான வாழ்வைக் கடைப்பிடித்து வாழ்ந்தார். இதன் காரணமாக காலப்போக்கில் தம் வேலையையும் விட்டுவிட்டுத் தமிழ்த் தொண்டே ஆற்றினார்.

தமிழில் முதன்முதலில் புதினம் இயற்றிய பெருமை வேதநாயகரையே சாரும். 1876-ம் ஆண்டு ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்ற புதினத்தை இயற்றிப் பொன்றாடப் புகழ்படைத்தார். மீண்டும் 1887-ம் ஆண்டில் சுகுண சுந்தரி சரித்திரம் என்ற புதினத்தை வெளியிட்டார். நீதி நூல், பெண்மதிமாலை, தேவமாதா அந்தாதி, தேவதோத்திர மாலை, சர்வ சமய சமரசக் கீர்த்தனை முதலிய பதினாறு நூல்களை வேதநாயகம் பிள்ளை இயற்றியுள்ளார்.

சமரச நோக்கங் கொண்ட வேதநாயகம் பிள்ளை நீதிநூலில் ‘தாய் தந்தையரை வணங்கல்’ என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு அன்னை தந்தையரின் பெருமையினைக் குறிப்பிடுகிறார்.

**சின்னவேர் பொருள் தந்தோரைச்**

**சீவனுள் ளளவும் உள்ளத்து**

**உன்ன வேண்டும் என்று**

**உரைத்தனர் பெரியோர்: தேகந்**

**தன்னை ஆருயிரைச் சீரார்**

**தரணியின் வாழ்வைத் தந்த**

**அன்னை தந்தைக்குச் செய்யும்**

**அருங் கைமாறு உளதோ அம்மா!**

**வேத நாயக சாஸ்திரியார்:**

கி.பி.18-ம் நூற்றாண்டில் திருநெல்வேலியில் பிறந்தார். தமிழ் மொழியிலும், இசையிலும் புலமை எய்தியவர். தரங்கம்பாடி, வேதக்கல்லூாயீல் முதல்வராகப் பணியாற்றினார். இலக்கியப் பணியும் போற்றத்தகும் வகையில் புரிந்து புகழ்பெற்றார்.

பெத்லகேம் குறவஞ்சி, பராபரன் மாலை, பேரின்பக் காதல், ஞானக்கும்மி, ஞானஒலி, ஞானத்தச்சன் நாடகம், ஏற்றப்பாட்டு முதலிய பதினொரு நூல்கள் இயற்றியுள்ளார். ஏற்றப்பாட்டில் இறைவன் இருக்கும் தன்மையை உழைக்கும் மக்களுக்கு உணர்த்துகிறார் வேதநாயக சாஸ்திரியார்.

**ஒரு பொருளே தெய்வம் - நீ**

**உகந்து தொழு நெஞ்சேளு!**

**உடைந்து மனம் நெஞ்சே – அந்த**

**ஒரு பரனுக்கு அஞ்சே!**

**ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ணப்பிள்ளை:**

திருநெல்வேலியைச்சார்ந்த கரையிருப்பு என்னும் கிராமத்தில் 1872-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் நாள் பிறந்தவர் கிருஷ்ணப்பிள்ளை. தமிழ் ஆசிரியராக வாழ்வுப்பணியைத் தொடங்கிய கிருஷ்ணப்பிள்ளை சாயர்புரத்திலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ்ப்பணி ஆற்றினார். தமது முப்பதாம் வயதில் கிறித்தவ சமயத்திற்கு மாறினார். தம் பெயரையும் ஹென்றி ஆல்பிரட் என்று மாற்றிக் கொண்டார்.

இரட்சண்ய யாத்திரிகம், இரட்சண்ய மனோகரம், இரட்சண்யக் குறள், இரட்சண்ய நிர்ணயம் ஆகிய நூல்களைப் படைத்தார் கிருஷ்ணப்பிள்ளை. ஆனால், அவருக்குப் பெரும்புகழ் கொடுத்தது ‘இரட்சண்ய யாத்ரிகம்’ என்ற காப்பியமாகும்.

மேலை நாட்டு ‘மோட்சப் பயணம்’ என்ற ஜான்பனியனின் ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் இயற்றப்பட்ட காவியமே இரட்சண்ய யாத்திரிகம் ஆகும். இந்நூல் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சண்ய பருவம் ஆகிய ஐந்து பருவங்களையும், 3776 பாடல்களையும் கொண்டது. கம்பராமாயணத்தை நன்கு கற்றிருந்ததால், விருத்தாப்பாவில் அழகானதொரு காப்பியமாக இரட்சண்ய யாத்திரிகத்தைப் படைத்தளித்தார் கிருஷ்ணப்பிள்ளை. எனவே அவரைக் ‘கிறிஸ்தவக்கம்பா’ என்பர்.

உலகிற்கு ஒளியாக வந்து, உலகினை மீட்கத் தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்த அருள் வள்ளலாகிய இயேசுவின் சிலுவைக் காட்சியைக் கிருஷ்ணப்பிள்ளை கீழ்க்கண்டவாறு பாடுகிறார். எம் மதத்தவரின் உள்ளத்தையும் உருக்கும் வண்ணம் அமைந்துள்ளது அப்பாடல்:

**தன்னரிய திருமேனி சதைப்புண்டும், பதைப்பெய்திப்**

**பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்**

**இன்னதென அறிகிலார் தாம் செய்வது இவர்பிழையை**

**மன்னியும் என்று அருட்கனிவாய் மலர்ந்தார் நம் அருள்வள்ளல்.**

**தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்:**

திருநெல்வேலி சாம்பூர் வடகரையைச் சேர்ந்தவர். கி.பி.19-ம் நூற்றாண்டில் தோன்றிய இவர், தஞ்சை தரணியில் ஆசிரியராகப் பணியாற்றியதால் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் என்று அழைக்கப்பட்டார். இசைத்தமிழுக்குப் புதிய உயிர் அளித்த பெருமைக்குரியவர் இவர். மேனாட்டு இசை – தமிழ் நாட்டு இசை ஒப்பாராய்ச்சி, வடநாட்டு இசை – தமிழ்நாட்டு இசை ஒப்பாராய்ச்சி இரண்டிலும் ஆய்வுகள் மேற்கொண்டார். அவர் கண்ட ஆராய்ச்சி முடிவே ‘கருணாமிர்த சாகரம்’ என்னும் இசைத் தமிழ் இலக்கியமாக விளங்குகிறது.

தமிழிசை 8000 ஆண்டுகளுக்கு முந்தியது. இதில் 103 பண்கள் உள்ளன. 11000க்கும் மேற்பட்ட இராகங்கள் பழங்காலத்திலேயே இருந்தன என்பன போன்ற அரிய கருத்துக்களை ஆராய்ந்து வெளியிட்டார். ‘யாழ்’ இசைத் தமிழுக்கு கிறித்தவத் தொண்டரான ஆபிரகாம் பண்டிதரின் பணி கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## இசுலாமியர் தமிழுக்குச் செய்த தொண்டு

சங்ககாலந்தொட்டே இசுலாமிய சமயம் தோன்றிய இடமான அரேபியாவிற்கும், தமிழகத்திற்கும் தொடர்பு இருந்து வந்துள்ளது இதனால் தமிழ்மண்ணில் பரவி, நிலைத்தபொழுது இசுலாமிய சமயம் சார்ந்த புலவர்கள் இன்தமிழில் இலக்கியங்கள் படைத்தனர். அவர்களில் உமறுப்புலவர், குணங்குடி, மஸ்தான் சாகிபு, சவ்வாதுப் புலவர், சையது முகைதீன் கவியரசர்,

சேகனாப் புலவர், காசிம் புலவர், குலாம் காதிறு நாவலர், சதாவதானி செய்கு தம்பிப் பாவலர், வண்ணக் களஞ்சியப் புலவர் ஆகியோர் முக்கியமானவர்கள்.

**உமறுப் புலவர்:**

17-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் உமறுப்புலவர். இசுலாமிய சமயத்தின் தலைச்சிறந்த புலவர். எட்டயபுரம் அரசவைக் கவிஞராக விளங்கிய கடிகை முத்துப் புலவரின் மாணவர். தம் கவி ஆற்றலால் வடநாட்டுப் புலவராகிய வாலைவாருதியைப் போட்டியில் வென்றார். இராமநாதபுரம் கீழக்கரையில் தோன்றிய சீதக்காதி வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்.

உமறுப்புலவர் இயற்றியதே 'சீறாப்புராணம்' சீறா என்ற அரபுச் சொல் 'வாழ்க்கை' எனத் தமிழில் பொருள்படும். புராணம் வரலாறு எனப்படுவதால், முகமது நபியின் வாழ்க்கை வரலாற்றுக் காப்பியமே சீறாப்புராணம் ஆகும். இந்நூலின் கண் விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என்ற மூன்று காண்டங்களும், 5021 பாடல்களும் உள்ளன.

இசுலாமிய தமிழிலக்கிய வரிசையில் சிறப்பானதோர் இடத்தைப் பெறும் காப்பியமாகச் சீறாப்புராணம் விளங்குகிறது. தமிழ் நலத்திற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஏற்றவண்ணம் சீறாப்புராணம் உருவாக்கப்பட்டிருப்பது அதன் சிறப்புக்கு மற்றுமொரு காரணமாகும். நபிகள் நாயகம் பிறந்த அரபுப் பாலைவனம் உமறுப்புலவரின் காப்பியத்தில் தமிழ்ச்சோலைவனமாகவே புனைந்துரைக்கப்பட்டுள்ளது. அரபுநாட்டில் ஆற்றுவளம் பற்றி செய்த கற்பனையில், பாலைவனத்தில் அது தவழ்ந்து ஓடி வெள்ளப் பெருக்குடன் முழங்காது போயினும் காப்பியத்தில் முழங்குவதைக் கண்டு மகிழ முடிகிறது.

**மலைஎனும் அரசன் புயங்களைத் தழுவி**

**மகிழ்ச்சி செய்து, அவன் உழைச் சிறந்த**

**நிலைசெழு பொன்னும் முரசும், செம்மணியும்**

**நித்திலராசியும் கவர்ந்து**

**தொலைவிலாப் பண்டம் அனைத்தையும் வாரிச்**

**சுருட்டியே எல்லை விட்டகலும்**

**விலைமகள் போன்று பலபல முகமாய்**

**வெள்ளருவி திரள் சாயும்**

**குணங்குடி மஸ்தான் சாகிபு:**

இசுலாமிய சமய இலக்கிய உலகில் உமறுப்புலவருக்கு அடுத்த புகழையுடையவர். சுல்தான் அப்துல் காதர் எனும் இயற்பெயருடைய இவர் காலம் 1788 முதல் 1835 வரை என அறியமுடிகிறது. வாழ்வில் இளமை இன்பத்தை வெறுத்துத் துறவறம் பூண்டவர். இவருடைய பாடல்கள் 'குணங்குடி மஸ்தான் சாகிபுத் திருப்பாடல்கள்' எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை தாயுமானவரின் பாடல்களைப் போல், தத்துவக் கொள்கையும், செய்யுள் அமைப்பும் கொண்டவை. பேச்சுத் தமிழின் நடையைப் பல இடங்களில் காணலாம். சந்த இனிமையும், பக்தி உருக்கமும் கொண்ட இவருடைய பாடல் தொகுதியில் ஆனந்தக் களிப்பு, சதகம், நந்தீஸ்வரக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி முதலியவை குறிப்பிடத்தக்கவை.

சான்றாக மனோன்மணிக் கண்ணியில், குணங்குடி மஸ்தான், இறைவனைத் தலைவியாகவும், தம்மைத் தலைவனாகவும் கொண்டு புதுமையான முறையில் பாடுவதைக் காணலாம்.

**என்னைவிட்டால் மாப்பிள்ளையார் எத்தனையோ உன்தனக்கே!**

**உன்னைவிட்டால் பெண்எனக்கு உண்டோ மனோன்மணியே!**

**சதாவதானி செய்கு தம்பி பாவலர்:**

செந்தமிழ்ச் செல்வன் என்று கவிமணியால் போற்றிச் சிறப்பிக்கப்பட்ட செய்கு தம்பிப் பாவலர் ஓர் அற்புதக் கவிஞர்: சொல்வேந்தர்: நினைவுக் கலைஞர். ஒரே நேரத்தில் பல்வேறு செயல்களைச் செய்து நினைவுத் திறன்மாறாமல் அவதானம் செய்து காட்டியவர். இசுலாமியக் காப்பியமாகிய சீறாப்புராணம் முழுவதற்கும் உரையும் இயற்றியுள்ளார்.

நாஞ்சில் நாட்டில் தோன்றிய பாவலர். வள்ளலாரின் அருட்பாவை, மருட்பா என்ற சிலர் வாதிட்ட பொழுது, அது அருட்பாவே என வாதிட்டு வள்ளலாரின் பெருமையையும் திருவருட்பாவின் இலக்கியத் தன்னையையும் நிலைநாட்டியவர். திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப்பத்து, நாயகமான்மிய மஞ்சரி, நீதிவெண்பா, அழகப்பக் கோவை, சம்சுத்தாசிம் கோவை முதலிய எட்டு சிற்றிலக்கியங்கள் இயற்றிப் புகழ்பெற்றார் பாவலர்.

பெண்மாட்சியினைக் குறித்துச் செய்குதம்பிப் பாவலர் இயற்றியுள்ள பாடல், பெண்கள் சமூகத்தினர்க்குக் கிடைத்த இலக்கியப் பரிசாகும்.

**பெண்ணே பெண்ணே பெண்மணியே!**

**பெருமை நிறைந்த பெட்டகமே!**

**பண்ணே நிகர்த்த மொழிமறவாப்**

**பைம்பொற்கிளியே பசுந்தேனே!**

**நாவிலொருவன் இடத்தொருவன்**

**நறைசேர் மார்பின் நடுவொருவன்**

**ஆவியனைய வைத்த துன்னை**

**அல்லால் யாரே அறையாயோ!**

**வண்ணக் களஞ்சியப் புலவர்:**

இசுலாமிய சமயத்தில் அமீது இப்ராகிம் புலவரை வண்ணக் களஞ்சியப் புலவர் என்பர். இராமநாதபுரம், மீசல் என்ற ஊரில் பிறந்தவர். மதுரை மடத்துத் தம்பிரானிடம் தமிழ், மலையாளம், வடமொழி மூன்றையும் கற்றார். வண்ணக்கவிகளை விரைந்து பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்ததால், வண்ணக் களஞ்சியப் புலவர் எனப் பட்டம் பெற்றார்.

வண்ணக் களஞ்சியப் புலவர் இராசநாயகபுராணம், தீன்விளக்கம், குத்புநாயகம், அலிபாதுஷா நாடகம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் இராசநாயகப் புராணம் இலக்கிய ஏற்றமும் அருமையும் உடையதோர் காவியமாகும்.

இந்நூலில் தாவூது நபி, தாம் மரணப் படுக்கையில் இருக்கையில் தன் மகன் கலைமானை அருகழைத்துக் கூறும் அறிவுரைகள் மிகச் சிறப்புடையன. சான்றாகக் கலைமானிடம் ‘உன் வருந்தததக்க வறுமையையோ அல்லது இரகசியங்களையோ’ உனக்கு உயிர்க்கு உயிராய்த் திகழும் நண்பர்களிடம் கூடத் திறந்த மனத்துடன் கூறிவிடாதே: அப்படிச் சொல்வாய் என்றால், அவர்கள் உன் குறையைக் கண்டு, இழிநோக்கோடு பார்த்து அவமதிப்புக் கொள்வர்’ என்று கூறுமிடத்தைக் காட்டலாம்.

**பிற ஆசிரியர்கள்:**

வசை பாடுவதில் காளமேகத்தைப் போல் திகழ்ந்த சவ்வாதுப் புலவர் மதீனத்தந்தாதி, முகைதீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ், நாகைக் கலம்பகம் ஆகிய நூல்களையும் சேகனாப் புலவர் திருமணிமாலை என்ற நூலையும், சையது முகைதீன் கவிராசர் முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், முகைதீன் பிள்ளைத்தமிழ், மாணிக்க மாலை ஆகிய நூல்களையும் கவிக்களஞ்சியப் புலவர் நபி அவதார அம்மானையும், தக்கலை பீர் முகமது சாகிபு ஞானமணிமாலை, ஞானப்புகழ்ச்சி, ஞானக்குறம், ஞானப்பாட்டு, ஞானரத்தினக் குறவஞ்சி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளனர்.

## பாடம் -6

## நிகண்டுகள்

இக்காலத்து வழங்கும் சொற்கோவை போல் காலந்தோறும் மொழிக்கு நிகண்டுகள் பழக்கத்தில் இருந்து வந்துள்ளன. சொற்களுக்குப் பொருள் கூறும் பணியை அவை கொண்டிருந்தன. தொல்காப்பிய உரியியல் சொற்பொருள் அறியும் அகராதி போல் அமைந்துள்ளது. அதன் வளர்ச்சியே நிகண்டுகளாக அமைந்தன. நிகண்டுகள் செய்யுட்களால் அமைந்தன. அக்கால மரபின் அடிப்படையில் அவை இயற்றப்பட்டுள்ளன. சேந்தன் திவாகரமே முதல் நிகண்டாகும். இந்நூல் சோழர் காலத்திற்கு முன் இயற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏனையவை சோழர் காலத்தில் எழுதப்பட்டனவாகும்.

1. **சேந்தன் திவாகரம் - ஆசிரியர் திவாகரர்**
2. **பிங்கலந்தை - ஆசிரியர் பிங்கலர் திவாகரர் மகன்**
3. **சூடாமணி - ஆசிரியர் மண்டலபுருடர்**
4. **உரிச்சொல் நிகண்டு – ஆசிரியர் காங்கேயர்**
5. **சுயாதர நிகண்டு – ஆசிரியர் சுயாதரர்**
6. **அகராதி நிகண்டு - இரேவண சித்தர்**

## இலக்கண நூல்கள்:

### 1. நன்னூல்

பவணந்தி என்ற சமண முனிவரால் இயற்றப்பட்டதே நன்னூல். எழுத்து, சொல் இரண்டிற்கும் தெளிவான இலக்கணம் கூறுகிறது. தொல்காப்பியத்திற்கு அடுத்து மக்களால் மிகவும் விரும்பிப் பயிலப்படுவது இந்நூல். 464 நூற்பாக்களைக் கொண்டது. இதன் சுருக்கமான, எளிய தன்மையால் இந்நூல் நன்னூல் என்ற சிறப்புப் பெயர் பெற்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த, மைசூர் குறுநில மன்னன் அமராபரணன் சீயகங்கள் என்ற அரசன் முன் நன்னூல் அரங்கேறியதாக அறியமுடிகிறது. அறிவியல் அடிப்படையில் அமைந்த தொல்காப்பியத்தைத் தழுவி, இந்நூல் இயற்றப்பட்டாலும், பதவியல், பாயிரம் போன்றவை காலத்துக்கேற்ற விரிவுடையதாக அமைந்துள்ளது. நன்னூலின் கடைசி நூற்பா,

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**

**வழுவல கால வகையினானே**

என்று வருதலால், தொடர்ந்து வருகின்ற காலங்களில் மொழி மாற்றங்கள் நிகழலாம் என்றும், அவற்றையும் தமிழ் ஏற்றுக்கொண்டு புத்தம் புது மொழியாகத் தமிழ் விளங்க வேண்டும் என்பதனால் அதன் அருமை உணரப்படும். முயிலை நாதர், சங்கர நமச்சிவாயர், ஆறுமுக

நாவலர் முதலியோர் நன்னூலுக்கு உரை இயற்றியுள்ளனர். சிவஞான முனிவர் இதற்கு விருத்திவுரை எழுதியுள்ளார். இக்காலப் புலவர் பெருமக்களும் நன்னூலுக்கு உரைவளம் கண்டு வருகின்றனர்.

**2. வீரசோழியம்**

புத்தமித்திரர் என்ற பௌத்த சமயத்தைச் சார்ந்த ஆசிரியரால் இந்நூல் இயற்றப்பட்டது. வீரசோழன் என்ற மன்னர் நினைவாக இந்நூலுக்குப் பெயர் அமைந்தது என்பர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியத் தமிழ் ஐந்திலக்கணங்களையும் கொண்டது. வடமொழி மரபைத்தழுவி இயற்றப்பட்ட இவ் இலக்கண நூலுக்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

**3. நேமிநாதம்**

குணவீர பண்டிதர் என்ற சமண முனிவர் இந்நூலைப் படைத்துள்ளார். எழுத்து,சொல் இரண்டிற்கும் சுருக்கமாக 95 நூற்பாக்களில் இலக்கணம் கூறுகிறது நேமிநாதம்.

**4. வச்சணந்தி மாலை**

நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதரே, தம் ஆசிரியர் வச்சணந்திக்குப் பெருமை சேர்த்திட இந்நூலைப் படைத்துள்ளார். இது வெண்பாக்களால் ஆகியதால், இதனை வெண்பாப்பாட்டியல் என்றும் அழைப்பர். இந்நூல் 96 வகை சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகிறது.

**5. பன்னிரு பாட்டியல்**

பாட்டின் இலக்கணத்தை விரிவாகக் கூறுவது பன்னிரு பாட்டியலாகும். பாட்டியல் நூல்களில் இந்நூல் மிகப் பழையது என்பர்.

**6. யாப்பருங்கலக் காரிகை**

அமிர்த சாகரர் என்ற சமணர் தமிழ்க்கவிதை இலக்கணமான யாப்பைப் பற்றி விரிவாகக் கூறுகின்ற நூலாக இதனை இயற்றினார். குணசாகரர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். அமிர்த சாகரர் முதலில் படைத்தது யாப்பருங்கலம். ஆதனை விரிவுபடுத்திப் படைத்ததே யாப்பெருங்கலக் காரிகையாகும்.

**7. தண்டியலங்காரம்**

தண்டி என்ற ஆசிரியர் வடமொழியில் ‘காவ்ய தர்சம்’ என்ற பெயரில் நூல் இயற்றினார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பே தண்டியலங்காரம் என்னும் அணிநூல். இதனை மொழி பெயர்த்தவர் யார் என அறியக்கூடவில்லை. நூலில் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற முப்பிரிவு வகுக்கபப்பட்டு பொருளணியியல் 35 அணி வகைகள்,

அவற்றின் உட்பிரிவுகள் பற்றி இலக்கணம் கூறுகிறார். இவ் அணிநூலே இன்றுவரை பின்பற்றப்பட்டு வருவது இதன் சிறப்பை உணர்த்தும். நூலாசிரியரே எடுத்துக் காட்டுச் செய்யயுட்களையும் படைத்துள்ளார்.

**8. நம்பி அகப்பொருள் விளக்கம்:**

நாற்கவிராச நம்பி என்ற சமணரால் இயற்றப்பட்ட அகப்பொருள் நூலே நம்பி அகப்பொருள் விளக்கமாகும். தொல்காப்பியர் கூறும் அகப்பொருளியலை எளிமையாக, விரிவாக எடுத்துக் கூறவே இந்நூல் எழுந்துள்ளது. இந்நூல் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, வரைவு, ஒழிபு என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது. தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்கள் இதன் உரையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**9. இறையனார் களவியலுரை**

இக்களவியல் இறையனார் என்ற புலவரால் அறுபது நூற்பாக்களால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலுக்கு உரை இயற்றினார் நக்கீரர் என்பர். அவ்வுரை செவிவழிச் செய்தியாகக் கூறப்பட்டு, ஒன்பதாம் நூற்றாண்டில் எழுத்துருப் பெற்றது என்பர். உண்மையிலே உரையில் கருத்து மணம் கமழத்தான் செய்கிறது. எடுத்துக்காட்டாகத் தலைவி தலைவனை நாடிப் பொழிலை அடைகிறாள். அவள் தனியிடம் சேர்வது பற்றிய நூற்பாவுக்கு உரை இவ்வாறு எழுந்துள்ளது.

“பொரிப் புன்கும், புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டு இரைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் தவழ்ந்து உலவும் தண்ணறும் பொழிலின் நடுவே விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்தேன் துளிர்ப்பதோர் செவியுறு நறுமலர் வேங்கை கண்டாள்”.

**10. புறப்பொருள் வெண்பாமாலை**

ஐயனாரிதனார் என்ற சேர மன்னர் மரபினரால் இயற்றப்பட்டது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பன்னிரு புறத்திணைகளுக்கும் இலக்கணம் கூறுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை. 19 நூற்பாக்களும், 361 உட்பிரிவுகளுமாக நூல் அமைந்துள்ளது. நூற்பாக்கள் கொளு என்று பெயர் பெறும். எடுத்துக்காட்டுகள் வெண்பாவில் அமைந்துள்ளன. இந்நூல் தொல்காப்பியத்திலிருந்து சற்று விலகியும், பன்னிரு படலத்தைத் தழுவியும் அமைந்துள்ளது. இதனைப் பதிப்பித்தவர் டாக்டர்.உ.வே.சாமிநாதர் ஆவார்.

**11. மாறனலங்காரம்**

அணி இலக்கண நூலாகத் திகழும் இதனைப் படைத்தவர் திருக்குருகூர் பெருமாள் கவிராயர் ஆவார்.

### 12. இலக்கண விளக்கம்

வைத்திய நாத தேசிகர் இந்நூலை இயற்றியுள்ளார். தமிழ் ஐந்திலக்கணங்களையும், பாட்டியலையும் பற்றி இலக்கணம் கூறுகிறது. இதன் சிறப்பை உணர்ந்து, இந்நூலைக் குட்டி தொல்காப்பியம் என்று அழைப்பர்.

### 13. இலக்கணக் கொத்து

ஈசான தேசிகர் என்ற சுவாமி நாத தேசிகர் இந்நூலின் ஆசிரியர். ஐந்திலக்கணம் பற்றிப் பேசுகிறது.

## சிற்றிலக்கியங்கள்

தமிழ் இலக்கியம் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளது. ஒவ்வொரு கால கட்டத்திலும், புதிய முறையில் அவை வளர்ந்து பெருகியுள்ளன. தொல்காப்பியத்திலேலே சிற்றிலக்கியக் கூறுகள் காட்டப்பட்டுள்ளன. எனவே பழைய மரபைத் தழுவி, புதுமையான பாடுபொருளும் கற்பனையும் கொண்டு இயற்றப்பட்டனவே சிற்றிலக்கியங்கள் எனலாம். சிற்றிலக்கியங்களைப் ‘பிரபந்தம்’ என்றவட சொல்லால் குறிப்பிடுவர். அவை 96 வகை என்று பலரால் கொள்ளப்படுகிறது. சிற்றிலக்கியங்கள் எளிதில் படித்து முடிக்கக்கூடிய வகையில், ஏதாவது ஒரு துறை பற்றி, சுருக்கமான அளவில் அமைவன. இறைவனை மன்னனை வள்ளலை வாழ்த்திப் பாடுவதற்கும், புகழ்ந்து ஏத்துவதற்கும் அவை இயற்றப்பட்டன.

கி.பி.11-ம் நூற்றாண்டு தொடங்கி 17-ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. சோழர் ஆட்சிக்காலத்தில் சிற்றிலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்தாலும் பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்குப் பின் வந்த நாயக்கர் ஆட்சி காலத்தில் தான் சிறந்த சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் ஆற்றுப்படை நூல்களும், பதிற்றுப்பத்தும் சிற்றிலக்கியச் சாயலிலே தோன்றியுள்ளமையைக் காண முடியும். இன்று அந்தாதி, கோவை, மாலை, உலா, கலம்பகம், சதகம், பரணி, பிள்ளைத் தமிழ், தூது, பள்ளு, குறவஞ்சி முதலிய சிற்றிலக்கிய வகைகள் காணப்படுகின்றன.

### 1. அந்தாதி

ஒரு பாடலின் இறுதியில் வரும் எழுத்து, அசை, சீர், சொல், அடி இவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்து இடம் பெறும் பாடலின் முதலில் வரும்படி அமைத்துப் பாடப்படுவதுவே அந்தாதி இலக்கியமாகும். கற்று வல்ல புலவர்கள் தங்கள் புலமையைக் காட்டிட அந்தாதி இலக்கியங்களைப் பாடியுள்ளனர். வெண்பா,விருத்தம்,கட்டளைக் கலித்துறை ஆகிய யாப்பு முறைகள் அந்தாதி இலக்கியங்களில் காண முடிகிறது.

சிற்றிலக்கியங்களில் அந்தாதி நூல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியே காலத்தால் முதன்மையானது என்பர். முதலாழ்வார்

மூவரும் பாடிய நூற்றந்தாதிகள், திருமழிசையாழ்வார் பாடிய திருவந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார் பாடிய பொன் வண்ணத்தந்தாதி, வரதுங்கராமன் பாடிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடிய திருவரங்கத்தந்தாதி, வேதநாயகம் பிள்ளை பாடிய திருவளந்தாதி, தேவமாதா அந்தாதி ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியில் இறைவன் உருவமற்றவன்: உலகமெலாம் நிறைந்தவன் என்ற கருத்து இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

**அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்**

**இன்றும் திருவுருவம் காண்கிறேன் - என்றும் தான்**

**எவ் வுருவோன் உம்பிரான் என்பார்க்கு என்னுரைக்கேன்:**

**எவ் வுருவோ நின் உருவம் எது!**

- **அபிராமிப் பட்டர் அந்தாதி**

சோழநாட்டில் மாயவரத்துக்கு அருகில் உள்ள திருக்கடவூரில் வாழ்ந்தவர் அபிராமிப் பட்டர். ஆபிராமி அம்மையிடம் ஆழ்ந்த பக்தி கொண்டதால், பக்திப் பரவசத்தில் பாடிய அந்தாதி இலக்கியமாக இது திகழ்கிறது. சொல் அழகும், பொருள் அழகும், கொண்ட இந்நூல் 100 பாடல்களைக் கொண்டது. மனிதன் வாழ்க்கையில் பெறவேண்டிய பதினாறு செல்வங்களைத் தமக்கு அருளுமாறு அபிராமி அன்னையிடம் புலவர் வேண்டுகிறார். ஆவை வருமாறு:

1. கல்வி 2. நீண்ட ஆயுள் 3. நல்ல நண்பர்கள் 4. வாழ்வுக்குத்தேவையான பொருள் 5. நல்ல உடல் வளம் 6. நோயற்ற வாழ்க்கை 7. கலங்காத மனம் 8. அன்பகலாத கணவன் 9. அறிவு ஆற்றல் ஓழுக்கமுடைய குழந்தைகள் 10. நற்புகழ் 11. வாய்மையும், நேர்மையும் 12. அழியாத செல்வம் 13. நல்ல நாட்டாட்சி 14. உழைப்புக்கேற்ற ஊதியம் 15. சான்றோர்கள் தொடர்பு 16. இறையருளில் நம்பிக்கை இவைகளே: அபிராமிப் பட்டரின் அந்தாதியில் வரும் பாடல்:

**குலையாத கல்வியும்: குறையாத வயதும் ஓர்**

**கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும்,குன்றாத இளமையும்,**

**கழுபிணி இல்லாத உடலும், சலியாத மனமும், அன்பகலாத மனைவியும்**

**தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும்,**

**தடைகள் வாராத கொடையும், தொலையாத நிதியமும்,**

**கோணாத கோலும், ஒரு துன்பமில்லாத வாழ்வும்,**

**துய்யநின் பாதத்தில் அன்பும்: உதவிப் பெரிய**

**தொண்டரோடு கூட்டுக் கண்டாய்:**

**அலையாழி அரிதுயிலும் மாயனது தங்கையே:**

**ஆதிகடவூரின் வாழ்வே, அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி**

**அருள்வாய்நீ அபிராமியே!**

**2. உலா**

கற்போருக்குச் சுவை பயக்கும் இலக்கியம் உலாவாகும். பாட்டுடைத் தலைவன் தேரோடும் வீதியில், தம்கணங்களோடு உலா வரும்போது, பேதை(5-7 வயது) பெதும்பை(8-11 வயது) மங்கை(12-13 வயது) மடந்தை(14-19 வயது) அரிவை(20-25 வயது) தெரிவை(26-31 வயது) பேரிளம்பெண்(32-40 வயது) ஆகிய ஏழு பருவ மகளிரும் தலைவன் தோற்றம் கண்டு கருத்தழிந்து காதல் கொண்டு நிற்பதாகக் கற்பனை செய்து பாடப்படுவனவே உலா நூலாகும். இந்நூல் கலிவெண்பாத் துறையில் இயற்றப்படக் கூடியது.

ஊலா இலக்கியங்களில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கைலாய ஞான உலா மிகப் பழமையானது என்பர். எனவே இதனை ‘ஆதிஉலா’ என்று சிறப்பித்தழைக்கின்றனர். கைலாயத்தில் சிவபெருமானின் பேரழகினைக் காண விரும்பிய தேவர்கள் வேண்டிக் கொள்ள, இறைவன் தேரோடும் வீதிகளில் எழுந்தருளி உலா வருகின்ற கண்கொள்ளாக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது திருக்கைலாய ஞான உலா.

**பெண்நீர்மை காமின்: பெருந்தோள் இனை காமின்:**

**உண் நீர்மை மேகலையும்: உள்படுமின்: -தெண்நீரக்**

**கார் ஏறு கொன்றை அந்தார்க்கு ஆவாலி கட்டடங்கள்**

**ஊர் ஏறு போந்தது உலா.**

முத்தொள்ளாயிரப் பாடல்களில் உலா இலக்கியச் சாயல்கள் காணப்படுகின்றன. சேரன், சோழன், பாண்டிய மன்னர் உலா வருகின்றபோது, மங்கையர் அவர்களைக் காணத்துடிக்கும் உணர்ச்சி வெளிப்பாடுகள் முத்தொள்ளாயிரத்தில் இலக்கியச் சிறப்புப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் மீது நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருஉலா மாலை பாடிப் போற்றுதற்குரியது.

**மூவர் உலா:**

உலா இலக்கியங்களில் ஒட்டக்கூத்தர் இயற்றிய மூவர் உலா வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். இந்நூலில் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று மன்னர்கள் இடம் பெறுகின்றனர். ஒவ்வொருவரையும் தனித்தனியே ஒட்டக் கூத்தர் பாடியுள்ளார். பிற்காலச் சோழர்களின் வரலாற்றினை அறிய உதவும் இந்நூல் கி.பி.12-ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். ஒட்டக் கூத்தரின் புலமையை இந்நூல் புறைசாற்றி நிற்கிறது.

**3. கலம்பகம்:**

கலம்பகம் என்பது கதம்பமாலை போல பல்வேறு பதினெட்டு உறுப்புகளைக் கொண்டு அகம்,புறம் கலந்து இயற்றப்படுவது. கலம் பகம் எனப் பிரித்தால் கலம் பனிரெண்டு என்றும், பகம் என்பது அதிற்பாதி என்றும் பொருள்படும். எனவே புயவகுப்பு, தவம்,வண்டு,அம்மானை,பாண்.மதங்கு,கைக்கிளை,சித்து,ஊசல்,களி,மடக்கு,ஊர்,மறம்,காலம், தழை,இரங்கல்,சம்பிரதம்,கார்,தூது,குறம்,பிச்சியார்,கொற்றியார் ஆகிய பதினெட்டு உறுப்புகளைக் கொண்டு கலம்பகம் இயற்றப்படுகிறது.

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டி போற்றும் 'நந்திக் கலம்பகமே' காலத்தால் முற்பட்டது. நம்பியாண்டார் நம்பி பாடிய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகமும், பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் திருவரங்கக் கலம்பகமும், இரட்டையர்கள் பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகமும், தில்லைக்கலம்பகமும் சிறப்புடைய பிற கலம்பக நூல்களாகும்.

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன் காலம் கி.பி.9-ம் நூற்றாண்டைச் சார்ந்தது. நந்திவர்மனின் மாற்றந்தாய் மகன் ஒருவன் புலமை மிக்கவன் என்றும், அவன் நந்திவர்மனைக் கொல்வதற்கு அறம் வைத்துப் பாடியதே 'நந்திக் கலம்பகம்' என்றும் கூறுவர். 100 பாடல்களைக் கொண்டது. கருத்துச் செறிவும், காவிய இனிமையும் கொண்டவைகளாகப் பாடல்கள் விளங்குகின்றன. நந்திக் கலம்பகம் அரங்கேற்றத்தின் போது, நந்திவர்மன் பாடல்களின் தமிழ்ச்சுவை பருகி மகிழ்வுற்றிருக்க இறுதிப்பாடலைப் படிக்கின்ற பொழுது, பந்தல் தீப்பிடிக்க மன்னன் உயிர்துறந்தான் என்பது மரபுவழிச் செய்தியாகும். தமிழ் நந்தியின் புகழ்பாடும் பாடலொன்றை கீழ்க் காணலாம்.

**வானுறு மதியை அடைந்தது உன் வதனம்:**

**மறிகடல் புகுந்தது உன் கீர்த்தி**

**கானுறு புலியை அடைந்தது உன் வீரம்**

**கற்பகம் அடைந்தது உன் கரங்கள்**

**தேனுறு மலராள் அரியிடம் சேர்ந்தாள்**

**செந்தழல் புகுந்தது உன் மேனி**

**யானும் என்கலியும் எவ்விடம் புகுவோம்**

**எந்தையே நந்தி நாயகனே!**

**4. குறவஞ்சி:**

குறிஞ்சி நில மக்கள் குறவர். மலையைச் சேர்ந்த குறத்தி நகர்ப்புறம் வந்து விரிச்சி கூறி மக்களை மகிழ்விப்பாள். குறிசொல்ல வந்திடும் குறத்தியைத் தலைவியாகவோ, அல்லது அவளுக்கு முக்கியத்துவம் கொடுத்தோ இயற்றப்படுவது குறவஞ்சி நூல்களாகும். இவ்வகையில் நூறுபாடல்கள் இயற்றப்படுதல் மரபு.

குறவஞ்சி இலக்கியங்களில் திருக்குற்றாலக் குறவஞ்சியே புகழ்பெற்ற நூலாகும். குடந்தையைச் சார்ந்த சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும், பாபநாச முதலியார் இயற்றிய கும்பேசர் குறவஞ்சியும், கவிக்குஞ்சர பாரதியார் இயற்றிய அழகர் குறவஞ்சியும், வேதநாயகம் சாஸ்திரியார் இயற்றிய பெத்தலேம் குறவஞ்சியும் குறவஞ்சி நூல்களுள் பெருஞ்சிறப்புக்குரியவை.

திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர் மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர். முத்தமிழும் கமழும் தித்திக்கின்ற தேனாக இந்நூல் விளங்குகிறது. எளிமையும் இனிமையும் இணைந்து செல்வது இந்நூலுக்கு மற்றுமொரு சிறப்பாகும். இசை இலக்கியமாகவும், நாடக இலக்கியமாகவும் இந்நூல் போற்றப்படுகிறது. குற்றால அருவியின் குளுமையையும், திரிகூட மலையின் சிறப்பையும், சிற்றாற்றின் தெளிவையும், வான்முட்டும் வனங்களின் பசுமையையும் குற்றாலக் குறவஞ்சியில் காணலாம்.

கதைத் தலைவி வசந்தவல்லி, குற்றால நாதர் மீது காதல் கொள்கிறாள். மலையிலிருந்து இறங்கிவரும் குறத்தியாகிய சிங்கி அவளுக்குக் குறிசொல்லி மீள்கிறாள். வசந்தவல்லியிடம் குற்றால மலையின் செழுமையைப் படம்பிடித்துக் காட்டுகிறாள் சிங்கி.

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**

**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**

**கானவர்கள் வழிஎறிந்து வானவரை அழைப்பர்**

**கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்**

**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**

**செய்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**

**கூனலிளம் பிறைமுடித்த வேணி அலங்காரர்**

**குற்றாலத் திரிகூடமலை எங்கள் மலையே.**

**5. கோவை:**

கோவை இலக்கியங்கள் அக இலக்கணச் சார்பைக் கொண்டவை. காதலால் பிணைக்கப்படும் தலைவன், தலைவியாருடைய களவு ஒழுக்கம், கற்பு ஒழுக்கம் ஆகியவை பற்றி 400 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் இயற்றப்படுவனவே கோவை இலக்கியங்களாகும்.

திருவாசகம் பாடிய மாணிக்க வாசகர் இறைவன் மீது தாம் கொண்ட காதலை விளக்கிட 'திருக்கோவையார்'பாடினார். இன்னும் கவிராயரின் 'நாணிக் கண் புதைத்தல்' என்ற ஒரு துறைக் கோவை போன்றவை சிறப்புக்குரியவை.

கோவை இலக்கியங்களில் பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவையே புகழ்வாய்ந்த நூல் எனக் கருதப்படுகிறது. காரணம் அக இலக்கணத்துக்குரிய அத்தனை துறைகளையும் உள்ளடக்கி இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. நம்பி அகப் பொருள் இலக்கண நூலுக்கு தஞ்சைவாணன் கோவையின் பாடல்களை எடுத்துக்காட்டாகக் கூறுவர். 'பிரிவுழி மகிழ்ச்சி' என்பது அகத்துறைகளில் ஒன்று. நிழல்தரும் சோலையில் தலைவன் தலைவியைக் கண்டு மகிழ்கிறான். அவர்கள் கூடி மகிழ்கின்றனர். பிரிவு நேரம் வந்தது. தலைவனிடம் பிரியா விடை பெற்றுப் போகின்ற தலைவியின் அழகுச் சாயலைத் தலைவன் கண்டு பூரிக்கின்றான்.

**அகிலேந்து கூந்தல் ஒரு கையில் ஏந்தி**

**அசைந்து ஒரு கை**

**துகிலேந்தி ஏந்தும் துணைச் சிலம்பு**

**ஆர்ப்ப துளி கலந்த**

**முகிலேந்து பூம்பொழில் சூழ் தஞ்சை**

**வாணன் முந்நீர்த் துறைவாய்**

**நகிலேந்து பூங்கொடி போல் செல்ப**

**மாநெஞ்சம் நம் உயிரே!**

கடற்கரையோரம்: தலைவன் உயிரைச் சுமந்து செல்லும் தலைவி: அகில் புகை மணக்கும் கூந்தலை ஒரு கை பிடித்துள்ளது. மற்றொரு கை காற்றில் புரளும் துகிலை அணைத்துக் கொண்டுள்ளது. காலில் சிலம்பு கொஞ்சுகிறது: எடுப்பான கலை எழிலோடு ஒரு பூங்கொடி

மெதுவாக நடந்து செல்வதுபோல் தலைவி செல்கின்றான். அவள் நடந்து செல்லும் அழகை நேரில் கண்டு மகிழ்கிறான் தலைவன். நாம் இலக்கியப் பாட்டில் கண்டு மகிழ்கிறோம்.

**6. சதகம்:**

**விளையும் ஒரு பொருள் மேல் ஒருநூறு**

**தளைய உரைத்தல் சதகம் என்ப**

என்று இலக்கண விளக்கப் பாட்டியல் சதக இலக்கியத்திற்கு இலக்கணத்தைக் கூறுகிறது. ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை ஆகிய யாப்பு மரபுகள் சதக இலக்கியத்திலும் பயன்படுத்தப்பட்டாலும், ஆசிரிய விருத்தமே சதக இலக்கியப் பாவினமாகச் செல்வாக்குப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அகப்பொருள், புறப்பொருள் இரண்டனுள் யாதேனும் ஒன்றில், நூறு பாடல்கள் பாடப்படுவது சதகம் என்பர். ஆயின் சில சதகநூல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன.

தமிழில் மாணிக்கவாசகரே சதகம் என்ற சொல்லை முதன்முதலாகக் கையாண்ட பெருமைக்குரியவர் என்று கூறுகின்றனர். அவர் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய திருவாசகத்தில், திருச்சதகம் என்றொரு பகுதி நூறு பாடல்களைக் கொண்டு திகழ்கிறது. எனவே இலக்கிய வரலாற்றில் முதலில் தோன்றிய சதக இலக்கியம் என்ற பெருமை திருச்சதகத்திற்கே கிடைக்கிறது.

விண், மண், காற்று, நீர், நெருப்பு ஆகிய ஐம்பூதங்களிலும் உடலும், உயிருமாகி நிறைந்திருக்கிற இறைவனை, அவன் பெருமைகளைக் கூறி பாட்டின் வாயிலாக வியந்து நிற்கிறார் மாணிக்கவாசகர். திருச்சதகத்தில் வரும் பரினைந்தாம் பாடல் இதோ:

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**

**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**

**கோனாகி யான்எனது என்று அவரவரைக் கூத்தாட்டு**

**வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!**

சதக இலக்கியங்களைப் பொருளமைதி அடிப்படையில் வரலாற்று நூல்கள், துதி நூல்கள், நீதி நூல்கள் என்ற மூன்று பிரிவுகளுள் அடக்கலாம். கி.பி.11-ம் நூற்றாண்டில் தோன்றிய அவிநாசி ஆறைக்கிழார் இயற்றிய கார்மண்டலச் சதகம் முதல்சதக் தனிநூலாக மலர்ந்தது என்பர். பின்னர் வரலாற்று அடிப்படையில் சோழ மண்டல சதகம், பாண்டிய மண்டல சதகம், கொங்கு மண்டல சதகம், தொண்டை மண்டல சதகம், ஈழமண்டல சதகம் ஆகியவைகளும், அண்ணா மலையார் சதகம், திருச்செங்கோட்டுச் சதகம், திருப்போரூர்ச் சதகம் ஆகிய துதி இலக்கியங்களும், ஒழுக்கம், சகுனம், பழமொழிகள் இவற்றை மையமாகக் கொண்டு நீதிக்

கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அறப்பளீசுவரா் சதகம், படிக்காகப் புலவரின் தண்டலையாா் சதகம் போன்றவை தோன்றின. சுதக இலக்கியம் பாடுவதில் புதிய மரபை ஏற்படுத்தியவா் படிக்காகப் புலவா் என்று பாராட்டப்படுகிறாா்.

**7. தூது:**

தூது இலக்கியங்கள் மிகப் பழங்கால இலக்கிய வடிவங்களில் ஒன்று. காளிதாசன் இயற்றிய மேகம் விடுதூது இதனை உணா்த்தும், அகப்பாடல் துறைகளில் இத்துறை முக்கிய இடம் பெறுகிறது. தலைவன் ஒருவனிடம் நெஞ்சம் பறிகொடுத்த தலைவி, தன் உள்ளத்தில் பொங்கும் காதல் உணா், தென்றல், மேகம், அன்னம், மயில், கிளி, குயில், வண்டு போன்றனவற்றை அணுகித் தூது அனுப்புவதாக அமையும். ஏன்? துன் நெஞ்சையே தூதாக அனுப்பும் காதலா்களும் உண்டு. சங்க இலக்கியத்தில் பாங்கன், பாணன், தோழி போன்றோா் தூதாக அனுப்பப்பட்டாலும், தோழியின் பங்கு மிகுதியாகப் பாடப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. ஆரம்ப காலத்தில் தூதுப் பொருட்கள் சிலவே ஆனாலும், கால வளா்ச்சியிலும் பணம், மலா், காக்கை, தமிழ் என்று பலவாகப் பெறுகின. செருப்புக் கூட தூதுப் பொருளாக பயன்பட்டதைக் காண முடிகிறது.

பலப்பட்டடைச் சொக்க நாதப் புலவா் இயற்றிய அழகா் கிள்ளை விடு தூது, சுப்ரதீபக் கவிராயா் இயற்றிய கூளப்ப நாயக்கன் காதல் அல்லது விறலிவிடு தூது இரண்டும் படிக்கச் சுவை பயப்பன. பணம் விடு தூது, வசை விடு தூது, நெல் விடு தூது, மான் விடு தூது துகில் விடு தூது, புகையிலை விடு தூது எனத் தூது இலக்கியங்கள் பல்கிப் பெருகின. தமிழ் மொழியின் இனிமை, இலக்கிய வளம், இலக்கணப் பரப்பு இவற்றினை உள்ளடக்கித் தமிழைத் தூதுப் பொருளாக்கி இலக்கியம் பிறந்தது. தமிழ்விடுதூது என்ற இலக்கியச் செல்வத்தின் ஆசிரியா் அறியப்படவில்லை என்றாலும் அந்நூலில் வருகின்ற இலக்கிய வரிகள் தமிழின் பெருமையை அறிவித்து இன்றும் வாழ்கிறது.

**இருந்தமிழே உன்னால் இருந்தேன்: இமையோா்**

**விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்**

**8. பரணி**

**ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**

**மானவனுக்கு வகுப்பது பரணி**

எனப் பரணி இலக்கியத்துக்கு இலக்கணம் கூறுகிறது. பன்னிரு பாட்டியல். போா்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணி நூலாகும். போா்க்கள தெய்வம் காளி. அவளுக்குரிய நட்சத்திரம் பரணி. எனவே நட்சத்திரப் பெயரோடு, போா்கள் எங்கு நடைபெற்றனவோ, அவ் இடத்தின் பெயரையும் இணைத்துப் பரணி இலக்கியங்களுக்குப் பெயரிடப்பட்டன.

கொற்றவையைத் தலைவியாகக் கொண்டு வாழுகின்ற பேய்களாகிய கூளிகள், காளியிடம் முறையிட, 'அவள் விரைவில் போர் நடைபெற உள்ளது: வயிறார உண்ணலாம், என்று கூற, அதனையேத் தொடக்கமாகக் கொண்டு போர் நிகழ்ச்சிகளை வருணிப்பதே பரணி இலக்கியங்களாகும்.

கலிங்கத்துப்பரணியே, காலத்தால் பழமையான பரணி இலக்கியமாகும். கி.பி.12-ம் நூற்றாண்டைச் சார்ந்த ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியும், தத்துவராயர் பாடிய மோகவதைப் பரணியும், வைத்தியநாத தேசிகரின் பாசவதைப்பரணியும் பிற பரணி இலக்கியங்களாகும்.

கலிங்கத்துப் பரணியை இயற்றியவர் செயங்கொண்டார். சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கனின் படைத் தலைவனாகிய கருணாகரத் தொண்டைமான், சோழ மண்டலத்துக் கப்பம் செலுத்த மறுத்த கலிங்கநாட்டு மன்னன் அனந்தவர்ம கோடங்கனை எதிர்த்துப் படையெடுத்து வெற்றி பெற்றுத் திரும்பியதைப் பாடியதே கலிங்கத்துப் பரணியாகும்.

கலிங்க மண்ணில் போர் பாடியதே நடைபெறுகிறது. போர் நடைபெறும் களத்தை நம் கண்முன்னே வருணனையோடு கொண்டு வருகிறார் செயங்கொண்டார். சந்த இனிமையும் வல்லோசையும் பாட்டில் வருவதைக் காணலாம்.

**எடும் எடும் எடும் என எடுத்ததோர்**

**இகல்ஒலி கடல்ஒலி இகக்கவே**

**விடு விடு விடு பரி கரிக்குழாம்**

**விடும் விடும் எனும் ஒலி மிகைக்கவே**

போர்க் களத்தில் மற்றுமொரு காட்சி! வெற்றியுடன் வீடு திரும்புவார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மனைவி போர்க்களத்தில் அவள் கணவனின் உடல் சிதறுண்டு கிடக்கும் காட்சியைப் பார்த்து, காளியிடம் முறையிடுகிறாள்:

**பொருதடக்கை வாள் எங்கே? மணிமார்பு எங்கே?**

**போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத**

**பருவயிரத் தோள் எங்கே? எங்கே என்று**

**பயிரவியைக் கேட்பாளைக் காண்மின்! காண்மின்!**

கற்புத்திறம் வாய்ந்த பெண்மகள், போர்க்களத்தில் வீரமரணம் அடைகின்ற தன் கணவனுடைய உடலையும், உயிரையும் மண்மகளும், அரளிமகளிரும் தொட்டு விடக் கூடாது

என்று எண்ணி தன் உயிரைக் கணவர் உயிர் பிரிவதற்கு முன் விடுகின்ற காட்சியைக் கலிங்கத்துப்பரணி காட்டுகிறது.

**தரைமகளும் தன்கொழுநன் உடலம் தன்னைத்**

**தாங்காமல் தன்கரத்தால் தாங்கி, விண்நாட்டு**

**அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்**

**ஆவிஓக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!**

**9. பள்ளு:**

உழவர் பெருமக்களின் வாழ்வியலை நகைச்சுவையோடு கூறுவது பள்ளு இலக்கியம். கள்ளம் கபடமில்லா மக்களின் வாழ்வியலைச் சுவைமிக்க சொல்லோவியங்களாகப் படைத்துக் காட்டுவதும் சிற்றிலக்கிய மரபில் புதுமையான இலக்கியம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

இலக்கிய இன்பம் பொங்கிடப் பாடப்பட்டுள்ள முக்கூடற்பள்ளும், பெரியவன் கவிராயன் இயற்றிய திருமலை முருகன் பள்ளும், கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய திருவாரூர் பள்ளும், முத்துக்குட்டிப் புலவர் இயற்றிய தில்லைப் பள்ளும் பள்ளு இலக்கியங்களில் சிறந்தவை.

திருநெல்வேலி மாவட்டம் சீவலப்பேரியை மையமாகக் கொண்டு முக்கூடற்பள்ளு பாடப்பட்டுள்ளது. பொருநை, கோதண்டராமநதி, சித்ராநதி ஆகிய மூன்றும் கூடுமிடம் முக்கூடல் என்ற சீவலப்பேரி. இங்கு கோயில் கொண்டுள்ள திருமால் மீது பாடப்பட்ட நூல் இது என்பர். உழவன் ஒருவன் இரு மனைவியாரை மணந்து வாழ்கிறான். மூத்தவள் முக்கூடலைச் சார்ந்த வைணவ சமயம் சார்ந்தவள். இளையவள் மருதூரைச் சார்ந்த சைவ சமயம் சார்ந்தவள். இரு மனைவியார்க்குள் நடைபெறும் சண்டை, உழவன் படும் துன்பங்கள், பண்ணையார் தலையீடு, இறைவனைப் பரவுதல் போன்ற நாடகப் பாங்கோடு முக்கூடற்பள்ளு படைக்கப்பட்டுள்ளது.

வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் மழையையே நம்பி வாழ்கின்றனர். மழைக்காலம் நெருங்குகின்றது. திட்டுதிட்டாக கார்மேகங்கள்! மின்னல் கோடுகள்! உழவர் பெருமக்கள் துள்ளிக்குதித்து மகிழ்கின்ற காட்சியினை இலக்கிய இன்பம் பொங்கிட முக்கூடற்பள்ளு காட்டுகிறது.

**ஆற்று வெள்ளம் நாளை வரத்**

**தோற்றுதே குறி – மலை**

**யாள மின்னல் ஈழமின்னல்**

**சூழ மின்னுதே!**

**நேற்றும் இன்றும் கொம்புசுற்றிக்**

**காற்றடிக்குதே – கேணி**

**நீர்ப்படு சொறித்தவளை**

**கூப்பிடுகுதே!**

**சேற்று நண்டு சேற்றில் வளை**

**ஏற்றடைக்குதே – மழை**

**தேடியொரு கோடி வானம்**

**பாடி யாடுதே!**

**போற்று திரு மாலழகர்கு**

**ஏற்றமாம் பண்ணைச் - சேரிப்**

**புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்**

**துள்ளிக் கொள்வோமே!**

**10. பிள்ளைத் தமிழ்:**

கடவுளையோ தலைவன் ஒருவனையோ குழந்தையாகப் பாவித்துப் பத்துப் பருவங்களாக அமைத்து, ஒரு பருவத்திற்குப் பத்து விருத்தப் பாக்கள் வீதம் நூறு பாடல்கள் அமையப் பாடுவது பிள்ளைத் தமிழ் ஆகும். இவ்வகை இலக்கியங்கள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் இருவகைகளாக உள்ளன. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியவை ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்கள். இவற்றில் முதல் ஏழும், கழுங்கு, நீராடல், ஊசல் மூன்றையும் இணைத்துப் பாடுவது வெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரியனவாகும்.

ஒட்டக்கூத்தர் பாடிய இரண்டாம் குலோத்துங்கன் பிள்ளைத் தமிழே காலத்தால் முற்பட்டது. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழும், பகழிக் கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத்தமிழும், குமரகுருபரர் இயற்றிய முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழும், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும் புகழ்பெற்ற நூல்களாகும்.

பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் அம்புலிப் பருவம் பாடுவது கடினம் என்பர். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் வரும் ‘தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின்பயனே!’ என்ற பாடல் அரங்கேற்றத்தின்போது பாடுகையில் மீனாட்சியம்மையே

மெய்மறந்து திருமலைநாயக்கர் கழுத்தை அலங்கரித்த முத்துமாலையைக் கழற்றி குமரகுருபரருக்கு அணிவித்ததாக வரலாறு கூறுவர்.

ஏசுநாதர் பிள்ளைத்தமிழ் இயற்றிய கவிஞர் இ.குற்றாலம், முத்தப் பருவத்தில் ஏசுநாதரைக் கருணைக்குக் காவலன் எனப் போற்றிப் பாடியுள்ளமையைக் காணலாம்.

**குற்றால அருவியெனக்**

**குளிரை நல்கி**

**கூடிவரு ஏழையரின்**

**குற்றம் நீக்கி**

**கற்றாரும் மற்றாரும்**

**கருதிப் போற்ற**

**கருணைமழை பொழிமுகிலாய்க்**

**ககனந் தன்னை**

**உற்றாலும் புவியோரின்**

**உண்ணின் றொளிரும்**

**உத்தமனே! கர்த்தாவே!**

**உன்றன் சீர்மை**

**வற்றாத அமுதூறும்**

**வாயால் முத்தம்**

**வழங்கிடுவாய்! வான்புகழும்**

**வள்ளல் நீயே!**

**புராண இலக்கியங்கள்:**

பிற்காலச் சோழர் காலத்தில் சமணர்கள் வடமொழியிலிருந்து பலபுராண நூல்களைத் தமிழ்ப்படுத்தினார். ஆவை உரைநடையிலும், செய்யுளிலும் அமைந்தன. குறிப்பாக மேருமந்தர புராணம், மல்லி நாதர் புராணம், சாந்தி புராணம், உத்தர புராணம், ஸ்ரீ புராணம் போன்றவை

சமணர்களால் இயற்றப்பட்டவைகளாகும். அவர்கள் பணியினைத் தொடர்ந்து புராண நூல்கள், தலபுராணங்கள் படைப்பதில் பெருவளர்ச்சி தமிழில் நிகழ்ந்தது.

**(அ) அரிச்சந்திர புராணம்:**

முகாபாரதத்தில் இடம் பெறும் ஒரு கிளைக் கதையான அரிச்சந்திரன் வரலாற்றை விரிவாக்கித் தமிழில் பாடப்பட்டுள்ள நூலே அரிச்சந்திர புராணமாகும். இந்நூலினை பாண்டிய நாட்டு வீரகவிராயர் இயற்றியுள்ளார். வாய்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அரிச்சந்திரனைப் பற்றி 1225 பாக்களில் இந்நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூல் 16-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**(ஆ) திருவிளையாடல் புராணம்:**

பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரையில் சோமசுந்தரக் கடவுள் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றி தொகுத்துக் கூறுகின்ற இலக்கியம் திருவிளையாடல் புராணமாகும். இந்நூலுக்கு ‘ஆலாசிய மகாத்மியம்’ என்னும் வடமொழி நூல் முதல் நூலாகும் என்பர் சிலர்.

இதனை இயற்றியவர் சைவக் கொண்டல் பரஞ்சோதி முனிவராவார். துறவியாக வாழ்ந்தவர்: சோழவள நாட்டைச் சேர்ந்த திருமறைக்காடு பிறந்த ஊராகும். சைவ வேளாள மரபைச் சார்ந்தவர். இளமையிலேயே தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றார் என்பர். சைவ சித்தாந்த சாத்திரங்களை முறையாகக் கற்றுள்ளமையை இவருடைய நூல்களைப் படிப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

திருவிளையாடல் புராணத்திலும் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் ஆகிய மூன்று காண்டங்களும், அறுபத்து நான்கு படலங்களும், 3360 பாடல்களும் காணப்படுகின்றன. இந்நூலில் அமைந்துள்ள விருத்தப்பாக்கள் இனிமையும், தெளிவும் உடையனவாக இருக்கின்றன. நான்மாடக் கூடலான படலத்தில் மதுரை மாநகர் நான்மாடக் கூடல் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் கூறப்பட்டுள்ளது.

**வன்றிறல் வருணன் விட்ட மாரியை விலக்க ஈசன்**

**மின்றிகழ் சடையின் நின்று நீங்கிய மேகம் நான்கும்**

**குன்று போல் நிவந்து நான்கு கூடமாகக் கூடல் ஆலே**

**அன்று நான் மாடக் கூடல் ஆனதால் மதுரை மூதூர்.**

வருணன் விட்ட மழைமேகங்களைத் தடுக்கும் பொருட்டுச் சிவபெருமானின் சடையினின்று நீங்கிய நான்கு மேகங்களும், நான்கு மாடங்களாகக் கூடியிருந்த காரணத்தால் அன்றுமுதல்

மதுரை மாநகரம், 'நான்மாடக் கூடல்' என்று அழைக்கப்படுவதாகத் திருவிளையாடல் புராணம் கூறுகிறது.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி, வேதராணிய புராணம் ஆகிய பல நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் காலம் 16-ம் நூற்றாண்டு என்பர்.

**(இ) தல புராணங்கள்:**

திருவிளையாடல் புராணத்தைப் போன்று, உமாபதி சிவம் என்பவர் 14-ம் நூற்றாண்டில் கோயில்புராணம் ஒன்று பாடியுள்ளார். பரஞ்சோதி முனிவரைப் பின்பற்றி வேம்பத்தூராரும், பெரும்பற்றப் புலியூர் நம்பியும் திருவிளையாடல் புராணங்கள் இயற்றினர். தருமபுரம், காசி, திருத்தணி, திருவாரூர், திருவெண்காடு, திருவண்ணாமலை, திருச்செங்கோடு, வேதராணியம், கும்பகோணம் போன்ற புகழ் பெற்ற ஊர்கள் பற்றியும், கோயில்கள் பற்றியும் தல புராணங்கள் எழுந்தன. தல புராணங்களில் கூறப்படும் கதைகளோடு கலந்துவரும் கலை இன்பம், மக்கள் உள்ளத்தைக் கவரும்கலை விருந்தாக அமைந்தன. ஆதலால் நூற்றுக்கணக்கான தலபுராணங்களைப் புலவர்கள் இயற்றினார்கள். தரபுராணங்களுள் சிவப்பிரகாசர் இயற்றிய சீகாளத்திப் புராணமும், வீரராகவ முதலியார் இயற்றிய திருக்கழுக்குன்றப் புராணமும், கூர்ம புராணமும் புராண இலக்கியங்களில் சிறந்தவை என்பர்.

## சித்தர் பாடல்கள்

சித்து என்றால் அறிவு, ஞானம் என்று பொருள்படும். எனவே சித்தர்கள் நுண்ணறிவு படைத்தவர்களாக, மெய்ஞ்ஞானிகளாக விளங்கினார்கள். உண்மை எதுவென்று உலகுக்கு அறிவிக்கப் பகுத்தறிவைப் பயன்படுத்திய சமரச சன்மார்க்கத்தினர். சாதி சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள். மூட நம்பிக்கைகளுக்கும் இடம் தராதவர்கள். சித்த மருத்துவத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திய மருத்துவக் கலைஞர்கள்.

சித்தர்கள் பதினெட்டுப் பேர்:

1. திருமூலர் 2. இராமதேவர் 3. கும்பமுனி 4. இடைக்காடர் 5. தன்வந்திரி 6. வான்மீகி 7. கமலமுனி 8. போகநாதர் 9. மச்சமுனி 10. கொங்கணர் 11. பதஞ்சலி 12. நந்திதேவர் 13. போதகுரு 14. பாம்பாட்டிச் சித்தர் 15. சட்டைமுனி 16. சுந்தரானந்த் தேவர் 17. குதம்பைச் சித்தர் 18. கோரக்கர் முதலியோர்.

சித்தர்களாகவும், சித்த மருத்துவத்தில் தேர்ந்தவர்களாகவும் மேலே கூறிய பதினெட்டு பேர்களோடு இன்னும் சிலரையும் சேர்த்துக் கூறும் வழக்கமும் உண்டு. அவர்களில் முக்கியமானவர்கள் பட்டினத்தார். அருணகிரி, சிவவாக்கியர், அகப்பேய்ச்சித்தர், அழுகனிச் சித்தர், கடுவெளிச் சித்தர் ஆகியோர் ஆவர்.

**எட்டுவகைச் சித்தர்கள்:**

சித்தர்கள் அறிவால் சில ஆற்றல்மிகு செயல்களைச் செய்ய முடியும் எனத் திண்ணமாக நம்பினர். அவர்கள் கையாண்ட சித்திகள் 'அட்டமாசித்தி' என அழைக்கப்பட்டது. அவை:1.அணிமா 2.மகிமா 3.லகிமா 4.பிராந்தி 5.பிரகாமியம் 6.ஈசத்துவம் 7.வசித்துவம் 8.கரிமா. அணுவைவிடச் சிறிய ஆற்றல் அணிமா என்றும், மலையை விடப் பெரிய ஆற்றல் மகிமா என்றும் அழைக்கப்பட்டன. நீரிலோ, நிலத்திலோ செல்லும் போது உடம்பைக் காற்றுப் போல இலேசாகச் செய்து கொள்ளும் முறை 'லகிமா' எனப்பட்டது. அறிவால் அற்புதத்தை நிகழ்த்திக் காட்ட முடியும் என நம்பிய சித்தர்கள் மனத்தால் நினைத்ததை அடையும் வல்லமையைப் 'பிராத்தி' என்றழைத்தனர்.

**சித்தர்களின் பயிற்சி முறைகள்:**

உலகத் துன்பங்களுக்கெல்லாம் காரணம் மனிதனுடைய உள்ளமே எனக் கண்டனர் சித்தர்கள். எனவே உள்ளத்தை வளப்படுத்தும் ஆற்றலைக் கைப்பற்றும் முறையை அவர்கள் கற்பித்தனர். மோனநிலையில் மூழ்கித் தியானப் பயிற்சி பெற்றவர்கள். சில சித்தர்கள் பெரும் யோகிகளாகவும் வாழ்ந்துள்ளனர். பிராணவாயுவை மட்டும் உட்கொண்டு மூச்சினை அடக்கிப் பயிற்சி பெற்று, யோகத்தில் நிலைத்தவர்கள். இதனைக் குண்டலினி சக்தியை எழுப்புதல் என்பர். இப்பயிற்சியினைத் தொடர்ந்து செய்தால், மரணமிலாப் பெருவாழ்வு வாழ முடியும் என நம்பினர். இன்னும் பிறர் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து வாழ்வது, தண்ணீரிலோ. அல்லது வெட்ட வெளியிலோ மறைந்து உலாவுவது, கூடுவிட்டுக் கூடு பாய்தல் முதலிய அதிசய கலைகளையும் பயிற்சி மூலம் கண்டறிந்தவர்கள்.

சித்தர்கள் வெளிப்படையாகவே சமயச் சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தனர். சர்வ சமரச நிலையினைப் போற்றினர். ஊழ்வினையை அவர்கள் நம்பினாலும், கர்ம நோய்களை மனிதன் அறிவாலும், உள்ளப் பயிற்சியாலும் மாற்ற முடியும் என அறிவித்தனர். எல்லோரும் ஓர் குலம்: இறைவன் ஒருவனே என்ற தாரக மந்திரத்தை உலகுக்கு அறிவித்தனர்.

சித்தர்கள் பாடல்களில் சில:

**மனத்தை அடக்கினால் எளிதில் முத்தி கிடைக்கும் என்பதை**

**இடைகாட்டுச் சித்தர் கூறுகிறார்:**

**மனம் என்னும் மாடு அடங்கில்**

**தாண்டவக் கோனே! முத்தி**

**வாய்ந்த தென்று எண்ணேடா**

**தாண்டவக் கோனே!**

**சினம் என்னும் பாம்பு இறந்தால்**

**தாண்டவக் கோனே! யாவும்**

**சித்தி என்றே நினையேடா**

**தாண்டவக் கோனே!**

சித்தர்கள் அறிவுக்கு விருந்தளிக்கும் பாடல்களை மட்டும் புனைந்தாரல்லர். மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகமுறைகள் பற்றியும் பாடினர். புழமையான இலக்கண மரபிலிருந்து மாறுபட்டு, நாட்டுப்புறப் பாடல்கள் மரபில் எளியமுறையில் சாதாரணச் சொற்களைக் கையாண்டு கவிபாடினர். இதனால் பொது மக்கள் சித்தர் பாடல்களை விரும்பி ஏற்றனர். கடுவெளிச் சித்தர் உடம்பைக் குயவன் செய்த தோண்டியாக உருவகித்து ஆனந்தக் களிப்பு இராகத்தில் பாடுகிறார்:

**நந்த வனத்திலோர் ஆண்டி – அவன்**

**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**

**கொண்டு வந்தானொரு தோண்டி – அதைக**

**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி**

சித்தர் பாடல்கள் பக்தி இலக்கியங்கள் வழங்கும் தோத்திரப் பாடல்களினின்று மாறுபட்டவை. திருமூலரும் தம்முடைய திருமந்திரத்தில் இறைவனை வணங்கும் முறையில் புதுமையைக் கற்பிக்கிறார். பதி, பசு, பாசம் என்பதற்குச் சிறந்த விளக்கம் அளித்தவர் திருமூலரே. இறைவனை வணங்கும் முறையினைச் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியார் பாடுகின்றார்:

**நட்ட கல்லைச் சுற்றி வந்து**

**நாலு புட்பம் சாத்தியே**

**சுற்றி வந்து மொண மொணென்று**

**சொல்லும் மந்திரம் ஏதடா!**

**நட்ட கல்லும் பேசுமோ!**

**நாதன் உள் இருக்கையில்!**

**சுட்ட சட்டி சட்டுவம்**

**கறிச்சுவை அறியுமோ!**

சித்தர் பாடல்களில் மேற்போக்காக ஒரு பொருள் இருக்கும். ஆழ்ந்து பார்த்தால் வேறொரு உட்பொருள் இருக்கும். புரட்சிச் சீர்திருத்தங்கள் அவற்றினுள்ளே இருப்பதைச் சிந்தித்துப் பார்த்தால் அறிய முடியும். குதம்பைச் சித்தர் பாடலொன்றில் மாங்காய், தேங்காய் என்று வெளிப்படையாகத் தெரிந்த எளிய சொற்களைக் கொண்டு பாடினாலும், உள்ளே மறைபொருள் அமைந்து உள்ளதைப் பாடலில் காணுங்கள்.

**மாங்காய்ப் பால்உண்டு மலைமேல் இருப்போருக்குத்**

**தேங்காய்ப் பால்உண்டு ஏதுக்கடி – குதம்பாய்**

**தேங்காய்ப் பால் ஏதுக்கடி!**

**பாம்பாட்டிச் சித்தர் பாடலொன்று!**

**ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே**

**உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே**

**வாய்ந்த குயவனார் பண்ணு பாண்டம்**

**வரை ஓட்டுக்கும் ஆகாதென்று ஆடு பாம்பே!**

## பாடம் -7

## உரை நடை

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே தமிழில் உரை நடை இருந்தது. ஆனால் கி.பி.15-ம் 16-ஆம் நூற்றாண்டு வரை கூட செய்யுளிலேயே இலக்கியங்களைப் படைக்கும் தன்மை மிகுதியாக இருந்தது. மேலை நாட்டார் வருகைக்குப் பிறகு தான் தமிழ் உரைநடை பல புதிய கூறுகளைப் பெற்று மறுமலர்ச்சி பெற்றது எனில் அது மிகையன்று.

ஏழுவகை யாப்புகளுள் ஒன்றாக உரைநடையைக் குறிப்பிடும் தொல்காப்பியர் அதன் வகையை,

**“பாட்டிடை வைத்த குறிப்பினானும்**

**பாவின் றெழுந்த கிளவியானும்**

**பொருளொடு புணராப் பொய்ம் மொழியானும்**

**பொருளொடு புணர்ந்த நகை மொழியானு மென்ற**

**உரைவகை நடையே நான்கென மொழிப”**

என்று குறிப்பிட்டுள்ளார்.

பாடல் மிகுதியாகவும் உரை குறைவாகவும் வரும் உரைச்செய்யுள் (எ.டு)சிலம்பின் உரைப்பாட்டு மடை.

முழு உரைநடை (எ.டு உரை நூல்கள்)

பொருட்சிறப்பில்லாத கற்பனைக் கதைகள் (எ.டு.புனைகதைகள்)

பொருள் பொதிந்த நகைச்சுவைக் கதைகள் (எ.டு.பஞ்சதந்திரக் கதைகள்) என நான்கு வகைகளில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே உரைநடை வளர்ச்சி பெற்றிருந்தது என இதனால் அறியமுடிகிறது.

தமிழ் உரைநடை வளர்ச்சியை பழங்காலம், இடைக்காலம், பிற்காலம், தற்காலம் என நான்கு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

**பழங்கால உரைநடை (கி.பி.5 வரை):-**

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட உரைநடையை பிராமி எழுத்துக்களால் ஆன சித்தன்னவாசல் அழகர்மலைக் கல்வெட்டுக்களால் உணரமுடிகிறது.

சங்க மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தை உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்பர். உரைபெறு கட்டுரை உரைப்பாட்டு என்ற பெயர்களில் உரைநடை இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.

இவை, நீண்ட தொடர்களாக அமைந்துள்ளன. வருணனைச் சிறப்பும் காணப்படுகிறது. வினையெச்சங்களை அடுக்கிச் செல்வதைக் காண்கிறோம். சொல்லமைப்பு, சொற்பொருள் சிறப்பாக உள்ளது.

**இடைக்கால உரைநடை (கி.பி.6 கி.பி.13):-**

கி.பி.ஆறாம் நூற்றாண்டில் சிம்மவர்ம பல்லவன் காலத்தில் எழுதப்பட்ட பள்ளன் கோயில் செப்பேடுகளும் கி.பி.7-ல் தோன்றிய முதலாம் பரமேசுவர்மனுடைய கூரம் செப்பேடுகளும் பல்லவர் கால உரைநடையை அறிய உதவுகின்றன. இவற்றில் பிழையற்ற சொல்லாட்சியையும்

**இறையனார் களவியல் உரை:-**

நக்கீரர் எழுதிய இறையனார் களவியல் உரையைத் தமிழில் முதன்முதலில் தோன்றிய உரைநடை எனலாம் காலம் கி.பி.8-ம் நூற்றாண்டு. ஓசைப் பண்புமிக்க கவிதைப் பாங்கில் உரைநடை அமைந்துள்ளது. உவமைகள் சிறந்த நடை. இந்நடையில் வருணனைப் பகுதிகள் நீங்கிய பிற பகுதிகள் சிறு தொடர்களாகவே உள்ளன. ஒரு தொடரின் வினைமுற்றையே வினையெச்சமாக்கி அடுத்த தொடரைத் தொடங்கும் போக்கினைக் காண்கிறோம். (எ.டு) அது சொற் கேட்டலும் கவன்று நோக்கினான் நோக்கி உண்மை கண்டான்.

**உரையாசிரியர்களின் உரைநடை:-**

உரையாசிரியர்களின் உரைநடையும் மணிப்பிரவாள நடையும் இக்கால எல்லையில் குறிப்பிடத்தக்கனவாம். இளம்பூரணர் சேனாவரையர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் அடியார்க்கு நல்லார் பரிமேலழகர் முதலிய பற்பல உரையாசிரியர்கள் தமிழ் உரைநடைக்குக் கணிசமான தொண்டு புரிந்துள்ளார்கள். இவர்கள் உரைநடையில் எளிமை தெளிவு விளக்கம் கருத்துச் செறிவு காணப்படுகிறது. அடியார்க்கு நல்லார் இலக்கியச்சுவை புலப்படும்படி எழுதியுள்ளார். சேனாவரையரின் நடையில் வினா எழுப்பி விடையளிக்கும் தன்மை அதிகம் உள்ளது.

முத்தும், பவளமும் கோத்த மாலை போல வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்து எழுதப்படும் நடைக்கு மணிப்பிரவாள நடை என்று பெயர். சமண முனிவர் எழுதிய ஸ்ரீபுராணம் சத்திய சிந்தாமணி ஆகிய நூல்களும் மணிப்பிரவாள நடையால் ஆன முழு உரைநடை நூல்கள். உரையாசிரியர்கள் இந்நடையைப் போற்றி வளர்த்தார்கள். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு எழுதப்பட்ட வியாக்கியானங்கள் ஆறாயிரப்படி முப்பத்தாறாயிரப்படி வைணவப் பெரியார் வரலாறு கூறும் குரு பரம்பரைப் பிரபாவம் ஆகியன குறிப்பிடத்தக்கன.

**பிற்கால உரைநடை:-**

சமய நூல்களுக்கான உரை நூல்கள் கி.பி.1314 இல் எழுந்தன. எனினும் இக்காலத்தில் மருத்துவம் சோதிடம் கணிதம் போன்ற நூல்களும் செய்யுள் வடிவிலேயே செய்யப்பெற்றன.

**உரைநடையில் புதிய மாற்றம்:-**

கி.பி.16 முதல் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் போர்ச்சுக்கீசியர் டச்சுக்காரர் முதலிய ஐரோப்பியர் வணிகம் செய்வதற்காக நம் நாட்டிற்கு வந்தனர். அவர்களுடன் சமயம் பரப்ப வந்த பாதிரிமார்களால் தமிழ் உரைநடை மறுமலர்ச்சி பெற்றது. 157-இல் கிறித்துவ உபதேசம் என்ற முதல் தமிழ்நூல் அம்பலக்காட்டில் அச்சேற்றப்பட்டது. தொடர்ந்து சீகன் பால்குஐயர் ராபர்ட் டி நொபிலி வீரமாமுனிவர் கால்டுவெல் போப் போன்றோர் பல்வேறு சமய விளக்க நூல்களை எழுதினார்கள். வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குருகதை பேச்சுமொழி கலந்த நகைச்சுவைக் களஞ்சியம் ஆகும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த சிவஞான முனிவர் உரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க இடம் பெறுவார். இவர் எழுதிய தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி இலக்கண விளக்கச் சூறாவளி சிவஞான மாபாடியும் என்பன குறிப்பிடத்தக்க நூல்களாகும். இவரது நடை தெளிவும் விளக்கமும் ஆய்வு நுட்பமும் கொண்டதாகும். இக்காலத்தில் தோன்றிய ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்பும் வரலாற்றுச் சிறப்புடையதாகும். பேச்சு நடையும் பிரெஞ்சுச் சொற்களும் கலந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றது. தாண்டவராயர் கதாமஞ்சரி எழுதி கதை இலக்கியம் வளர வழிகாட்டினார். வள்ளலார் சீவகாருணிய ஒழுக்கம், மனுமுறைகண்ட வாசகம் போன்ற நூல்களை எழுதினார். பழைய உரைநடைப் போக்கை மாற்றிப் புதிய உரைநடைக்குத் தோற்றுவாய் செய்தவர் ஆறுமுகநாவலர் ஆவார். திருத்தமான சொல்லாட்சி, நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தியது சந்தி பிரித்து எழுதியது முதலியன இவர் நடையின் சிறப்புகளாகும். மாயூரம் முன்சீப் வேதநாயம் பிள்ளை பிரதாப முதலியார் சரித்திரம் என்ற முதல் தமிழ் நாவலை வெளியிட்டார். தொடர்ந்து இராஜமையர்,

மாதவையா ஆகியோரும் எழுதினார்கள். சைவ உதயபானு சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களும் உரைநடையை வளர்த்தன.

**தற்கால உரைநடை:-**

இக்காலத்தை உரைநடை வளர்ச்சியின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். கட்டுரை, புதினம், சிறுகதை எனப் பல்வேறு வகைகளில் உரைநடை வளர்ந்தது. நாளிதழ், திங்கள் இதழ், கிழமை இதழ் என இதழியல் தமிழும் வளர்ச்சி பெற்றது.

பாரதியார் இனிய எளிய தமிழை வளர்த்தார் மறைமலை அடிகள் தனித்தமிழ் நடையில் சிறந்தார். வி.கோ.சூரிய நாராயணசாஸ்த்திரியார், சோமசுந்தர பாரதியார், நாட்டார், பண்டிதமணி முதலியோர் செறிவான செந்தமிழ் நடையை வளர்த்தார்கள். மிக எளிமையும், இனிமையும், தனித் தன்மையும் உடைய நடையாளர் திரு.வி.க எளிமையுடன் எதுகை மோனைச் சிறப்பமைய எழுதிப் புகழ் பெற்றார். ரா.பி.சேதுபிள்ளை. கவர்ச்சியான நடையில் உவமை அணியமைய அடுக்கு நடையில் எழுதி மாற்றம் ஏற்படுத்தினார் அண்ணா. அண்மைக்கால எழுத்தாளர்களில், செறிவுக்கு டாக்டர்.வ.சு.ப மாணிக்கனாரும், எளிமைக்குக் கண்ணதாசனும் சான்றாவர்.

**புதினம், சிறுகதை:-**

பாமர மக்களுக்குப் புரியும் எளிய நடையில் எழுதினார் மு.வ.புலமை நடையை வளர்த்தார். புதுமைப்பித்தன் தாவிச்செல்லும் தனிநடையில் சிறந்தார். விவாத நடையில் திறமை காட்டினார் ஜெயகாந்தன். குறிப்பு நுட்பம் அமைந்த எளிய நடையில் புகழ் பெற்றார்.தி.ஜானகிராமன். அண்மைக்கால எழுத்தாளர்களில் நறுக்குத் தெரித்தாற்போல சுருக்கமாகவும் கவர்ச்சியாகவும் எழுதி வருபவர் சுஜாதா பாலகுமாரனும் குறிப்பிடத்தக்கவர்.

**இதழ்கள்:-**

தினமணி, தினமலர், தினகரன், முரசொலி, விடுதலை போன்ற நாளிதழ்களும், விகடன், கல்கி, குங்குமம், சாவி போன்ற வார இதழ்களும், கலைமகள், கலைக்கதிர், தீபம், கணையாழி போன்ற திங்கள் இதழ்களும் புதிய இலக்கிய வகைகளை வளர்த்து வருகின்றன. ஒரு சில இதழ்களும் கொச்சை மொழிகள் விரவிய நடைக்கும், சில ஆங்கிலக் கலப்பு மிகுந்த நடைக்கும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு வருகின்றன. தலைப்புகளைக் கூட ஆங்கிலத்தில் தரும் போக்கு மிகுதியாகி வருகிறது. தனித்தமிழ் நடை இந்நூற்றர்டின் இடைப்பகுதியில் வலுப்பெற்றிருந்தது. இப்போது கலப்பு நடையின் காலமாகத் தேய்ந்துள்ளது. வட்டார வழக்கு நடை செல்வாக்குப் பெற்றுள்ளது. எனினும், உரைநடை பல உத்திகளுடன் பல்வேறு

துறைகளில் வளர்ச்சி பெற்று வருகிறது நருப்புக்குச்சிகள்! உரசுகின்றபொழுது பற்றிக் கொள்கின்றதல்லவா!

## மரபுக்கவிதை இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டு உலகில் பல விந்தைகளை அறிவியலிலும், தொழில் புரட்சியிலும் சந்தித்து போலவே, இலக்கிய உலகிலும் பல மாற்றங்களைக் கண்டது. ஊரைநடை வளர்ச்சியிலும், கவிதை ஆக்கத்திலும் பல புதுமைகள் நிகழ்ந்தன. புதுமைச் சிந்தனையாளர்களும், புரட்சி எழுத்தாளர்களும் புதிய நோக்கில் இலக்கிய உலகை நடைபோட வைத்தனர். துமிழக இலக்கிய உலகிலும் புதுமைகள் நிகழ்ந்தன. புத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இதற்கான மாற்றங்கள் தெரிந்தன.இராமலிங்க வள்ளலாரும், வேதநாயகம் பிள்ளையும் மக்கள் போற்றிப் பயிலும் வண்ணம் கவிதையை எளிமைப் படுத்தியிருந்தனர். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தோன்றிய கவிஞர்களும், இலக்கியவாதிகளும் இக்கால இலக்கிய வளர்ச்சியில் ஒரு மலர்ச்சியைத் தோற்றவித்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் அமரகவி பாரதியார்.

**1. புதுமைக்கவி பாரதி (1882 – 1921)**

பைந்தமிழ்த் தேர்ப்பாகன், செந்தமிழ்த் தேனீ, குவிக்கும் கவிதைக் குயில், கவிமுரசு, சிந்துக்குத் தந்தை என்றெல்லாம் போற்றிப் புகழப்படுகிறார் புதுமைக் கவிஞன் பாரதி. எட்டயபுரத்தில் தோன்றிய பாரதியார் இயல்பாகவே கவிதை பாடுகின்ற ஆற்றல் பெற்றவர். இளமையிலேயே கலைமகள் கவிதைக்கலை வாயிலாகத் தன்னை வந்து ஆட்கொண்டதை,

**“......... பூந்தமிழ்க் கவி சொலவே**
**பிள்ளைப் பருவத்திலே – எனைப்**
**பேணை வந்தாள் அருள் பூணவந்தாள்”**

என்று பாஞ்சாலி சபதம், சரசுவதி வணக்கத்தில் கூறுகிறார். புாரதி வாழ்ந்த காலத்தில் இந்திய மண்ணில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலை போர் நடந்து கொண்டிருந்தது. இந்தியத் தாயின் கண்களில் பொங்கிய கண்ணீரைத் துடைத்திடவும், அவள் கைகளிலும், கைகளிலும் பிணைத்திருந்த அடிமை விலங்கினை உடைத்தெறியவும் பாரதி தம் கவிதைப் போர்வாளைப் பயன்படுத்தினார்.

**வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம் - அடி**
**மேலைக் கடல்முழுவதும் கப்பல் விடுவோம்**
**பள்ளித் தலமனைத்துங் கோயில் செய்குவோம் - எங்கள்**
**பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்**

இந்திய திருநாட்டை வாழ்த்திப் பாடிய பாரதி இன்பத் தமிழ்நாட்டையும் மறக்காமல், கவிதையில் கண்டு மகிழ்ந்தார்.

புதுமைக் கவிஞர் பாரதி தமிழக இலக்கிய வானில் நிறை நிலவாகத் தோன்றியவர். உலகுக்குப் புது ஒளி தந்தவர். எளிமையும் இனிமையும் தோன்றிட இலக்கியம் படைத்தவர்.

தமிழ்க்கு அவர் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்ற முப்பெருங் காவியங்களைச் செல்வங்களாக அளித்துச் சென்றுள்ளார். அவருக்குப் பின் பாரதி பரம்பரை என்ற ஒரு கவிஞர் கூட்டமே தோன்றி இலக்கிய உலகை அணி செய்தது.

**2. பாரதிதாசன்**

**நீலவான் ஆடைக்குள்ளே உடல் மறைந்து**
**நிலவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்**
**கோலமுழுதும் காட்டி விட்டால் காதல்**
**கொள்கையிலே இவ்வுலகம் சாயமே! வானச்**
**சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்!**

நீலவானில் தோன்றும் நிலவை, அழகு மங்கையொருத்தியின் முகமாகக் கற்பனை செய்து, அவள் எழில் உடம்பைக் கருமையான போர்வைக்குள் மறைந்துக் கொள்வதாகக் கற்பனை செய்துள்ளார்.

சுரண்டலற்ற சமுதாயத்தைப் படைத்திட, மனிதன் மனிதனாக வாழ்ந்திட எல்லோரும் ஓர் குலமாக ஒன்றி வாழப் பாரதிதாசன் அறைகூவல் விடுத்தார். தம் எண்ணத்தையும் ஆவலையும் கீழ்க்கண்டவாறு வெளியிடுகிறார்.

**புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்**
**பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**

பாரதிதாசன் தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றியுள்ளார். அவருடைய கவிதை இலக்கியங்கள் இக்காலத் தமிழுக்கு வளஞ்சேர்க்கின்றன. குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன் கவிதைகள் போன்ற படைப்புகள் பாரதிதாசனின் புகழுக்கு மேலும் புகழ் சேர்ப்பன.

**3. கவிமணி தேசிக விநாயகம் (1876 – 1954)**

“தேனொழுகக் கவிபாடும் தேசிக விநாயகமே”, என்று குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவால் பாராட்டப் பெற்றவர் கவிமணி. எளிமையும் அமைதியும் அவர்தம் வாழ்வாயிற்று. அவர் வாழ்வின் நிழலே கவிதையிலும் படிந்தது. குவிதைக்குப் புது இலக்கணம் கூறியவர் கவிமணி. உண்மையும், உள்ளத்து எழுச்சியும் உணர்ச்சி மயமாகிப் பிறப்பதே கவிதை என்பது அவர் கூற்று:

**உள்ளத்து உள்ளது கவிதை - இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்து உரைப்பது கவிதை**

கவிமணிக்குப் புகழ் சேர்த்தது அவருடைய குழந்தைப் பாடல்களாகும்.எளிமையும், இனிமையும், அமைதியும், அடக்கமும் அவருடைய குழந்தைப் பாடல்களில் போட்டியிட்டு நின்றன. புாடலை ஒரு முறை படித்தாலே போதும். முனத்தை விட்டு மறையாது. ஒரு தோட்டத்தில்

பசும்புல்லை மேய்ந்து கொண்டிருந்த பசுவையும், அதன் கன்றையும் கண்டார் கவிமணி, கவிதை ஒன்று பிறந்தது, குழந்தைகளுக்கென்று அதனை எளிமையாக்கி அமைத்தர். அக்கவிதையைப் படிக்கின்ற பொழுது, உள்ளமெனும் தோட்டத்தில் துள்ளி வந்து பசுவும் கன்றும் பசும்புல் மேய்கின்ற காட்சியை நாம் உணரலாம். கவிதை ஓவியத்தில் கவிதையைக் காணுங்கள்:

**தோட்டத்தில் மேயுது**
**வேள்ளைப் பசு – அங்கே**
**துள்ளிக் குதிக்குது**
**கன்றுக் குட்டி**
**அம்மா என்குது**
**வெள்ளைப்பசு – உடன்**
**அண்டையில் ஓடுது**
**கன்றுக் குட்டி**
**நாவால் நக்குது**
**வெள்ளைப் பசு – பாலை**
**நன்றாய்க் குடிக்குது**
**கன்றுக் குட்டி**
**முத்தம் கொடுக்குது**
**வெள்ளைப் பசு – மடி**
**முட்டிக் குடிக்குது**
**குன்றுக் குட்டி**

குவிமணி தம் கவிதைத் தொகுப்பான ‘‘மலரும் மாலையும்’’ தவிர ‘‘மருமக்கள் வழி மான்மியம்’’, ‘‘ஆசிய ஜோதி’’ ‘‘உமர்கய்யாம் பாடல்கள்’’, ‘‘தேவியின் கீர்த்தனங்கள்’’ ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**4. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை(1888 – 1972)**

காந்தியத்திற்கு ஒரு கவிஞர் உண்டென்றால் அவர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையே ஆவார். ‘‘காந்தியத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச் சங்கு அவர்’’ என்று புகழாரம் சூட்டப் பெற்றார். தேன் மணக்கும் பாடல்கள் பலவற்றை இயற்றினார். எளிமையும், சந்த இனிமையும் தோன்றிட அவர் பாடல்கள் விளங்குகின்றன.

காந்தியடிகளைக் கவிதையில் கண்டு, அவரை வணங்கிட அழைக்கின்றார் கவிஞர்.

**காந்தியெனும் பேரொளியே!**
**கருணைபொழி வான்முகிலே!**
**சாந்தி நிறை பாத்திரமே!**
**சன்மார்க்க சாத்திரமே!**
**மாந்தருக்குள் மாமணியே!**
**மாநிலத்தின் அற்புதமே!**

**ஏந்துபுகழ் மோகனமே!**

**என்சொல்லி அஞ்சலிப்போம்!**

காந்தியடிகளைப் பற்றியும், அவர் கொள்கை விளக்கங்கள் பற்றியும் பல பாடல்களை நாமக்கல் கவிஞர் இயற்றினாலும் அவருக்குத் தேசிய கவிஞர் என்ற பட்டத்தையும், மிகுந்த புகழையும் ஈட்டித் தந்த பாடல் இதோ:

**கத்தியின்றி ரத்த மின்றி**

**யுத்தம் ஒன்று வருகுது**

**சத்தியத்தின் நித்தயத்தை**

**நம்பும் யாரும் சேருவீர்!**

தமிழன் இதயம், காந்தி அஞ்சலி, சங்கொலி, கவிதாஞ்சலி, தமிழ் மணம், தமிழ்த்தேன் முதலிய கவிதை நூல்களையும், அவனும் அவளும், அன்பு செய்த அற்புதம் போன்ற சிறு காப்பியங்களையும், மலைக்கள்ளன், காதல் திருமணம் போன்ற புதினங்களையும் எழுதியுள்ளார் இராமலிங்கம் பிள்ளை. புல இலக்கியக் கட்டுரைகளையும், திறனாய்வு நூல்களையும் இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளார்.

**5. சுரதா**

சுப்புரத்தினதாசன் என்பதின் சுருக்கமே சுரதா. இயற்பெயர் இராசகோபால். தஞ்சை மாவட்டம் பழையனூரில் 1921 ஆம் ஆண்டு தோன்றினார். பாவேந்தரின் வழித்தோன்றல்! வீறுணர்ச்சிக் கவிஞர். இவருடைய பாடல் வரிகளில் உவமை இன்பம் பளிச்சிடும். எனவே "உவமைக் கவிஞர்" என்றே இலக்கிய உலகில் சுரதாவை குறிப்பிடுவர்.

தேன்மழை, பட்டத்தாரி, உதட்டில் உதடு, சாவின் முத்தம், துறைமுகம் போன்றவை அவருடைய எழுச்சிமிகு படைப்புகளாகும்.காவியம், இலக்கணம், சுரதா, ஊர்வலம் ஆகிய வார, மாத இதழ்களை நடத்தினார். துமிழக அரசின் கலைமாமணி, பாரதிதாசன் விருது ஆகியவற்றைப் பெற்றவர்.

**ஆடிக் களிக்கும் அழகிய மயிலே!**

**உன் விழி நீலம், உன்தோகை நீளம்!**

**உன்னுடல் மரகதம், உச்சிக் கொண்டையோ**

**கண்ணைக் கவர்ந்திடும் காயா மலர்கள்!**

கவிதையில் புதுமை வேண்டும் எனக் கூறுபவர் சுரதா. புதுக்கருத்துகள் தமிழை வளப்படுத்தும், புதிய நோக்கில் தமிழும் வளரும் என்பதைத் தம் கவிஞர் பரம்பரையினருக்கு எடுத்துரைக்கிறார்.

**6. கண்ணதாசன்(1926 – 1981)**

தமிழ் இலக்கிய உலகுக்குக் காலம் தந்த பரிசே பண்ணரசர் கண்ணதாசன். இயற்பெயர் முத்தையா. இராமநாதபுரம் மாவட்டம் சிறுகூடற்பட்டியில் 1926 ஆம் ஆண்டு தோன்றி 1981 ஆண்டுவரைக் கவிஞராகவே வாழ்ந்தவர். திரைப்பட உலகில் மூலம் நூற்றுக்கணக்கான இசைப்பாடல்களை இயற்றி, தமிழர் நெஞ்சங்களைத் தொட்டவர், இலக்கணத்தோடு கூடிய கவிதைகள் கண்ணதாசன் கவிதைகள் என்ற பெயரில் இரு தொகுப்புக்களாக வெளி

வந்துள்ளன. மாங்கனி,ஆட்டனத்தி ஆதிமந்தி,இயேசு காவியம் என்பவை காலத்தை வென்ற அவருடைய காப்பியப் படைப்புக்களாகும்.

கண்ணதாசன் தம் வாழ்வில் கடைசியாகப் படைத்த காப்பியமே ‘‘இயேசு காவியம்’’ இயேசுநாதரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது இயேசு காவியம். இயேசுவின் மலைப் பொழிவு உலகம் போற்றும் அறக்கொண்டல்! மனிதர் வாழவேண்டிய நெறிமுறைகளை மலைப்பொழிவில் காணலாம்.

**ஊண்பது எதைஎன உடுத்துவது எதைஎன**
**எண்ணித் தினமும் ஏங்குதல் விடுவீர்!**
**ஊணவை விடவும் உயிரே பெரியது!**
**ஊடையை விடவும் உடலே பெரிது!**

**7. முடியரசன்**

மதுரை மாவட்டம், பெரிய குளத்தில் 1920 ஆம் ஆண்டு தோன்றியவர் முடியரசன். இயற்பெயர் துரைராசன்.தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இலக்கணத் தமிழில் அதிகப் பற்றுடையவர். புாரதி கண்ணனைத் தாய், தந்தை என்று பாடியதைப் போலவே, இவரும் தமிழைத் தாய் தந்தை என்று உறவு கொண்டாடிப் பாடியுள்ளார்.

கவியரங்கில் முடியரசன், காவியப்பாவை, முடியரசன் கவிதைகள்,பாடும் பறவை, பூங்கொடி, வீரகாவியம் போன்றவை முடியரசனுடைய படைப்புகளாக வெளிவந்துள்ளன. தமிழக அரசின் பரிசு இவருடைய வீரகாவியத்திற்குக் கிடைத்துள்ளது.

**கண்பழு தாகினுங் காணலாம் - உலகைக்**
**காணுங் கருவியைப் பூணுலாம்!**
**பண்புகள் பாழ்பட நேருமேல் - என்ன**
**பக்குவம் செய்யினும் தீருமோ?**

**8. பெருஞ்சித்தரனார் (1933 – 1955)**

தமிழே தம் வாழ்வு, மூச்சு என்று வாழ்வின் இறுதி எல்லைவரை,தமிழுக்காகவே தொண்டாற்றி மறைந்த கவிஞரே பெருஞ்சித்தரனார்.சேலம் மாவட்டம் கவிஞர் பிறந்த இடம். இயற்பெயர் துரைமாணிக்கம். போராசிரியர் தேவநேயப் பாவணரின் அன்பு மாணவர். புாவாணரைப் போலவே தனித் தமிழ்ப் பற்றுக் கொண்டவர். தாம் பார்த்தவந்த அரசு வேலையையும் உதறிவிட்டுத் தமிழுக்குத் தொண்டாற்ற வந்த உத்தமக் கவிஞர்.

**அன்னை மொழியே!**
**அழகார்ந்த செந்தமிழே!**
**முன்னைக்கும் முன்னே!**
**முகிழ்த்த நறுங்கனியே!**

என்று தமிழை வணங்கி வாழ்ந்த கவிஞர் ஆவார்.

நற்பழக்கங்களை வளருகின்ற காலத்திலேயே பழக்கப்படுத்திக் கொள்ள அறிவுறுத்துகிறார் கவிஞர். பொறுமை என்ற அணிகலனைப் பூண்டுகொண்டால் உலகை ஆளலாம். பண்பு என்ற

அணிகலனை ஏற்றுக்கொண்டால் பாரில் மகிழ்ந்து வாழலாம் என்று பெருஞ்சித்திரனார் தம் கவிதையில் கருத்துமழை பொழிகின்றார்.

**சினத்தை அடக்கிப் பழகிக்கொள்,**
**சிரிப்பதை என்றும் மறவாதே!**
**பணத்தைப் பெரிதாய் எண்ணாமல்**
**பண்பினை எண்ணக் கற்றுக்கொள்.**

**9. வாணிதாசன் (1917 – 1974)**

பாரதிதாசன் பரம்பரையில் தோன்றிய வாணிதாசன் சிறந்த கவிஞர். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். ஊணர்ச்சிமயமாகக் கவிதைபாடும் ஆற்றல் உடையவர். சிரித்தநுணா, கொடிமுல்லை,எழிலோவியம்,தமிழச்சி,இன்ப இலக்கியம்ஈதொடுவானம், வாணிதாசன் கவிதை படைப்புகளாகும்,

**வீழ்ச்சியுற்ற தமிழருக்கு வலிவூட்டும் குன்றம்!**
**மெல்லியரின் வாழ்விற்குப் புரட்சிவழிப் பாட்டை!**
**சூழ்ச்சியினால் வளர்ந்தமதக் கோட்டைக்கு வேட்டு!**
**ஒருசிலரின் சொத்தாக இருந்த தமிழ் ஊற்றைத்**
**தாழ்ச்சியின்றித் தமிழ்நாட்டு மக்களெல்லாம் உண்ண**
**எளிமையோடு சுவைகூட்டிச் சரிசெய்த வள்ளல்!**

**10. மின்னும் வைரங்கள்**

தூத்துக்குடி வ.உ.சி. கல்லூயில் ஆங்கிலப் பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றிய சீநிவாசராகவன் ‘நாணல்’ என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவராவார். ஆங்கிலக் கவிதைகள் பலவற்றை அழகுடனும், கருத்துக்கள் சிதையா வண்ணமும் மொழியாக்கம் செய்துள்ளார். கல்கி வார இதழில் அவருடைய கவிதைப் படைப்பான ‘வெள்ளைப் பறவைக்கு’ச் சாகித்திய அகாடமி பரிசு அளித்துச் சிறப்பித்துள்ளது. ‘குற்றால மலையிலொரு குறுணிமேகம் கொட்டுது, கோண மூங்கில் உடம்பை வளைத்துக் கும்மிபாடி வெட்டுது’ என்ற அவருடைய கவிதையைப் பாடிப்போற்றாத இலக்கிய நெஞ்சங்களே இல்லை எனலாம்.

இன்னும் சுத்தானந்த பாரதி, ச.து.சுப்பிரமணியயோகியார், புலவர் குழந்தை, குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா, கொத்த மங்கலம் சுப்பு, அசலாம்பிகை அம்மையார், பெரியசாமித் தூரன், மீ.ப.சோமு, கம்பதாசன்,தூத்துக்குடி ஜெகதீசன், கவிஞர் தியாகு போன்ற பல புகழ்மிக்கக் கவிஞர்கள் கவிதை உலகில் மின்னும் வைரங்களாக ஒளிர்கின்றனர். தமிழ்க் கவிஞர் பரம்பரையைப் பட்டியலிடின் மிக நீளும்.

## தமிழில் புதுக்கவிதை

‘பாட்டினைப்போல ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா’ என்றும் ‘ஆசை தருங்கோடி அதிசயங்கள் கண்டதிலே ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா’ என்றும் கவிதை

இன்பத்தைப் போற்றிப் புகழ்கின்றான் பாரதி. புதினெட்டாம் நுற்றாண்டு வரை இலக்கியம் என்றாலே கவிதை ஒன்றுதான் என்று கூறுமளவிற்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நீண்ட இடத்தைப் பிடித்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையிலும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது. பின்னர் பாரதியின் வருகைக்குப் பின் கவிதை இலக்கியம் புதிய எழுச்சியையும் வேகத்தையும் கண்டது. சமயத்தையும் தனிமனிதனையும் சார்ந்து நின்ற தமிழ்க்கவிதையைச் சமுதாயத்தின் எல்லாப்பகுதிகளுக்கும் உரிமையாக்கிப் பொதுவாக்கியவன் பாரதி.

பாரதியார் - கவிதை எழுச்சி புதிய புதிய கருத்துக்களும், வடிவங்களும், தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும், சீர்திருத்த வேகமும், பெண்மையின் எழுச்சியும், புரட்சிகரமான கொள்கைகளும், எளிமையும் இன்றைய தமிழ்க்கவிதையின் இயல்புகளாக விளங்குவதற்குப் பாரதியின் பங்களிப்பு அதிகம். பாரதியின் கவிதைகள் யாவும் கவிதை உலகில் இன்று தனித்துவத்தோடு பேசப்படும் புதுக்கவிதைக்கும் வசனக்கவிதைக்கும் வழிகாட்டியாய்த் திகழ்கின்றன.

மேல்நாட்டார் கவிதைத் தாக்கம் பாரதியினுடைய புதுமை மட்டுமின்றி மேல்நாட்டாரின் கவிதைத்தாக்கமும் புதுக்கவிதை வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக விளங்குகின்றது. வால்ட்விட்மன் மற்றும் அவருடைய சார்பாளர்கள் புதுக்கவிதை இயக்கத்திற்குப் பெரும்ஆதரவு தந்தார்கள். ‘இலகு கவிதை இயக்கம்’ என்பது – எளிதாகப் பாடுவது எனப் பொருள்படும். இந்த இயக்கம் ‘எஸ்ரா ப்ரவுன்’ முதலியோரைக் கவர்ந்தது.அதனால் புதுக்கவிதை இன்னும் வேகமாகக் காலூன்றியது.

**“மரபெனும் பழமைக் காட்டை**

**ஒன்றாகவே அழிப்போம்”**

என்ற சொற்கள் தமிழ்க்கவிதைக்குப் புதிய வேகத்தைக் கொடுத்தன.

பாரதியின் கவிதைப் போக்கும் மேல்நாட்டாரின் தாக்கமும் தமிழ்க் கவிஞர்களிடையே பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் காரணமாகப் புதுக்கவிதையினை விரும்பி எழுதத் தொடங்கினர். கவிதை என்றால் புதுக்கவிதை என்று சொல்லும் அளவிற்கு இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றது. படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை புதுக்கவிதையைப் படிக்கவும், படைக்கவும் முயன்று வருகின்றனர்.

புதுக்கவிதை இலக்கணம் கவிதை என்ற சொல்லின் வரையறையில் இருந்து புதுக்கவிதைக்கு வழங்கப்படும் வரையறைகள் மாறுபட்டு அமைகின்றன.

“எண்ணத்தை அதன் பிறப்பிடத்திலேயே பிடித்து விடுவது” புதுக்கவிதை என ஒருவர் வரையறை தருகின்றார். கவிக்கோ அப்துல் ரகுமான் கூறும்போது புதுக்கவிதையின் கருத்து

வெளிப்பாடு மின்னல் போன்றது. மரபுக்கவிதை கருத்தைச் சுற்றி வளைத்துச் சொல்வது "புதுக்கவிதை நேரடியாகக் கருத்தைச் சொல்வது" என்கிறார்.

**"யாப்புடைத்த கவிதை**

**அணையுடைத்த காவிரி**

**முகிலுடைத்து மாமழை**

**முரட்டுத் தோலுரித்த**

**பலாச்சுளை"**

எனப் புதுக்கவிதைக்கு விளக்கம் தரப்படுகிறது. வைரமுத்து குறிப்பிடும் பொழுது "புதுக்கவிதை எனும் போர்வாள் இலக்கண உறையில் இருந்து கவனமாகவே கழற்றப்படுகிறது" என்கிறார். சார்வகன் என்ற கவிஞர் புதுக்கவிதை குறித்துப் பேசும் பொழுது

**"யாப்பற்ற கவிதை**

**அருவருக்கும் அலியல்ல**

**வறட்டுக் கோஷா எரிந்த மங்கை**

**மார்கழியின் மொட்டிரவில்**

**தென்றல் தரும் சூடு போக்கி**

**வெண்ணிலாவின் பயன் துய்க்க**

**உடை களைந்த ஒரு தலைவி"**

எனக் கூறுகின்றார். இவ்வாறு புதிய வரையறைகளுக்கு உட்பட்ட புதுக்கவிதையின் வளர்ச்சி மூன்று காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

**மூன்று காலகட்டம் (இயக்கம்)**

புதுக்கவிதையின் இன்றைய இமாலய வளர்ச்சிக்கு மணிக்கொடி, எழுத்து, வானம்பாடி,ஆகிய மூன்று இயக்கங்களின் பங்களிப்பு உன்னதமானது. இவ்வியக்கங்களைச் சார்ந்த கவிஞர்கள் தங்களின் சிந்தனைகளைப் பதிவு செய்ய இதழ்களைப் பயன்படுத்தி ஏற்றம் பெற்றனர்.

**மணிக்கொடிகாலம் (1930 முதல் 1945 வரை)**

மணிக்கொடி காலத்தில் மேல்நாட்டுக் கவிதைத் தாக்கத்தால் உரைநடைக் கவிதைகள் தோன்றின. இலகு கவிதை என்ற பெயரில் யாப்பற்ற கவிதை உலகை வலம் வந்தது. வால்ட்விட்மனின் வசன கவிதைகள் தமிழ்க் கவிஞர்களின் பார்வைக்கு உட்பட்டது. இதனைப் பின்பற்றி ந.பிச்சமூர்த்தி வசன கவிதையில் சோதனை முயற்சிகளையும் புதுக்கவிதையில் பல சொல்லாக்கங்களையும் உருவாக்கினார். மணிக்கொடி காலக் கவிஞர்களுள் முதன்மையானவர் புதுமைப்பித்தன். சூழ்நிலைக்கு ஏற்ப கேலியும், கிண்டலுமாகக் கவிதை எழுதிப் புதுமை படைத்தார்.

**“பண் என்பார் பாவம் என்பார்**

**பண் மரபு என்றிடுவர்**

**கண்ணைச் செருகி**

**கவி என்பார் அண்ணாந்து**

**கொட்டாவி விட்டதெல்லாம்**

**கூறுதமிழ் பாட்டாச்சே**

**முட்டாளே இன்னுமா பாட்டு”**

என்று கவிதையினை எள்ளல் செய்கின்றார் புதுமைப்பித்தன். கு.ப. ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், தூரன், தொ.மு.சிதம்பர ரகுநாதன் போன்ற கவிஞர்களும் மணிக்கொடியில் புதுக்கவிதை எழுதி வளர்த்தவர்கள் ஆவர்.

**எழுத்து வட்டத்தினர் காலம் (1950க்குப் பிறகு)**

எழுத்து எனும் இதழின் வழி புதுக்கவிதை படைத்தவர்கள் பலர். சி.சு.செல்லப்பா இவ்விதழின் ஆசிரியராக விளங்கினார். இவ்விதழில் இடம் பெற்ற புதுக்கவிதைகளின் கருவாகப் பாலியல் சிதைவு, மனமறிவு, துக்கம், நிராசை போன்றவை அமைந்தன. மனிதனுடைய விருப்பு வெறுப்புகள் புதுக்கவிதையில் அதிகம் வெளிப்படுத்தப்பட்டன. சக்திக்கனல் இக்கால புதுக்கவிதைகளைப் பற்றிக் கூறும்பொழுது புதுக்கவிதைகள் அல்ல புதிர்க்கவிதைகள் என்கிறார். இக்காலக் கட்டக் கவிதைகளில் உருவமும், உள்ளடக்கமும் தமிழறிஞர்களுக்குப் புறம்பானதாகத் தோன்றின.

**வானம்பாடி இயக்கம் (1970க்குப்பிறகு…)**

வானம்பாடி எனும் இதழ் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை செய்திருக்கிறது. இவ்விதழில் எழுதிய புதுக்கவிஞர்கள் சமுதாயத்தை உற்று நோக்கியப் படைப்புகளைத் தந்தனர். வானம்பாடி இயக்கம் பற்றிக் கைலாசபதி குறிப்பிடும் பொழுது, எதிர்கால நம்பிக்கை, கொள்கைத் தெளிவு, தேசப்பற்று நேர்மை, தமிழ்மரபுணர்ச்சி, எளிமை, பொறுப்புணர்ச்சி, சமுதாயநேயம், கூட்டுறவு மனோபாவம் முதலியன மூன்றாவது காலக்கட்டக் கவிஞர்களிடத்தில் காணப்படுகின்றன எனத்துணிந்து கூறலாம் என்கிறார்.

**புதுக்கவிதையின் தேவை**

வளமான மரபுக்கவிதைகள் இருக்க புதுக்கவிதை என்ற புதியமுறை தமிழுக்குத் தேவையில்லை என்று கூறிய கவிஞர் பலரும் புதுக்கவிதையின் தேவையை உணர்ந்து கவிதைகளைத் தந்தனர். புதுக்கவிதையைப் புறக்கணித்துவிட்டு இன்றைய தமிழ்க் கவிதை உலகைக் காண்பது இயலாத நிலை என்பதை உணர்ந்தார்கள். புதுக்கவிதையின் தேவையைக் கூற விரும்பும் அப்துல்ரகுமான் அன்னம் இதழில் பின்வரும் கருத்துக்களைப் பதிவு செய்கிறார்.

- சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம்
- பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்தமுடைய சந்த நுட்பம்
- சுண்டக்காய்ச்சி கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு
- உள்ளடக்கமே வார்ந்து அமையும் உத்தி, புதுமை
- இவை எல்லாவற்றியும் விட புதிய பார்வை, புதிய உள்ளடக்கம்

போன்றவற்றைப் புதுக்கவிதையின் தேவைகளாகக் குறிப்பிடுகின்றனர்.

**புதுக்கவிதையில் உத்திகள்**

- படிமம்
- குறியீடு
- இருண்மை
- தொன்மை

போல்வன இன்றைய புதுக்கவிதைகளின் உத்திகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில நேரங்களில் கவிதையைப் புரியாதத் தன்மைக்கு உட்படுத்தி வருகின்றன. புதுகவிதையின் நோக்கை இலக்கை இவ்வுத்திகள் தடுத்து விடுவதும் புரியாமல் எழுதுவதே புதுக்கவிதை என்ற நினைப்போடு புதுக்கவிதைகளைத் தருவதும் ஏமாற்றத்தைத் தருகிறது.

**புதுக்கவிதையின் போக்குகள்**

வானமாமலை என்பவர் புதுக்கவிதையின் போக்குகளை வகைப்படுத்திக் கூறுகின்றார்.

- வாழ்க்கை
- சாவு
- இணைவிழை உணர்ச்சி
- நிராசை
- தனிமனிதம்
- கவிஞன் தொழில்
- எழுத்தாளன் தொழில்
- படிமம்
- குறியீடு
- உணர்ச்சி

போன்றவை புதுக்கவிதையின் போக்குகளாகச் சுட்டப்பட்டாலும் இன்று இவையனைத்தும் கடந்து எல்லாவற்றையும் புதுக்கவிதையால் சொல்ல முடியும் என்ற நிலை உருவாகி இருக்கிறது.

**புதுக்கவிஞர்கள்**

புதுக்கவிஞர்கள் அதிகமாகவே கவிதைகளைத் தந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவை நிறைவான கவிதைகளாக இருக்கின்றனவா? என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இன்றைய இதழ்களும் புற்றீசல் போல் புதுக்கவிதைகளை வெளியிட்டு வருகின்றன. காதலும் சோகமும் தவிர வேறு நோக்கு இக்கவிதையில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.புதுக்கவிதையை வளர்த்து வார்த்த தரமான புதுக்கவிஞர்களின் பணியினையும், படைப்பினையும் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

**ந.பிச்சமூர்த்தி**

புதுக்கவிதை இயக்கத்தின் விடிவெள்ளி, முதல் முயற்சியாளர் வசன கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் வல்லவர். தத்துவக் கவிஞராகவும் அடையாளப்படுத்தப்படுபவர். புற உலக அவலங்கள் மனிதனைப் புண்படுத்துவது கண்டு பொங்கி, தன் உள்ளாற்றலை வளர்த்து அதனை வென்று மனிதன் மேலோங்க வேண்டும் என்ற வேட்கையை உடையவர்.

**“வாழ்க்கைப் போர்!**

**முண்டி மோதும் துணிவே இன்பம்**

**உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி**

**ஜீவா! ̇ விழியை உயர்த்து**

**சூழ்வின் இருள் என்ன செய்யும்?**

**கழுகு பெற்ற வெற்றி நமக்கும் கூடும்''**

என்பன போன்ற கவிதைகள் இவருடையன. பிச்சமூர்த்தி கவிதைகளில் கிளிக்குஞ்சு,பூக்காரி,வழித்துணை, கிளிக்கூண்டு போன்ற படைப்புகள் சிறந்தன.

**கு.ப.ராஜகோபாலன்**

வசன கவிதையில் புதுக்கவிதையின் வேகத்தைப் பாய்ச்சியவர். ஆண், பெண் உணர்வுகளைப் புதுமையான முறையில் உளவியல் விமர்சனத்தோடு தரும் நாட்டுபுறக் கவிஞர். நாட்டுப்புறப் பாடற்பாங்கில் நெஞ்சை வசப்படுத்தும் கவிதைகளைத் தந்தவர்.

**"வாழ்க்கை ஒரு வெற்றி, ஒரு துடிப்பு**

**ஒரு காதற்பா, ஒரு இசை**

**மண்ணின் மாய மோனையில் பிறந்து**

**அரைத்தூக்கத்திலும் அதிசயத்திலும் அது உதிர்கிறது.''**

என்பது கு.ப.ராவின் கவிதை. சிறிது வெளிச்சம் 21கவிதைகள் அடங்கிய தொகுப்பு. மனித இயல்பை நுட்பமாகக் காணும் திறன் படைத்தவை இவருடைய கவிதைகள்.

**சி.சு.செல்லப்பா**

புதுக்கவிதையைத் தன் 'எழுத்து' இதழின் மூலமாக வளர்த்தவர். புதுக்கவிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். நீ இன்று இருந்தால்? மாற்று இதயம் ஆகிய இரு தொகுப்புகள் இவருடையவை.

**வல்லிக்கண்ணன்**

கிருஷ்ணசாமி என்பது இவருடைய பெயர். நையாண்டி பாரதி எனும் புனைப்பெயரில் எழுதியவர். புதுக்கவிதைத தொகுப்பு 'அமர வேதனை". இவரது புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் திறனாய்வு நூல் சாகித்ய அகாதமி பரிசு பெற்றது. கவிதைகளில்

உரைநடைத் தன்மையும், உயிரற்ற சொற்களும் மிகுதியாக அமைந்தமையால் சிறந்த புதுக்கவிஞராக அர்த்தப்படவில்லை.

**புதுமைப்பித்தன்**

இயற்பெயர் விருத்தாசலம். சிறுகதை இலக்கியத்தில் செய்த புதுமைகளைப்போலவே புதுக்கவிதையிலும் புது உருவ அமைப்பைத் தந்தவர். மரபுக் கவிதையிலும் புதுமைகள் செய்தவர். இவருடைய கவிதைகளில் எள்ளல் தன்மையும், நையாண்டிப் போக்கும் மிகுந்திருக்கும். 'புதுமைப்பித்தன் கவிதைகள்' என்பது இவருடைய கவிதைத தொகுதி.

**"வேதம் படித்திடுவோம்; வெறுங்கை முழம் போட்டிடுவோம்**

**சாதத்துக்காகச் சங்கரனை விற்றிடுவோம்!**

**அத்தனைக்கும் மேலல்லோ அகிம்சை கதைபேசி**

**வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்"**

என்பது புதுமைப்பித்தன் தந்த சிந்தனையைத் தூண்டும் கவிதை.

**சிற்பி பாலசுப்பிரமணியன்**

கவிதை சமூகத்தின் போர்வாள் என்ற நோக்குடையவர். எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுவுடைமைச் சிந்தனை உடைய புதுகவிஞர். கவித்துவம் ததும்பும் வாழ்க்கைச் சித்திரிப்பு, புதிய உருவம், புதிய நடை, போலித்தனமில்லாத படைப்பு ஆகியன இவரது கவிதைக் கோட்பாடுகள், நிலவுப்பூ,சிரித்த முத்துக்கள்,ஒளிப்பறவை,சர்ப்பயாகம்,மௌன மயக்கங்கள்,புன்னகை பூக்கும் பூனைகள், இறகு, ஒரு கிராமத்து நதி போன்ற சிறந்த படைப்புகளைத் தந்த வானம்பாடிக் கவிஞர் மணிவிழாக் கண்ட பெருமைக்குரியவர்.படிமம் மற்றும் கதைக் கவிஞர். இவருடைய கவிதை நூல்கள் அனைத்தையும் தொகுத்து மணிவாசகர் பதிப்பகம் சிற்பியின் கவிதை வானம் எனும் சிறந்த தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கிறது.

**"எங்கிருந்து வருகிறது**

**இந்த நதி?**

**மலைகளின்**

**மௌனம் உடைந்தா?**

**முகில்களின்**

**ஆடை கிழிந்தா?**

**வனங்கள் பேசிய**

**இரகசியங்கள் கசிந்தா?**

**இல்லை...**

**என்னிலிருந்து**

**என் அந்தரங்கங்களின்**

**ஊற்றுக்கண் திறந்து**

**என் மார்புகள்**

**புல்லரித்து**

**என் ரத்தக்குழாய்களில்**

**புல்லும் பூவும் மணந்து**

**என்னை முழுக்காட்டி**

**என்னையே கரைத்துக் கொண்டு**

**அங்கிருந்து வருகிறது**

**இந்த நதி.”**

என்ற கவிதையில் கவிஞர் சிற்பி தன்னை அவருடைய ஊரில் பாய்ந்தோடும் நதியோடு அணைத்துக் கொண்டு தன்னுடைய படைப்புகளுக்கு வற்றாத மூல ஊற்றாக அந்நதி திகழ்வதாகக் கருதுவது புதுக்கவிதையில் புதிய பரிணாமம் எனலாம். ஒரு கிராமத்தில் நதி சிற்பிக்கு சாகித்ய அகாதமி பரிசைப் பெற்றுத் தந்தது.

**அப்துல் ரகுமான்**

கவிக்கோ என்ற சிறப்புப் பெயருக்குரியவர். கவியரங்கத் தனிக்கவிஞர். புதுக்கவிதையில் புதிய வார்த்தைகளை வார்ப்பதில் வல்லவர். சிலேடையாகக் கவிதை தந்து சிரிக்கவும் சிந்திக்கவும் செய்பவர். படிமக் கவிஞர், பால்வீதி, நேயர் விருப்பம், மரணம்முற்றுப்புள்ளி அல்ல,சொந்தச் சிறைகள்,சலவை மொட்டு, முட்டைவாசிகள், அவளுக்கு நிலா என்று பெயர்.

இன்றிரவு பகலில், கரைகளே நதியாவதில்லை போன்றவை கவிக்கோவின் தரமான படைப்புகள். இன்றும் இதழ்களின் வழி படைப்புகளைத் தந்து கொண்டிருப்பவர். மனிதனின் மறுபக்கத்தைக் காட்டும் பித்தன் எனும் கவிதைத் தொகுப்பை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

**“குறிஞ்சி என் கொங்கை**

**முல்லை என் கூந்தல்**

**மருதம் என் மணிக்கரம்**

**நெய்தல் என் பணிப்பெண்**

**பாலை என் வேனிற்கால வியாதி!”**

என்பது மண் எனும் தலைப்பில் அமைநந்த கவிக்கோவின் சிந்தனைப் பதிவு.

**மீரா**

மீ.ராசேந்திரன் என்பது பெயர். உவமைக்கவிஞர் சுரதாவின் தாக்கத்தால் சிறுவயதிலேயே கவிதை படைத்தவர். புதுக்கவிதை வரலாற்றில் தனித்துச் சுட்டுவதற்குரியவர். அன்னம், அகரம் பதிப்பகங்களின் வாயிலாகத் தரமான நூல்கள் பலவற்றைப் புதுப்பார்வையோடு வெளியிட்டுச் சாதனைப் படைத்தவர். இராசேந்திரன் கவிதைகள்,மூன்றும் ஆறும்,ஊசிகள், கனவுகள்+கற்பனைகள்= கவிதைகள் ஆகியன இவரது படைப்புகள். இவற்றுள் கனவுகள்+கற்பனைகள்= காகிதங்கள் ஒரு புதுமையான சாதனை படைப்பு.

மாமன் மகளைச் சொத்துக்காக மணந்து கொள்ளும் இன்றைய இளைஞர்களின் செயல்பாட்டை வெளிக்காட்டுவதன் மூலம் நம் சமூக அமைப்பை, திருமண முறையை உணர்வுகளைப் பொருளாதார காரணங்களுக்காகச் சாகடித்து விடும் இளைஞர்களை

**“உனக்கும் எனக்கும்**

**ஒரே ஊர் -**

**வாசுதேவநல்லூர்…**

**நீயும் நானும்**

**ஒரே மதம்…**

**திருநெல்வேலிச்**

**சைவப்பிள்ளைமார்**

**வகுப்புங்கூட...**

**உன்றன் தந்தையும்**

**என்றன் தந்தையும்**

**சொந்தக்காரர்கள்**

**மைத்துனன்மார்கள்-**

**எனவே**

**செம்புலப் பெயல் நீர் போல**

**அன்புடைநெஞ்சம் தாம் கலந்தனவே"**

என கவிஞர் மீரா விமர்சிப்பது சிந்தனையைத் தூண்டுகிறது.

**புவியரசு**

ஜகன்னாதன் எனும் பெயருடைய வானம்பாடிக் கவிஞர். கவிதை வரலாறு,இலக்கியம்,நாடகம் போன்ற துறைகளிலும் சாதனை புரிந்தவர். இதழ்களின் ஆசிரியராகவும், துணையாசிரியராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர்.புவியரசு கவிதைகள்,இதுதான் மீறல், இப்போதே இப்படியே ஆகியன இவர் தந்த கவிதைத் தொகுப்புகள். நவீன நாடகங்கள் பலவற்றை மேடையேற்றிலும், தியைப்பட பாடலாசிரியராக விளங்குவதும், கவிதை கடந்து ஆற்றிவரும் அர்த்தமுள்ள பணிகள்.

**சக்திகனல்**

வானம்பாடி கண்ட கவிஞர்களுள் முக்கியமானவர். பழனிச்சாமி என்ற பெயருடையவர்.கவிதை,இலக்கியம்,பொதுப்பணி ஆகியவற்றை நோக்காகக் கொண்டவர். சுக்திக்கனல் கவிதைகள்,புழுதிப்புயல், கனகாம்ரமும் டிசம்பர் பூக்களும், நீங்கள் கேட்டவை போன்ற படைப்புகளை அளித்த சிறப்பிற்குரியவர்.

**ஈரோடு தமிழன்பன்**

மரபுக்கவிதையில் வெற்றி பெற்றுப் புதுக்கவிதையிலும் சுவடுகள் பதித்தவர்.விடிவெள்ளி என்ற பெயரும் உண்டு. இயற்பெயர் செகதீசன். கவித்துவமும் மக்கள் சார்ந்த புரட்சிக் கருத்துக்களும் ஒரு சேர இணைந்து, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக் குரலை ஒலிப்பனவாக அமைவன இவரது

கவிதைகள். சிலிர்ப்புகள்,தோணி வருகிறது, தீவுகள் கரையேறுகின்றன,சூரியப்பிறைகள்,ஊமை வெயில்,அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் போன்றவை தமிழன்பனைப் புதுக்கவிஞராக அடையாளப்படுத்திய படைப்புகள்.

**" ஏன்**

**இரவுகளில் மனிதர்கள்**

**தம்முள் பதுங்கியிருக்கும் விலங்குகளை**

**வேட்டையாட**

**விடுவிக்கின்றனர்?**

என்ற வினாவை எழுப்பும் தமிழன்பன்

**"ஏன் என்றால்**

**மனிதனை அப்படி**

**மாற்றி வைக்கிறது**

**பகல்"**

என்று பதில் உறுவது மனித இயல்பை எதார்த்தமாக எடுத்துக்காட்டுகிறது.

**எழில் முதல்வன் (மா.இராமலிங்கம்)**

சுரதாவைப் பின்பற்றி எழுதியவர்.கவிஞர் உரைநடை ஆசிரியர். திறனாய்வாளர் எனும் பல கோணங்களில் சிந்தனைகளைப் பதிவு செய்து வருபவர். தற்காலப் படைப்பிலக்கியக்கர்த்தா. ஓர் ஆமையின் வருகை,நினைவுப் பூக்கள் ஆகியன இவரது புதுக்கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

**தமிழ் நாடன்**

இயற்பெயர் சுப்பிரமணியம். சிவப்புச் சிந்தனைகளைக் கவிதையாக்கும் நோக்குடையவர். தற்காலக் கதையுலகில் குறிப்பிட்டத் தகுந்தவர். முற்போக்கும் தனிப்போக்கும் மிகுந்த அங்கதக் கவிஞர். அம்மா, அப்பா,நட்சத்திரப்பூக்கள் போன்ற புதுக்கவிதைத் தொகுப்புகளையும், புதுக்கவிதையின் வடிவங்களும் வகைகளும் என்ற புதுக்கவிதைத் திறனாய்வு நூலையும் தந்தவர்.

**"நகம் வெட்டும் சாக்கில்**

**விரைலையே வெட்டிவிட்ட**

**செவிலித்தாயிடம்**

**சிக்கிக் கொண்டாய் நீ''**

என இந்திய அம்மாவைப் பார்த்துப் பேசும் தமிழ் நாடனின் கவிதை புகழ் பெற்றது. நெருக்கடி கால பிரகடனத்தை மிகச்செறிவாக இக்கவிதைப் பிரதிபலிப்பதை உணரலாம்.

**குருவிக்கரம்பை சண்முகம்**

புனைபெயர் செங்குயில். குவிதையை இதமாக நேசிப்பவர். புரட்சிக் கவிஞரையும், ந.பிச்சமூர்த்தியையும் வழிகாட்டியாகக் கொண்டவர்.ஆங்கிலக் கவிதை உலகில் பைரனும் கீட்சும் பெற்றுள்ள இடத்தினைத் தமிழ்க் கவிதையுலகில் பெற்றுள்ள கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் கவிதைகள், பூத்தவெள்ளி ஆகியன இவருடைய புதுக்கவிதைத் தொகுதிகள்.

**சங்ககாலப் பெண்களுக்கு இடையே இல்லை**

**எங்கள் காரப் பெண்களுக்கு உடையே இல்லை!**

என்பன போன்ற பகுதிகள் சமுதாய நோக்குமிக்க சிந்தனைக்குரிய கவிதைகளாக விளங்குகின்றன.

**இன்குலாப்**

இயற்பெயர் சாகுல் ஹமீது. புதுப்பாதை வகுத்த கவிஞர். உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காகக் கவிதை வழி குரல் கொடுப்பவர். மார்க்சிய இலக்கியவாதி. இன்குலாப் கவிதைகள், சூரியனைச் சுமப்பவர்கள், கிழக்கும் பின் தொடரும், இவர்கள் எழுப்பிய இந்தப் பிரமிடுகள், மருத்துவச்சி ஆகியன இவரது படைப்புகள்.

**நா.காமராசன்**

வானம்பாடிக் கவிஞர்களில் சாதாரண வாசகனையும் ஈர்த்த பெருமைக்குரியவர். புதிய சொல்லாட்சிகளைத் தருவதில் வல்லவர்.

**" ஏழைகளின் அடுப்பெரிப்போம்**

**இல்லையெனில்**

**சூரியனில் தீக்குளிப்போம்''**

**“ நாங்கள் நிர்வாணத்தை**

**விற்பனை செய்கிறோம்**

**ஆடை வாங்குவதற்காக”**

போன்ற கவிதைகளின் வேகத்தால் அனைவரது கவனத்திற்கு உள்ளான சிறந்த கவிஞர். கறுப்பு மலர்கள், கிறுக்கல்கள், நாவல்பழம், மகாகாவியம், சுதந்திரதினத்தில் ஒரு கைதியின் டைரி, தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும், சூரியகாந்தி, சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் போன்ற படைப்புகள் இவருடையன.

**முகம்மது மேத்தா**

சமூகச்சிக்கல்களை மையமிட்டு எழுதும் தரமான புதுக்கவிஞர். உள்ளடக்கம், வடிவம் உணர்த்தும் முறையில் புதுமை, கற்பனை, நளினநடை, நலமான சொல்லாட்சி, அழமான மன உணர்வுகள் போன்ற பண்புகள் இவரது கவிதைகளின் தனித்துவம். இவரைப் பின்பற்றி எழுதிய புதுக்கவிஞர்கள் பலர். துமிழகக் கவிஞர் பேரவையின் தலைவராகப் பணியாற்றியவர்.

**‘எங்கள் வாழ்கை**

**இருட்டோடு**

**இல்லறம் நடத்துகிறது’**

**‘ பூக்களிலே நானும் ஒரு**

**பூவாகப் பிறந்தாலும்**

**பொன் விரல்கள் தீண்டலையே**

**பொன் விரல்கள் தீண்டலையே**

**நான் பூ மாலை ஆகலியே’**

போன்ற கவிதைகள் சமுதாய நோக்குடைய சிந்தனைக் கவிதைகள்.கண்ணீர்ப்பூக்கள், இதயத்தின் நாற்காலி, நந்தவன நாட்கள், காத்திருந்த காற்று, மனச்சிறகு, அவர்கள் வருகிறார், முகத்துக்கு முகம், நடந்த நாடகங்கள், திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், ஒரு வானம் இரு சிறகு, ஊர்வலம் போன்றன மேத்தாவின் புதுக்கவிதைப் பாடைப்புகள். ‘ஆகாயத்திற்கு அடுத்த வீடு’ எனும் கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றார்.

**வலம்புரிஜான்**

வார்த்தைச் சித்தர் எனப் போற்றப்படுபவர்.பேச்சாற்றல் மிக்கவர்.கவிஞர். கட்டுரையாளர், திறனாய்வாளர்,புனைகதையாளர்,நாடக ஆசிரியர் எனப் பல துறைகளில் சாதனை படைத்தவர். இதழாசிரியர். அனுபவம் மிக்கவர்.

**“எப்போதும் வருவதல்ல கவிதை**

**எப்போதோ வருவது கவிதை’**

**‘நினைத்தால் வருவதல்ல கவிதை**

**நெஞ்சு கனத்தால் வருவது கவிதை’**

எனக் கவிதைக்குப் புது இலக்கணம் தந்த இலக்கியச் சித்தர். காற்றின் கவசம், அம்மா அழைப்பு, ஒரு நதி குளிக்கப் போகிறது, பதினோலாவது கட்டளை, அந்த இரவில் சந்தன மின்னல், நத்தைக் கூடுகள், கவிதைக் கனிகள் போன்ற படைப்புகளைத் தந்தவர்.

**பாலா**

பாலச்சந்திரன் என்பதன் சுருக்கம். புதுக்கவிதை உலகில் தடம் பதித்தவர். பல நூல்களுக்கு முன்னுரை எழுதிய திறனாய்வாளர். நீ என்ற கவிதைத் தொகுப்பித்தவர். ‘புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை’ எனும் நூல் புதுக்கவிதைகளின் நோக்கையும், வெளியீட்டு மறைமையையும் பற்றிய திறனாய்வு நூலாக விளங்குகின்றது. ‘இன்னொரு மனிதன்’ என்ற கவிதைத் தொகுப்பைத் தந்தவர். வளர்ந்து வரும் பலபுதிய தமிழலக்கியப் போக்குகளுக்கு வழிகாட்டியாய் விளங்கி வருபவர்.

‘வாக்குப் பெட்டி’ என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் அரசு, ஆட்சி, கட்சி ஆகியவை சாதாரண மனிதனுக்கு மானம் காக்க ஆடை வழங்கமுடியாத நிலையை

**“நாங்கள்**

**எங்களில் ஆடையற்றவருக்கு**

**ஒரு சட்டை தருகிற**

**ஒரு தையற்காரர் வேண்டி**

**இந்தப் பெட்டிக்குள்**

**சில நேர்த்தியான ஊசிகளைப்**

**போட்டோம்**

**நீ திறந்து எடுத்துக் கொண்ட போது**

**அவை எங்கள் உடமைகள்**

**எல்லாம் பறித்து அடைத்துக் கொள்ளும்**

**கோணி ஊசிகளாக மாறிவிட்டால்**

**பாவம் நீ என்ன செய்வாய்''**

என்ற கவிதையில் பதிவு செய்து இன்றைய ஆட்சிமுறையை ஏளனம் செய்கின்றார்.

**அக்னி புத்திரன்**

இயற்பெயர் அரங்கராசன். இயக்கச் சிந்தனைகளைக் கவிதைகளாகத் தந்தவர்.வானம்பாடிக் கவிஞர். சமுதாய மாற்றம், மாறி வரும் வாழ்க்கை மதிப்பீடுகளை உணர்த்துவது இவரது நோக்கம். சோதனை நாடக இயக்கங்களில் ஈடுபாடு கொண்டு செயலாற்றி வருபவர். விடுதலைக்குப்பின் தமிழில் புதுக்கவிதை என்பது புதுக்கவிதையைப் பற்றிய திறனாய்வு நூலாக விளங்குகின்றது.

**வைரமுத்து**

வானொலியில் முதன் முதலில் புதுக்கவிதைப் பாடிய பெருமைக்குரியவர். நாடறிந்த கவிஞர். திரைப்படப் பாடலாசிரியர். புதிய இளம் கவிஞர்களுக்கு வழிபாட்டியாக விளங்குபவர். சிகரங்களை நோக்கி, ரத்ததானம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம்,கவிராஜன் கதை, கொடி மரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள் போன்றன புதுக்கவிதைத் தொகுதிகள். துணைவியார் பொன்மணி வைரமுத்துவும் புதுக்கவிஞரே.

**''அவன்**

**ஒரு**

**பட்டு வேட்டி பற்றிய**

**கனவில் இருந்த போது**

**கட்டியிருந்த கோவணம்**

**களவாடப்பட்டது"**

என 1947, ஆகஸ்டு 15 என்ற தலைப்பில் எழுதிய கவிதை சமூக அவலத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

**பாப்பிரியா**

இயற்பெயர் பொன் திராவிடமணி. பாட்டாளி மக்களின் மனக்குமுறல்களைக் கவிதையாகத் தந்தவர். நாவலாசிரியராகவும், சிறுகதையாசிரியராகவும் விளங்குகின்றார். கண்சிமிட்டும் கல்லறைகள், வீதிகளை நேசிக்கும் வீணைகள், எங்கள் கிராமத்துப் பக்கம் போன்றன இவருடைய புதுக்கவிதைத் தொகுதிகள். இவற்றுள் கிராமிய வாழ்வினைப் புதுக்கவிதையில் தரும் முதல் நூலாக விளங்குவது எங்கள் கிராமத்துப் பக்கம் எனும் கவிதைத் தொகுப்பு.

**அமுதபாரதி**

அமுதோன் எனும் பெயரில் சிறந்த ஓவியராகச் செயல்பட்டு வருபவர். கவியாற்றல் மிக்கவராகக் காணப்படுகின்றார். உதய காலங்கள், இணை தேடும் இதயம், மன்மத ராகங்கள், புள்ளிப் பூக்கள் போன்றவை இவருடையன. இவற்றுள் தமிழில் முதன் முதலாக வெளிவந்த முழு ஹைகூ கவீதை நூலாகச் சிறப்புப் பெறுவது புள்ளிப் பூக்கள் எனும் தொகுப்பாகும்.

**கழனியூரான்**

இயற்பெயர் அப்துல் காதர்.புதுக்கவிதையின் பரிணாம வளர்ச்சியாகவும், ஜப்பானியக் கவிதைத் தாக்கத்தாலும் விளைந்த ஹைகூ என்ற வடிவமைப்பில் கவிதைகள் தருவதில் வல்லவர். நிரந்தர மின்னல்கள்,நெருப்பில் விழுந்த விதைகள், நட்சத்திர விழிகள் போன்றன இவருடைய ஹைக்கூ கவிதைத் தொகுதிகள்.

**"மனிதர்களை உரமாக்கும்**

**ஞானிகளுக்கு உரமாகும்**

**வறுமை'**

**"நேற்றுவரை தூற்றியவர்கள்**

**நாளை முதல் போற்றுவார்கள்**

**இன்று அவன் இறந்துவிட்டான்"**

இவை கழனியூரான் படைத்தளித்த சிந்தித்து மகிழ்தற்குரிய சில ஹைகூ கவிதைகள்.

**ஞானக்கூத்தன்**

எதிர்ப்புத் தன்மையைக் கவிதை மூலம் வெளிப்படுத்துபவர். கசடதபற, நடை போன்ற இதழ்களின் வழி அடையாளப்படுத்தப்பட்டவர். அன்று வேறு கிழமை என்ற புதுக்கவிதைத தொகுப்பையும். கவிதைக்காக என்ற திறனாய்வு நூலையும் தந்துள்ளார்.

**கலாப்பிரியா**

பாலியல் தன்மைக் கவிதைகளை எதார்த்தமாகப் படைப்பவர். காதல் சோகம் விரவி வரும் 'எட்டயபுரம்' எனும் கவிதை புகழ்பெற்றது. கலாப்பிரியா கவிதைகள் எனும் பெயரில் முழுத்தொகுப்பு வெளிவந்துள்ளது.

**பசுவைய்யா**

இயற்பெயர் சுந்தரதாமசாமி. நூவலாசிரியர். ஆழகியல், அங்கதம், படிமம், இருண்மை போன்றன இவரது கவிதை உத்திகள். 107 கவிதைகள் எனும் பெயரில் இலருடைய கவிதைகள் தொகுப்பாக வெளிவந்துள்ளது.

**ஞானி**

மார்க்கசியத் திறனாய்வாளர். கல்லிகை என்ற கதைக்கவிதை இவருடையது. தொன்ம உத்தியைப் பயன்படுத்துவதில் சிறந்தவர்.

**சி.மணி**

சிற்பியின் இலக்கிய விருது பெற்றவர். ஒளிச்சேர்க்கை, வரும் போகும் முதலியவை இவரது கவிதைத் தொகுதிகள். பச்சையம் எனும் கவிதை சிறப்பானது.

**பழமலய்**

நாட்டுப்புறம் சார்ந்த கவிதைகளைப் படைப்பதை உத்தியாகக் கொண்டவர். சிற்பி, இலக்கிய விருதைப் பெற்றவர். இவருடைய சனங்களின் கதை. குரோட்டன்களோடு கொஞ்ச நேரம், இன்றும் என்றும் முன்நிலவுக் காலம், புறநகர் வீடு, இரவுகள் அழகு, வேறு ஒரு சூரியன் போன்ற புதுக்கவிதைகள் தொகுப்புகளைத் தந்தவர்.

**"முத்தால் ராவுத்தரே… என்று**

**மூச்சுக்கு மூச்சு**

**பெயர் வைக்க அவன் பெயரைப்**

**பெற்றோர்கள் கேட்டால்**

**என் பெயரைச் சொல்கிறான்**

**‘பாட்டன்’ சொல் மருவிப்**

**பட்டாணி ஆகிவிட்டேன்**

**மற்றபடி நான்**

**உப்புக்கடலையும் இல்லை!**

**பொட்டுக் கடலையும் இல்லை!”**

என்ற கவிதையில் ‘முத்தால் ராவுத்தர்’ என்ற இசுலாமியப் பெயர் வட்டார வழக்கில் பெயர் மருவி பட்ாணி சாமி ஆகிவிட்டதை நகைச்சுவையோடு எடுத்துக்காட்டுகிறார்.

**அபி**

தமிழ்ப் பேராசிரியர், முழுப்பெயர் அபிபுல்லா, மனக்கோலங்களை கவிதையாக்குவதில் தேர்ந்தவர். அந்தர நடை என்பது இவரது கவிதைத் தொகுப்பு.

**“விளைந்த வினை**

**விளைந்தது**

**விளைந்தவை உதிர்த்து**

**மீண்டும் பெருகின**

**மீண்டும் பெருகின**

**மீண்டும்…”**

என்னும் கவிதை மனத்தின் ஊசலாட்டத்தைக் காட்சிப்படுத்துகிறது.

**கல்யாண்ஜி**

மென்மையாக அதிர்ச்சியூட்டும் புதுக்கவிதைகளைத் தருபவர். இருத்தல், சிந்தனைகளைக் கவிதைகளில் காட்சிப்படுத்தும் திறனுடையவர். புலரி, காலம் என்ற கவிதைத் தொகுப்புகளைத் தந்தவர்.

**“கருப்பு வளையல் கையுடன் ஒருத்தி**

**குனிந்து வளைந்து பெருக்கிப் போனாள்**

**வாசல் சுத்தமாச்சு மனசு குப்பையாச்சு”**

என இளைஞனின் மனநிலையை இக்கவிதை காட்சிப்படுத்துகிறது.

**பஞ்சு**

பஞ்சாங்கம் என்பது இவரது பெயர். சமுதாய நோக்கில் கவிதைகளைத் தருபவர். ஓட்டுப்புல், நுற்றாண்டுக் கவிதைகள் என்ற இரண்டும் இவருடையன. சிறந்த புத்திலக்கியத் திறனாய்வாளராகவும் விளங்குகிறார்.

**கந்தர்வன்**

சமுதாய விமர்சனம் சார்ந்த கவிதைகளை அங்கதச் சுவையோடு படைப்பவர். சிறைகள், கிழிசல்கள் என்ற கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

**ஆண்டாள் பிரியதர்சினி**

தமிழ், ஆங்கில இலக்கியங்களில் பரிச்சயம் மிக்கவர். பெண்களின் எதிர்ப்பார்புகளை, கனவுகளைத் தனது கவிதைகளில் பதிவு செய்வதில் வெற்றி பெற்றவர். சுயம் பேசும் கிளி, முத்தங்கள் தீர்ந்து விட்டன ஆகியன இவருடைய சிறந்த புதுக்கவிதைத் தொகுப்புகளாகும். பெண்களின் வாழ்க்கையில் புதுமை எண்ணங்கள் முழுவீச்சு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் உருவான.

**“மறுபடி மறுபடிக்**

**கழுவி மெழுகி**

**மறுபடி மறுபடி**

**சமைத்து சமைத்து**

**மறுபடி மறுபடி**

**சுமந்து தளர்ந்து**

**மறுபடி ஓடி**

**மறுபடி ஓய்ந்து**

**மகளே… என் மகளே**

**இதுவா என் வாழ்க்கை"**

என்ற கவிதை கவிஞரின் பெண்கள் பற்றிய கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டுகிறது.

**பத்மாவதி தாயுமானவன்**

கவியரங்குகளில் கவிதைகள் தந்து பலருடைய கவனத்தை ஈர்த்து வருபவர். சமூக அவலங்களைக் கிண்டல் செய்யும் அங்கதத் தன்மை இவரது கவிதையில் வெளிப்படும். மறுபடியும், அடுப்பங்கரை வெளிச்சத்தில் ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள் கடமையைச் செய் எனும் கவிதையில்

**"கீதா உபதேசம்**

**அற்புத காட்சிதான்**

**விரும்பி ரசிப்போம்**

**விலைக்கு வாங்கி**

**வீட்டில் சுவரில்**

**மாட்டி (மட்டும்) வைப்போம்**

என்று கூறுகிறார்.

**சல்மா**

ரெக்கையா மாலிக் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் சல்மா என்ற புனைபெயரில் பெண்ணிய மொழி சார்ந்த கவிதைகளைப் படைத்து வருபவர். ஒரு மாலையும் இன்னொரு மாலையும், பச்சைத்தேவதை ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள். பயங்கள் என்ற தலைப்பில் அமைந்த

**"இன்று மறுபடியும்**

**ஒருமுறை**

**என்னைக் கண்ணாடியில் பார்க்கிறேன்**

**பிறர் பயப்படும்படியாகக்**

**குறிப்பாக நீ பயம் கொள்ளும்படியாக இல்லை**

**என் தோற்றம்**

**நான் தூங்கும் போதும்**

**அதைரியத்துடன் விழித்திருக்கிறாய்**

**இன்றும்**

**என்னை வீழ்த்திக் கொண்டிருப்பது**

**உன் வலிமையில்லை**

**உன் பயங்கள்"**

என்ற கவிதை சல்மாவின் புதிய நோக்கையும் போக்கையும் புலப்படுத்துகிறது.

**சுகிர்தாராணி**

ஆணாதிக்க உலகம் கட்டமைத்த பெண் பற்றிய பார்வைகளை உடைத்தெறியும் வகையில் கவிதைகள் படைத்து வருபவர். கைப்பற்றிய என் கனவு கேள், இரவு மிருகம் ஆகியன இவரது கவிதைத் தொகுப்புகள்

**"என் மீது உருண்டு திரண்ட**

**உன் பிரியத்தையே பிழித்து தருகின்றேன்**

**அது விஷச் சாறாகவும் இருக்கவாம்."**

என்ற கவிதை இவருடைய ஆணாதிக்க எதிாப்புக் குரலை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

**மாலாதி மைத்ரி**

தனக்கே உரித்தான கவிதை மொழியைக் கண்டறிந்து பெண்ணியம் சார்ந்த கவிதைகளைப் படைத்து வருபவர். சங்கராபரணி, நீரின்றி அமையாது உலகு, நீலி ஆகியவை இவருடைய கவிதைத் தொகுப்புகள்

**"ஃபேர் அண்ட்லவ்லி முகம்**

கிளினிக் ப்ளஸ் கூந்தல்

லக்ஸ் பட்டு போன்ற சருமம்

ஐடெக்ஸ் கண்கள்

இமாமி இதழ்கள்

லக்மே நகங்கள்

லலிதாவின் ஆபரணங்கள்

நல்லியின் ஆடைகள்

சரவணாவின் சீர்வரிசைகள்

நாளொரு மேனியும்

பொழுதொரு வண்ணமுகமாக

உறவாடியதில்லை அவற்றுடன்

என்றாலும்

அவள் முன்னே

இராஜகுமாரர்கள்

பிரியாணிப் பொட்டலத்துடன்

தோன்றுகிறார்கள் பின்னிரவில்

வீதியோரமாக அமர்ந்து

பேன்கள் உதிரும்

தலையைச் செறிந்தபடி

தகரக்குவளையில் உருளும்

கூழாங்கல்லின் லயத்துடன்

பாடிக் கொண்டிருக்கிறாள்

பகலெல்லாம் பைத்தியக்காரி"

நுகர்வோர் என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை நமது கலாச்சாரத்தில் பெருகிவரும் விளம்பர மோகங்களை எதார்த்தமான தன்மையில் விமர்சனம் செய்கிறது.

தமிழில் புதுக்கவிஞர்களின் பட்டியலும் படைப்பும் மிக அதிகம் பலர் செறிவான புதுக்கவிதை படைப்புகளைத் தந்து கொண்டிருக்கின்றன. பிரான்சிஸ் கிருபா, தேவதச்சன், தேவேந்திர பூபதி, கபிலன்,வைரமுத்து, யுகபாரதி, தபசி,அன்பாதவன்,என்.டி.ராஜ்குமார், லதா, அ.வெண்ணிலா, அழகுநிலா, வைகைச் செல்வி,ரமேஷ் - பிரேம்,கரிகாலன், இரா.முருகன், கோகுல கண்ணன், யுவன் சந்திரசேகர், இளம்பிறை, தேன்மொழி, கனிமொழி, மதிவாணன், சூத்ரதாரி ஆகியோர் புதுக்கவிஞர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு வளர்ந்து வருபவர்கள்.

**3. கைக்கூ கவிதைகள்:**

மூன்றடி எல்லைக்குள் விளங்கும் கவிதை. நெருப்புக்குச்சி! அழகிய வடிவம்! உராய்ந்தால் தீப்பறப்பது போல், கைக்கூ கவிதைகளும் பொருட்செறிவோடு பிறக்கின்றன. எரிமலைக்குள் அடங்கிக் கிடக்கும் தீக்குழம்பு போல், ஆழமான பொருள் இக்கவிதைகளில் ஊற்றெடுக்கின்றன. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பது போல், குறுகிய வடிவமென்றாலும் கவிதைப் பண்புகளை உள்ளடக்கி உணர்ச்சிகளின் தேக்கமாக கைக்கூ கவிதைகள் திகழ்கின்றன.

கவிதைகளின் குறுவடிவம் தமிழுக்கும் புதுவரவன்று. தமிழ் மூதாட்டி அவ்வையார் ஒருவரியில் அறக்கவிதைகள் படைத்தார். வான்புகழ் வள்ளுவர் இரண்டு அடிகளில், ஏழே சீர்களில் உலகம் வியக்கும் அறநூல் திருக்குறள் படைத்தார். சங்க இலக்கியம் ஐங்குறுநூறு மூன்று அடிப் பாடல்களால் அகக்கருத்துக்களைச் சுருக்கித் தருகின்றன.

ஆனால் சப்பான், நாட்டிலிருந்து இக்கவிதை வடிவம் பிறநாடுகளுக்குப் பரவியுள்ளது என்பர். சப்பான் நாட்டு மக்கள் உயரம் குறைந்தவர்கள். ஆனால் அழகும் அறிவும் நிறைந்தவர்கள். அவர்கள் விரும்பும் பொருட்கள், படைக்கும் பொருட்கள் கலைநுட்பம் நிறைந்த சிறிய வடிவங்களே! இயற்கையில் நாம் காணும் பெரிய மரங்களைக் கூட வீட்டில் தொட்டியில் வளர்க்கும் சிறிய வடிவங்களாக்கி மகிழ்கின்றனர். அம்மக்கள் அவர்கள் தங்கள் அழகிய கைக்கூ கவிதைகள்! முதலடியில் ஐந்து சீர்: இரண்டாம் அடியில் ஏழு சீர் மீண்டும் மூன்றாமடியில் ஐந்து சீர் என்று விளங்குவது கைக்கூ கவிதை வடிவம் என இலக்கண அமைதி கூறுவர்.

தமிழில் தற்காலத்தில் கைக்கூ கவிதைகள் பெருவரவேற்பைப் பெற்றுள்ளன. சமுதாயச் சிக்கல்களை எடுத்துக்காட்டுவதற்கு இன்றைய கவிஞர்கள் கைக்கூ கவிதைகளைப் பயன்படுத்துகின்றனர். உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்க்கைப் போராட்டங்கள், வரதட்சணைக் கொடுமைகள், பெண்ணடிமை, விதவை மறுவாழ்வு, இன மதச் சண்டைகள், கொத்தடிமைத்தளம், அரசியல் போக்கு, ஏழ்மை, வறுமை, காதல் போன்றவற்றை நறுக்குத் தெரித்தாற்போல்,

படிப்பவர்க்குப் பொருள் சுடச்சுடப் புரியும் வண்ணம் கைக்கூ கவிதைகளில் படைக்கின்றனர். பொதுவுடமைச் சித்தாந்தங்களை இன்றைய இக்கலைவடிவங்கள் பெரிதும் தாங்கி வருவதைக் காணமுடிகிறது.

ஏழைகள் அரசாங்கத்தாலும், செல்வந்தர்களாலும் எப்படியெல்லாம் வரிக்கொடுமை, உழைப்பால் பிழியப்படுகின்றார்கள் என்பதைப் புதுவை தமிழ்நெஞ்சன் தம் கவிதைகளில் படம் பிடிக்கின்றார்.

**ஏழைகளின் நெஞ்சில்**

**அனல் மின்சாரம் எடுப்போம்**

**மின்வெட்டு இல்லை.**

சலாவுதீன் என்ற கவிஞர் மனிதனாகப் பிறந்தும், வாழ வழியில்லாமல் தவிக்கும் மக்கள் இனத்தை நம் கண்முன் கொண்டு வருகிறார்.

**லஞ்சம்**

**பசி பட்டினி**

**நடக்கும் மரங்கள்**

உணவுக்காக மனிதன் நடத்தும் வர்க்கப் போராட்டம்: நாயோடு போராடும் மனிதன்! இக்காட்சியைக் கண்டு கண்ணீர் விடுவோமா! நகைப்போமா! ஆடலரசன் சமுதாய வீதியில் தாம் கண்ட காட்சியைக் கவிதை ஓவியமாக்குகிறார்: காணுங்கள்:

**இலையை எங்கே போட**

**எதிரெதிராய் எதிர்ப்பார்ப்புடன்**

**நாயும் மனிதனும்**

கவிஞர் தமிழன்பன் மனிதமுயற்சி வெற்றிக்கனியைப் பெற்றுத் தரும் என முரசொலிக்கின்றார் தம் கவிதை மூலம். குறிப்பாக மாணவர்களுக்கு அவர் கவிதை எழுச்சி உள்ளத்தைத் தோற்றுவிக்கும்!

**பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு**

**முத்தமிட்டுச் சொன்னது பூமி!**

**ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!**

## நாவல்

மேலை நாட்டார் தொடர்பால் தமிழுக்கு கிடைத்த புதிய வரவுகள் புதினமும் ஒன்றாகும். தொல்காப்பியம் உரை நடை வகை பற்றிக் குறிப்பிடும் பொருளோடு புணராப் பொய்ம்மொழி, பொருளோடு புணர்ந்த நகைமொழி என்பவை பழங்காலக் கதை இலக்கியங்களைச் சுட்டுவன என்பர். பல்வேறு மனிதர்களின் வாழ்க்கையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை, நிலைக்களனாகக் கொண்டு படைக்கப்படுவன புதினங்களாகும்.

சாவித்துவாரம் வழியே பார்ப்பது சிறுகதை எனவும் சாளரம் வழியே பார்ப்பது புதினம் என்றும் விளக்குவர். ஒரு காலத்தில் காப்பியங்கள் பெற்றிருந்த இடத்தை இன்று புதினங்கள் பெற்றுள்ளன எனலாம். புதினங்களில் பலவகையுண்டு. சில, நிகழ்ச்சிகளை முதன்மைப்படுத்துபவை, சில, பாத்திரங்களைப் பெருமைப்படுத்துபவை, சில உத்திகளால் சிறப்பவை. நூற்றாண்டுகளுக்கு மேலான தமிழ்ப் புதினங்களைச் சமூகப் புதினங்கள், துப்பறியும் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், வட்டார வழக்குப் புதினங்கள், அரசியல் புதினங்கள், பாலுறவுப் புதினங்கள், உளவியல் புதினங்கள் எனப் பலவகைப்படுத்தலாம்.

மேலை நாடுகளில் சிறுகதையின் தோற்றத்திற்குப் பிறகே புதினம் தோன்றியது. ஆனால் தமிழில் புதினம் தோன்றியதற்குப் பிறகே சிறுகதை தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. 1740-இல் கடிதம் எழுதுவது போன்ற அமைப்பில் எழுந்த ‘‘பாமெலா’’ என்ற நூலே ஆங்கிலத்தில் முதற் புதினமாகும்.

### தொடக்ககாலப் புதினங்கள்:- (1879-1910)

கி.பி.1878-இல் மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையால் ‘‘பிரதாப முதலியார் சரித்திரம்’’ என்ற புதினம் எழுதப்பட்டது. அக்காலச் சமுதாயத்தின் பண்பாட்டை, சில மனிதர்களின் வகை மாதிரிகளை அங்கத நடையில் புலப்படுத்தும் அக்கதைக் காப்பிய அமைப்பில் எழுதப்பட்டதாகும். தொடர்ந்து பி.ஆர்.இராஜமையரின் கமலாம்பாள் சரித்திரம், மாதவையாவின் பத்மாவதி எழுந்தன. இப்புதினங்களும் அன்றைய நடப்பியலைச் சித்தரிப்பனவாகும்.

### துப்பறியும் புதினங்களும் பிறவும் (1910-1935):-

1910-க்கு பிறகு புதியப் போக்கு மாறியது. ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார் ஆகியோர் மேலை நாட்டுப் புதினங்களைத் தழுவித் துப்பறியும் புதினங்களை எழுதிப் பரபரப்பு ஏற்படுத்தினார்கள். வடுவூராரின் மருங்காபுரி மாயக் கொலை, மேனகா, திகம்பரச்சாமியார் முதலியன புகழ்பெற்ற படைப்புகளாகும். பெண்ணின் வாழ்க்கையை

எழுதிக் குவித்தார் வை.மு.கோதை நாயகி அம்மாள். பிற்காலத்தில் மேதாவி, சிரஞ்சீவி, பி.டி.சாமி போன்றோரும் சங்கர்லால் என்ற பாத்திரத்தை உயிர்களை ததும்ப உலவவிட்ட தமிழ்வாணனும் இவ்வகைப் புதினங்களை வளர்த்துள்ளார்கள்.

பரிதிமாற்கலைஞரின் மதிவாணன் மறைமலை அடிகளின் கோகிலாம்பாள் கடிதங்கள் என்ற புதினங்கள் நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டவையாகும்.

காந்தீயத் தத்துவத்தை வளர்க்கும் வகையில் கிராமிய வாழ்வை அடிப்படையாகக் கொண்டு கே.எஸ்.வெங்கடரமணி என்பவர் எழுதிய தேசபக்தன் கந்தன், முருகன் ஓர் உழவன் என்ற புதினங்கள் சிறப்புடையவையாகும்.

**வரலாற்றுப் புதினங்கள் (1936-1960):-**

கதை சொல்லும் முறையில் புதிய பாணியை வகுத்துக் கொண்டு வரலாற்றுப் புதினங்களை எழுதிப் புகழ்பெற்றார் கல்கி. தமிழ்நாட்டின் ''வால்டர் ஸ்காட்'' என்றே இவரைப் பாராட்டுவர். இவர் எழுதிய கள்வனின் காதலி, பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் என்பன தமிழ் மக்களால் இன்றும் விரும்பிப் படிக்கப்படுவனவாகும். விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்ட ''அலைஓசை'' சாகித்திய அகாடமி பரிசு பெற்றதாகும்.

சமூக நாவல்கள் எழுதிப் புகழ்பெற்ற அகிலனின் வேங்கையின் மைந்தனும் கயல்விழியும் தனிச் சிறப்புடையவையாகும். வேங்கையின் மைந்தன் அகாடமி பரிசு பெற்றதாகும். பிற்காலத்தில் எழுதியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சாண்டில்யன். இவர் எழுதிய புதினங்களுள் கன்னி மாடம் மன்னன் மகள் யவனராணி கடல்புறா முதலியன எதிர்பாராத திருப்பங்களையும் இன்பம் மிகுவிக்கும் வருணனைகளையும் கொண்டவை. பிரமிப்பூட்டும் சாகசச் செயல்களால் வாசகர்களைப் பாதிப்பவர்கள் இவருடைய கதை நாயகர்கள்.

அரு. இராமநாதன் எழுதிய வீரபாண்டியன் மனைவி ஓர் அற்புதப் படைப்பாகும். ஜெகசிற்பியின் ஆலவாய் அழகன், மகரயாழ்மங்கை முதலியனவும், இலக்கியத் தரமான நடையிற் சிறந்த கோவி மணிசேகரனின் செம்பியன் செல்வி, பீலிவளை, பொற்காலப் பூம்பாவை முதலியனவும் உயிர்களை ததும்புவனவாகும்.

சோமுவின் வெண்ணிலவுப் பொண்ணரசி, நா. பார்த்த சாரதியின் மணிபல்லவம், விக்கிரமனின் நந்திபுரத்து நாயகி, மு.கருணாநிதியின் ரோமாபுரிப் பாண்டியன் ஆகியனவும் பாராட்டுக்குரிய படைப்புகளாகும்.

**சமூகப் புதினங்கள்(1956-1965):-**

சமூக நிலைகளையும் தனிமனிதனுக்குச் சமூகத்தால் ஏற்படும் சிக்கல்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுவன சமூகப்புதினங்களாகும். சீர்திருத்த உணர்வுடன் எழுதப்பட்ட மு.வ.வின் புதினங்கள் அக்காலத் தமிழர்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தன. கள்ளோ காவியமோ, நெஞ்சில் ஒரு முள், கயமை கரித்துண்டு, மண்குடிசை வாடாமலர் என்பன இவர் தம் அறிவுரைக் காவியங்கள், இவருடைய அகல் விளக்கு என்ற புதினம் சாகித்திய அகாடமி பரிசு பெற்றதாகும்.

பாத்திரங்களின் உணர்ச்சிகளையும், பண்புகளையும் சித்திரிப்பில் சிறந்து விளங்கிய அகிலன், பாவை விளக்கு, பெண் சிநேகிதி, நெஞ்சின் அலைகள் போன்ற தரமான நாவல்களைத் தந்துள்ளார். சித்திரப்பாவை என்ற புதினம் ஞானபீடப்பரிசு பெற்றதாகும்.

நா.பார்த்தசாரதியின் குறிஞ்சிமலர் பெயருக்கேற்ப அருமை சான்றாகும். இவர் காந்தியத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு புதினங்கள் எழுதியவர். இவருடைய ஆத்மாவின் ராகங்கள் பொன்விலங்கு குறிப்பிடத் தக்கவையாகும்.

குடும்பப்பாங்கான புதினங்கள் எழுதிப் புகழ்பெற்றவர் டாக்டர் திரிபுரசுந்தரி என்னும் லட்சுமி. பெண்மனம் மிதிலா விலாஸ் ஆகியவை பெண்களின் சிக்கல்களைப் பேசுபவை.

வ.ரா.அவர்களின் கோதைத்தீவு, சுந்தரி ஆகியன சீர்திருத்தப் போக்குடையன. அங்கத நடையில் புதிய கோணத்தில் எழுதிப் புகழ் பெற்றவர் விந்தன். இவருடைய தொழிலாளர்களின் சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டது.

1960 என்கிற காலகட்டத்தில் தலைசிறந்த புதினங்களைப் படைத்தவர் ஜெயகாந்தன். பாலியல் உணர்வுகளைச் சமூகவியல் நோக்கோடு சித்திரிப்திலும், சமூகத்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் சார்ந்து நின்று தேர்ந்த வழக்குரைஞர் போல் வாதிடுவதிலும், ஆற்றல் மிக்க நடையைக் கையாளுவதிலும் யதார்த்தமான கருக்களைப் புனைவதிலும் தன்னிகரற்றவராகத் திகழ்பவர். சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள். இலக்கணம் மீறிய கவிதை, பாரிஸீக்குப் போ முதலியன தனித்தன்மை உடையவையாகும். உளவியல் ரீதியில் ஒரு சில புதினங்களைப் படைத்துள்ளார்.

மோகமுள் என்ற புதினத்தைத் தமிழ் நாவல்களுள் தலை சிறந்தது என்று பாராட்டுவர். அப்புதினத்தை எழுதியவர் தி.ஜானகிராமன் ஆவார். இவருடைய ‘அம்மா வந்தாள்’ ‘மரப்பசு’ என்பன பாலியல் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கட்டமைப்புச் சிறந்த புதினங்களாகும். இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல், ஜசக் அருமை ராசனின் கீறல்கள்

ஆகியவை வா்க்கப் போராட்டங்களைச் சித்திரிப்பவை. பூமணியின் பிறகு சின்னப்பாரதியின் தாகம், சங்கம் முதலியன அடித்தட்டு மக்களின் வாழ்வினைச் சித்திரிப்பவையாகும். ஹெப்சிபா ஜேசுதாசனின் புத்தம் வீடு, நீலபத்மநாபனின் தலைமுறைகள், நாஞ்சில் நாடனின் ‘‘என்பிலதனை’’ பொன்னீலனின் ‘‘கரிசல்’’ போன்றவை குறிப்பிடத்தக்க வட்டாரப் புதினங்களாகும்.

**அரசியல் புதினங்கள்:-**

இந்திரா பாா்த்தசாரதி, ஆதவன் போன்றோா் அரசியல் புதினங்களை எழுதியுள்ளாா்கள். இந்திராபாா்த்தசாரதியின் தந்திரபூமி, சுதந்திரபூமி முதலியன அரசியல் தந்திரங்களை அங்கத நடையில் விளக்குவன.

**பெண் புதின ஆசிரியா்கள்:-**

காந்தியத் தத்துவத்தையும் பொதுவுடைமைத் தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இன மக்களின் வாழ்க்கையைப் படம் பிடிப்பவா் இராஜம்கிருஷ்ணன், இவருடைய குறிஞ்சித்தேன் வேருக்கு நீா் சிறந்த நாவல்கள். அம்பை, சிவசங்கரி, இந்துமதி, அனுராதா ரமணன், வாஸந்தி போன்றோா்கள் வளா்ந்து வரும் எழுத்தாளா்கள் ஆவா்.

**இன்றைய எழுத்தாளா்கள்:-**

நடைத்திறன் சிறந்த சுஜாதா, அறிவியல் புதினங்களையும் அளிப்பவா். ரா.கி.ரங்கராஜன், கி.ராஜேந்திரன், சாவி, எஸ்.ஏ.பி.அண்ணாமலை, தொடா்கதை ஆசிரியா்கள் பாலகுமாரன் முத்திரை பொறிக்கும் வளரும் எழுத்தாளா்.மாத நாவல்கள் என்ற பெயரில் புற்றீசல் போலத் துப்பறியும் புதினங்கள் பிறந்து மடிகின்றன. பல்வேறு நோக்கும், போக்கும் உடைய எண்ணற்ற எழுத்தாளா்களால் புதின இலக்கியம் செழித்து வளா்ந்து வருகின்றது.

## சிறுகதை

**சிறுகதையின் இலக்கணம்:-**

சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு, கவா்ச்சியான ஒரு காட்சி, நெருங்கிப் பின்னப்பட்ட சிறு நிகழ்ச்சிகள், ஒருவரின் தனிப்பண்பு, ஒரு சிறு அனுபவம், வாழ்க்கையின் ஒரு வெற்றி, அற உணா்வால் விளைந்த ஒரு சிக்கல்-இவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்.

**செட்ஜ்விக் கூற்று:-**

சிறுகதை குதிரைப் பந்தயம் போல், தொடக்கமும் முடிவும் சுவை மிக்கனவாக இருத்தல் வேண்டும் என்கிறார்.

**எட்கர் ஆலன் போ:-**

கருவின் சிறப்பால் அமையும் சிறுகதை ஒருவரின் பண்பின் சிறப்பால் அமையும் சிறுகதை உள்ளத்தில் பதியும் உணர்வின் சிறப்பால் அமையும் சிறுகதை எனப்பாகுபாடு செய்யலாம். இவற்றுள் உணர்வின் சிறப்பை ஒட்டியே சிறுகதையே சிறந்தது என்கிறார்.

**கதையின் உயிர் நாடி:-**

உலகில் நிகழும் போர், பூசல்கள், திருமணங்கள், கொலைகள், திருவிழாக்கள், மோசடிகள், ஊடல்கள், கூடல்கள், ஏமாற்றங்கள், கொடுமைகள், தியாகங்கள், பாசஉணர்வுகள் பக்தி நிலைகள் முதலியன பல்வேறு சூழல்களில் நடைபெற்று வருகின்றன. இதன் பின்னணியில் மக்களின் உணர்ச்சிகள் தான் காரணங்களாக அமைகின்றன. இந்நிகழ்ச்சிகளைச் சித்தரித்து ஒரு கதையாக வடிவமைக்கும் பொழுது உணர்ச்சி தான் கதையின் உயிர் நாடியாக அமையும்.

**குறிக்கோள்:-**

சிறுகதையின் நோக்கமும், குறிக்கோள், செயல் உணர்வு ஆகியவை சிதறாமல் ஒன்றுபட்டு அமைய வேண்டும். அதாவது ஒரு நோக்கம், அதற்கு இடையூறாக வேறொன்று புகாமல் அமைத்தல் ஒரு குறிக்கோள், அதை ஒரே போக்கில் புலப்பட உணர்த்தல் ஒரே செயல் அதைத் தெளிவுறக் காட்டல் ஒரே உணர்வு, அதை உள்ளத்தே பதியுமாறு உணர்த்தல் என இவ்வாறு நேரிய முறையில் அமைக்க வேண்டும். இவற்றைச் சிதைக்கும் வேறு பிறவற்றைப் புகுத்தலாகாது.

**கருப்பொருள்:-**

சில சிறுகதைகளில் கரு மிகச் சிறப்பாக அமையும். சில சிறுகதைகளில் கதை மாந்தரின் பண்பு சிறந்து நிற்கும். வேறு சில சிறுகதைகளில் உணர்ச்சி சிறப்புற்றிருக்கும். அந்தந்தச் சிறப்புப் பற்றிச் சிறுகதை போற்றப்படுவதுமுண்டு. கருவின் சிறப்பு, பண்பின் சிறப்பு, உணர்ச்சியின் சிறப்பு என அச்சிறப்புகள் பற்றி உணர்ந்து கூறப்படும் சிறுகதைகளில், கரு மிகச் சிறப்பாக அமைந்த சிறுகதைகள் படிப்பவரின் நெஞ்சில் நீங்காமல் நிற்பனவாகும்.

**உரையாடல்:-**

கதை மாந்தரின் பண்பை விளக்குவதற்கோ, கதை நிகழ்ச்சியைப் புலப்படுத்துவதற்கோ ஏற்ற அளவிற்கு உரையாடல் அமையலாம். அது எழுதுவோரின் திறனைப் பொறுத்ததாகும்.

**மொழிநடை:-**

சிறுகதைகளில் ஆசிரியர்கள் பயன்படுத்தப்படும் மொழி நடை எளிமை உடையதாக இருத்தல் வேண்டும். சமுதாயத்திலுள்ள பல்வேறு நிலையினரும் படித்துப் பயன் கொள்ளும் வகையில் எளிய மொழியில் சிறுகதை அமையுமானால் எழுத்தாளரின் படைப்பிலக்கியம் வெற்றி பெறும்.

**வருணணை:-**

சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கு இடமில்லை. சிறுகதையின் கருவிற்கோ, உணர்ச்சிக்கோ வேண்டாத ஒன்று எந்த வருணனையிலும் இடம் பெறக் கூடாது. ஒரு வீட்டின் கூடத்தின் சுவற்றில் படம் ஒன்று மாட்டி வைக்கப்பட்டதாகக் கூறினால் அந்தப் படம் எந்த வகையிலேனும் கதையின் கருவிற்கோ, உணர்ச்சிக்கோ பயன்பட வேண்டும். இல்லையேல் அதைப் பற்றிய குறிப்பு அந்த வருணனையில் கூடாது என்பர்.

**மன நிறைவு:-**

சிறுகதை, அளவில் சிறிய கதையாக அமையினும், அதில் ஒரு முழுமை அமைதல் வேண்டும். கூறத்தக்கன எல்லாம் விடாமல் கூறப்பட்டன என்றும், திறனுடன் கூறப்பட்டன என்றும், படிப்பவர்க்கு மன நிறைவு ஏற்படும் வகையில் அமைதல் வேண்டும். இன்னும் விரிவாக எழுதியிருப்பின், ஒரு குறைவும் நேர்ந்திருக்காது எனினும், ஒரு பயனும் மிகுந்திருக்கர்து என்று எண்ணத்தக்க வகையில் அமைதல் வேண்டும்.

**சிறுகதைக்களம்:-**

சிறுகதையில் கூறப்படுவது ஒரு மணிநேர நிகழ்ச்சியாகவும் இருக்கலாம் ஒரு நாள் செய்தியாகவும் இருக்கலாம் ஒரு வாரத்து நிகழ்ச்சிகளாகவும் இருக்கலாம் ஓர் ஆண்டு அல்லது பல ஆண்டுகளின் வாழ்க்கையாகவும் இருக்கலாம் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு சிறு பகுதியும் சிறுகதையாக அமையலாம் அல்லது அவருடைய முழு வாழ்க்கையும் அதில் இருக்கலாம்.

ஓர் இடமே களமாக அமையினும் அமையலாம் பல்வேறு இடங்களும் வரினும் வரலாம் ஒருவர் இருவரே கதை மாந்தராகவும் அமையலாம் பலரும் வந்து அமையலாம்.

**கட்டுப்பாடு:-**

சிறுகதை அளவில் சிறியதாக அமையும் காரணத்தால் கட்டுப்பாடுகள் உடையதாகின்றது. ஒரே முறையில் படித்து முடிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் ஒரே ஒரு பயன் அல்லது விளைவு உடையதாக இருத்தல் வேண்டும் அதனால் கதையில் வரும் சில நிகழ்ச்சிகளும் கதை மாந்தர்களும் அந்த ஒன்றனுக்குப் பயன்படக் கூடிய வரையறையோடு அமைய வேண்டும் தொடக்கம் முதல் முடிவு வரையில் ஒரே நோக்கம் உடையதாக விளங்கல் வேண்டும்.

ஆகையால், குறித்த ஓர் ஆளைத் தேடிச் செல்பவரின் ஊர்ப் பயணம் போல் வேறு எதுவும் குறுக்கிடாமல் அமைதல் வேண்டும். சிறுகதையில் கதை சிறியதாக இருந்தாலும், கதை மாந்தர் ஒரு சிலராக இருந்தாலும் கதை நிகழ்ச்சி ஒன்று இரண்டாக இருந்தாலும் ஒரு முழுத்தன்மை மட்டும் கட்டாயம் வேண்டும்.

**கற்பனை ஆற்றல்:-**

சிறுகதையில் கற்பனையின் தேவையைக் குறைத்து மதிப்பிடுதல் கூடாது. கதை எழுதுவதற்குக் கற்பனையாற்றல் மிகவும் தேவையாகும். விடா முயற்சியால் ஒவ்வொருவரும் நம்பிக்கைக் கொண்டு கற்பனை ஆற்றலை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

**எதிர்பார்ப்பு நிலை:-**

சிறுகதைகளில் எதிர்பார்ப்பு நிலை மிகச் சிறப்பான கூறுகளில் ஒன்றாகும். கதையைப் படிப்பவர் உள்ளத்தில் அடுத்த நிகழ்ச்சிகள் தொடர்புடன் விளக்கப்படுமோ என்ற ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் வகையில் கதையமைப்பு இருத்தல் வேண்டும்.

சிறுகதை ஏதாவதொரு பயனையும் முடிவினையும் வழங்கவல்லதாக இருத்தல் வேண்டும். கதை நிகழ்ச்சிகளும் கதை மாந்தர்களும் அந்தஒரு பயனுக்கேற்ப பயன்படும்

வகையில் அமைய வேண்டும்.

## நாடகத்தமிழ்

முத்தமிழில் ஒரு பிரிவு நாடகம். இசையும், கூத்தும் இணைந்து செல்வன. உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே இசையும், நாடகமும் தோன்றியிருக்க வேண்டும் என்பர். மனம் மகிழும் இசைக் கேட்டால் கைகளும், கால்களும் தாமாகவே தாளம் போடுவதை நாம் கண்கூடாகக் காண இயலும் நாடகம் முதலில் பாட்டு உருவில் பிறந்து வளர்ந்தது. பல்வேறு மாறுதல்களை அவை பெற்ற பின் இன்று படிக்கும் நாடகங்களாகவும், நடிக்கும் நாடகங்களா கவும்,பண்டுதொட்டே தமிழுக்கு நாடக இலக்கியங்கள் இருந்தன. தமிழ்மொழியே இயல், இசை, நாடகம் என்ற முப்பகுப்பால் அழைக்கப்படுகிறது. கலித்தொகைப் பாடல்கள் பலவற்றில் நாடகக்

கூறுகள் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்தில் நாடக இலக்கணம் நாடக மேடை அமைப்புப் போன்றவை கூறப்படுகின்றன. அதன் உரையில் அகத்தியம், இந்திரகாவியம், குணநூல், சயந்தம், செயிற்றியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம் மதிவாணர் நாடகத்தமிழ், முறுவல் போன்ற நாடக இலக்கியங்கள் இருந்தனவாகக் குறிப்புகள் உள்ளன. இன்று பழைய நாடக இலக்கியங்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் தமிழில் நாடக இலக்கியங்கள் இல்லாக் குறையை அண்மைக்கால நாடக வளர்ச்சி இல்லாமல் செய்துள்ளது.

**நாடகத்தமிழ்ப் புரவலர்கள்:**

இருபதாம் நூற்றாண்டில் நாடக இலக்கியங்கள் பலவற்றை எழுதியும் நடித்தும் புகழ் குவித்தவர் சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். அவர் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை இயற்றியுள்ளார். அவருடைய நாடகங்களில் இசை மிகுதியாகக் கலந்திருந்தது. நீதிபதியாக இருந்து கொண்டே நாடகங்கள் எழுதியும் நடித்தும் வந்தவர் பம்மல் சம்பந்த முதலியார். மனோகரா, சபாபதி, லீலாவதி,அமலாதித்தன் போன்ற எண்பதுக்கும் மேற்பட்ட நாடக நூல்களை ஆக்கி அளித்தார். நாடகக் கலை வளர்வதற்கும் காரணமாயிருந்த இவரை தமிழ் நாடகத்தந்தை என அழைக்கின்றனர். சூரியநாராயண சாஸ்திரியார் என்ற பரிதிமாற்கலைஞர் தமிழுக்குத் தொண்டாற்றிய அருங்குணஞ்செல்வர். அவர் நாடகவியல் கலாவதி, ரூபாவதி, மானவிசயம் முதலான நாடக இலக்கண இலக்கியங்களை இயற்றி அருளினார். கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரமும், அருணாசலக்கவிராயரின் ராமநாடகக் கீர்த்தனையும் நாடக வடிவம் பெற்றவை. காலப்போக்கில் புராணக்காவியங்களை அடிப்படையாகக் கொண்டு நாடக நூல்கள் தோன்றலாயின. அல்லிஅரசாணி மாலை, நல்லத்தங்காள் சரித்திரம், அரிச்சந்திரன், பவளக்கொடி மாலை, சகுந்தலை விலாசம், தாருக விலாசம், பாரத விலாசம், சிறுத்தொண்டர் விலாசம், மார்க்கண்டேயர், கோவலன் சரித்திரம் போன்ற நாடகங்கள் இயற்றப்பட்டுப் படிக்கவும், நடிக்கவும் பெற்றன.

## ஏட்டிலே எழுதாப் பாடல்கள்

நாட்டுப்பாடல், நாட்டார் பாடல், நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், செவிவழிப்பாடல், வாய்மொழிப்பாடல், காட்டுப்பூக்கள், மலையருவி என்றுபல்வேறு பெயர்களால்நாட்டுப்புறப்பாடல்கள் அழைக்கப்படுகின்றன. அவை காற்றிலே மிதந்த கவிதைகள்;ஏட்டிலே எழுதாப் பாடல்கள். காலம் காலமாக மரபுவழிப்பட்டு, உழைக்கின்ற மக்களால் பாடப்பட்டு வந்தவை. இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலத்திற்குப் பின்தான், நாட்டுப்புறப் பாடல் மலர்களின் நறுமணம் கண்டறியப்பட்டு, இலக்கிய உலகில் சேர்க்கப்படலாயின.

நாட்டுப்புற மக்களின் வாழ்வியலைக் காட்டுகின்ற கண்ணாடிகளே நாட்டுப்புறப் பாடல்கள். சமுதாய வளர்ச்சியையும், வரலாற்றையும் இப்பாடல்களில் தெளிவாகக் காணலாம். மேலைநாட்டு அறிஞர்களே இப்பாடலைத் தொகுப்பதில் முதலில் ஆர்வம் காட்டினர். பின்னர் இலக்கியவாதிகளும்,கலையின்பம் காண்போரும் இப்பாடல்களைத் தொகுப்பதிலும், அவற்றைத்

திறனாய்வு செய்து வெளியிடுவதிலும் இன்பங்கண்டனர். படித்தவர்களிடையே இப்பாடல்கள் செல்வாக்குப்பெற ஆரம்பித்ததும், இத்துறையைப் பல்கலைக் கழகங்கள் பாடப்பொருளாக்கி வளர்க்கலாயின.

தமிழில் நாட்டுப்புறப்பாடல்களைத் திரட்டி, 'காற்றிலே வந்த கவிதை' என்ற நூல்மூலம் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் மு.அருணாசலம். அவரைத் தொடர்ந்து ஆராய்ச்சிப் பேரறிஞர் நா.வானமாமலை, கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகந்நாதன், அறிஞர் அன்னகாமு போன்றோர் நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதில் ஆர்வம் காட்டினர்.

மனித வாழ்வு செழுமைப்பட்ட காலந்தொடங்கி, கிராமப் புறங்களில் வாழ்ந்த மக்கள், தங்கள் வாழ்வை மையமாகக் கொண்டு, இயல்பாகப் பாடுகின்ற பாடல்களாக நாட்டுப்புறப் பாடல்கள் பிறந்தன. அவற்றில் இன்ப துன்ப உணர்வுகள் உண்டு; உணர்ச்சி அலைகள் ஆர்ப்பரித்தன;கற்பனையும், கருத்தும் இடம் பெற்றன; காவியமெருகும், இலக்கிய நயமும் தானாகவே வந்து படிந்தன. இசை கொஞ்சியது அதனால் கேட்போருக்கு இன்பம் விளைந்தது. கிராமப் புறமக்களின் இறைவழிபாடுகள், நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், காதல், வாழ்க்கை முறைகள் போன்றவற்றைத் தழுவிப் பெருவழக்காக நாட்டுப்புறப் பாடல்கள் மலரலாயின.

குழந்தையைத் தாய் தாலாட்டுவதில் தொடங்கி, காதலில் கமழ்ந்து, திருமணத்தில் பொலிவுபெற்று, கள்ளமில்லா உழைப்பில் பாடப் பெற்று, மகிழ்வுக் காலங்களில் நடைபெற்ற ஆடல்பாடல்களில் வளம் பெற்று, இறைவழிபாட்டில் தவழ்ந்து, கலகம், பஞ்சம் போன்றவற்றில் கதைப்பாடல்களாகப் பர்ணமித்து, வாழ்வின் இறுதியில் ஒப்பாரிப்பாடல்களாக மலர்ந்து மணம் பரப்பிய கவிதைமொட்டுக்களே நாட்டுப்புறப்பாடல்கள் ஆகும். கிராமமக்கள் தங்களின் முக்கியத் தொழிலான விவசாய வேலைகளான ஏற்றம் இறைத்தல், கழனிகளைப் பண்படுத்தல், நாற்றுநடுதல், அறுவடை போன்றவற்றிலும், தாங்கள் பொழுது போக்காகக் கொண்ட வீரவிளையாட்டுக்கள், பொங்கல்தினம் போன்றவற்றிலும் நாட்டுப்புறப் பாடல்களை இயல்பாகப் பாடவேண்டும் என்ற கட்டாயத்துக்கு உள்ளாகி, அவர்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்டன.

இப்படிப் பிறந்து வளர்ந்த நாட்டுப்புறக் கவிதைகளில், கருத்தும் பொருளும், நாட்டுப்புற இசையோடு கலந்து, காலமெல்லாம் மணக்கிற காவிய மலர்களாயின. எளிய பதங்களோடு, எளிய மெட்டுகளோடும் இழையோடிய இப்பாடல்களில் இலக்கண வடிவம் எதுவும் இல்லை. கிராமப்புற இசைமொட்டுகளாக ஏலேலோ, தில்லாலங்கடி, கும்மி, சிந்து, தாலாட்டு போன்ற இசைப்பண்களை ஏற்று, கிராமப்புற மக்களின் சொல்லாட்சிக்கேற்ப இப்பாடல்கள் பாடப்பட்டன. எதுகை, மோனை, அடுக்குத்தொடர், இரட்டைக் கிளவி, உருவகம், உவமை, பழமொழி, வழக்காறுகள் போன்றவை இயல்பாகவே அவற்றில் மின்னிப் பிறக்கலாயின. ஒருமுறைப் பாடப்பட்ட சொல்லோ, அடியோ, தொடரோ மீண்டும் மீண்டும் இக்கவிதையில் இடம் பெறலாயின. இவ்வாறு இலக்கியப் பண்புகள்

இடம்பெற்று, இன்னிசையும் கலந்து பிறந்தால், அப்பாடல்கள் கேட்போரைக் கிறு கிறுக்க வைத்து, அவர்களின் நெஞ்சைத் தொடுவனவாக அமைந்தன.

எடுத்துக்காட்டாக ஒரு பாடல்! சோழநாட்டு வயல்வெளிகளில் பிறந்தது! மண்ணின் மணம் கமழும் அப்பாடலில் இசை கொஞ்சுவதையும், இலக்கிய அமைதி ஒழுங்கு பெற்றுள்ளதையும் காட்டும் ஏற்றப்பாட்டு!

**மூங்கில் இலைமேலே**

**தூங்கும் பனிநீரே!**

**தூங்கும் பனிநீரை**

**வாங்கும் கதிரோனே!**

**காதல் பாடல்கள்**

நாட்டுப்புறப் பாடல்களில் மிகுதியாகப் பிறந்தவை காதல் கவிதைகளே! காதல் பாடல்களில் கிராமிய வாழ்வு பளிச்செனத் தெரியும், உணர்ச்சி வெள்ளம் பாய்ந்து வரும். கற்பனை தளர்நடையிடும், கருத்துகள் மின்னிப் பிறக்கும். உவமை முத்துகள் ஒளிரும், எதுகை மோனை இயல்பாக அமைந்து அழகுகாட்டும்.

கிராமத்துக் குயில் ஒன்று மயில்போல் சாயல்! அவள் தண்ணீர் முகந்து கொண்டு அழகிய குடத்தை இடுப்பில் வைத்து, எடுப்பாக நடந்து வருகிறாள். அவளின் அன்னநடையும், அழகிய தோற்றமும் அவள் காதலனின் கண்களைக் கவர்கின்றன. அவன் இப்படிப் பாடுகின்றான்:

**தண்ணிக் குடமெடுத்துத்**

**தனிவழியே போற பெண்ணே!**

**தண்ணிக் குடத்துக் குள்ளே**

**ததும்புதடி என்மனசு!**

**தானே! தானன்னா னன்னா தானே!**

கிராமத்துக் காதலெல்லாம் பெரும்பாலும் உறவிலேதான் மலரும். காதலின் கனிவைக் காதலர்களின் விழி வீச்சிலும் அலட்சியப் பேச்சிலும் கண்டு மகிழலாம். காதலர்களின் காதல் பற்றிப் பிறக்கும் நாட்டுப் பாடல்களில் உணர்ச்சித் துடிப்பும், கலைநயமும் பொங்கிவழியும். எனவே இயல்பாகவே அப்பாடல்களில் இலக்கியச் சுவை மிகுந்திருப்பதைக் கேட்போர் உணரலாம்.

**கானக் கரிசலிலே**

**களையெடுக்கும் பெண்மயிலே!**

**நீலக் கருங்குயிலே!**

**நிற்கட்டுமா? போகட்டுமா?**

**தாயும் சேயும்**

பெற்றோருக்கு பிள்ளைகளே உண்மையான செல்வங்கள். குழந்தைப் பேறு இல்லையென்றால் கிராமப் புறங்களில், மற்றவர்களின் ஏச்சுக்கும் ஏளனத்துக்கும் ஆளாவர்.இதில் பெண்ணே பெரும் பாதிப்புக்கு ஆளாவாள். ஒரு குழந்தை இல்லாதத் தாயின் துன்பக்குரல் நாட்டுப் பாடலாக ஒலிப்பதைக் காணுங்கள்.

**வட்டிலிலே போட்ட சோற்றை**

**வாரித்தின்னப் பிள்ளை இல்லை!**

**கிண்ணியிலே போட்ட சோற்றை**

**கீரித்தின்னப் பிள்ளை இல்லை!**

சிங்கமகன் ஒருவனைப் பெற்றதாய், தன் குழந்தை ஏழை வீட்டில் வந்து பிறந்துள்ளதை எண்ணிக் கலங்குகிறாள். அத்தாயின் உள்ளத்தை நயம்படக் காட்டும் நாட்டுப்புறப் பாடல் இதோ:

**முத்துச் சிரிப்பழகா!**

**முல்லைப்பூ பல்லழகா!**

**வெத்துக் குடிசையிலே**

**விளையாட வந்தாயோ?**

**ஏழைக் குடிசையிலே**

**ஈரத் தரைமேலே**

**தாழம்பாய் போட்டுத்**

**தவழ்ந்தாட வந்தாயோ**

**தரையெல்லாம் மேடுபள்ளம்**

**தவழ்ந்தால் உறுத்தாதோ?**

தாயின் துன்பம் பாடலில் எதிரொலிக்கின்றதல்லவா!

**தாலாட்டுப் பாடல்:**

மற்றொரு தாய் தன் செல்வக் குழந்தையைத் தொட்டிலிட்டு தாலாட்டுகின்றாள். கரங்கள் தொட்டிலை ஆட்டுகின்ற பொழுது இயல்பாகவே ஆராரோப் பாட்டொன்றும் தாயின் வாயிலிருந்து பிறக்கிறது. இன்பத் தமிழோசை அந்தத் தாயின் தாலாட்டில் இழையோடுவதை நீங்களும் இனிமையோடு பாடிப் பாருங்கள்:

**ஆராரோ ஆராரோ –கண்ணே நீ**

**ஆராரோ ஆராரோ!**

**ஆரடித்தார் நீ அழுதாய்? கண்ணே உனை**

**ஆடித்தாரைச் சொல்லிஅழு!**

**மாமி அடித்தாலோ? –உன்னை**

**மல்லிகைப்பூச் செண்டாலே!**

**மாமன் அடித்தானோ! –உன்னை**

**மாலையிடும் கையாலே!**

நீண்டு செல்லும் இப்பாடலின் முடிவில், தூங்காத குழைந்தையொன்று தாய்க்குப் பதில் இறுப்பதாக வரும் அடி, கற்பனையாகப் பிறந்து நம்மைக் களி மகிழ்வு கொள்ளச் செய்கிறது.

**யாரும் அடிக்க வில்லை! – என்னை**

**ஐவிரலும் தீண்டவில்லை!**

**பசிக்கல்லவோ நான் அழுதேன்! – என்றன்**

**பாசமுள்ள தாயாரே?**

**சிறுவர் விளையாட்டு:**

சின்னஞ்சிறுவர்கள் ஊர்ப் பெயர்களைச் சொல்லி விளையாடும் நாட்டுப் பாடல்கள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று:

**என்ன ஊர்?**

**மயிலாப்பூர்!**

**என்ன மயில்?**

**காட்டு மயில்!**

**என்ன காடு?**

**ஆர்க்காடு!**

**என்ன ஆறு?**

**பாலாறு!**

**என்ன பால்?**

**கள்ளிப்பால்!**

**என்ன கள்ளி?**

**இலைக் கள்ளி!**

**என்ன இலை?**

**மா இலை!**

**என்னம்மா?**

**அம்மா!**

ஏளிய தமிழ்! இன்னோசை! சந்தம் இயல்பாக அமைந்து இதயத்தை தொடும் மற்றுமொரு கிராமிய விளையாட்டுப் பாடல்:

**நான் தாண்டா வீரன்!**

**நல்ல முத்துப் பேரன்!**

**வெள்ளிப் பிரம்பெடுத்து**

**விளையாட வாரேன்!**

**தங்கப் பிரம்பெடுத்து**

**தாலிகட்ட வாரேன்!**

**வரலாற்றுப் பாடல்கள்:**

கிராமியப் பாடல்களில் நாட்டின் வரலாறும், பண்பாடும், காலத்தின் தாக்கமும் இடம்பெற்றிருக்கும், அவை படிக்காத மக்களிடையே சமுதாய விழிப்புணர்ச்சி ஊட்டும்

பாடல்களாகவும் அமைவதுண்டு. இந்தியா அடிமைநாடாகத் திகழ்ந்த காலத்தில், உழைக்கின்ற மக்களைச் சுரண்டி வாழ்ந்த ஆங்கிலேயரின் அதிகார ஆளுமையைக் காட்டுவதாகப் பல பாடல்கள் பிறந்தன. அப்பாடல்களில் ஒன்றைக் காணுங்கள்.

**ஓரான் ஓரான் தோட்டத்திலே**

**ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்!**

**காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்**

**கடிதம் போட்டான் வெள்ளக்காரன்!**

நாட்டுப்புறப் பாடல்களை ஆராய்ந்த போராசிரியர் சு.சண்முக சுந்தரம், ‘‘இந்தத் தேவதையின் பொன் சிறகுகள் கிராமத்தின் சொர்க்க வீதிகளிலேயே உலா வருகின்றன. இந்தத் இசைத்தேவதையின் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒருபாடல். இவளது நெஞ்சமே தாலாட்டு, கண்களே ஒப்பாரி, கைகளே கும்மி, கால்களோ ஒயில், தலையே கரகம், தோள்களே காவடி, மூச்சே தெம்மாங்கு’’ என்று குறிப்பிட்டிருப்பது நாட்டுப்புறப்பாடல்களின் பல்வேறு துறைகளை எடுத்துக்காட்டும்.

அரியலூர் ரயில் விபத்து, கட்டபொம்மன் விடுதலைப் போர், ராஜா தேசிங்கு வரலாறு, ஆளவந்தார் கதை, அல்லி அரசாணி கதை, பளவக்கொடி, நல்ல தங்காள் கதை போன்ற கதைப்பாடல்களும் நாட்டுப்புற இலக்கியத்தில் செல்வாக்கான இடத்தைப் பிடித்துள்ளன. நாட்டுப்புறப் பாடல்களையும், கதைத் தொடர்களையும் இன்று பல்கலைக் கழகங்கள் ஆய்வுப் பொருளாக்கியுள்ளன. நாட்டுப்புறக் கலை பற்றி மிகுதியான ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து, திறனாய்வுக் குறிப்புகளோடு இலக்கியமாக வெளிவந்துள்ளவைகளில், போராசிரியர் நா.வானமாமலையின், ‘தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள்’,கி.வா.ஜகநாதனின் ‘நாடோடி இலக்கியம்’, போராசிரியர் மு. வை. அரவிந்தனின் ‘தமிழக நாட்டுப்பாடல்கள்’, அறிஞர் அய்யாசாமியின் ‘நாடோடிப் பாடல்கள்’, போராசிரியர் அ. மு. பரமசிவாநந்தத்தின் ‘வாய்மொழி இலக்கியம்’, அறிஞர் அன்னகாமுவின் ‘ஏட்டில் எழுதாக் கவிதைகள்’, போராசிரியர் சு.சண்முகசுந்தரத்தின் ‘நாட்டுப்புறப் பாடல்கள்’

## பாடம் -8

## ஒப்பிலக்கியம்

இலக்கிய உலகில், ‘ஒப்பிலக்கியம்’ என்னும் புதியதொரு துறை, வளர்ந்து வருகிறது. தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை ஒப்பியல், முறையானது இலக்கிய, இலக்கணங்களுக்குள் பின்னிப் பிணைந்துள்ளன. தனியொரு துறையாக சமீப காலந்தொட்டு ஆய்வறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்துறை குறித்து டாக்டர் தமிழண்ணல் அவர்கள் ஒப்பிலக்கிய அறிமுகம் என்னும் நூலையும் டாக்டர்,க.கைலாசபதி அவர்கள் ஒப்பியல் இலக்கியம் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

### 1. தொல்காப்பியத்தில் ஒப்பிலக்கியம்:

தொல்காப்பியர் வடமொழி தமிழ்மொழி இரண்டனையும் பல இடங்களில் ஒப்பீடு செய்து கூறியுள்ளார். எழுத்துகளுக்கு மாத்திரை கணக்கிடும்பொழுது உள்ளெழும் காற்றையும் சேர்த்து அளவிடுதல் வடமொழி மரபு, புறத்திசைக்கும் ஒலியளவை மட்டுமே கணக்கிடுவது தமிழ் மரபு என்று தொல்காப்பியர் ஒப்பீடு செய்கின்றார். (தொல் 102) இதைப்போல் பல்வேறு இடங்களிலும் கூறியுள்ளார்.

### 2. பாரதியார் கூறும் ஒப்புவமை:

பதினைந்து மொழிகளுக்கு மேல் அறிந்தவர் பாரதியார்˙ அவர்,

**யாமரிந்த புலவரிலே கம்பனைப்போல்**

**வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்**

**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை**

**உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.**

என்று பிறமொழிகளோடு தமிழ்மொழியை ஒப்பு நோக்கி உயர்வு கூறுகின்றார்.

### 3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கியம்:

திராவிடமொழிக் குடும்பத்தின் உறவு நிலைகளை ஒப்பிட்டுக் காட்ட கால்டுவெல் தமிழுக்குக் கிடைத்தார். திராவிட மொழிகளின் அடிச்சொல் அகரவரிசை ஒன்றைத் தொகுக்க மொழியறிஞர்கள் எமனோவும் பர்ரோவும் கிடைத்தனர். இவர்களின் மூலம் திராவிட மொழிகளின்

ஒப்பிலக்கணம் வளர்ந்தது. இவ்வாறு திராவிட மொழிகள் உலக மொழிகளோடு தமிழ் இலக்கியங்களையும் ஒப்பு நோக்கி ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கியம்’ என்னும் விரிவானதொரு துறையை நோக்கித் தமிழ் இலக்கிய உலகம் நகர்ந்து கொண்டுள்ளது.

**4. ஒப்பிலக்கியத் தமிழ் அறிஞர்கள்:**

**தனி நாயக அடிகளார்:**

தமிழில் இயற்கைப் பாட்டுப் பற்றிய நமது ஆய்வு நூலில் கிரேக்கம், இலத்தீன், ஆங்கில இலக்கியங்களுடன் ஒப்பிட்டுள்ளார். ‘திருவள்ளுவர்’ பற்றிய நமது நூலில் கிரேக்க உரோம ஒழுக்க இயல்களுடன் புத்த சமயத்துடனும் திருக்குறளை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.

**டாக்டர். மு. வரதராசனார்:**

மு.வ அவர்கள் இயற்கைப் புனைவு, முல்லைத்திணைப்பாட்டு, கையறு நிலைப்பாட்டு முதலியவற்றில் ஒப்பீட்டு முறையைப் பின்பற்றியுள்ளார்.

**டாக்டர். வ.சுப.மாணிக்கம்:**

இவருடைய தமிழ்க்காதல் கிரேக்க உரோமப் பெண்மைப் பண்புகளையும், காதல் உறவையும் சங்க இலக்கியங்களுடன் ஒப்பிடுகின்றது.

**டாக்டர். க. கைலாசபதி:**

தமிழ் வீரயுகப் பாடல் பற்றிய இவரது ஆய்வு நூல் தமிழ் ஒப்பிலக்கிய வளர்ச்சிக்கு ஒருபடி முன்னேற்றத்தைத் தருவது எனலாம்.

**பேராசிரியர் தெ. போ. மீனாட்சி சுந்தரனார்:**

மோழி விளக்க இயல் துறையிலும் ஒப்பிலக்கிய துறையிலும் இவர் செய்துள்ள பணிகளும் பிறரை ஈடுபடுத்திய பான்மையும் பாராட்டற்பாலது.

**5. ஒப்பிலக்கிய மேலைநாட்டறிஞர்கள்:**

நடத்தப் பெற்ற உலகத் தமிழ் மாநாடுகள் பல மேலை நாட்டுத் தமிழ் அறிஞர்களை நமக்கு அறிமுகப்படுத்தி உள்ளன.

**(1) 1966-ல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரிலும்**

**(2) 1968-ல் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையிலும்**

**(3) 1970-ல் பாரீசிலும்**

**(4) 1974-ல் இலங்கையிலும்**

**(5) 1980-ல் மதுரையிலும்**

உலகத் தமிழ்மாநாடுகள் ஐந்தும் நடத்தப்பெற்றன. இம்மாநாடுகளின் மூலமாக ஜே.ஆர் மார், கமில் சுவலில் ஜார்ஜ் எல்.ஹார்த் பேராசிரியர், இ.பிசெலி ஷெவ் முதலான மேலை நாட்டுத் தமிழறிஞர்கள ஒப்பிலக்கிய துறைக்கு கிடைத்துள்ளனர்.

**6. ஒப்பிலக்கிய ஆய்வு நெறிமுறைகள்:**

**(1) பிறப்புறவு ஆய்வு:** வரலாற்று அடிப்படை மூலங்களைக் கண்டறிந்து ஒப்பாய்வு மேற்கொள்வது.

**(2) தோற்ற வளர்ச்சி ஆய்வு:** ‘வித்தின்றி விளையவில்லை’ உள்ளது காரியப்படும், என்னும் கொள்கையின் வழிப்பட்டது. இந்த ஆய்வு ஒப்பீடு செய்யப்படும் இலக்கியங்களின் தோற்ற வளர்ச்சிகளையும் அதன் காரணகாரியங்களையும் ஆராய்வது.

**(3) அளவை முறை ஆய்வு:** புள்ளி விவரம், விளக்க அட்டவணை, வரைபடம் முதலானவற்றையும் ஆய்வில் பயன்படுத்துதல்.

**(4) உயிரியல் கொள்கை முறை ஆய்வு:** உயிரியல் கொள்கைகளை இலக்கியத்தில் சார்த்தி அதன் தோற்றம் வளர்ச்சி, மாற்றம், உருவம் முதலானவற்றையும் ஒப்பிட்டு ஆராய்வது, டார்வின் ஹெர்பர்ட் முதலானோரின் கூர்தலறக் கோட்பாடு இதில் பின்பற்றப்படுகிறது.

**திறனாய்வியல்**

திறனாய்வு= திறன்+ஆய்வு.திறன்=கூறுபாடு. ‘ஓர் இலக்கியப் படைப்பு சிறந்ததா அல்லது சிறப்பற்றதா என்பதைச் சீராய்வு செய்வதே திறனாய்வின் செயற்களம்’ என்று பிரான்சு நாட்டு அறிஞர் விக்டர் யூகோ தெளிவுறுத்துகிறார். டாக்டர் மு.வ அவர்கள் புலவர் ஒருவர் இயற்றிய இலக்கியத்தினுள் புகுந்து மற்றொருவர் கணும் காட்சியாகும்’ என்று திறனாய்விற்கு விளக்கம் தருகின்றார். ‘வள்ளுவர் வழி நின்று திறனாய்வினைச் சமன் செய்து சீர்தூக்கும் கோல் எனலாம்’ என்று பேராசிரியர் க. பிரபாகரி எடுத்துரைக்கின்றார்.

**திறனாய்வாளருக்கான பண்புகள்:**

திறனாய்வாளருக்குத் தேவையான பண்புகளை,

**அடிநிலை அறிந்திட நடுநிலை நிற்றல்**

**ஆழம் அகழ்ந்திட ஆழ்ந்து கற்றல்**

**இகழ்தல் புகழ்தல் இல்லாது இசைத்தல்**

**ஈடுஎனக் கண்டதொரு ஈடுபாடு கொள்ளல்**

**உள்ளதை உணர்ந்து உண்மையைத் தெளிதல்**

**ஊன்றிய கருத்தை தோன்றிடக் காட்டல்**

**எதுநோக்கு என்னபோக்கு என்பதை எண்ணல்**

**ஏற்பன ஏற்று ஏலாதன விடுத்தல்**

**ஓன்றி உணர்ந்து ஒழுங்குற உரைத்தல்**

என்னும் பாடல் மூலம் க.பிரபாகரி அவர்கள் தெளிவுபடுத்துகிறார்.

**திறனாய்வு வகைகள்:**

(1) **விதிமுறைத் திறனாய்வு:** இலக்கியங்களில் பொதிந்துள்ள பொதுத்தன்மையையும், உட்பொதிவினையும் கண்டறிதல்.

(2) **முடிபுமுறைத் திறனாய்வு:** பழைமை பாராட்டுவது. இலக்கணத்தை ஒட்டியே இலக்கியம் படைக்கப்படவேண்டும் எனக் கூறுவது.

(3) **ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு:** இலக்கியப் படைப்பை மற்றொரு இலக்கியப் படைப்போடு ஒப்பிட்டுக் காண்பது.

(4) **வரலாற்றுமுறைத் திறனாய்வு:** இலக்கியம் படைக்கப்பட்ட காலத்தை ஒட்டிய வரலாற்று அடிப்படையில் ஆய்வது.

(5) **விளக்கமுறைத் திறனாய்வு:** தனியொரு படைப்பாளனின், தனியொரு படைப்பினை மட்டும் எடுத்துக்கொண்டு விரிவாக ஆய்வது.

**(6) முருகியல்முறைத் திறனாய்வு:** முருகியல் என்பது அழகியல். ஒரு இலக்கியப் படைப்பின்கண் விளங்கும் அழகுணர்ச்சியைக் கண்டு ஆய்வு மேற்கொள்ளல்.

**(7) மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு:** இலக்கியப் படைப்பின் தரத்தையும், தகுதியையும் மதிப்பீடு செய்வது.

**(8) வாழ்க்கை வரலாற்றுவழித் திறனாய்வு**: இலக்கியப் படைப்பாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை அடிப்படையாகக் கொள்ளல்.

**(9) உளவியல்முறைத் திறனாய்வு:** இலக்கியப் படைப்பின் வழிப் புலனாகும் இலக்கியப் படைப்பாளரின் உளப்பாங்கினை ஆய்தல்.

**(10) நலம் பாராட்டும் திறனாய்வு:** இலக்கியப் படைப்பின் குறைகளைக் காணாது, குணங்களை மட்டும் கண்டு பாராட்டுவது.

**உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களே:**

இலக்கண உரையாசிரியர்கள் இலக்கிய உரையாசிரியர்கள் என உரையாசிரியர்கள் இருவகைப்படுவர். இவர்கள் பழைய நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி விளக்கியுள்ளமையை விதிமுறைத் திறனாய்வு எனலாம். சொல்லுக்குச் சொல் பொருள் கூறாது படைப்பின் தரத்தை உணர்ந்து பொருள் கூறினார். மூலநூலாசிரியர் கருத்தைப் பாராட்டிய இடங்கள் பாராட்டு முறைத் திறனாய்வாக அமைகிறது. பிறநூல் கருத்துகளுடன் ஒப்பிட்டுக் காட்டும் இடங்களில் ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு கைக்கொள்ளப்பட்டு உள்ளதை அறியலாம்.

**திறனாய்வின் பயன்கள்:**

இலக்கியவகை எதுவாயினும் அதன்கண் பொதிந்துள்ள பொருள்களின் தன்மை,தகுதி,தரம்,மதிப்பு பற்றிய ஆய்வு வழியே இலக்கியக் கலையைத் திறனாய்வு துலங்கிடச் செய்கின்றது.

**தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள்:**

அ.ச.ஞானசம்பந்தன், மு.வ.ந.சுப்புரெட்டியார், தா.ஏ. ஞானமூர்த்தி, இ.மறைமலை, ந.சஞ்சீவி, க.கைலாசபதி ந.வானமாமலை முதலான அறிஞர்கள் தலைசிறந்த திறனாய்வாளர்களாகத் திகழ்கின்றனர்.

‘ Internet’ என்பதைக் குறிக்க ‘இணையம்’ என்னும் சொல் இப்போது பயன்படுத்தப்படுகிறது. ‘இணைமம்’ என மாற்றிக் கொள்ளலாம் எனச் சொல்லாக்கம் என்னும் நூலில் முனைவர் இ.மறைமலை அவர்கள் திறனாய்ந்து கூறுகிறார்.

சிற்பி தமிழன்பன் அப்துல்ரகுமான், மீரா, நா.காமராசன், இன்குலாப், மு.மேத்தா, பொன்.செல்வ கணபதி, வைரமுத்து, அறிவு இவர்களின் கவிதைகளோடு பாரதியின் கவிதைகளையும் ஒப்பீட்டு முறையில் திறனாய்வு செய்கின்றது. ‘பாரதியும் இவர்களும்’ என்னும் நூல். இதன் ஆசிரியர் பேராசிரியர் ச. அந்தோணி டேவிட்நாதன் அவர்கள் ‘புதுக்கவிதையில் மனிதம்’ என்னும் இவரது நூலும் தரமான இலக்கியத் திறனாய்வு நூலாக ஒளிர்கின்றது.

**பெண்ணியம்**

முற்போக்கான அணுகுமுறைகளைக் கைக்கொண்டிருக்கும் கற்றறிந்த ஆண்களில் பலரும் பெண்கள் சார்ந்த சிக்கல்களில் பிற்போக்கான பழமைவாதப் போக்கையே கைக்கொண்டு வருகின்றனர். அல்லது தமிழர் மரபு, தமிழர் பண்பாடு என்பன முதலான சொல்லாடல்களால் மீட்புவாதப் போக்கை முன்னிறுத்தி வருகின்றனர். இக்கருத்தினை கருத்தியம்-மதம், சாதி பெண் என்னும் நூலில் எழுத்தாளர் இராசேந்திர சோழன் (அஸ்வகோஸ்) எடுத்துரைக்கின்றார்.

பெண் தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டியவள். ஆணே முன் நிறுத்தப்பட வேண்டியவன் என்னும் கருத்தியலுக்குள் ஆணாதிக்க வர்க்கம் பெண்ணைச் சிறைவைத்து வருகின்றது. எனவே சமுதாயத்தின் கடைநிலை உயிரியாகப் பெண் பின்னுக்குத் தள்ளப்படுகிறாள்.

**பெண்ணின் மீதான மரபு சார்ந்த அடக்குமுறை:**

ஆழ்ந்து சிந்தித்தால் அண்மைக்காலம் வரையிலும் பொருளாதார வகையில் மட்டுமே பெண்களில் பெரும்பாலோனோர் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையில் இருந்தனர். பொருளாதாரம் ஒன்றைத் தவிர பெண் தன் வாழ்வின் அனைத்துத் தேவைகளையும் தானே நிறைவு செய்து வந்திருக்கிறாள். அதனால்தான் கணவனை இழந்த பெண்ணுக்கு மற்றொரு ஆண்துணை இருந்தால்தான் தன்னால் வாழ முடியும், தன் குடும்பத்தை நடத்திச் செல்ல இயலும் என்னும் கையற்ற சூழல் இல்லை. ஆயின், கணவனை இழந்திருந்தாலே போதும் அவளைக் கைம்பெண் என ஆணாதிக்கச் சமுதாயம் அவள்மீது முத்திரை குத்தி விடுகின்றது.

தன் மனைவியை இழந்துவிட்டால் தன்னுடைய, தன் குழந்தைகளினுடைய தேவைகளை நிறைவு செய்ய இன்னொரு பெண்ணைச் சார்ந்தாலன்றி வாழத் தெரியாத கையற்ற நிலையில் இருக்கும் ஆண்களைக் ‘கையாண்’ எனக் குறிப்பிடும் சொல்வழக்குகூட உருவாகாமல்

கவனமாகக் காத்துக் கொண்டு வரும் ஆணாதிக்க நிலையினைக் காண்கிறோம். மனைவியை இழந்த கணவனுக்கு என்னும் சொல் ஆங்கிலத்தில் உள்ளது நோக்கத்தக்கது. இதைப்போலவேதான் பாலியல் வகையில் 'வேசி' என்னும் பெண்பாற்சொல்லுக்கு இணையான 'வேசன்' என்னும் ஆண்பாற்சொல்லும் தமிழில் இல்லை.

இதைப் போன்ற மரபுசார்ந்த பெண்ணின் மதான அடக்குமுறை, வன்முறை, புறக்கணிப்புகளுக்கு மாற்றாகப் 'பெண் நீதி' தேடும் நிலையில் எழுந்ததுதான் பெண்ணியம்.

பிறப்பு முதல் இறப்பு முடிய பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள். பெண்ணியத்தில் கூர்ந்து கவனிக்கப்படுகின்றன. பெண் மகவுக் கொலை மறுப்பு, பெண்கல்வி, மண உரிமை, முதலானவை பெண்ணியத்தில் பேசப்படும் கருத்தியல்களாகும்.

பெண்மகவுக்கொலை மறுப்பு: மதுரை, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பெண்மகவுக்கொலை மிகுதியாக நிகழ்ந்து வருகின்றது. பெண் மகவுக் கொலைக்கு மணச்சீர் (வரதட்சணை) முக்கிய காரணியாக உள்ளது. பெண்மகவுக்கொலை, கொலைக்குற்றத்திற்கு நிகரானது. இந்நிலை முற்றிலும் நீக்கப்பட வேண்டும்.

**பெண்கல்வியுரிமை:**

ஆடு மாடுகளை மேய்த்தல், கைக்குழந்தைகளைப் பராமரித்தல், பெற்றோர்க்கு உதவுதல் எனப் பல காரணங்கள் பெண் கல்விக்குத் தடைகளாக உள்ளன. அதிகமாகப் படிக்க வைத்தால் அதிகம் படித்த மாப்பிள்ளை தேடவேண்டும். அதற்கேற்ப அதிக மணச்சீர் கொடுக்க வேண்டும் என்பதும் பெண்கல்விக்குத் தடைக்கு முக்கிய காரணமாகின்றது. பெண்ணடிமை தீரும் மட்டும் மண்ணடிமை தீராது. பெண் முன்னேற்றம் மண்ணின் (நாட்டின்) முன்னேற்றம். எனவே 10-ம் வகுப்பு வரையில் கிராமப்பள்ளிகளில் பெண்களுக்குக் கட்டாய இலவசக் கல்வியை அரசாங்கமே வழங்க வேண்டும்.

**மணஉரிமை:**

தான் விரும்பும் மணமகனைத் தானே தேர்ந்தெடுக்கவும், முடிவு செய்யவும் பெண்ணுக்கு உரிமை உண்டு. இதன் மூலம் சாதி, சமயக் கட்டுக்கள் நீங்கும் நிலை ஏற்படும்.

**மணவிலக்கு உரிமை:**

கணவன் மற்றும் அவன் குடும்பத்தார் மூலம் ஒரு பெண் மனதாலும் உடலாலும் வேதனைகளையும் அவமானங்களையும் அனுபவித்தாவது கணவனுடன்தான் வாழ்ந்தாக வேண்டும் என்னும் நிர்க்கதியில் பெண்ணின் நிலை இருக்கக் கூடாது. 'கல்லானாலும் கணவன்,

'புல்லானாலும் புருஷன்' என்னும் மரபுவழிச் சிறையிலிருந்து மணவிலக்கு உரிமை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**மறுமண உரிமை:**

கணவனை இழந்த சூழலிலோ, மணவிலக்குப் பெற்ற நிலையிலோ பெண்ணின் இசைவின் பேரில் மறுமண உரிமை இயல்பாக சமூகத்தாரால் அளிக்கப்படவேண்டும்.

**தாலி:**

தாலி என்பது மாட்டுக்குப் பிணிக்கப்படும் மூக்கணாங்கயிறுக்கு இணையாகத்தான் பேசப்பட்டும் கருதப்பட்டும் வருகிறது. பெண்ணடிமைத்தன அணுகுமுறையில் குறியீடுகள் அனைத்திற்குமான முத்தாய்ப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தில் தாலி விளங்குகிறது. 'தாலி அணிதல்' என்னும் நிலையே கணவன் இறந்த பிறகு 'தாலியறுத்தல்' என்னும் கொடுமைக்கும் 'தாலியிழந்தவள்' என்னும் விதவைக் கொடுமைக்கும் காரணமாகின்றது. தாலிக்கும் கணவனின் ஆயுளுக்கும் தொடர்புபடுத்தி பல உளவியல் சிக்கல்களுக்கும் தாலி காரணமாகின்றன. ஆனால், திருமணம் ஆகாத ஆணுக்கும் திருமணமான ஆணுக்கும் மனைவியை இழந்த ஆணுக்கும் 'தாலி' பற்றியொரு சுமையோ சிக்கலோ இல்லை என்பதும் கருதத்தக்கது.

**கற்புக்கோட்பாடு:**

கற்பு என்பது பெண்களின் மீது சுமத்தப்பட்ட இன்னுமொரு சுமை 'கற்பு' என்பதனைப் பெண்களுடன் மட்டும் இணைத்து நோக்கப்படுகிறது. பாலியல் வன்முறைக்கு உள்ளான பெண்ணை, அச்சீரழிவிற்கு அப்பெண்ணை உட்படுத்தியவனே 'கற்பிழந்தவள்' எனப் பழிக்கும் அவலநிலை காணப்படுகின்றது. பணம், பொருள் திருடியவனைத் திருடன் என அவன் பெயரையும் புகைப்படத்தையும் ஊடகங்கள் வெளியிடுகின்றன. ஆனால், பாலியல் வன்முறையாளனை அவன் பெயரை, புகைப்படத்தை எந்த ஊடகமும் வெளிப்படுத்தாமல் கவனமாகப் பாதுகாக்கின்றன. அதே வேளையில், ஏற்கெனவே பாலியல் வன்முறைக்கும் ஆளாகி மனச்சிதைவுக்கு ஆட்பட்டு இருக்கும் பெண்ணின் பெயர், ஊர், புகைப்படம் என அனைத்து விவரங்களையும் ஊடகங்கள் தவறாமல் வெளியிட்டு அவளை வேசி நிலைக்குத் தள்ளும் அவலநிலையையும் ஏற்படுத்தி விடுகின்றன.

**பணஊதியம்:**

கட்டட வேலை, முதலான பல வேலைகளில், புரியும் பணியின் வகையில் எந்தப் பாகுபாடு இல்லையாயினும் பெண்ணுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்பட்டு வருவதை நடைமுறையில் காணலாம். இதுவும் ஒருவித பெண் உழைப்புச் சுரண்டலே.

**பண சமத்துவம்:**

கருத்தரித்தல், பிள்ளைப்பேறு, பாலூட்டல் என்பன இயற்கையின் நியதி. ஆனால் வீடுகூட்டுதல், துணி துவைத்தல், பாத்திரம் கழுவுதல், உணவு சமைத்தல் முதலான பணிகள் பெண்களுக்கு மட்டுமே உரியன என வகுத்திருப்பது இயற்கை இல்லை. தெருக்கூட்டுபவன், வண்ணான், சமையற்காரன், பணியாள் கூடப் பணிபுரியும் இடத்தில் மட்டுமே தன் வேலையைப் பார்க்கிறான். இந்த வேலைகளைத் தனது வீட்டில் தன் மனைவிதான் செய்ய வேண்டும். என எதிர்பார்க்கின்றான். பணிக்குச் செல்லும் பெண்களானாலும் வீட்டின் அனைத்துப் பணிகளையும் தானே சுமந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் பெண்கள் உள்ளார்கள். இது சமுதாயத்தின் சமச்சீரற்ற நிலையையும், மனிதவளச் சீரற்ற தன்மையையுமே வெளிப்படுத்துகின்றன.

பெண்களை அடிமைப்படுத்தும் இத்தகைய கருத்தியல்களை மாற்றி அமைத்துப் பெண்ணுரிமையை உயர்த்தி மனிதனைச் சமப்படுத்த முயல்வதே பெண்ணியம்.

அமரந்தா, ஆழியாள், ஆனந்தி, உஷாசுப்ரமணியன், ஔவை, க்ருஷாங்கினி, கனிமொழி,குட்டிரேவதி, சல்மா, சிவரமணி, சுகந்தி சுப்ரமணியன், தாமரை முதலான பல பெண்கவிஞர்கள் பெண்ணியக் கவிஞர்களாக இனங்காணப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் சேர்ந்து ‘பறத்தல் அதன் சுதந்திரம்’ என்னும் கவிதை நூலை வெளியிட்டிருக்கிறார்கள். ‘புதுக்கவிதையில் மனிதம்’ என்னும் நூலில் பெண்ணியம் பற்றிப் பேராசிரியர் ச.அந்தோணி டேவிட் நாதன் விவரித்துள்ளார்.

## தலித்தியம்

**சாதியமைப்பு:**

உலகத்தில் வேறு எங்கும் நடக்காத கொடுமையாக சாதிப் பிரிவுகள் இந்தியாவில் வேரூன்றி உள்ளன. சாதிவேறுபாட்டை ‘வர்ணாச்சிரம தர்மம்’ என்று கூறி வந்தனர்.

வர்ணாச்சிரமம் என்னும் சொல் ‘வர்ணம்’ என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டது. வர்ணம் நிறம். நிறத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வேறுபாடே சாதிப்பிரிவினை,

பழந்தமிழகத்தில் தொழிலால் மட்டுமே மக்கள் வேறுபடுத்தப்பட்டனர். வர்ணம் என்னும் சொல்லே தமிழ்ச் சொல்லன்று. பிற்காலத்தில் ஆரியர்கள் புகுத்தியசொல்.

**தலித் கொடுமைகள்:**

தலித்துகள் தொட்டால் தீட்டு என்னும் தீண்டாமைக் கொடுமை சமுதாயத்தில் நிலவி வருகிறது. தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளைமுறை, தேங்காய்ச் சிரட்டை முறை,

தனிக்குடியிருப்பு, பொது நீர்நிலைகள் பயன்படுத்தத்தடை, பொதுச்சொத்துக்களின் வருவாயில் பங்குதர மறுப்பு, நாகரிக வளர்ச்சி நலன்களை நுகரத் தடை, கல்வி மறுப்பு, மருத்துவ வசதி மறுப்பு, செத்தமாடு தூக்க, பிணத்தை எரிக்க, சவக்குழி தோண்ட, பறை அடிக்க உள்ளிட்ட நிலைகளுக்கு வற்புறுத்துவது ‘தலித்தியக் கொடுமைகள்’ எனப்படுகின்றன.

**தலித்தியப் போராளிகள்:**

விழிப்புணர்வு கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்டோர் அல்லாதோரில் சனநாயக சக்திகளும் வர்க்கப் போராளிகளுமாக அனைவரும் சேர்ந்து ‘தலித்’ நிலை நீங்கப் பாடுபட்டு வருகின்றனர். இவர்கள் தலித் போராளிகள் எனப்படுகின்றனர். தலித்தியத் திறனாய்வாளராகத் தி.சு.நடராசன் மிளிர்கின்றார்.

தலித்துகளின் வாழ்க்கைப்போரை முதன்முதல் பதிவு செய்த கவிதைகளில் ஒன்று சிற்பியின் சிகரங்கள் பொடியாகும்.மராட்டியத்திலும் கருநாடகத்திலும் தலித் இலக்கிய வீச்சுகள் பரவியபோது தமிழகத்திலும் அதன் எதிரொலிகள் கேட்கலாயின.

**தமிழ் இலக்கியத்தின் தன்மைகள்:**

தலித்துகளே தலித் இலக்கியம் படைக்கலாயினர். எதிர்ப்புக்குணம், கலகக்குணம், மறுப்புத்தன்மை, புரட்டிப்போடுதல், வெளிப்படையாகப்பேசுதல், பகடி, பேச்சுமொழி இப்படியான கூறுகளை உள்ளடக்கிய தலித் இலக்கியம் என்கிற புது இலக்கிய வகை என்று அழகிய பெரியவன் விளக்கம் தருகிறார்.

‘தலித் என்ற சொல் ஒரு வாழ்க்கை முறையைத்தான் முன்னிறுத்துகிறது. அந்தச் சொல் ஒரு சக்தி, எழுச்சி உத்வேகம் இன்னும் சொல்லப்போனால் அது ஒரு கனவு. நெருப்பு என்கின்றார் இமையம். இதற்கு

**வலக்கை உண்பதற்கு**
**குண்டி கழுவ இடக்கை இயல்பென்றும்**
**நிறுவப்பட்ட பெருங்கதையாடல்கள்**
**சுற்றி நிறைய கட்டமைக்கும் அதிகாரத்தை**
**உடைத்து பார்த்தால்**
**உமையவளுக்கும் புரியும்**
**ஈசனுக்கும் இடப்பாகம் இருப்பது**

என்னும் என்.டி.ராஜ்குமாரின் கவிதை சான்றாக அமைகிறது.

மற்றும் விழி.பா.இதயவேந்தன், அன்பாதவன் முதலானோரும் தலித்தியம் பாடும் கவிஞர்களாக விளங்குகின்றனர்.

**மொழிபெயர்ப்பியல்**

மொழி பெயர்ப்பு, உலக நாடுகளை ஒருங்கிணைக்கும் பாலமாகத் திகழ்கின்றது. 'மூலத்துக்கு இணையான நிகரினை கண்டறியும் செயல்முறையே மொழிபெயர்ப்பு என்பார் ஐசடோர் பிஞ்சக்.

**தொல்காப்பியத்தில் மொழிபெயர்ப்பு:**

மரபியலைப் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர்

**தொகுத்தல் வகுத்தல் தொகைவிரி மொழிபெயர்த்து**

**அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே**

என்று கூறியுள்ளார். மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்னும் பெயரால் மொழி பெயர்ப்பினைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார்.

**மொழிபெயர்ப்பாளரின் பண்பு:**

சொற்களின் ஒலி, ஒலியின், உருபன் முதலானவற்றைப் பார்ப்பதோடு கருத்து நிலையில் நிகரன் கண்டறிந்து மொழி பெயர்ப்பது மட்டுமே நல்ல மொழிபெயர்ப்பாக இருக்க முடியும். என்பது ஆங்கிலப் பழமொழி 'சூரிய ஒளி' வீசும் வேனிற் காலத்தை அடிப்படையாகக் கொண்டு வைக்கோலை பதப்படுத்திப் பத்திரப்படுத்திக் கொள்ளும் நிலையினை இப்பழமொழி கூறுகிறது. இப்பழமொழிக்கு இணையாக நம் பகுதிக்கு ஏற்ற வகையில் மொழி பெயர்க்க வேண்டுமாயின் காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றுதான் கவனமாக மொழி பெயர்க்க வேண்டும்.

**மொழிபெயர்ப்பின் வகைகள்:**

**(1) ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு:** ஒரு மொழியில் உள்ள சொற்களை அம்மொழிக்குள்ளேயே மாற்றியமைத்து இட்டு நிரப்பிக் கொள்வது. எனக்கு அது வேண்டும் என்னும் தொடரை எனக்கு அது தேவை என்றோ அது எனக்குத் தேவை என்றோ மாற்றியமைத்துக் கொள்வதனை இதற்குக் கூறலாம்.

**(2) இரு மொழிகளுக்கு இடையே செய்யப்படும் மொழிபெயர்ப்பு:** ஒரு மொழியில் உள்ள கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மாற்றி அமைக்கும் முறை. திருமுருகாற்றுப்படை, ஔவையாரின் நல்வழி மூதுரை-ஆத்திசூடி – கொன்றைவேந்தன், நீதிநெறி விளக்கம்,

நீதிவெண்பா, அபிராமி அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, கோளறுபதிகம் முதலான இலக்கியப் பகுதிகளைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் முனைவர். சீ.பூ குருபரன் அவர்கள் மொழி பெயர்த்துள்ளார்.

**(3) ஒலிபெயர்ப்பு:** ஒரு மொழியில் உள்ள ஒலிக்குறிப்புச் சொல்லுக்கு ஏற்ற மொழி பெயர்ப்புக் கிடைக்கும் எனக் கூற இயலாது. இச்சூழலில் ஒலிக் குறிப்புச் சொல்லை அப்படியே பெயர்த்து எழுதுவது ஒலி பெயர்ப்பு எனப்படும்.

(உ-ம்) கிர் கிர் -

மியாவ் மியாவ் -

**(4) சந்த மொழிபெயர்ப்பு:** கவிதையில் உள்ள அடி,சீர்,தளை முதலானவற்றிற்கு இணையானவற்றைக் குறிக்கோள் மொழியிலும் அதே நிலையில் மாற்றியமைக்கும் முறைக்குச் சந்த மொழிபெயர்ப்பு என்று பெயர்.

**(5) எதுகை மோனை மொழி பெயர்ப்பு:** மூலமொழியில் உள்ள கவிதையின் எதுகை மோனை அமைப்பிற்கு ஏற்ற வகையில் குறிக்கோள் மொழியிலும் உருவாக்கும் முறை.

**(6) கவிதையை உரைநடையாக மொழி பெயர்த்தல்:** மூலமொழியில் உள்ள கருத்துக்களை சிதையாமல் கவிதையை மொழிபெயர்க்கப்படும் மொழியின் உரைநடையில் மாற்றி அமைக்கும் முறை இது.

**(7) சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தல்:** சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பது மொழி பெயர்ப்பாகாது. என்பதனைச் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்தால் அவன் வாளியை எட்டி உதைத்தான் என்றுதான் மொழிபெயர்க்க வேண்டியிருக்கும். ஆனால் அப்பழமொழியின் உண்மைப் பொருள் அதன்று அவன் இறந்துபோனான் என்பது. எனவே மூலமொழியின் கட்டமைப்பினை உணர்ந்துகொண்டு குறிக்கோள் மொழியிலும் ஏற்றவாறு மொழிபெயர்க்க வேண்டும்.

**(8) விரிவான மொழிபெயர்ப்பு:** மூலமொழியின் கருத்துக்களை மொழிபெயர்ப்பதோடு அதன் தொடர்பான வேறு சில செய்திகளையும் சேர்த்துக் கூறுவது.

**(9) சுருக்கமான மொழிபெயர்ப்பு:** மூலமொழிக்கு ஏற்ப பெரும்பாலும் ஒத்திருக்கக் கூடிய அளவில் ஆனால் வார்த்தைகளைக் குறைத்து மொழிபெயர்ப்பது. இது ஓரளவிற்கு மட்டுமே சுட்டிக் காட்டுவதாக அமையும்.

**(10) தழுவல்:** மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில் தொடக்கத்தில் தழுவல் முறைதான் பின்பற்றப்பட்டது. (உ-ம்) கம்பராமாயணம். இத்தகைய தழுவலில் மூலமொழி ஆசிரியனைக் காட்டிலும் மொழிபெயர்ப்புப் புலவனின் புலமை மிகுதியாகக் காணப்படும்.

**(11) மொழியாக்கம்:**

பாரசீகக் கவிஞர் உமர்கய்யாமின் ஆங்கில மொழிபெயர்ப்பு என்பது இதனைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள

**வெயிற்கேற்ற நிழலுண்டு**

**வீசுந்தென்றல் காற்றுண்டு**

**கையில் கம்பன் கவியுண்டு**

**கலசம் நிறைய மதுவுண்டு**

**தெய்வகீதம் பலவுண்டு**

**தெரிந்து பாட நீயுண்டு**

**வையம் தருமிவ் வனமின்றி**

**வாழும் சொர்க்கம் வேறுண்டோ?**

என்பதில் பிறமொழிக் கவிதை என்னும் உணர்வையே மாற்றிவிடுகின்றனர். இத்தகைய படைப்பாக்கத்துடன் கூடிய மொழிபெயர்ப்பு மொழியாக்கம் எனப்படும்.

**மொழிபெயர்ப்பின் பயன்கள்:**

மொழிபயன்பாடு, தேசிய ஒருமைப்பாடு, அறிவு வளர்ச்சி, சமுதாயப் பண்பாடு முதலான பல பயன்பாடுகள் மொழிபெயர்ப்பின் மூலம் ஏற்படுகின்றன.

## பாடம் -9

## வாழ்க்கை வரலாற்று

மண்ணகத்தில் பயணம் மேற்கொள்ளும் ஆன்மாவின் அழகோவியம் என எட்மண்ட் என்னும் மேனாட்டறிஞர் வரலாற்றைப் பற்றி அழகாக எடுத்துரைக்கின்றார். வாழ்க்கை வரலாறு இலக்கியத்தின் ஒரு பகுதியாக இனங்காணப் பட்ட பிறகு 1.தன் வரலாறு 2. பிறர் வரலாறு என இருபிரிவுகளாக விரிவாக்கம் கண்டுள்ளது.

### 1. தன்வரலாற்று இலக்கியங்கள்

ஒருவர் தன்னைப் பற்றிய நிறை குறைகளோடு நடுவுநிலையில் இருந்து பதிவு செய்யும் ஆவணமே தன்வரலாற்று இலக்கியம்.

**(1) பாரதியாரின் சுயசரிதை:**

புாரதியார் சுயசரிதை என்னும் தலைப்பில் பாடியுள்ள கவிதைப்பகுதி அவரது வாழ்க்கையின் நிறைவேறாத ஆசைகளின் ஏக்கங்களைக் கூறும் தொகுப்பாகக் காணப்படுகின்றது.

**(2) திரு.வி.க.வின் வாழ்க்கைக் குறிப்புக்கள்:**

தனது வமிசாவளி, தாய்ப்பால் வேட்கை, பாம்பை மிதித்தது, அரசியல் வாழ்க்கை, தொழிலாளர் இயக்கத்திற்குப் பாடுபட்டது. கிறித்துவப்பெண் தன் மண விருப்பத்தைத் தெரிவித்தது, மனைவியின் உடல்நிலை சீர்குலைவு, மறுமண மறுப்பில் உறுதியாக நின்றது எனத் தன் வாழ்வின் நிகழ்வுகளை உள்ளது உள்ளபடி கூறுகின்றார். இவ்வகையில் நோக்கும்பொழுது, **‘ஆங்கிலத்தில் ஜான்ஸன் வரலாற்றை எழுதிய பாஸ்வெல் நூலுக்கு எவ்வளவு பெருமை உண்டோ அவ்வளவு பெருமை இந்நூலுக்கும் உண்டு, என ம.பாலசுப்பிரமணிய முதலியார் புகழுகின்றார்.**

**(3) டாக்டர்.உ.வே. சாமிநாதரின் ‘என் சரித்திரம்’:** உ.வே.சா மாயூரம் வேதநாயகம் பிள்ளையைச் சந்தித்ததை நினைவு கூர்கின்றார். சிந்தாமணி ஆராய்ச்சி, பதிப்புப்பணி, பத்துப் பாட்டு ஆராய்ச்சி மற்றும் பதிப்பு, சிலப்பதிகார ஆராய்ச்சி மேற்கொண்டமையைப் பதிவு செய்துள்ளார். சென்னை மாநிலக் கல்லூாயில் ஆசிரியர் பணி கிடைத்த இரண்டாம் நாள் அன்று கோபாலராவ் வந்து உ.வே.சா நன்னூல் பாடம் நடத்தியதை வந்து கவனித்ததை விரிவாகக் கூறியுள்ளார்.

**(4) கவிஞர் விவேகானந்தரின் 'என் வாழ்வின் பணி':**

நமது துன்பங்களை அறவே ஒழிக்க ஆன்மிக ஞானத்தாலேயே முடியும். மற்ற எல்லா அறிவும் நமது தேவைகளை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கே நீக்க முடியும். எனவே உதவிகள் அனைத்திலும் ஆன்மிகம் மூலமாக அளிக்கப்படும் உதவியே தலைசிறந்த உதவி. இத்தகைய ஆன்மிக உதவியே தன் வாழ்வின் பணி என விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.

**(5) கவிஞர் கண்ணதாசனின் 'வனவாசம்' எனது சுய சரிதம்:**

1943 முதல் 1961 வரை கண்ணதாசனின் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளைக் கூறுவது வனவாசம். 'நான்' என்று கூறுவதற்குத் தனக்குத் தகுதி போதாது எனக் குறிப்பிட்டு 'அவன்' என்று தன்னைக் குறிப்பிட்டுக் கொள்கிறார். ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியில் இருந்த காலகட்டத்தை 'வனவாசம்' என முதற் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். நூல் நெடுகிலும் தனது பாலியல் தொடர்பான செய்திகளை மறைக்காமல் கூறுகின்றார். அத்தோடு எப்படி வாழ வேண்டும்? என்பதற்கு இது நூலல்ல: எப்படி வாழக்கூடாது! என்பதற்கு இதுவே வழிகாட்டி எனத் தன் நான்காம் பதிப்பின் புதிய முன்னுரைப் பகுதியில் நேர்மையுடன் பதிவு செய்துள்ளார். வனவாசத்தில் விட்டுப்போன திரைத்துறை தொடர்பான செய்திகளை எனது சுய சரிதம் என்னும் நூலில் தொடர்ந்து நிறைவு செய்துள்ளார்

**(.6) வலம்புரி ஜானின் 'நான் கழுதை ஆனபோது':**

பத்திரிகை வாழ்வு தொடங்கிய காலம் தொட்டு 'தாய்' வார இதழ் தொடங்கப் பெற்று ஓடிப்போன ஓராண்டு முடிய உள்ள கால எல்லையின் நிகழ்வுகளை இந்நூலில் வலம்புரி ஜான் பதிவு செய்துள்ளார். சமுதாயத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஒருவன் உண்மையைச் சொல்ல வேண்டும். வடுக்களை உருவாக்கும் வாளும் ஆனேன். சிலரது மனமாவது புண்பட வேண்டும் என்கிற நோக்கம் எனக்கு இருக்கிறது உண்மைதான். உதை வாங்குகிற கழுதைகளும் உண்டு, உதைக்கிற கழுதைகளும் உண்டு. இது உணர்த்துகிற கழுதை, என வலபுரி ஜான் வாய்மை பகர்கின்றார்.

**2. பிற தன் வரலாறுகள்:**

நாமக்கல் கவிஞரின் 'என்கதை' ஏ.வி. மெய்யப்ப செட்டியாரின் 'எனது வாழ்க்கை அனுபவங்கள்' கலைஞர் கருணாநிதியின் நெஞ்சுக்கு நீதி எம்.ஜி.ஆரின் 'நான் ஏன் பிறந்தேன்' வைரமுத்துவின் 'இதுவரை நான்' என்னும் தன் வரலாற்று நூல்களும் தமிழ் இலக்கியக் களத்தை அணி செய்கின்றன.

**3. பிறா் வரலாற்று இலக்கியங்கள்:**

ஒருவா் தான் அன்பு செய்யும், மதிக்கும் வேறொருவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளைக் கூறுவது பிறா் வரலாற்று இலக்கியம்.

**(1) ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவா்கள் சரித்திரம்:**

மகாவித்துவான் இயற்றிய பல நூல்களையும் அவா் காலத்துப் புலவா்களைப் பற்றிய முழு விவரங்களையும் உ.வே.சா தெளிவாகத் தந்துள்ளாா். மகாவித்துவான், உ.வே.சாவை மாணாக்கனாக ஏற்றுக் கொண்டது முதல் உள்ள நிகழ்வுகளை இரண்டாம் பாகமாக்கி உள்ளாா்.

முதல் பாகத்தில், மலைக்கோட்டை தாயுமானவா் கோயில் தொடா்பான வழக்கொன்றின் பொருட்டு தருமபுர ஆதீனம் சாா்பில் நீதிபதி மாயூரம் வேதநாயகரைக் காண மகாவித்துவான் சென்றிருந்தாா். குற்றமுடைய எதிா்க்கட்சியாா் மிகுந்த பொருள் கொடுத்து வேதநாயகரைத் தம்பக்கம் திருப்பலாம் என விரும்பினாா். மகாவித்துவான்,

**மையேறும் கண்ணி யொருபாகன் காரியம் மற்றிதுதான்**

**பொய்யே யலமுகிற்கு ஏதுகைம் மாறு பொறையினொரு**

**மெய்யே உருக்கொள் புகழ்வேத நாயக வித்தகன்தன்**

**கையே உனைப்புகழ் வேன்புகழ் வேறிலை கண்டுகொள்**

என்னும் பாடலை எழுதிக் கொடுத்தனுப்பினாா்.

இதனைக் கண்ட வேதநாயகா் நீங்கள் இவ்வளவு தூரம் சிரமப்பட வேண்டுமா? என்று சொல்லி தருமபுர ஆதீனம் சாா்பில் கூற வேண்டிய கருத்துக்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து வழக்கை நியாயப்படி தருமபுர ஆதீனத் தலைவா் சாா்பாக வெற்றிபெறச் செய்தாா்.மகாவித்துவான் வாழ்வில் நடந்த இதனை உ.வே.சா நூலில் குறித்துள்ளாா்.

**(2) தந்தை பெரியாா் வாழ்க்கை வரலாறு:**

ஆசிரியா் கவிஞா் கருணாசுந்தரம். தந்தை பெரியாா் வைக்கம் வீரா் எனப் போற்றப்படுகின்றாா். திருவிதாங்கூா் சமஸ்தானத்தில் இருந்த பகுதி ‘வைக்கம்’ என்பது. கோவில் வைக்கம் பகுதியில் இருந்த தெருவில் கூடத் தாழ்த்தப் பட்டோா் நுழையவும் கூடாது என்னும் தீண்டாமை நிலவி வந்தது. கேரளச் சிறையில் இருந்த ஜாா்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகிய தலைவா்கள் ஈ.வே.ராவுக்கு அபயக் கடிதம் ஒன்றனை அனுப்பினாா். உடல்நலம் குன்றிப்

படுக்கையில் இருந்த ஈ.வெ.ரா 'கேரளத்தாரின் மானம் தங்கள் கையில்தான் உள்ளது' என்று எழுதப்பட்ட கடிதத்தை ஏற்றுக் கொண்டார். வைக்கம் சென்று போராடி 'அனைவர்க்கும் ஆலயப் பிரவேசம்' என்னும் பொதுமையை ஏற்படுத்திய வரலாற்றுச் செய்தி நூலில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

**(3) தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி:**

ஆசிரியர் பொன்னீலன், 1982இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் தீயவர்கள் சிலரின் தூண்டுதலினால் சமய வெறி தலைவிரித்தாடியது. மக்கள் ஒருவரை ஒருவர் பயங்கர ஆயுதங்களால் தாக்கிக் கொண்டனர் வீடுகள் தீக்கிரை ஆக்கப்பட்டன. கோயில்கள் இடிக்கப்பட்டன. தென்னந் தோப்புகளும் வாழைத் தோட்டங்களும் வெட்டி அழிக்கப்பட்டன. வாகனப் போக்குவரத்துகள் முற்றிலும் நிறுத்தப்பட்டன.

இச்சூழலில் சாதி மத வேறுபாடு பார்க்காமல் குன்றக்குடி அடிகளார் அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்தார். ஆறுதல் படுத்தினார். அன்பைப் பேசினார். வெறி கொண்டிருந்தவர்களை நிதானப்படுத்தினார். அவர் போன பாதையெல்லாம் பூக்களும் புன்சிரிப்புகளும் மலர்ந்தன. பகை ஒழிந்தது தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஓர் அரசாங்கம் முன்னின்று செய்ய வேண்டிய பணியை ஆதீனத் தலைவராக இருந்து செய்து முடித்த பான்மையைப் பொன்னீலன் குறிப்பிடுகின்றார்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் இந்நிகழ்வையே பேராசிரியர் முகிலை இராச பாண்டியன் அவர்கள் தேரிமணல் என்னும் புதினமாக்கியுள்ளார்.

**4. ஏனைய பிறர் வரலாற்று நூல்கள்:**

தமிழில் தன் வரலாற்று நூல்களை விடப் பிற வரலாற்று நூல்கள் நிரம்ப உள்ளன. கு.அருணாசலம் கவுண்டர் எழுதிய எல்.டி.சாமிக்கண்ணு பிள்ளை வரலாறு, ம.பொ.சி யின் கப்பலோட்டிய தமிழன், சிதம்பர ரகுநாதனின் புலமைப்பித்தன் வரலாறு, ரா.பி. சேதுப்பிள்ளையின் கால்டுவெல் முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கன. 'வாழ்க்கை வரலாற்று இலக்கியம்' என்னும் நூலினைச் சாலை இளந்திரையன் எழுதியுள்ளார்.

## பயண இலக்கியங்கள்

**பயண நூல் ஆசிரியர்கள்:**

பிரயாணம் மனிதனுக்கு இயற்கையாக அமைந்தது. இல்லாவிட்டால் கடவுள் நமக்குக் கால்களையே படைத்திருக்க மாட்டார் என்பார். சோமலெ. உலகம் தொடங்கிய காலந்தொட்டே

பயணமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதனைத் ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்னும் பழமொழி உறுதிப்படுத்தும்.

பத்துப்பாட்டில் இடம்பெறும் ஆற்றுப்படை நூல்களும் ஒருவகைப் பயண இலக்கியங்களே.

வாஸ்கோடகாமா, மார்க்கோபோலோ, கொலம்பஸ், பாஹியான், யுவான் சுவாங் முதலான வெளிநாட்டுப் பயணிகள் மேற்கொண்டவை வரலாற்று ஆவணப் பயணங்கள் ஆகும் என்பர் உலக பேரறிஞர்கள்.

வரலாற்றுப் பேராசிரியர் ஆர்னால்டு டாயின் பீ என்பவர் தான் ஏற்கெனவே எழுதிய வரலாற்று நூல்களைத் திருத்தியமைப்பதற்காக 1960-ல் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றார்.

**உண்டதே உண்டு நீ உடுத்ததே உடுத்தும்**

**உரைத்ததே அடுத்தடுத்து உரைத்தும்**

**கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்**

**கழிந்தன கடவுநாள் எல்லாம்**

**வெண்தா மரைமேலே வீற்றிருக்கும்**

**விளநீர் வெண்கடாவ உய்யுமாறு அருளே**

என்னும் பாடலை அடிக்கடி ஓதியதன் பயனாக உலகம் சுற்றும் பேறு தனக்குக் கிட்டியதாக சோமலெ கூறுகிறார்.

திரு.வி.க வின் **எனது இலங்கைச் செலவு** பயணச்செலவுத் துறைக்கு ஊற்று நிலையாக விளங்குகிறது.

**உலகம் சுற்றிய தமிழர்** எனப் பாராட்டப் பெறுபவர் **ஏ.கே.செட்டியார்**.

பயண இலக்கிய முன்னோடி-ஏ.கே.செட்டியார்

பயண இலக்கியப் பெருவேந்தர்-சோமலெ

பயண இலக்கியப் பெருவிற்பன்னர்-மணியன்

**பயண இலக்கியம் எழுதுவோர் கவனிக்கத் தக்கன:**

புதிய செய்திகளை அறிந்து கொள்வதில் ஈடுபாடு.

சிறப்பான நிகழ்ச்சிகளை அவ்வப்பொழுது குறித்துக் கொள்ளல்

கூர்த்த மதியும் காண்பவற்றின் நலம், தீங்குகளைக் கண்டறிபவர்தாம் பயணிகள் ஆவர் என்னும் விழிப்புணர்வை வாசகர்களுக்கு ஊட்டுதல்.

அறிவும், ஆற்றலும்,உற்சாகமும் மிக்க நண்பர்களைச் சென்று சந்தித்து உரையாட வேண்டும்.

அறிவான கேள்விகள் மூலம் வெளிப்படும் அந்நாட்டாரின் ஆரோக்கியமான நுணுக்கமான செய்திகளை வெளிக்கொணர வேண்டும்.

அன்றன்றைக்குக் கிடைத்த தரவுகளை அன்றைய இரவே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**திருச்செந்தூரான் கடல் அறியான்: திருவாரூரன் தேர் அறியான்**

என்பது பழமொழி. உள்நாட்டைப் பற்றிய அறியாமையை இப்பழமொழி கட்டுகிறது. பயண நூல்களை எழுதுவோர் முதலில் தங்கள் நாட்டைப் பற்றிய வகையில் அறிவுக் களஞ்சியமாகத் திகழ வேண்டும். இப்போது அமெரிக்காவில் என்னும் இயக்கம் தோன்றியுள்ளதை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஒவ்வொருவரும் முதலில் தங்கள் நாட்டை ஊரைப் பற்றித் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

எழுதப்படும் பயண நூல்கள் வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். வெறும் புள்ளி விவரங்களாக மட்டும் இருக்கக் கூடாது.

ஏசு கிறிஸ்து சென்ற இடங்களைப் பற்றி என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் நூலொன்று உள்ளது. இந்நூலினைப் பின்பற்றி **சோ. சிவபாதசுந்தரம்** அவர்கள் **மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்** என்னும் நூலை எழுதியுள்ளார்.

சைசவ சமய **நாயன்மார்கள், சிவாலயங்கள்** தோறும் சென்றது **திருத்தலப் பயணங்களே**.

மாணிக்கவாசகர் சென்ற இடங்களுக்கெல்லாம் அந்த வரிசை முறைப்படி 1937-ல் போக்குவரத்து வசதியற்றுப் பாழ்ப்பட்டு போன பல இடங்களுக்கெல்லாம் சென்று எழுதிய **மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்** என்னும் இந்நூலினைக் **கள ஆய்வுப் பயணநூல்** எனலாம்.

இவ்வாறு பயணநூல் எழுதுவோர் பல ஆதாரங்கள், இலக்கியச் சான்றுகளுடன், **நகைச்சுவையும்** கலந்து எழுதின் நலம் பயக்கும்.

முக்கியமான **இடங்களைப் பற்றிய படங்களும்** நூலில் சேர்க்கப்படல் வேண்டும்.

படங்களை இறுதியாக ஒரே இடத்தில் அச்சிடாமல், **செய்திகளுக்கு உரிய இடத்தில் ஏற்ற படம்** இருக்க வேண்டும். இதனை Spreading out photographs throught the text என்று மேலை நாட்டார் ஒரு கொள்கையாகப் பின்பற்றுகின்றனர்.

படங்களும் எழுத்தும் அச்சில் ஏற்றுக் கொள்ளக்கூடிய **உயர்ந்த வகைத்தாள்களை** இதற்கு பயன்படுத்த வேண்டியிருக்கும் இதனால் நூலின் விலை கூடுதலாகும் என்பதனைக் கவனத்தில் இருத்தல் வேண்டும்.

தக்க இடங்களில் நம் நாட்டோடு **பிற நாட்டுக் குறிப்புகளையும் ஒப்பிட்டுக்** கூற வேண்டும். நம் நாட்டுப் பணத்தில் 800 ரூபாய் என்றால் 160 அமெரிக்க டாலர் என்று குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

கூறப்படும் **இடத்தைப் பற்றித் தெளிவாகக்** குறிப்பிட வேண்டும். **புடா,பெஸ்ட்** என்றால் புடா, பெஸ்ட் என்னும் இரு நகரங்களும் சேர்ந்தது. இரு நகரங்களும் **ஓர் ஆற்றின் இரு கரைகளிலும்** உள்ளன. **நமது திருச்சியும் ஸ்ரீரங்கமும் போல** எனத் தெளிவு படுத்தவேண்டும்.

பயணம் செய்தவர்கள் மட்டுமே பயணநூல் எழுத வேண்டும் என்பதில்லை **பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம்** செய்தும் பயண நூல்களை எழுதுவது மக்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

**பயண நூலில் குறிக்கத் தகாதன:**

பயண நூல்கள் பெரிதாக இருக்க வேண்டும் என்பதற்காக ‘வளவள’ என வளர்த்துக் கொண்டே போகக் கூடாது.

தங்களுக்கு **விருந்து** கொடுத்தவர்களைப் பற்றியே எழுதிக் கொண்டிருக்க கூடாது.

**ஆகாய விமானத்தில்** ஏறி அமர்ந்தவுடன் தங்களுக்கு ஏற்படும் முதல் உணர்ச்சியைப் பற்றியும், காதில் பஞ்சு அடைத்துக் கொள்வதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுவது தேவையில்லாதன.

**ஏனைய நாடுகளின் குறைபாடுகளை** மிகைப்படுத்திக் கூறக்கூடாது. நம் நாட்டில் இருக்கும் அந்நாட்டின் தூதரகத்தில் அவர்கள் நாட்டைப் பற்றி நம் நாட்டில் வெளியாகும் செய்திகளை ஆராய்வதற்கென்றே தனிப்பிரிவு உண்டு. அப்பிரிவில் உள்ளோருக்கு இத்தகைய நூல்களைப் படித்து மொழிபெயர்த்துக் கொடுப்பதுதான் வேலை.

## கடித இலக்கியங்கள்

செய்தி தெரிவிக்கும் விருப்பமே கடிதமாக மலர்கிறது. ஆள் மூலம் சொல்லி அனுப்பும்பொழுது தூது எனப்படும். சொல்லி அனுப்ப இயலாதனவற்றை முற்காலத்தில் பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதினார். அதனை ஓலை என்றனர். பனையோலையைச் சுருளாகச் சுருட்டி முடக்கி (வளைத்து) யதால் முடங்கல் எனப்பட்டது. பத்திரம் என்னும் வடசொல்லுக்கு இலை என்று பொருள். ஓலையில் எழுதப்பட்ட ஆவணங்கள் பத்திரம் எனப்பட்டன. கடி என்றால் விரைவு என்பது பொருள். அஞ்சல் முறை வந்த பிறகு விரைவாகச் சென்று சேர்வதால் கடிதம் எனக் குறிக்கப்படுகிறது.

### சிவபெருமான் அனுப்பிய பரிந்துரைக் கடிதம்:

பாணபத்திரன் என்னும் புலவனுக்குப் பொருள் கொடுத்து உதவுமாறு பாணபத்திரனிடம் கொடுத்துச் சேரலனிடம் கொடுக்குமாறு சிவபெருமான் பரிந்துரைக் கடிதம் ஒன்று கொடுத்தனுப்பினார்.

**மதிமலி புரிசை மாடக் கூடல்**

**பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு**

**அன்னம் பயில்பொழில் ஆல வாயில்**

**மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்**

**பருவக் கொண்மூடிப் படியெனப் பாவலர்க்கு**

**உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்**

**குருமா மதுபுரை குலவிய குடைக்கீழ்ச்**

**செருமா உகைக்கும் சேரலன் காண்க!**

**பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்**

**தன்போல் என்பால் அன்பன்: தன்பால்**

**காண்பது கருதிப் போந்தனன்**

**மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே**

என்னும் இக்கடிதம் 11-ம் திருமுறையில் திருமுகப் பாசுரமாகத் திகழ்கிறது.

**காப்பியக் கடிதம்:**

மாதவி தன்னை விட்டுப் பிரிந்து சென்ற கோவலனுக்கு முதிர்ந்த தாழை மடலில் பூவரும்பின் முனையால் செம்பருத்திக் குழம்பில் தோய்த்துக் கடிதம் ஒன்று எழுதினாள்.

**அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்**

**வடியாக கிளவி மனக்கொளல் வேண்டும்**

**குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு**

**இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது**

**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**

**பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி**

என்பது அக்காப்பியக் கடிதம்

**வேதநாயகர் விடுத்த கடிதம்:**

திருவாவடுதுறையில் சுப்பிரமணிய தேசிகரைச் சந்தித்தபின் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் மயிலாடுதுறைக்கு இரட்டை மாட்டு வண்டியில் திரும்பினார். மாடுகள் வண்டியை முன்னே இழுக்க அவர் மனம் அவரைப் பின்னே இழுத்தது. அது,

**சூர்வந்து வணங்கும் மேன்மைச் சுப்பிரமணிய தேவே**

**நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றுராத்திரியே மீண்டேன்**

**ஊர்வந்து சேர்ந்தேன் என்றன் உளம்வந்து சேரக்காணேன்**

**ஆர்வந்து சொல்லினும் கேளேன் அதனை இங்கு அனுப்புவாயே**

என்னும் கடிதமாக மலர்ந்து வரலாற்றுப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது.

**வரலாற்றுப் புகழ் பெற்ற கடிதங்கள்:**

(1) நேரு தன் மகள் இந்திராகாந்திக்கு வரைந்த மடல்கள் உலக வரலாறாக உலவுகிறது.

(2) தவத்திரு மறைமலை அடிகளார் எழுதிய கோகிலாம்பாள் கடிதங்கள் புனைகதையாய் புகழ்பெற்று நிற்கின்றது.

(3) அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என அறிஞர் மு.வ எழுதிய கடிதங்கள் கடித இலக்கியங்கள் எனப் போற்றத்தக்கன. சமூக வாழ்வியலில் சிக்கலைத் தீர்க்கும் சிந்தனை நோக்கில் வரையப் பட்டவை.

(4) அறிஞர் அண்ணா தம்பிக்கு வரைந்த கடிதங்கள் இளைஞர் குழாத்தைத் தட்டி எழுப்ப வல்லன

(5) வள்ளலார் கடிதங்களை திரு.பாலகிருட்டிண முதலியார் முயன்று தொகுத்துள்ளார்.

(6) காந்தியடிகள் கடிதங்களும், விவேகானந்தர் கடிதங்களும் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.
(7) மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவணர் கடிதங்கள் மறைமலையடிகள் நூல் நிலையத்தில் ஒட்டுக் கோப்பில் ஒட்டி ஆவணமாக்கப்பட்டுள்ளன.

(தனியாக இருந்த மறைமலையடிகள் நூல் நிலையம் இப்பொழுது கன்னிமரா நூல் நிலையத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது)

**கடிதம் எழுதும் முறை:**

தேவநேயப் பாவாணர் அவர்கள் உயர்தரக் கட்டுரை இலக்கணம் என இரு தொகுதிகள் இயற்றியுள்ளார். அதில் கடிதத்தின் உறுப்புகளையும் கடிதம் வரையும் முறையினையும் எடுத்துரைக்கின்றார்.

**(1) தலைப்பு:**

எழுதப்பட்ட இடமும் நாளும் குறிப்பது. நட்பும் வணிகமும் பற்றி எழுதும் கடிதங்களில் முதற்பக்க வலப்புற மேல் ஓலையில் இடத்தின் பெயர் மேலும், நாள் கீழுமாக எழுதப்படல் வேண்டும்.

**(2) கொளு:**

தலைப்பிற்குச் சற்றுக் கீழாக இன்னாருக்கு இன்னார் எழுதுவது எனக் குறிப்பிடுவது.

**(3) விளி:**

கொளுவிற்குக் கீழே இடப்பக்கத்தில் தனியாகக் கடிதம் விடுக்கப்படுவோரை விளிப்பது.

**(4) செய்தி:**

விளிக்குக் கீழே உரி செய்தியை எழுதும் இடம் உரிய இடத்தில் நிறுத்தற் குறிகள் அமைந்திருக்க வேண்டும்.

**(5) உறவுத் தொடர்மொழி:**

கடிதம் விடுப்போர்க்கும் பெறுவோர்க்கும் இடையே உள்ள உறவு நிலையினைக் குறிக்கும் மொழி இது செய்திக்குக் கீழே வலப் புறத்தில் வரையப்பெறும்.

**(6) கையெழுத்து:**

உறவுத் தொடர்மொழிக்குக் கீழே சற்று வலமாகத் தந்தையின் முதல் எழுத்து தெளிவாக தெரியுமாறு வரையப்படும் பெயர்.

**(7) முகவரி:**

கடித உரையின் பின்பக்கத்தில் அல்லது மடித்த கடிதத்தின் பின்புறத்தில் கடிதம் விடுவிக்கப்படுவோரின் முழு முகவரியும் தெளிவாக வரையப்படுதல் வேண்டும்.

**கடிதத்தின் இன்றைய நிலை:**

கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்புதல் நல்ல பண்பு. ஆயின் கடிதம் எழுதுதல் என்னும் வழக்கமே பெருகி வருகிறது இதன் இடத்தை தகுதி, தொலைபேசி, தொலைநகல், டெலக்ஸ் முதலானவை கைப்பற்றிக் கொண்டுள்ளன எனலாம்.

## பாடம் -10

## அறிவியல் தமிழ்:

**(அ) அறிவியல் சொல்லமைதி**

**(ஆ) அறிவியல் கருத்துகள்**

என அறிவியல் தமிழை இரண்டு வகையாகப் பகுக்கலாம். தமிழில் அறிவியல் சொல்லமைதி வளர்ச்சி, வளமை அடைந்து வருகின்றது. தமிழ் இலக்கியங்கள் நெடுக அறிவியல் கருத்துகள் காணப்படுகின்றன. அத்தோடு, அறிவியல் சிறுகதைகள், புதினங்கள், அறிவியல் இதழ்கள் மூலம் அறிவியல் கருத்துகள் தமிழில் வளர்ந்து வருகின்றன.

**(அ) அறிவியல் சொற்களின் அமைதி:**

(1) இலக்கிய நடைக்கும் அறிவியல் நடைக்கும் வேறுபாடுகள் உள்ளன. அறிவியல் செய்திகள் நேரிடையாகச் சொல்லப்பட வேண்டும். அதற்குத் துணை நிற்பன தொடர்கள், வாக்கிய அமைப்புகள் ஆகியன.

தொடர் அமைப்பு, பொருள் நிறைந்ததாக இருக்க வேண்டும். பொருளமைப்பில் ஐயப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய தொடர்கள் ஆகா. அவை அறிவியல் குழப்பத்தை ஏற்படுத்தும். சொற்களைப் பிரித்து எழுதுவதால்கூட இத்தகைய நிலை நேரிடலாம்.

**பல் வேறுவகை யானஅணு குண்டுசோதனை**

**மூலம் இந்தியா தனது ஆற்றலை**

**நிரூபித்தது**

என்று எழுதினால் பொருள் முற்றிலும் மாறுபடுகின்றது.

**பல்வேறு வகையான அணுகுண்டு**
**சோதனைகளின் மூலம் இந்தியா**
**தனது ஆற்றலை நிரூபித்தது**

என எழுதும் போது தான் பொருள் சரியாக இருக்கின்றது.

(2) ஜெர்மனிய விஞ்ஞானிகள் தமது மொழியில் மிகக் குறைந்த அளவு நீளமுள்ள வாக்கியங்களையே அமைக்க முயல்கின்றனர். அறிவியல் செய்திகளைக் கூறும் தொடர்கள்

நீளமானதாக இருக்கக் கூடாது. இவ்வாறே அறிவியல் தமிழ்த் தொடர்களும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வல்லதாக இருக்க வேண்டும்.

**(3)** ஆகும் என்னும் வினைச்சொல் செய்தியின் முடிவாக அறிவியல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது.

**அணுக்கள் வேதிவினையில் பங்கேற்க வல்லன ஆகும்.**

(4) அறிவியல் உரைநடை வாக்கியங்களில் தன்மை, முன்னிலை படர்க்கை ஆகிய மூவிடங்களைக் குறிக்காத அமைப்பே சிறப்புடையது.

(5) செய்முறை சோதனைகளை விளக்கும்போது அத்தொடரில் பால்விகுதியோ மரியாதைப் பன்மையோ இடம்பெறக்கூடாது.

(6) செயல்முறையில் செய்யவேண்டிய வினையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அறிவியல் தமிழில் கட்டளை வாக்கிய அமைப்பே பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

**விடுகுழாயைக் கந்த அமிலத்தால் கழுவு.**

(7) அறிவியல் தமிழில் வெற்றுச் சொற்களோ, வீண் வர்ணனைகளோ இல்லாமல் அமைவதே சிறப்புடையது.

(8) கலைச்சொற்கள் குறிக்க வந்த பொருளை நேரடியாகக் குறிப்பிட வேண்டும்.

(9) சொற் குழப்பம் கூடாது.

(10) ஒரு பொருளுக்கு ஒரு கலைச்சொல் என்னும் நிலையே அறிவியல் தமிழுக்கு ஏற்றது.

**(ஆ) அறிவியல் கருத்துகள்**

**(1) சீவக சிந்தாமணியில் அறிவியல்:**

நெடுநாட்களாக நீரிலே ஊறிக் கிடந்த மரத்தில் செய்த வீணையும், நீரில்லாமல் வற்றிய மரத்தில் செய்த வீணையும் இன்னிசை எழுப்பப் பயன்படாது. சிறந்த தட்ப வெப்பத்தில் நன்கு வளர்ந்த மரத்தில் செய்யப்படும் வீணையே இன்னிசை எழுப்ப ஏற்றது. மரத்தின் ஈரத்தன்மைக்கு ஏற்ப அதில் மோதும் ஒலி அலைகளின் அதிர்வெண்ணும் மாறுபடுகிறது. இந்த அதிர்வெண் பாடகரின் குரலில் சமச்சீராக அமையுமானால் குரல்வளம் நன்றாக அமைகிறது. சமச்சீரற்றுக் காணப்படுமானால் குரல் நன்றாக அமைவதில்லை. இதனையே இன்றைஅறிவியலாளர்கள்அதிர்வெண் என்று கூறுகின்றனர்.

### (2) அறிவியல் இதழ்கள்:

- அறிவியல் இதழ்களில் வாசகர்கள் தாமே முன்வந்து பங்கு கொள்ளும் வகையில் அறிவியல் வினாவிடைப் பகுதிகள் அமைந்துள்ளன.
- அறிவியல் உலகின் புதிய கண்டுபிடிப்புகளை உண்மைகளை சுருங்கச் சொல்ல அறிவியல் துணுக்குகள் பயன்படுத்தப்படுகின்றன.
- அறிவியல் செய்திகளை வாசகர்களுக்கு அறிவிக்கவும் அறிவூட்டவும் முறையே அட்டைப்படம், அட்டைப்படவிளக்கக் கட்டுரை பயன்படுத்தப்பட்டுள்ளன.
- அறிவியல் பகுதியில் இடம் பெறும் புகைப்படங்கள் வாசகர்களின் அறிவியல் திறனை வளர்க்கும் நோக்கிலேயே அமைக்கப்படுகின்றன.
- அறிவியல் பகுதியில் இடம் பெறும் புகைப்படங்கள் செய்தி மதிப்புடையனவாகவும் அவை இடம்பெற்றுள்ள கூறுகளை வாசிக்கத்தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன.

### (3) அறிவியல் தமிழ் வளர்த்த அறிஞர்கள்:

அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தராக விளங்கிய வா.செ.குழந்தைசாமி அற்புதத்தமிழ் என்னும் அரிய நூலினை இயற்றியுள்ளார். கொண்டல்.சு.மகாதேவன் தமிழன் அறிவியல் முன்னோடி என்னும் கருத்தை ஆதாரபூர்வமாக நிலைநாட்டுகின்றனர். மறைந்த எழுத்தாளர் சுஜாதா ‘ஜினோ’ மீண்டும் ஜினோ முதலான அறிவியல் புதினங்களை எழுதிப் புகழ் பெற்றார். ந.சுப்புரெட்டியர் அறிவியல் உண்மைகளை அழகிய உவமைகளின் வழி விளக்கி எளிமைப்படுத்தியுள்ளார். மேலும் பெ.நா.அப்புசுவாமி, வே.மாணிக்கம், ஜி.ஆர். தாமோதரன், ஜி.டி நாயுடு, தி.தண்டபாணி (பண்ணன்) முதலானோர் அறிவியல் தமிழுக்குப் பாடுபட்ட சான்றோராவர்.

அறிவியல் தமிழ்போல் ‘சட்டத்தமிழ்’ என்னும் பகுதி தமிழில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர். மு.முத்துவேலு அவர்கள் உரைப்பாக எடுத்துரைக்கின்றனர். வழக்கறிஞரும் தமிழறிஞருமான இவர் ‘சட்டத்தமிழ்’ ‘சங்கத்தமிழ்’ கூறும் சட்டத்தமிழ் என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

## ஊடகவியல்

## இதழியல்

நமது நாட்டில் நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று துறைகளோடு பத்திரிகைத்துறையையும் வலிமையான நான்காவது பிரிவாகக் கருதலாம். இப்பத்திரிகைததுறை சுதந்திரத்தோடு நேர்மையாகவும் பொறுப்பாகவும் செயல்படும்பொழுது மக்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது எனலாம். எனவேதான், வாள்முனையை விடப் பேனாமுனை கூர்மையானது எனப் போற்றப்படுகின்றது.

**இதழ்களின் பணிகள்:**

(1) செய்திகளை மக்களுக்கு அறிவித்தல்

(2) மக்களுக்கு நல்லன கூறி அறவுறுத்தல்

(3) மக்களை மகிழ்வித்தல்

(4) வாணிபம் செய்தல்

(5) நடுவுநிலை நிற்றல்

(6) பண்பாடு காத்தல்

முதலான பல பணிகள் இதழ்களுக்கு உள்ளன.

**இதழ்களின் பருவ வகைகள்:**

நாளிதழ்கள், பருவ இதழ்கள் என அடிப்படையில் இருவகைப்படும்.

**நாளிதழ்கள்:**

- ✓ காலை இதழ்
- ✓ மாலை இதழ்

என இரு வகைப்படும்.

**பருவ இதழ்கள்:**

- ❖ வார இதழ்
- ❖ திங்கள் இருமுறை இதழ்

- ❖ திங்கள் இதழ்
- ❖ காலாண்டு இதழ்
- ❖ அரையாண்டு இதழ்
- ❖ ஆண்டு இதழ்

என ஆறு வகைப்படும்.

**இதழ்களின் தரப் பிரிவுகள்:**

தரத்தின் அடிப்படையில்,

- தரமான இதழ்கள்
- மக்கள் இதழ்கள்
- நச்சு இதழ்கள்

என மூன்று வகைப்படும்.

**இதழ்களின் உள்ளடக்கப் பகுப்பு:**

இதழ்களின் உள்ளடக்கம் பல வகைப்படும். குமுதம்,ராணி,கல்கி முதலானவை பொழுதுபோக்கு இதழ்கள், ஜனசக்தி,திராவிடநாடு முதலானவை அரசியல் இதழ்கள். செந்தமிழ்ச்செல்வி, எழுத்து, ஞானரதம் முதலானவை இலக்கிய இதழ்கள். முல்லைச்சரம்,குயில் முதலானவை கவிதை இதழ்கள். கோகுலம், அம்புலிமாமா ஆகியவை சிறுவர் இதழ்கள். இவைபோக அறிவியல், மருத்துவம், கல்வி, மகளிர், தொழில், கொள்கை, வணிகம், விளையாட்டு, சோதிடம், சமயம், திரைப்படம், மொழி சார்பான பலவகை உள்ளடக்கங்கள் கொண்ட இதழ்கள் இருக்கின்றன.

**பத்திரிகை சுதந்திரம்:**

விடுதலை பெற்ற இந்தியாவில் பத்திரிகைகள் சுதந்திரமாக செயல்பட முடிந்தது. எனவே அவை வேகமாக வளர்ந்தன. கண்ணுக்குப் புலப்படாத முழுமையான சுதந்திரத்தோடு பொறுப்பு, கடமை என்பனவும் இணைந்திருக்க வேண்டும். என்று ஜவகர்லால் நேருவின் கூற்றும் இத்துடன் உடன் எண்ணத் தக்கது.

**பத்திரிகைச் சட்டங்கள்:**

பத்திரிகையில் வெளியாகும், செய்தி உரியவருக்கு அவமதிப்பாக இருக்குமாயின் அவர் பத்திரிகை மீது அவமதிப்பு வழக்கு இடவாய்ப்பு உள்ளது. இத்தகைய அவமதிப்பிற்குக்

காரணமானவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 500-ம் பிரிவின்படி இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ கொடுக்கலாம். பொதுச்சட்டத்தின்படி மான இழப்பு வழக்குத் தொடர்ந்தவர் இழப்பீடு பெற முடியும்.

இதைப்போல் நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டம், நீதிமன்ற அவமதிப்புச் சட்டம், அலுவலக இரகசியங்கள் சட்டம், பத்திரிகை, புத்தகங்கள் பதிவுச்சட்டம், ஆபாச வெளியீட்டுத்தடைச் சட்டம், பதிப்புரிமைச் சட்டம், இளைஞர் (தீமை பயக்கும் வெளியீடுகள்) தடைச்சட்டம், அஞ்சல் தந்திச் சட்டங்கள், பணிசெய் இதழியலாளர் சட்டம் எனப் பத்திரிகை தொடர்பாகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றின் நிறை, குறைகளைக் கண்டுணர்ந்து காத்துக் கொள்வது பத்திரிகையாளர்களின் கடமை.

**செய்தித்தாள் நிர்வாக அமைப்பு:**

பத்திரிகையை வெற்றிகரமாக நடத்துவது என்பது மிகப் பெரிய கலை. தனிமரம் தோப்பாக முடியாது. இணைந்த கரங்களால் இணையற்ற வளர்ச்சி என்பதனை பத்திரிகைகள் கொள்கையாகக் கொள்ள வேண்டும். ஒரு சிலர் மட்டும் சேர்ந்து பத்திரிகையை நடத்திவிட இயலாது. பத்திரிகைத் துறையில்,

- ஆசிரியர் பிரிவு
- வாணிபப் பிரிவு
- இயந்திரப் பிரிவு
- வளர்ச்சிப் பிரிவு
- புள்ளிவிவரப் பிரிவு
- நிர்வாகப் பிரிவு

எனப் பல பிரிவுகள் சேர்ந்து செயல்படும்.

**செய்தி வகைகள்:**

மக்கள் செய்திகள், கல்விச் செய்திகள், அரசுச் செய்திகள், நீதிமன்றச் செய்திகள், சட்டப்பேரவை, நாடாளுமன்ற நிகழ்வுகள், பொதுக்கூட்டங்கள், அறிவியல், பொருளாதார, விளையாட்டுச் செய்திகள் முதலான வாழ்வியலின் ஒவ்வொரு நிகழ்வுகளும் பத்திரிகைகளுக்குச் செய்திகளாகின்றன.

இச்செய்திகளை முதலில் தரவுகளாகத் திரட்டுவார். அதன் பின்னர் வகைப்படுத்துவார், வரலாற்றுப் பின்புலத்துடன் தரவேண்டிய செய்திகளை அதற்கேற்ற பின்புலத்தோடு தயாரிக்க வேண்டும். உள்நாட்டுச் செய்தி, வெளிநாட்டுசெய்தி, உலகச் செய்திகளுக்கு ஏற்ற

பகிர்வுகளையும் ஆழத்தையும் செய்திகளுக்கு வழங்க வேண்டும். உரிய இடங்களில் ‘நேர்காணல்’ நிகழ்த்தியிருக்க வேண்டும். ‘புலனாய்வு’ புரிய வேண்டிய இடங்களில் அதற்குரிய ஆட்கள், பொருள்கள், பாதுகாப்புடன் புலனாய்வு மேற்கொண்டிருக்க வேண்டும்.

தரும் செய்திகளைப் புகைப்படம் மூலம் வெளிக்கொணர வேண்டும். நகைச்சுவைத் துணுக்குகள், கேலிச்சித்திரங்கள், கருத்துப்படங்கள், படக்கதைகள் எனப் பல கோணங்களிலும் பத்திரிகைப் பரிமாணம் செய்து உரிய சீர்மையில் செய்திகளை வெளிக்கொணர்ந்து வெற்றிநடை போடவேண்டும்.

**செய்திக் கட்டமைப்பு:**

செய்திக்கு (1) தலைப்பு (2)முகப்பு (3) உடல்பகுதி என முப்பெரும் பிரிவுகள் உண்டு. பத்திரிகை ஆசிரியருள்ளும் ஆசிரியர், செய்தி ஆசிரியர், துணையாசிரியர் எனப் பலர் இருப்பர்.

**இதழியல் தமிழறிஞர்கள்:**

பாரதியார், திரு.வி.க, சி.பா,ஆதித்தனார், கல்கி, எஸ்.எஸ்.வாசன், வல்லிகண்ணன் முதலானோர் பத்திரிகைத் துறையில் குறிப்பிடத்தக்க தமிழ்ச் சான்றோராவர். பேராசிரியர் முனைவர். ஜே.ஆர்.இலட்சுமி அவர்கள் பெண்கள் முன்னேற்றத்தில் சுமங்கலி இதழ்களின் பங்கு, என்னும் தலைப்பில் நூல் எழுதியுள்ளார்.

## வானொலி

மார்க்கோனி கண்டுபிடித்த வானொலி காதால் கேட்கும் வகையில் மட்டும் அமைக்கப்பட்டிருப்பது. வுானொலி செய்திகள், வயலும் வாழ்வும், ஒலிச்சித்திரங்கள், திரையிசைப்பாடல்கள், சான்றோர் சிந்தனைகள், வானொலி நாடகங்கள், நேர்காணல்கள் முதலான நிகழ்ச்சிகள் வானொலியில் ஒளிபரப்பபடுகின்றன.

தொலைக்காட்சிகள், தொலைக்காட்சி தொடர்புகள், கணினிப் பயன்பாடு ஆகியவற்றால் வானொலி ஓரளவு மக்களால் மறக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பார்வையற்றோருக்கு வானொலி வரப்பிரசாதமாகவே இன்றும் இயங்குகிறது எனலாம்.

## திரைப்படம்

19-ம் நூற்றாண்டின் வலிமையான ஊடகமாக திரைப்படம் திகழ்ந்தது. தொடக்க காலத்தில் கருப்பு வெள்ளை படங்களும், திக்கற்ற பார்வதி போன்ற பேசாத ஊமைப் படங்களும் வந்தன. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களினால் வண்ணப்படங்களும் வெள்ளித்திரையாக விளங்கி வருகின்றது. ஆரம்ப நாட்களில் வீரபாண்டிய கட்ட பொம்மன் முதலான வரலாற்றுப்

படங்கள் சுதந்திர எழுச்சியை ஊட்டும் ஊடகமாக திரைப்படங்கள் எழுந்தன. பாரதியார், பாரதிதாசன், பாடல்களைப் பாமரர்களும் அறிவதற்கான களனாகவும் இருந்தது. பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான் எனப் பள்ளி மாணாக்கருக்கு பாடம் புகட்டும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள் வாயிலாக கல்விப்புலத்திற்கு உதவவும் உறுதுணையாகவும் திரைப்படம் இருந்தது. மெல்ல மெல்ல காதல் படங்கள், மசாலா படங்கள், சண்டைப் படங்கள் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

## தொலைக்காட்சி

கண்ணையும் கருத்தையும் கவரும் திரைப்படத்திற்கு எதிராகத் தோன்றியதைப்போல் தோற்றம் காட்டி, திரைப்படத்திரையினரைக் கிளர்ச்சி செய்யவைத்த ஊடகம் தொலைக்காட்சி. இன்று திரைப்படத்துறையினரின் ஊடுருவல் ஊடகமாகவும் தொலைக்காட்சி விளங்குகிறது. தொடக்கத்தில் அரசாங்கத்தினரால் மட்டும் டி.டி மற்றும் பொதிகைச் சேவைகள் ஒளிபரப்பபட்டன. இன்று கலைஞர், சன்,ஜெயா,ராஜ்,விஜய்,ஸ்டார் விஜய், மக்கள் தொலைக்காட்சி எனப் பலப்பல தனியார் தொலைக்காட்சிகளில் படையெடுப்புகள் மிகுந்துள்ளன. சரித்திரத் தொடர்கள், நகைச்சுவைத் தொடர்கள், சிறுவர் தொடர்கள், மர்மத் தொடர்கள், மாயாஜாலத் தொடர்கள், அறிவுரை மற்றும் அறிவியல் தொடர்கள், குடும்பத் தொடர்கள், கல்வித் தொடர்கள், சமையல் தொடர்கள் என வாழ்வியலின் அனைத்துத் தளங்களையும் தொலைக்காட்சி தொடுகின்றது.

## கணிப்பொறி

**(1) மின்னஞ்சு அஞ்சல்:**

Electronic mail என்பதன் சுருக்கமே E-mail என்பது. இதன் தமிழ் வடிவமே மின்னணு அஞ்சல், தொலைபேசித் தொடர்பு கட்டமைப்பின் வழியாக கணிப்பொறிகள் தகவல் பரிமாற்றம் செய்துகொள்வது மின்னணு அஞ்சல் எனப்படும். எழுத்துக்களால் ஆன உரை வடிவில் மின்னணு அஞ்சல் அமையும்.

ஒரே அலுவலகத்தில் உள்ள கிளைக் கணிப்பொறிகள் நோட் எனக் குறிக்கப்படும். தகவல்களைத் தரும் தலைமைக் கணிப்பொறியைச் சர்வர் என்பர்.

(1) கணிப்பொறி (2) தொலைபேசி (3) டிஜிட்டல் சிக்னலாகச் செய்தியை அனுப்ப உதவும் மோடம் இம்மூன்றும் இருந்தால் வெளியூர்களுக்கு மின்னணு அஞ்சல் செய்ய முடியும்.

மின்னணு அஞ்சல் செய்தியைப் பெற்றுக் கொள்ள நாம் காத்திருக்கத் தேவையில்லை. ஆள் இல்லாத பொழுதும் கணிப்பொறி வழியாக மின்னணு அஞ்சல் நமக்காகப் பதிவு

செய்யப்பட்டிருக்கும். நேரம் வாய்க்கும் பொழுது கணிப்பொறியில் மின்னணு அஞ்சல்கள் ஏதேனும் பதிவாகி உள்ளனவா எனப் பார்த்துக் கொள்ளலாம்.

(2) பல்நோக்கு ஊடகம்:

ஒரு சாதாரண கணிப்பொறியில் சி.டி ரோம் டிரைவ், சவுண்டு கார்டு, ஒலிபெருக்கிகள், விண்டோஸ் முதலான செயல்பாட்டுத் திறன்களை இணைத்துவிட்டால் போதும், அது பல்நோக்கு ஊடகமாக மாறிவிடும் இப்பொழுது,

- .உயிரோட்ட வரைபடங்கள்
- ஒளிக்காட்சிப் படங்கள்
- வரைகலை
- எழுத்து
- ஒலி

ஆகிய ஐந்து வடிவங்களில் தகவல்களைப் பெற முடியும்.

இப்பொழுது உலகத் தகவல் களஞ்சியங்களைத் திரையில் காணலாம். நேருவும், காந்தியும் மேடையில் முக்கியதைக் கணிப்பொறியில் இணைக்கப்பட்ட ஒலிபெருக்கி மூலம் கேட்டுப் புத்துயிர்ப்பு பெறலாம்.

**ஊடகங்களால் விளையும் பண்பாட்டுப் படையெடுப்பு:**

ஊடகங்களில் வலிமை வாய்ந்து பண்பாட்டுப் படையெடுப்புக் கருவிகளாக விளங்குவன திரைப்படம், தொலைக்காட்சி, கணிப்பொறி, செல்லிடப்பேசி ஆகியன.

திரைப்படத்தில் காதலன் காதலியைத் துரத்திக் கொண்டு ஓடுவதையும், கட்டிப்பிடித்துப் புரள்வதையும் நெருக்கமான காட்சிகளையும் பார்க்கும் வாலிப உள்ளங்கள் தடுமாறுகின்றன. காபரே நடனக் காட்சிகள், ஆடை குறைப்பு, ஆடை அவிழ்ப்பு, கற்பழிப்புக் காட்சிகளால் பாலியல் உணர்வுகள் தூண்டப்படுகின்றன. கொடுங்கோலர் ஆட்சியிலும் நடுச்சந்தியில் கொண்டுவர அஞ்சப்பட்ட, மதிக்கப்பட்ட அந்தரங்கங்கள் களவுச்சாட்சிகள் என்னும் பெயரில் கடைவிரிக்கப்படுகின்றன. ஆகாயத்திலேயே பலமுறை குட்டிக்கரணம் அடித்து, போடும் சண்டைக் காட்சிகளால் நிழல்யுத்தம் புரியும் நிலைக்கு ஆளாக்குகின்றன. வணிகமய திரைப்படங்களினால் விளையும் கேடுகள் பற்றித் தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா என்னும் நூலில் முனைவர்.மு.சுதந்திரமுத்து விவரித்துள்ளார்.

குறிப்பிட்ட கதாநாயகன், கதாநாயகியர்களை மனத்தில் வரித்துக்கொண்டு அவர்களைப் போலச் செய்தல் மூலம் போலி வாழ்வு வாழத் திரைப்படங்கள் தூண்டுகின்றன. முன்னணி நடிகர்களுக்கு விண்ணளாவிய கட்-அவுட் வைத்துப்பால்முழுக்காட்டி பூசை செய்கின்றனர். திரைப்பட நடிகர்களே தெய்வங்களாகி விட்டதால் திரையரங்குகளே கோவில்களாகி விடுகின்றன.

நடிகர்களுக்கு இரசிகர் மன்றங்கள் நடத்தி ஊழியம் புரிந்து அவர்களுக்குச் செல்வாக்கு பெருக்கி அரசியல் தலைவர்களாகவும் முதலமைச்சர்களாகவும் ஆக்கும் அடிமைத் தொண்டர்களாக இளைஞர்கள் தங்களை ஆக்கிக் கொள்கின்றனர்.

தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் மக்களைப் பெரும்பாதிப்புக்குள்ளாக்குவது நெடுந்தொடர்களே. திரைப்படத்தைப் பார்த்தால் மூன்று மணி நேரம் மட்டுமே செலவாகும். ஒரு நெடுந்தொடர் 250 நாள். நீளத்திற்கு ஒளிபரப்பாகிறது. எனக் கொண்டால் குறைந்தது ஒரு ஆண்டு முழுவதும் ஓடுகிறது என்று பொருள். காலை 10.00 மணிமுதல் இரவு 11.00 மணிமுடிய ஒரு நாளுக்கு குறைந்தது 10 நெடுந்தொடர்களாவது ஒளிபரப்பாகின்றன. ஒரு முறை கள்ளைக் குடித்தால் குடிக்கும்பொழுது மட்டும்தான் போதையேறும் ஒரு நெடுந்தொடரைப் பார்க்க ஆரம்பித்தால் ஆண்டுக்கணக்கான அளவில் போதைக்கு உள்ளாக நேரிடுகிறது.

கஞ்சா அபினை விடக் கொடிய நஞ்சாக நெடுந்தொடர்கள் செயல்படுகின்றன. வீட்டிற்கு உறவினர்கள் வந்தாலும் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக் கொண்டே பேச வைக்கிறது. வீட்டிற்குத் திருடன் வந்து ஆற அமர திருடிச் சென்றாலும் தெரிவதில்லை. குறிப்பிட்ட தொடர்களின்பொழுது ஊரின் தெருக்களெல்லாம் ஊரடங்குச் சட்டம் போட்டது போல் வெறிச்சோடிக் கிடக்கின்றன. திருடர்கள் தக்க தொடர்கள், திரைப்படங்களைக் கணக்கிட்டுத் தெருவில் வழிப்பறி, கொலை, கொள்ளை புரிந்தாலும்சுட ஏனென்று கேட்கத் தெருவில் நாதியில்லாமல் போய் விடுகின்றது.

மிதமிஞ்சிய பகட்டுகளையெல்லாம், ஒப்பனைகளையும், பொய்யான விளம்பரங்களையும் பார்க்கும் மக்கள் பாலைவனத்தில் கானல்நீரைத் துரத்திச் செல்லும் மானுக்கு ஒப்பாக இடர்ப்படுகின்றனர்.

இரவு 11.00 மணி வரை தினமும் தொடர்களைப் பார்த்த பின்புதான் சமைக்கத் தொடங்கும் அளவிற்குப் பெண்களைத் ‘தொடர்பித்துகள்’ ஆக்கியுள்ளன தொலைக்காட்சிகள்.

தொலைக்காட்சி நினைவிலேயே சமைத்து, தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டே சாப்பிடும் பழக்கத்தினால் நல்ல குடும்பப் பாரம்பரியத்துக் குழந்தைகளிடம்கூடக் குடும்ப நற்பண்புகள் படிய வழியில்லாமல் போய்விடுகின்றது.

தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்துக் கொண்டே பள்ளியில் கொடுத்த வீட்டு வேலைகள் செய்வதும், படிப்பதும் எனக் குழந்தைகள் கவனம் சிதறடிக்கப்படுகின்றது. கருவில் உருவாகும் குழந்தைகூடத் தொலைக்காட்சியின் தொல்லைகளிலிருந்து தப்பிக்க இயலாத அவல நிலையில் சமுதாயம் சிறையாகியுள்ளது.

கணிப்பொறியும் இணைய வலையுடன் சேர்ந்து ஒரு பாலியல் புரட்சியையே நடத்தப் பார்க்கின்றன. உடலும் உயிரும் ஒன்றியதே காமம் என்கிற விதியை மாற்றி வருகின்றன. வேறு எதையும் பரிமாறிக் கொள்ளும் முன் உள்ளக் கிளர்ச்சியைப் பரிமாறிக் கொள்ள அழைக்கிறது. இந்த ‘இண்டர்நெட்’ அரட்டைத் தொழில்நுட்பம்.

தன் பெற்றோர், உடன்பிறந்தோர், தன் வாழ்க்கைத்துணை அருகில் அதே அறையில் உறங்கிக் கொண்டிருக்கும்போதுகூட இந்த வலைக் காதலில் இளைய சமுதாயம் தன் பாலியல் வக்கிரங்களைச் சர்வ சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொள்ள முடிகிறது.

காதல், நட்பு என்னும் போர்வையில் சமுதாயத்தில் நிகழும் சீரழிவுகள் உளவியல் அடிப்படையில் தலைமுறைகளையும் சீரழிக்க ஊடகங்கள் அடிப்படையாக உள்ளன. இக்கருத்தை இரண்டரை ஆண்டுகாலம் களஆய்வு செய்து காதலா? காதலா? என்னும் புதினத்தைப் பாக்யா அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆபாச புத்தகங்கள் அருவருப்பான வெப்சைட்டுகள் போலவே செல்லிடப்பேசிகளும் (செல்போன்கள்) மாணவர்களைப் படு பாதாளத்திற்கு இழுத்துச் செல்கின்றன.

ஆபாசக் காட்சிகள் பதிவு செய்யப்பட்ட நினைவகச் சில்லுகள் தனியே விற்கின்றன. இவை பள்ளி மாணவர்களிடம் கூட இரகசியமாக உலா வருகின்றன. இந்த காட்சிகளை வேறு யாரும் பார்த்துவிடாதபடி மறைக்க வீடியோ சே∴ப் எனப்படும் மென்பொருள் இணைத்துக் கொள்கின்றனர். இதனை இதற்குரிய இரகசிய எண்ணைப் பயன்படுத்தினால் மட்டுமே பார்க்க முடியும்.

‘புளூ டூத்’ வசதி உள்ள செல்போன் வைத்திருப்பவர்கள், மற்றவர்களிடம் உள்ள ஆபாசக் காட்சிகளைத் தங்கள் செல்லிடப்பேசியில் இறக்கி கொள்கின்றனர்.

ஆபாச நினைவகச் சில்லு வசதியுள்ள செல்போன்கள் 6,000 ரூபாயிலிருந்து கிடைக்கின்றன. இத்தகைய செல்லிடப்பேசியைக் கணிப்பொறியுடன் இணைத்து வக்கிரப்படங்களையும் பாடல்களையும் டவுன்லோட் செய்ய உதவும் குறுந்தகடுகள் டேட்டா கேபிள் ஆகிய உபகரணங்களும் கைபேசியுடன் சேர்த்து வழங்கப்படுகின்றன. இதன் மூலம்

நண்பர்களிடமிருந்து மிக எளிதாகத் தங்கள் கைபேசியில் மாணவர்கள் அவற்றை இறக்கிக் கொள்கின்றனர்.

கைபேசி பழுதுபார்க்கும் கடைக்காரர்களில் சிலர் பணத்திற்கு ஆசைப்பட்டு இத்தகைய காட்சிகளைக் கைபேசியில் பதிவு செய்து கொடுக்கிறார்கள். இதற்கு 100 ரூபாய் முதல் 1000 ரூபாய் வரையில் ஆளுக்குத் தகுந்தாற்போல் கட்டணம் வாங்கப்படுகிறது.

கைபேசியிலேயே இணையவலை வசதியும் இருக்கிறது. 'நீலச்சேவை' புரியும் இணையதளத்திற்குள் நேரடியாகப் போய் இத்தகைய கைபேசியில் படங்களை இறக்கிக் கொள்கின்றனர். ஆனால், இணையதள ஆபாசக் காட்சிகளைத் தடுக்க ∴பயர் வால் என்னும் மென்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது சிறிது ஆறுதலைத் தரும் செய்தியாக உள்ளது.

'கால்சீட்' எனப்படும் மென்பொருள் சில்லை, பெற்றோர்களை ஏமாற்ற விரும்பும் மாணவர்கள் கைபேசியில் போட்டுக் கொள்கின்றனர். இதிலிருந்து வகுப்பறையில் இரைச்சல், தெருவின் போக்குவரத்துச் சத்தங்கள், தொடர்வண்டியில் போகின்ற ஒலி முதலான ஒலிகள் வரும். வகுப்பை விட்டு ஊரைச் சுற்றும் மாணவர்கள் பெற்றோர் பேசும்போது இத்தகைய ஒலிகளுள் பொருத்தமானதை உயிரூட்டிப் பெற்றோரை வெகு சுலபத்தில் நம்பவைத்து ஏமாற்றிக் காலந்தள்ளுகின்றனர்.

தங்கள் வளமையின் அடையாளமாகப் பெற்றோர்கள் மாணவர்களுக்கு வாங்கித் தரும் விலையுயர்ந்த கைபேசிகளே இத்தனை விபரீதங்களுக்கும் வித்தாக அமைகின்றன எனலாம்.

## அகராதிகள்

செய்யுள் வடிவில் எழுதப்பட்ட நிகண்டுகள் காலப்போக்கில் உரைநடை வடிவில் எழுதப்பட்டன. அவை அகராதிகள் எனப்பட்டன. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் **வ.ஜெயதேவன்** அவர்கள் அகராதிகள் பற்றித் **"தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு"** என்ற நூலை எழுதியுள்ளார். **திரு. வ.ஜெயதேவன்** அவர்களின் தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிறப்பு மிக்குள்ளது.

### 1.வீரமாமுனிவர் இயற்றிய தமிழ் அகராதிகள்

### (அ) சதுரஅகராதி

**"தமிழின் முதல் அகராதி"** எனச் சதுர அகராதி போற்றப்படுகின்றது. **"அகராதி"** என்று இன்று நாம் வழங்கும் பொருளில் இச்சொல்லைச் சதுரஅகராதியில் வீரமாமுனிவர்தான் முதன் முதலில் பயன்படுத்தினார். இது போன்ற காரணங்களால் வீரமாமுனிவர், "**தமிழ் அகராதியின் தந்தை"** எனப் போற்றப்படுகின்றார்.

**(ஆ) இலத்தீன்-தமிழ் அகராதி:**

தான் தமிழ் கற்றதைப் போலவே தன் இத்தாலிய நாட்டார் அனைவரும் தமிழ் கற்கும் வகையில் வீரமாமுனிவர் இதனைப் படைத்தளித்தார்.

**(இ)தமிழ்-பிரெஞ்சு அகராதி:**

பிரெஞ்சு மொழியினையும் அறிந்திருந்த வீரமாமுனிவர் தமிழர்கள் எளிதாக பிரெஞ்சு மொழியினை அறிந்து கொள்ளும் வகையில் இவ்வகராதியினை இயற்றினார்.

**2.சீகன் பால்க்கீன் அகராதிகள் :**

பதினெட்டாம் நூற்றாண்டைப் பொறுத்த அளவில் சீகன் பால்க்கு ஐந்து அகராதிகளைத் தொகுத்துள்ளார். அவை (1) சீகன் பால்க்கீன் அகராதிகள் (2) டிக்ஷனேரியம் தமுலிகம் (3) தமிழ்-இலத்தின் அகராதி (4) தமிழ் உரைநடை அகராதி (5) அகராதி பேர் சுவடி என்பன.

**3.கிறித்துவத் தமிழ்ச் சங்க அகராதி :**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கக் கிறித்துவச் சங்கம் 1833-இல் மூன்று அகராதிகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டது. (1) தமிழ்- ஆங்கில அகராதி (2) ஆங்கிலம்-தமிழ் அகராதி (3) தமிழ்- தமிழ் அகராதி இம்மூன்று அகராதிகளையும் கிறித்துவச் சங்கத்தைச் சேர்ந்த ‘‘நைட்’’ என்பவர் திசரா, பெர்சிவல் ஆகிய இருவர் உதவியுடன் தொகுத்தார். இடையில் அவர் காலமானதால் அவ்வகராதிகள் வெளிவராமல் நின்று போயின.

**4.ராட்லர் அகராதி :**

வீரமாமுனிவரின் சதுர அகராதியை அடிப்படையாகக் கொண்டு ‘‘ராட்லர்’’ என்பவரால் எழுதப்பட்ட அகராதி இது. முதல் தொகுதி 1834-இல் வெளிவந்தது. இரண்டாம் தொகுதி அச்சில் இருக்கும் பொழுதே ராட்லர் காலமானார். மூன்றாவது, நான்காவது தொகுதிகள் வெங்கடாசல முதலியார், டெய்லர் ஆகியோர் திருத்தங்களுடன் வெளிவந்தன.

**5.யாழ்ப்பாண அகராதி :**

‘‘நைட்’’ என்பவர் காலமானதால் பாதியில் நின்றுபோன அகராதிப் பணிகளை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **சந்திரசேகர பண்டிதர்** ஓர் அகராதியை உருவாக்கினார். இவ்வகராதி யாழ்ப்பாண அகராதி, **மானுவல் தமிழ் அகராதி ,மானிப்பாய் அகராதி** எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறது.

**6.பெர்சிவல் அகராதிகள் :**

**சென்னை அரசு ஆட்சித்துறைப் பணியில் இருந்த ஐரோப்பிய அலுவலாளர்கள் மற்றும் இராணுவத்தினருக்கு** உதவும் வகையில் ‘‘பெர்சிவல்’’ என்பவர் சில அகராதிகளை உருவாக்கினார். அவற்றுள் ‘‘பெர்சிவல் ஆங்கிலம் - தமிழ் அகராதி பல பதிப்புகளைக் கண்டது. இவரே பழமொழி அகராதி, திருட்டாந்த சங்கிரகம் ஆகிய அகராதிகளையும் தொகுத்துள்ளார்.

**7.போப் தமிழ்- ஆங்கில அகராதி :**

ஜி.யு.போப் அவர்களால், தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில ஆக்கம் செய்து எழுதப்பட்ட அகராதி. காலம் 1859. கிறித்துவம் பரப்ப இந்தியாவிற்குள் நுழைந்தவர் இவர். கிறித்துவம் பரப்புவதற்காகத் தமிழ் கற்கத் தொடங்கினார். தமிழ் வளத்தால் ஈர்க்கப்பட்டார். தான் இறந்த பிறகு தனது கல்லறையின் மேல் **“இவன் ஒரு தமிழ் மாணாக்கன்”** எனப் பொறித்து வைக்கும்படி உயிரோடிருக்கும்போதே உயில் எழுதி வைத்தார். திருக்குறள், திருவாசகம், நாலடியார் ஆகிய நூற்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இத்தகைய தமிழ் ஆர்வலரான ஜி.யு.போப் அவர்கள் தமிழ் - ஆங்கிலம் அகராதி எழுதியதில் வியப்பொன்றுமில்லை.

**8.கிளாசிகல் தமிழ் - ஆங்கில அகராதி :**

1870-இல் சென்னை மாநிலக் கல்வித் துணைத் தலைவரின் கண்காணிப்பின் கீழ் வெளியானது.

**9.பதார்த்த பாஸ்கரம் :**

பத + அர்த்தம் = பதார்த்தம். சொற்பொருள் என இதனை விளக்கலாம் பாஸ்கரம் என்றால் சூரியன் என்று பொருள். இது, கிரந்தம்- தமிழ் அகராதி. **சமற்கிருதத்தை எழுதுவதற்குத் தமிழ் மக்கள் பயன்படுத்திய எழுத்துக்களே கிரந்தம்** எனப்படும். **ஸ, ஜ, ஷ, ஹ** என்பன கிரந்த எழுத்துக்கள். இந்தக் கிரந்த எழுத்து வடிவிலுள்ள வடமொழிச் சொற்களுக்குத் தமிழால் பொருள் கூறும் அகராதி இது.

**10. அபிதானசிந்தாமணி :**

அபிதானம் என்றால் பெயர் என்று பொருள். கேட்ட பொருள்களைக் கேட்கும் வகையில் வழங்க வல்லது ‘‘சிந்தாமணி’’ என்னும் மாணிக்கக்கல். தேவையான பெயர்களைப் பற்றிய விவரங்களை விரிவாக வழங்குகின்ற நூல் இது, எனவே அபிதான சிந்தாமணி எனப்படுகிறது. சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்த **ஆ.சிங்காரவேலு முதலியார்** இதன் ஆசிரியராவார். **தமிழ் மொழியில் தோன்றிய முதல் கலைக்களஞ்சியம்** இது எனலாம்.

**11.பைபிள் அகராதி :**

கிலேற்றன் ஏ.சி. என்பவர் பைபிள் செய்திகளை அகர வரிசையில் உருவாக்கியுள்ளார். சென்னை சி.எல்.எஸ். அச்சகத்தில் 1923-இல் வெளியானது.

**12. தமிழ் லெக்சிகன் :**

**"சென்னைப் பல்கலை கழகத் தமிழ்ப் பேரகராதி**" என்பது இதன் தமிழ்ப் பெயர். சென்னைப் பல்கலைக்கழக ஆளுகையின் கீழ் இவ்வகராதி வெளியானது. ஆங்கிலம் தெரிந்த அயல் மொழியாளர்களும் தமிழ் கற்றுக் கொள்ள இவ்வகராதி பெருந்துணை புரிகிறது.

**13.தமிழ் இலக்கணப் பேரகராதி (கி.பி.2005)**

**தி.வே.கோபாலையர்** என்பவரால் 17 தொகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ள அகராதி இது. 24.10.2005-இல் சென்னையில் வெளியிடப்பட்டது. **25 ஆண்டுகள்** கோபாலையர் அவர்கள் இதற்காகப் பாடுபட்டிருக்கிறார். இலக்கணக் கூறுகளை அகர வரிசைப் படுத்திய தமிழ் இலக்கணக் கலைக் களஞ்சியம் இந்நூல் எனலாம்.

**துணைநூல்கள்**

1. வகைமை நோக்கில்… தமிழ் இலக்கியம் - முனைவர் பாக்யமேரி
2. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் சு.ஆனந்தன்
3. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல்